Copies can be had from the
Assistant Director,
Government Publiction Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Director of Stationery and Printing,
Chennai-600 002.

வெளியீடு :10-11-2014 Issued:10-11-2014

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஜூலை 14, 2014—தொகுதி 64—எண் 1

Monday the 14th July 2014—Volume 64—No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.
Legislative Assembly Secretariat, Chennai-600 009.

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

14-7-2014

உள்ளடக்கம்

	பக்கங்கள்
ஆளுநரும் அமைச்சரவையும்	v-x
Governor and Council of Ministers	xi-xv
பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்	xvii-xx
பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி)	xxi-xxxi
1. வினாக்கள்-விடைகள்—	
உடுக்குறியிட்ட வினாக்கள்	1-51
தகவல் கோரல்—	
தமிழ்நாடு இரிக்கெட் கொப்பில் நடைபெற்ற விழாவிற்கு வேட்டி அணிந்து சென்ற நீதிபரசர் மற்றும் வழக்கறிஞர்களுக்கு அனுமதி மறுப்பு—	52-62
*திரு. வி.பி. சந்திரகுமார்	52-53
திரு. மு.க. விடாவின்	53-54
*திரு. அ. சவுந்தரராசன்	54-55
திரு. எம். அழகுமம்	56
*திரு. பி.வி. கதிரவன்	57
திரு. கே. கோபிநாத்	57-58
திரு. அ. கணேஷ்குமார்	58
திரு. அ. அல்லம் பாஷா	59
திரு. உ. தனியரசு	59
திரு. ஆ. நாராயணன்	60

பக்கங்கள்

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

தமிழ்நாடு திரிக்கெட் கிளப்பில் நடைபெற்ற விழாவிற்கு வேட்டி அணிந்து சென்ற நீதியரசர் மற்றும் வழக்கறிஞர்களுக்கு அனுமதி மறுப்பு—தொடர்ச்சி

முன்னாள் செரு. தமிழரசன் 60-61

*மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி 61-62

3. உறுப்பினர் நிலை [illegible] சிவசங்கர் ஆவர்களை போலவர் [illegible] கூட்டத்தொடர் வருவதற்கு நீக்கியதை [illegible] கோருதல்— 62

திரு. [illegible] 62

4. மானியக் கோரிக்கைகள், 2014-2015, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி 62-83, 88-193

கோரிக்கை எண் 27-தொழில் துறை

*மாண்புமிகு திரு. பி. தங்கமணி 62-63,69,75-83, 99,107-109, 114-120,129 -130, 132-138,144, 153-158,160-193

*திரு. வி.சி. சந்திரகுமார் 69-71,73-78,80-83

*மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம் 71-73

*திரு. க. பாலகிருஷ்ணன் 79

திரு. கு.வ. மார்க்கண்டேயன் 88-99

*திரு. கே.சி. பழனிசாமி 100-103,107, 109-111

*மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன் 102-107,113, 131-132 139-141,143

		பக்கங்கள்
4.	மானியக் கோரிக்கைகள், 2014-2015, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி	
	கோரிக்கை எண் 27-தொழில் துறை—தொடர்ச்சி	
	மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா	104
	திரு. துரைமுருகன்	105-106
	திரு. கே. தங்கவேல்	[illegible],121-124
	திரு. அ. சவுந்தரராசன்	[illegible],120
	மாண்புமிகு திருமதி எஸ். [illegible]	[illegible]
	திரு. க. குணசேகரன்	[illegible]
		[illegible]
	திருமதி எஸ். விஜயதரணி	135,136
	செல்வி கே. பாலபாரதி	136
	மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்	144
	டாக்டர் த. ஹரிதாஸ்	145-152
	*திரு. ஜே.ஜி. பிரின்ஸ்	66,152-159
5.	விதி 110-ன்கீழ் அறிக்கைகள்—	83-86
	(அ) எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் நவீன படப்பிடிப்புத் தளங்கள் அமைப்பது குறித்த முதலமைச்சரின் அறிக்கை	83-85
	(ஆ) அரசு மைய அச்சகத்திற்குப் புதிய கட்டடம் மற்றும் நவீனமயமாக்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை	85-86
6.	எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் நவீன படப்பிடிப்புத் தளங்கள், அரசு மைய அச்சகத்திற்குப் புதிய கட்டடம் மற்றும் நவீனமயமாக்குதல் குறித்த முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி	87-88
	முனைவர் செ.கு. தமிழரசன்	87-88
7.	பேரவையுள் வைக்கப்பெற்ற ஏடுகள்	194-196

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

ஆளுநரும் அமைச்சரவையும்

ஆளுநர் – முனைவர் கோ. ரோசய்யா

அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் .. மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:

   பொது, இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப் பணி, பொது திருவாகம், மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல் மற்றும் உள் துறை

2. நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:

   நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை, தேர்தல்கள், கடவுச் சீட்டுகள், பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம் மற்றும் செயற்திட்டப் பணிகள்

3. மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:

   மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு

4. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:

   வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

5. நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:

   நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்

6. ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்	..	மாண்புமிகு திரு. ப. மோகன்:

குடிசைத் தொழில் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள், தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, செய்திதான் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு

7. சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்	..	மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள், மாற்றுத் திறனாளிகள் நலன் மற்றும் சமூக சீர்திருத்தம் மற்றும் சத்துணவுத் திட்டம்

8. உயர் கல்வித் துறை அமைச்சர்	..	மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, வின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல்

9. கூட்டுறவுத் துறை அமைச்சர்	..	மாண்புமிகு திரு. கே.ஆர். ராமசாமி:

கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்

10. உணவுத் துறை அமைச்சர்	..	மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

11. தொழில் துறை அமைச்சர்	..	மாண்புமிகு திரு. வி. தங்கமணி: தொழில்கள், எக்குக் கட்டுப்பாடு, சரங்கங்கள் மற்றும் கனிமங்கள் மற்றும் நிறப்பு முயற்சிகள்
12. போக்குவரத்துத் துறை அமைச்சர்	..	மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்
13. பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்	..	மாண்புமிகு திரு. வி. முத்தி: பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி
14. வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்	..	மாண்புமிகு திரு. எஸ்.சி. சம்பத்: வணிக வரிகள், பதிவு மற்றும் முத்திரைத் தான் சட்டம்
15. வேளாண்மைத் துறை அமைச்சர்	..	மாண்புமிகு திரு. ஆர்.வி. எஸ்.எஸ். திருஞானமூர்த்தி: வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண்மை பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

16. நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம் மற்றும் இலஞ்ச ஒழிப்பு

17. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:

கால்நடை பராமரிப்பு

18. கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் .. மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:

கைத்தறி மற்றும் துணிநூல்

19. விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

20. இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன்:

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

21. சுற்றுலாத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

22. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்	..	மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன்: ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் சொத்துடமைத் தொழிலாளர்கள் நலன்
23. மீன் வளத் துறை அமைச்சர்	..	மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்
24. தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்	..	மாண்புமிகு திரு. ந. கயிரமணியன்: தகவல் தொழில்நுட்பம்
25. வருவாய்த் துறை அமைச்சர்	..	மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: வருவாய், மாவட்ட வருவாய் நிருவாகம், நுனை ஆட்சியர்கள், எடைகள் மற்றும் அளவுகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சிட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்கள் பதிவு
26. செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்	..	மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: செய்தி மற்றும் விளம்பரம், நிறைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் நிறைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் அரசு அச்சகம் மற்றும் நிறப்புத் திட்டங்கள் செயலாக்கம் மற்றும் தேர்தல் அறிக்கை செயலாக்கம்
27. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்	..	மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: பள்ளிக் கல்வி, தொல்பொருளியல், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு

28. வனத் துறை அமைச்சர்	..	மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன். வனம்
29. சுற்றுச்சூழல் துறை அமைச்சர்	..	மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம். சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு
30. கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர்	..	மாண்புமிகு திரு. தோ.பெ. பூனாட்சி: கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராம தானம்
31. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்	..	மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அரசிதழ் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், வக்கீப் உள்ளிட்ட [illegible] நலன்
32. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்	..	மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

GOVERNOR AND COUNCIL OF MINISTERS

GOVERNOR – Dr. K. ROSAIAH

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. Chief Minister	..	The Hon. Selvi J Jayalalithaa:
		Public, Indian Administrative Service, Indian Police Service, Indian Forest Service, General Administration, District Revenue Officers, Police, Home
2. Minister for Finance and Public Works	..	The Hon. Thiru O. Panneerselvam:
		Finance, Planning, Legislative Assembly, Elections and Passports, Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works
3. Minister for Electricity & Prohibition and Excise	..	The Hon. Thiru Natham R. Viswanathan:
		Electricity, Non-Conventional Energy Development, Prohibition and Excise, Molasses
4. Minister for Housing and Urban Development	..	The Hon. Thiru R. Vaithilingam:
		Housing, Rural Housing and Housing Development, Slum Clearance Board and Accommodation Control, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority
5. Minister for Highways & Minor Ports	..	The Hon. Thiru Edappadi K. Palaniswami:
		Highways & Minor Ports

6. Minister for Rural Industries and Labour	..	The Hon. Thiru P. Mohan: Rural Industries including Cottage Industries and Small Industries, Labour, Population, Employment and Training, Newsprint Control, Census and Urban & Rural Employment
7. Minister for Social Welfare and Nutritious Noon Meal Programme	..	The Hon. Tmt. R. Valarmathi: Social Welfare including Women's and Children's Welfare, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes, Welfare of the Differently Abled and Social Reforms and Nutritious Noon Meal Programme
8. Minister for Higher Education	..	The Hon. Thiru P. Palaniappan: Higher Education including Technical Education, Electronics, Science and Technology
9. Minister for Co-operation	..	The Hon. Thiru Sellur K. Raju: Co-operation, Statistics and Ex-Servicemen Welfare
10. Minister for Food	..	The Hon. Thiru R. Kamaraj: Food, Civil Supplies, Consumer Protection and Price Control
11. Minister for Industries	..	The Hon. Thiru P. Thangamani: Industries, Steel Control, Mines & Minerals and Special Initiatives

12. Minister for Transport	..	The Hon. Thiru V. Senthil Balaji: Transport, Nationalised Transport, Motor Vehicles Act
13. Minister for Milk and Dairy Development	..	The Hon. Thiru V. Moorthy: Milk and Dairy Development
14. Minister for Commercial Taxes and Registration	..	The Hon. Thiru M.C. Sampath: Commercial Taxes & Registration and Stamp Act
15. Minister for Agriculture	..	The Hon. Thiru Agri S.S. Krishnamoorthy: Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Waste Land Development
16. Minister for Municipal Administration, Rural Development, Law, Courts and Prisons	..	The Hon. Thiru S.P. Velumani: Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply, Laws, Courts and Prisons, Personnel and Administrative Reforms and Prevention of Corruption
17. Minister for Animal Husbandry	..	The Hon. Thiru T.K.M. Chinnayya: Animal Husbandry
18. Minister for Handlooms & Textiles	..	The Hon. Tmt. S. Gokula Indira: Handlooms & Textiles

19. Minister for Sports and Youth Welfare	..	The Hon. Dr. S. Sundararaj: Youth Welfare and Sports Development Department
20. Minister for Hindu Religious and Charitable Endowments	..	The Hon. Thiru P. Chendur Pandian: Hindu Religious and Charitable Endowments
21. Minister for Tourism	..	The Hon. Thiru S.P. Shanmuganathan: Tourism, Tourism Development Corporation
22. Minister for Adi Dravidar & Tribal Welfare	..	The Hon. Thiru N. Subramanian: Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour
23. Minister for Fisheries	..	The Hon. Thiru K.A. Jayapal: Fisheries and Fisheries Development Corporation
24. Minister for Information Technology	..	The Hon. Thiru N. Subramanian: Information Technology
25. Minister for Revenue	..	The Hon. Thiru R.B. Udhaya Kumar: Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Weights and Measures, Debt Relief including legislation on Money lending, Chits, Registration of Companies
26. Minister for Information and Special Programmes Implementation	..	The Hon. Thiru K.T. Rajenthra Bhalaji: Information & Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing and Government Press and Implementation of Special Programmes and Implementation of the Election Manifesto

27. Minister for School Education	..	**The Hon. Thiru K.C. Veeramani:** School Education, Archaeology, Tamil Official Language and Tamil Culture
28. Minister for Forests	..	**The Hon. Thiru M.S.M. Anandan:** Forests
29. Minister for Environment	..	**The Hon. Thiru N.D. Venkatachalam:** Environment and Pollution Control
30. Minister for Khadi and Village Industries	..	**The Hon. Thiru T.P. Poonachi:** Khadi and Village Industries Board, Boodhan and Gramadhan
31. Minister for Backward Classes and Minorities Welfare	..	**The Hon. Thiru S. Abdul Rahim:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Overseas Indians, Refugees and Evacuees and Minorities Welfare including Wakf
32. Minister for Health	..	**The Hon. Dr. C. Vijayabaskar:** Health, Medical Education and Family Welfare

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. ப. தனபால்

பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்

மாற்றுத் தலைவர்கள்*

திரு. அ. பாப்பா சுந்தரம்

திரு. ஓ.கே. சின்னராஜ்

திரு. கே.பி. அன்பழகன்

திரு. ஆர். சின்னசாமி

திரு. பி.ஜி. நாராயணன்

திரு. க. குணசேகரன்

செயலாளர்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன்

---

* 31-1-2014 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

திருமதி [illegible], பிளஸ்சி, பிஜிஎல்.	[illegible] செயலாளர்
திரு. ப. [illegible], எம்.ஏ., பிஜிஎல்.	இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. தா. [illegible], எம்.ஏ., எம்.பி.ஏ., பிஜிஎல், பி.ஜி.டி.ஏ.	இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. பா. [illegible], பிளஸ்சி, பிஜிஎல்.	இணைச் செயலாளர்
திரு. இரா. [illegible], பி.ஏ., பிஎல்.	துணைச் செயலாளர்
திரு. இரா. [illegible], பிளஸ்சி, பிஎல்.	துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி [illegible], எம்.ஏ., எம்.பி.ஏ., பிஜிஎல்.	துணைச் செயலாளர்
திரு. ம.ச. [illegible], எம்.ஏ., பிகாம், பிஜிஎல்.	துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. க. [illegible], எம்.ஏ., எம்.பி.ஏ., பிஎல்.	துணைச் செயலாளர்
திரு. [illegible], பிளஸ்சி.	[illegible]
திரு. வெ. [illegible], எம்.ஏ., பிளஸ்சி, பிஜிஎல்.	துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. இ. [illegible], எம்.ஏ., பிளஸ்சி, பிஜிஎல்.	[illegible] தலைவரின் சிறப்பு தனிச் செயலர்
திரு. து. [illegible], எம்.ஏ., பிஜிஎல்.	துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. இரா. [illegible], பிகாம், பிஜிஎல், [illegible]	[illegible] தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர்
திரு. [illegible], பிளஸ்சி, பிஎல்.	துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திருமதி ச. ஆண்டாள், பி.எஸ்சி., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. அ. வீரராஜேந்திரன், எம்.ஏ., பி.எல். .. துணைச் செயலாளர்

திருமதி க. செந்தாமரை, பி.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

திரு. இராம.சோ. கிரிதரன், பி.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

திருமதி சி. சகுந்தலா, பி.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

திருமதி லி.க. வசந்திமலர், எம்.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

திரு. பா. கப்பிரமணியம், பி.காம்., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

திரு. மா. கோபாலகிருஷ்ணன், பி.ஏ. .. குழு அலுவலர்

திருமதி இரா. சாந்தி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

திரு. ச. ஜெயகணேசன், பி.எஸ்சி., பி.ஜி.எல். .. தலைமை நிருபர்

திரு. ப. சிவராமன், எம்.ஏ., பி.ஜி.எல். .. தலைமை நிருபர்

திரு. அ. அய்யன்பெருமாள், எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. செ. பாண்டியன், எம்.ஏ., எம்.ஃபில்., பி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. வெ. கலைராஜன், எம்.ஏ., பி.எட்., பி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. மு. ஆதிசேஷன், எம்.காம்., பி.எட்., எல்.எல்.பி. .. சார்புச் செயலாளர்

திரு. ப. பத்மகுமார், எம்.எஸ்சி., பி.எட்., பி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. மு. கருணாநிதி, பி.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்

திருமதி பி. தேன்மொழி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.எல். .. சார்புச் செயலாளர்

திருமதி டி.வி. தெய்வநாயகி, பி.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்

பேரவை உறுப்பினர்கள்

(அகர வரிசைப்படி)

பெயர்களும் தொகுதிகளும்

1. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. - கலசப்பாக்கம்
2. அசோக், திரு. எம்.கே. - வேளச்சேரி
3. அண்ணாதுரை, திரு. இரா. - மதுரை தெற்கு
4. அப்துல் ரஹீம், திரு. எஸ். - ஆவடி
5. அரங்கநாதன், திரு. ஆ.க. - கீழ்பெண்ணாத்தூர்
6. அருண் சுப்பிரமணியன், திரு. மு. - திருத்தணி
7. அருண் பாண்டியன், திரு. செ. - பேராவூரணி
8. அருள்செல்வன், திரு. ஆர். - மயிலாடுதுறை
9. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், திரு. - சேலம் வடக்கு
10. அழகுவேலு, திருமதி க. - கள்ளக்குறிச்சி (செ.வ.)
11. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. - திருச்செந்தூர்
12. அன்பழகன், திரு. க. - கும்பகோணம்
13. அன்பழகன், திரு. கே.பி. - பாலக்கோடு
14. அன்பழகன், திரு. ஜெ. - சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி
15. அஸ்லம் பாஷா, திரு. அ. - ஆம்பூர்
16. ஆறுக்குட்டி, திரு. வி.சி. - கவுண்டம்பாளையம்
17. ஆறுமுகம், திரு. எம். - வால்பாறை (செ.வ.)
18. ஆனந்தன், திரு. எம்.எஸ்.எம். - திருப்பூர் வடக்கு
19. இந்திராகாந்தி, திருமதி த. - துறையூர் (செ.வ.)

20. இராமகிருஷ்ணன், திரு. நா. - கம்பம்
21. இராமச்சந்திரன், திரு. டி. - தனி
22. இராமலிங்கம், திரு. கே.வி. - ஈரோடு மேற்கு
23. இராஜி, திரு. வி.எஸ். - செய்யூர் (செ.வ.)
24. இராஜேந்திரன், திரு. இரா. - குறிஞ்சிப்பாடி
25. இராஜேந்திரன், திரு. பி.ஜி. - ஆலங்குளம்
26. உதயகுமார், திரு. ஆர்.பி. - சாத்தூர்
27. உலகநாதன், திரு. கே. - திருத்தணிகைப்பூண்டி (செ.வ.)
28. எடப்பாடி, கே. பழனிசாமி, திரு. - எடப்பாடி
29. கடம்பூர் ராஜு, திரு. - கோவில்பட்டி
30. கணிதா சம்பத், திருமதி எஸ். - மதுராந்தகம் (செ.வ.)
31. கணேசன், திரு. பா. - உத்திரமேரூர்
32. கணேஷ்குமார், திரு. அ. - கொட்டி
33. கதிரவன், திரு. பி.வி. - உலிலம்பட்டி
34. கந்தன், திரு. கே.பி. - சோழிங்கனல்லூர்
35. கருணாநிதி, திரு. மு. - திருவாரூர்
36. கருப்பசாமி, திரு. ஏ.ஏ. - அவினாசி (செ.வ.)
37. கருப்பையா, திரு. பழ. - துறைமுகம்
38. கருப்பையா, திரு. மு.வி. - சோழவந்தான் (செ.வ.)
39. கலை அரசு, திரு. ம. - அணைக்கட்டு
40. கலைராஜன், திரு. வி.பி. - தியாகராய நகர்
41. காமராஜ், திரு. இரா. - நன்னிலம்
42. காமராஜ், திரு. எண்.வி. - வேதாரண்யம்

43. காமராஜ், திரு. செ. .. கிருஷ்ணராயபுரம் (செவ)
44. கார்த்திக் தொண்டைமான், திரு. .. புதுக்கோட்டை
45. கிட்டுசாமி, திரு. ஆர்.என். .. மொடக்குறிச்சி
46. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஒட்டப்பிடாரம் (செவ)
47. கிருஷ்ணமூர்த்தி, திரு. கொ.ஏ. .. பர்கூர்
48. கிருஷ்ணன், திரு. கு.ப. .. ஆலங்குடி
49. கிருஷ்ணன், திரு. சி. .. ஒமலூர்
50. குணசீலன், திரு. வே. .. வந்தவாசி (செவ)
51. குணசேகரன், திரு. க. .. சிவகங்கை
52. குணசேகரன், திரு. ம. .. மானாமதுரை (செவ)
53. குப்பன், திரு. கே. .. திருவொற்றியூர்
54. குமரகுரு, திரு. இரா. .. உளுந்தூர்பேட்டை
55. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஜெயங்கொண்டம்
56. கோகுல இந்திரா, திருமதி எஸ். .. அண்ணா நகர்
57. கோபால்சாமி, திரு. க. .. ராஜபாளையம்
58. கோபிநாத், திரு. கே. .. ஒரூர்
59. சக்கரபாணி, திரு. அர. .. ஒட்டன்சத்திரம்
60. சக்தி, திருமதி ம. .. சீர்காழி (செவ)
61. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்
62. சண்முகம், திரு. சி.வி. .. விழுப்புரம்
63. சண்முகவேலு, திரு. சி. .. மடத்துக்குளம்
64. சந்திரகுமார், திரு. வி.சி. .. ஈரோடு கிழக்கு
65. சந்திரசேகர், திரு. ஆர். .. மணப்பாறை

66. சம்பத், திரு. எம்.பி. . கடலூர்

67. சம்பத்குமார், திரு. கோவி. . வாணியம்பாடி

68. சம்பத்குமார், திரு. ப. . திருச்செங்கோடு

69. சரத்குமார், திரு. ஏ.ஆர். . தென்காசி

70. சிறோஜா, திருமதி பெ. . ஏற்காடு (தனி)

71. சவுந்தரராசன், திரு. அ. . பெரம்பூர்

72. சாந்தி, திருமதி ஆர். . சேத்தியாத்தோப்பு (தனி)

73. சாமி, திரு. ஆர். . பேராவூர்

74. செல்லபாண்டி, திரு. ப. . பண்ருட்டி

75. செல்வகுமார், திரு. எம்.எஸ். . குன்னம்

76. செல்லப்பிரமணியன், திரு. எம்.பிகாம். . நெய்வேலி

77. செழியன், திரு. எஸ்.ஆர். . முசிறி

78. சின்னசாமி, திரு. ஆர். . சின்னாளபட்டி

79. சின்னராசு, திரு. ஒ.கே. . மேட்டுப்பாளையம்

80. சின்னையா, திரு. டி.கோபம். . தாம்பரம்

81. சீனிவாசன், திரு. ஆர். . அதிமாறு

82. சுந்தரம், திரு. பி.எல். . பவானிசாகர் (தனி)

83. சுந்தராராசு, டாக்டர் க. . பரமக்குடி (தனி)

84. சுந்தர்ராஜன், திரு. ஆர். . மதுரை மத்தி

85. சுபா, திருமதி ர. . வெங்கல்லி (தனி)

86. சுப்பிரமணியன், திரு. த. . செய்யாறு

87. சுப்பையா, திரு. இ. . அம்பாசமுத்திரம்

88. சுப்ரமணியன், திரு. த. . சுத்தாங்கோட்டை (தனி)

89. சுரேஷ்குமார், திரு. டி. .. செங்கம் (செ.வ.)
90. செங்குட்டுவன், திரு. டி. .. வேப்பனஹள்ளி
91. செங்கோட்டையன், திரு. கே.ஏ. .. கோபிசெட்டிப்பாளையம்
92. செந்தமிழன், திரு. ஞா. .. சைதாப்பேட்டை
93. செந்தில்குமார், திரு. எஸ். .. திருவெறும்பூர்
94. செந்தில்பாலாஜி, திரு. வி. .. கரூர்
95. செந்தூர் பாண்டியன், திரு. பு. .. கடையநல்லூர்
96. செல்லப்பாண்டியன், திரு. சி.த. .. தூத்துக்குடி
97. செல்லூர் கா. ராஜு, திரு. .. மதுரை மேற்கு
98. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி
99. செல்வராஜு, திரு. எம்.கே. .. சேலம் தெற்கு
100. செல்வி ராம்ஜெயம், திருமதி .. புவனகிரி
101. செழியன், முனைவர் கோ.வி. .. திருவிடைமருதூர் (செ.வ.)
102. சேகர், திரு. சி.எச். .. கும்மிடிப்பூண்டி
103. சோமசுந்தரம், திரு. வி. .. காஞ்சிபுரம்
104. சோழன் சி.த. பழனிச்சாமி, திரு. .. காரைக்குடி
105. சௌந்தரபாண்டியன், திரு. அ. .. லால்குடி
106. டில்லி பாபு, திரு. ப. .. அரூர் (செ.வ.)
107. தங்கமணி, திரு. பி. .. குமாரபாளையம்
108. தங்கம் தென்னரசு, திரு. .. திருச்சுழி
109. தங்கவேலன், திரு. கப. .. திருவாடனை
110. தங்கவேல், திரு. கே. .. திருப்பூர் தெற்கு
111. தமிழரசன், திரு. கா. .. மதுரை கிழக்கு

112. தமிழரசன், முனைவர் செ.கு. - சிற்றைத்திணைக்குப்பம் (செவ)
113. தமிழழகன், திரு. க. - திட்டக்குடி (செவ)
114. தமிழ்ச்செல்வன், திரு. இரா. - பெரம்பலூர் (செவ)
115. தமிழ்ச்செல்வன், திரு. நக்க. - ஆண்டிப்பட்டி
116. தனபால், திரு. ப. - ராசிபுரம் (செவ)
117. தனியரசு, திரு. உ. - பரமத்தி வேலூர்
118. தன்சிங், திரு. ப. - பல்லாவரம்
119. தாமோதரன், திரு. செ. - கிளாத்துக்கடவு
120. திராவிடமணி, திரு. மு. - கடலூர் (செவ)
121. தினகரன், திரு. க. - ஊலூர்
122. துரைக்கண்ணு, திரு. இரா. - பாபநாசம்
123. துரைசாமி என்கிற செல்லூர் துரை, திரு. ரா. - கோயம்புத்தூர் தெற்கு
124. துரைமுருகன், திரு. - காட்பாடி
125. துரையப்பா, டாக்டர் ச. - வாசுதேவநல்லூர் (செவ)
126. நஞ்சப்பன், திரு. ந. - பெண்ணாகரம்
127. நடராஜ், திரு. என்னஸ்என். - காங்கேயம்
128. நந்தம் ஆர். விசுவநாதன், திரு. - நந்தம்
129. நயினார் நாகேந்திரன், திரு. - திருநெல்வேலி
130. நல்லதம்பி, திரு. கு. - எழும்பூர் (செவ)
131. நாகராஜன், திரு. கே.பி. - மயிலம்
132. நாகைமாலி, திரு. வீ.பி. - கீழ்வேளூர் (செவ)
133. நாஞ்சில் முருகேசன், திரு. ஆ. - நாகர்கோவில்
134. நாராயணன், திரு. ஆ. - நாங்குநேரி

135. நாராயணன், திரு. பி.ஜி. - பவானி
136. நீலகண்டன், திரு. வ. - திருவி.க. நகர் (செ.வ.)
137. பச்சைமால், திரு. கே.டி. - கன்னியாகுமரி
138. பரஞ்ஜோதி, திரு. மு. - திருச்சிராப்பள்ளி மேற்கு
139. பரமசிவம், திரு. கே.பி. - பல்லடம்
140. பவுன்ராஜ், திரு. க. - பூம்புகார்
141. பழனிசாமி, திரு. கே.சி. - அரவக்குறிச்சி
142. பழனிச்சாமி, திரு. ச. - கேட்சந்தூர்
143. பழனியப்பன், திரு. பி. - பாப்பிரெட்டிப்பட்டி
144. பன்னீர்செல்வம், திரு. ஓ. - போடிநாயக்கனூர்
145. பாண்டியராஜன், திரு. க. - விருதுநகர்
146. பாபு முருகவேல், திரு. ர.ம. - ஆரணி
147. பாப்பா சுந்தரம், திரு. அ. - குளித்தலை
148. பார்த்தசாரதி, திரு. ப. - விருகம்பாக்கம்
149. பார்த்திபன், திரு. எஸ்.ஆர். - மேட்டூர்
150. பாலகிருஷ்ணன், திரு. க. - சிதம்பரம்
151. பாலபாரதி, செல்வி கே. - திண்டுக்கல்
152. பாஸ்கர், திரு. அ. - தருமபுரி
153. பாஸ்கர், திரு. கே.பி.பி. - நாமக்கல்
154. பிரபாகர், திரு. ஜே.சி.டி. - வில்லிவாக்கம்
155. பிரின்ஸ், திரு. ஜே.ஜி. - குளச்சல்
156. பிம்ராவ், திரு. க. - மதுரவாயல்
157. புத்திசந்திரன், திரு. - உதகமண்டலம்

158. புஷ்ப லீலா ஆல்பன், டாக்டர் (திருமதி) . பத்மநாபபுரம்

159. பூனாட்சி, திரு. தோ.பெ. . மணச்சநல்லூர்

160. பெரியகருப்பன், திரு. கே.ஆர். . திருப்பத்தூர்

161. பெரியசாமி, திரு. இ. . ஆத்தூர்

162. பெருமான், திரு. இரா. . ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)

163. பொன்னாச்சி வி. ஜெயராமன், திரு. . உடுமலைப்பேட்டை

164. பொன்னுசாமி, திரு. கே. . தாராபுரம் (செ.வ.)

165. பொன்னுப்பாண்டி., திரு. வெ. . ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.)

166. போஸ், திரு. ஏ.கே. . மதுரை வடக்கு

167. மணிமாறன், திரு. இரா. . பூந்தமல்லி (செ.வ.)

168. மணிவேல், திரு. துரை. . அரியலூர்

169. மலரவன், திரு. தா. . கோபம்புத்தூர் வடக்கு

170. மனோகரன், திரு. ஆர். . திருச்சிராப்பள்ளி கிழக்கு

171. மனோகரன், திரு. க. . திருப்போரூர்

172. மனோகர், திரு. பி.ஆர். . சோளிங்கர்

173. மனோரஞ்சிதம், திருமதி . ஊத்தங்கரை (செ.வ.)

174. மாதேஸ்வரன், திரு. க. . ஆத்தூர் (செ.வ.)

175. மார்க்கண்டேயன், திரு. கு.வ. . விளாத்திகுளம்

176. முத்துகருப்பண்ணசாமி, திரு. எம்.கே. . பொள்ளாச்சி

177. முத்துக்குமார், திரு. வி. . விருத்தாசலம்

178. முத்துசெல்வி, திருமதி ச. . சங்கரன்கோவில் (செ.வ.)

179. முத்துராமலிங்கம், திரு. ம. . திருமங்கலம்

180. முருகன், திரு. மு. . முதுகுளத்தூர்

181. முருகுமாறன், திரு. எஸ். . வாட்டுமன்னார்கோவில் (தெவ)

182. முருகேசன், திரு. து. . செங்கல்பட்டு

183. முனுசாமி, திரு. கே.வி. . திருவண்ணாமலை

184. முனும்மத்துரை, திரு. அ. . இராணிப்பேட்டை

185. மூர்த்தி, திரு. வி. . மானாமதுரை

186. மைக்கேல் ராயப்பன், திரு. சி. . ராஜாடிரம்

187. மைதீன்கான், திரு. டி.பிகாம். . பாலையங்கோட்டை

188. மோகன், திரு. ப. . சங்கராபுரம்

189. ரமணா, திரு. பி.வி. . திருவள்ளூர்

190. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். . ஆத்தூர்

191. ரமேஷ், திரு. கே.கோ. . திருப்பத்தூர்

192. ரவி, திரு. ஆ. . அரக்கோணம் (தெவ)

193. ராமசாமி, திரு. ஆ . திலங்கோட்டை (தெவ)

194. ராமச்சந்திரன், திரு. வா. . குன்னூர்

195. ராமமூர்த்தி, திரு. ஆர். . விக்கிரவாண்டி

196. ராஜநாயகம், திரு. மு. . அரூர்

197. ராஜலட்சுமி, திருமதி ஆர். . மயிலாப்பூர்

198. ராஜா, திரு. ஏ.கே.டி. . திருப்பரங்குன்றம்

199. ராஜா, திரு. டி.ஆர்.பி. . மன்னார்குடி

200. ராஜா, திரு. பொன். . பொன்னேரி (தெவ)

201. ராஜேந்திர பாலாஜி, திரு. கோ. .. சிவகாசி

202. ரெங்கசாமி, திரு. எம். .. தஞ்சாவூர்

203. ரெங்கராஜன், திரு. எஸ்.ஆர். .. பட்டுக்கோட்டை

204. ரெத்தினசாமி, திரு. மு. .. திருவையாறு

205. லாசர், திரு. ஏ. .. பெரியகுளம் (தனி)

206. வின்சென்ட், திரு. சு. .. குடியாத்தம் (தனி)

207. வளர்மதி, திருமதி பா. .. ஸ்ரீரங்கம் விளக்கு

208. விஜயகாந்த், திரு. .. நிலக்கோட்டை

209. விஜயதரணி, திருமதி எல். .. விளவங்கோடு

210. விஜயபாஸ்கர், டாக்டர் சி. .. விராலிமலை

211. விஜயலட்சுமி பழனிசாமி, திருமதி வி. .. எம்எல்

212. விஜய், டாக்டர் வி.எஸ். .. வேலூர்

213. வீராமணி, திரு. கே.பி. .. ஜோலார்பேட்டை

214. வெங்கடாச்சலம், திரு. எஸ்.டி. .. பெரும்துறை

215. வெங்கடாசலம், திரு. கோ. .. சேலம் மேற்கு

216. வெங்கடேசன், திரு. எஸ். .. திருக்கோவிலூர்

217. வெங்கட்ராமன், திரு. வி.எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்

218. வெற்றிவேல், திரு. பி. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

219. வேணுகோபாலு, திரு. கோவிந்தசாமி. .. பழனி

220. வேதாச்சலம், திரு. எஸ். .. அம்பத்தூர்

221. வேலு, திரு. எஸ். .. திருவண்ணாமலை

222. வேலுமணி, திரு. எஸ்.பி. .. தொண்டாமுத்தூர்

223. வைகைச்செல்வன், முனைவர் - அருப்புக்கோட்டை
224. வைத்திலிங்கம், திரு. ஆர். - ஒரத்தநாடு
225. வைரமுத்து, திரு. பி.கே. - திருமயம்
226. ஜவாஹிருல்லா, முனைவர் எம்.எச். - இராமநாதபுரம்
227. ஜாண் ஜேக்கப், திரு. எஸ். - கின்னியூர்
228. ஜானகிராமன், திரு. ஜ. - வானூர் (செ.வ.)
229. ஜெயக்குமார், திரு. டி. - இராயபுரம்
230. ஜெயசுதா, திருமதி எல். - பொளூர்
231. ஜெயபால், திரு. கே.ஏ. - நாகப்பட்டினம்
232. ஜெயலலிதா, செல்வி ஜெ - ஸ்ரீரங்கம்
233. ஸ்டாலின், திரு. மு.க. - கொளத்தூர்
234. ஹரிதாஸ், டாக்டர் த. - நிண்டிவனம் (செ.வ.)
235. நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ், டாக்டர் (திருமதி) - நியமனம்

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

திரு. ஏ.எல். சோமையாஜி - மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஐப், ஆனி 30, திருவள்ளுவர் ஆண்டு–2045

2014 ஜூலை 14, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. ப. தனபால் அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அருவினை என்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின்?"

ஒரு தொழிலைச் செய்து முடிப்பதற்கேற்ற கருவிகளோடு, காலத்தையும் அறிந்து செயல்பட்டால், வெற்றி பெறுவதற்கு முடியாத கடினமான செயல் என்று எதுவும் இல்லை.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 120, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

120—

துணை மின் நிலையம்

*38386—திரு. வி. சோமசுந்தரம்:

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் தொகுதி, காஞ்சிபுரம் வட்டம், கூரம் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2014 ஜூலை 14

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

காஞ்சிபுரம் தொகுதி, காஞ்சிபுரம் ஊராட்சி, கூரம் பகுதிக்கு சுமார் 6.75 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள காஞ்சிபுரம் 110/33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்திலிருந்து 11 கிலோ வோல்ட் மின் பாதை வழியாக சோளா மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், கூரம் கிராமத்திற்கு 3 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள அரியபெரும்பாக்கம் கிராமத்தில் 17.25 ஏக்கரில் புதியதாக 230/110/11 கிலோ வோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்கும் பணி JICA என்ற நிறுவனம், அதாவது Japan International Co-operation Agency என்னும் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிறுவனம் திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டு, மறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, பரிசீலனையில் உள்ளது. துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் விரைவில் துவக்கப்பட உள்ளன. இத்துணை மின் நிலையப் பணிகள் 2015 ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிவடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, கூரம் பகுதியில் புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கான அவசியம் எழுவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம் அவர்கள்.*

திரு. வி. சோமசுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெற்றி, வெற்றி, எங்கும் வெற்றி, எதிலும் வெற்றி, (மேசையைத் தட்டும் ஒலி) எங்கு நோக்கினும் வெற்றி! (மேசையைத் தட்டும் ஒலி) நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலிலே எத்தனை எதிர்ப்புகள் வந்த போதிலும், 8 திசைகளிலிருந்து வந்தபோதிலும், அந்த எதிர்ப்புகளையெல்லாம் தூள், தூளாக்கி மகத்தான வெற்றியைக் கண்ட எங்களது சாதனைத் தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஓர் அறிஞர், "விதைத்தவன் தூங்கலாம், ஆனால் விதை தூங்காது" என்று சொன்னார். அந்த வரிகளுக்கு இலக்கணமாக 17 இலட்சம் உறுப்பினர்களைக் கொண்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தலைமையேற்று சரியாக வழி நடத்தி,*

2014 ஜூலை 14]

இன்றைக்கு ஒன்றரை கோடி தொண்டர்களைக் கொண்ட இயக்கமாக இந்தியத் துணைக் கண்டத்திலேயே மூன்றாவது பெரிய கட்சியாக (மேசையைத் தட்டும் ஒலி) உருவாக்கித் தந்த எங்களது இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன். இந்த இயக்கத்தை எக்குத் தோட்டையாகக் கட்டி, காத்து வரும் எங்களது உயிர் மூச்சே! "வாழ்வது ஒரு முறை, வாழ்த்தட்டும் தலைமுறை" என்று ஏழை எளிய மக்களுக்காக இட்டங்கள் பல தந்த எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவின் பொற்பாதங்களை மீண்டும் தொட்டு வணங்குகிறேன்.

முற்பகல் 10-05

காஞ்சிபுரம் தொகுதிக்குட்பட்ட, கரும் திராமமும், அதனைச் சுற்றியுள்ள 15-க்கும் மேற்பட்ட இராமங்களும் வேளாண்மையை முதன்மைத் தொழிலாகக்கொண்டு விளங்கிக்கொண்டிருக்கின்றன. அத்தத் தொழிலுக்கு முக்கியமான மின்சாரத்தினைப் பெறுவதற்காகத்தான் இன்றே நான் இத்தக் கேள்வியைக் கேட்டேன். 'மக்களால் நான், மக்களுக்காக நான்' என்று சொல்லி ஆட்சி நடத்தும் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில், கரும் திராமத்திற்கு அருகில் இருக்கக்கூடிய ஸ்ரீபெரும்பாக்கம் திராமத்தில் 230/110/11 கிலோ வோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைத்துத் தரப்படும் என்ற மகிழ்ச்சியான பதிலுக்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த மூன்று ஆண்டுகால மகத்தான ஆட்சியிலே, காஞ்சிபுரம் மாவட்டத்தில் எத்தனை துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரத்தினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

குறிப்பிட்டதுபோல கூரம் பகுதியில் உள்ளபடியே மின் தேவை அதிகமாகத்தான் இருக்கின்றது. அதனைக் கருத்தில்கொண்டுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அந்தப் பகுதிக்கு புதிய துணை மின் நிலையம் கேட்டிருந்தார். அப்பகுதியில் ஏற்கெனவே 16 எம்.வி.ஏ. திறன் கொண்ட 2 மின் மாற்றிகளும், 25 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றியும் இயங்கி வருகின்றன. அங்கு மின் தேவையும், மின் பளுவும் ஏறத்தாழ சமமான நிலையில் இருப்பதால், மின் தேவை அதிகரித்துவரும் அத்தப் பகுதியில் இப்போது இருக்கின்ற வசதி போதாது; புதியதாக மின் நிலையம் தேவை என்பதால், அதைக் கண்டறிந்து மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் 230/110/11 கிலோ வோல்ட் திறன் கொண்ட 40 புதிய துணை மின் நிலையங்களை, ஏறத்தாழ ரூ.44 கோடி செலவில் அப்பகுதியில் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டு, ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. ஆனால், முதலில் ஒப்பந்தம் எடுத்த நிறுவனம், அவர்களுக்கு கட்டுப்படியாகவில்லை என்று சொல்லி, அதனைச் செயல்படுத்த முன்வரவில்லை. எனவே, மீண்டும் அங்கே மறு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, அவை இறுதி செய்யப்படும் நிலையில் இருக்கின்றன. அதனால்தான் காலதாமதம் ஆனது. இப்பணி ஓப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிதியத்தின் உதவியோடு நடைபெறுவதால், அதன் அனுமதியைப் பெற்று, தற்போது மறு ஒப்பந்தப் புள்ளி இறுதி செய்யப்பட்டு, எவ்வளவு விரைவாக அந்தப் பணிகளை தொடங்கமுடியுமோ அவ்வளவு விரைவாகத் தொடங்கியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 2015 ஆம் ஆண்டுக்குள் இப்பணிகள் முடிக்கப்பட்ட பிறகு அத்தப் பகுதியில் மின் அழுத்தப் பிரச்சினை என்பது வரவே வராது என்று சொல்லக்கூடிய அளவிற்கு மாண்புமிகு அம்மா அவர்கள், தொலைநோக்குப் பார்வையோடு அத்தப் பகுதிக்கு தாயுள்ளத்தோடு வழங்கியிருக்கிறார்கள் என்பதை மனமகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, காஞ்சிபுரம், சென்னை பெருநகரத்தினைச் சுற்றியுள்ள மாவட்டம் என்பதால் அத்தப் பகுதிகளில் வளர்ந்து வரும் தொழில்களால் மின் தேவை நாளுக்குநாள் அதிகரித்து வருவதைக் கருத்தில்கொண்டு, 2017 ஆம் ஆண்டுக்குள், 12-வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் ஏறத்தாழ அந்த மாவட்டத்திற்கு மட்டும் 33 துணை மின் நிலையங்கள் அமைக்க முடிவு செய்யப்பட்டு, அதில் 16 துணை மின் நிலையங்கள் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டு மாண்புமிகு அம்மா அவர்களின்

2014 ஜூலை 14]

இருக்கரத்தினால் தொடங்கிவைக்கப்பட்டு, அவை செயல்பட்டு வருகின்றன; அவை தற்போது இயக்கப்பட்டும் வருகின்றன. மேலசையைத் தட்டும் ஒலி) நிலம் கையகப்படுத்தும் பணியில் பிரச்சினைகள் இருப்பதால் எவ்வளவு விரைவாக நிலம் கையகப்படுத்தப்படுகிறதோ, அந்த அளவிற்கு விரைவாக பணிகள் முடிக்கப்படும். அந்த மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட 33 துணை மின் நிலையங்களில் 16 பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. மீதமுள்ளவை இன்னும் 2 ஆண்டு காலத்திற்குள் நிச்சயமாக நிறைவப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம் அவர்கள்.

திரு. வி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய துணை மின் நிலையங்களை அமைத்துத் தந்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

முற்பகல் 10-10

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் தொகுதி, கொட்டையூர், அரசர், மேலக்காவேரிப் பகுதி ஆகியவை விவசாயம் நிறைந்த பகுதிகள். வளர்ந்து வரும் நகரங்கள். கொட்டையூர் பகுதியில் மின்சார ஏற்றத் தாழ்வுகள் வராமல் தடுக்கப்பட, அங்கே 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைத்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட பகுதியிலே மின் பளுவின் தேவைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, தேவையேற்படின் நிச்சயமாக அம்மா அவர்களுடைய அரசு

[2014 ஜூலை 14

அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

திரு. அ. சவுந்தராராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிம்சனுக்கு எதிரிலே மூலக்கடையில் இருக்கக்கூடிய மின் நிலையத்திற்குச் சொந்தமான இடத்திலே ஒரு Sub-station அமைத்துத் தரப்படுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எனது வேண்டுகோளை ஏற்று கூறியிருக்கிறார்கள். அந்த வேலை சற்று தாமதப்படுகிறது. அதை விரைவுபடுத்திச் செய்து தர வேண்டுகிறேன். கொடுங்கையூர், கண்ணதாசன் நகர், முத்தமிழ் நகர், விபாசர்பாடி போன்ற பகுதிகளில் இணைத்தோறும் voltage drop—மின் அழுத்தக் குறைவின் காரணமாக மின் தடை ஏற்படுகிறது; இது பெரும் பிரச்சினையாக இருக்கிறது. அதிகாரிகளைக் கேட்டால் எல்லோரும் A/c Machine போட்டுவிட்டார்கள். ஆகவேதான் இப்படி நடக்கிறது என்று சொல்கிறார்கள். ஆகவே மகாகவி பாரதி நகரிலே ஒரு துணை மின் நிலையமும், போதுமான மின்மாற்றிகளும் அமைத்து, இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதி மாத்திரமல்ல; சென்னைப் பெருநகரத்தைப் பொறுத்த அளவிலே, இன்றைக்கு மின் தேவை அதிகரித்து வருவதைக் கருத்திலே கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஏற்கெனவே எந்தெந்த இடங்களிலே புதிய துணை மின் நிலையங்கள் அமைக்கவேண்டும், எந்தெந்த இடங்களிலே புதிய மின் மாற்றிகள் அமைக்கவேண்டும் என்பதையெல்லாம் கண்டறிந்து, உடனுக்குடன் அதைச் சரிசெய்ய வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே நாம் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கின்றபொழுது, சில இடங்களிலே மின்மாற்றிகளை அமைப்பதற்குப் பொது மக்கள் பிரச்சினை செய்கிறார்கள்; "எங்கள் வீட்டிற்குப் பக்கத்தில் போடாதீர்கள்,

2014 ஜூலை 14]

அந்தக் கடைக்குப் பக்கத்தில் போடாதீர்கள், இந்தத் தெருவிலே போடாதீர்கள்" என்று எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். அதையும் சரிசெய்ய வேண்டியிருக்கிறது. துணை மின் நிலையங்களை அமைப்பதைப் பொறுத்தவரையில், போதிய இடவசதிகளைக் கண்டுபிடிப்பதிலும், அவற்றை அடையாளம் கண்டு, நிலத்தைக் கையகப்படுத்துவதிலும், பல்வேறு சிரமங்கள் இருக்கின்றன. புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதில் ஏற்படுகின்ற சிரமத்திற்குக் காரணம் இடங்களைத் தேர்வு செய்வதிலே ஏற்படுகின்ற காலதாமதம்தான். இருந்தாலும்கூட, தமிழ்நாடு மின்சார வாரியம், மார்க்கெட் விலை கொடுத்து அந்த நிலங்களை எல்லாம் கையகப்படுத்தவும் தயாராக இருக்கிறது. அப்படியிருந்தாலும்கூட, சில நேரங்களில் போதிய இடங்கள் கிடைக்காததால், புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதிலே சில இடர்பாடுகள் ஏற்படுகின்றன. இருந்தாலும், அந்தந்த இடங்களிலே நிலம் கையகப்படுத்தும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதன் அடிப்படையிலே, குறிப்பிட்ட அந்தப் பகுதிகளிலே, எந்தெந்த இடங்களிலே துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு இடம் கிடைக்கிறதோ, அந்தந்தப் பகுதிகளிலெல்லாம் அமைப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தயாராக இருக்கிறது; அந்த வகையில் அரசு செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பகுதிகளிலே ஏற்படுகின்ற காலதாமதத்திற்கான காரணத்தைக் கண்டறிந்து, உரிய அதிகாரிகளுக்கும் தகவல் சொல்லி, பணிகளை விரைவுபடுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலம்பட்டி தொகுதி, வாலாந்தூர் மற்றும் தொட்டப்பநாயக்கனூர் கிராமத்தில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு இடம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. அதற்கான வேலை எப்பொழுது தொடங்கும் என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

[2014 ஜூலை 14

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாலாஜாபாத்திலே, 110/11 கிலோ வோல்ட் புதிய துணை மின் நிலையம் மற்றும் 10 M.V.A. திறன் கொண்ட மின் மாற்றி ஆகியவை அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டு, அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே சொன்னது போல இடப்பிரச்சினை போன்ற பல்வேறு பிரச்சினைகளினால் ஏற்படுகின்ற காலதாமதத்திற்கான காரணத்தைக் கண்டறிந்து, விரைவாக அந்தப் பகுதியிலே துணை மின் நிலையம் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 121, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

121—

புறவழிச்சாலை

***36871—திரு. மு.வீ. கருப்பையா:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதி, சோழவந்தானில் புறவழிச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சோழவந்தான் தொகுதி, சோழவந்தானில் புறவழிச் சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 ஜூலை 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. முஸ். சுருப்பையா அவர்கள்.

திரு. முஸ். சுருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண் குடிசைவாசிகளின் தென்றலாய் தோன்றி பகைமை விடு வழங்கிய தங்கத் தாரகையே, தமிழர் கலை, பண்பாடு, இலக்கியம், ஆன்மீகமிக்க கலாச்சாரம், ஏனென்றால், ஆன்மீகக் கலாச்சாரமே அமைதிக்கு அச்சாரம். அன்னை மொழி சொன்ன வழி நிற்கும் ஆன்மீகத் தெய்வமே, பிரிவினைவாதம், பயங்கரவாதம், நீவிரவாதம், உலக ஜனநாயகக் கோட்பாட்டிற்கு அவமானம் என்று, இந்திய தேசிய சுதந்திர மூச்சில் தேசியத்தைக் காட்டும் தென்னாட்டு நீயுமே, சிறுபான்மை-பெரும்பான்மை, ஏழை-பணக்காரன் என்ற பாகுபாடு மொழிதலுக்கும், பண்பற்ற கூச்சலுக்கும் வழக்கில் இடமில்லை என்றும், கலங்கி நிற்கும் உள்ளங்களுக்கு கனிவோடு உணர்த்திவரும் கருணை மொழியே! தமிழைச் சொல்லி, தமிழர்களைச் சொல்லி, எதிரும் அரசியல் ஆதாயம் தேடுபவர்களையும், அசுரத்தனமான தீயசக்தி, நயவஞ்சக நாக்கு துருத்தி கடாரத்தையும் சூறையாடும் சிங்கமான தலைவியே, (மேசையைத் தட்டும் ஒலி) மாசற்ற நேசம் கொண்டு தன்னை எந்நாளும் பின்பற்றும் விசுவாசம் மிக்க தொண்டர்களை அரவணைக்கும் அம்மா அவர்களை வணங்குகின்றேன்.

எனது சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட, சோழவந்தானில் புறவழிச் சாலை அமைக்கப்பட வேண்டுமென்பது அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாகும். கருணைகொண்டு, பன்னப்பட்டி ரோடு, கருவாட்டுபொட்டல் முதல் பேட்டை, இரயில்வே மேம்பாலத்திற்கீழ் விவேகானந்தா கல்லூரி அருகில் சோழவந்தான் சாலையை இணைக்கும் புறவழிச் சாலை வேண்டுமென்று, பொதுவெரும் மக்களின் நலன் கருதி, நீண்ட நாட்களாக கோரி வருகிறார்கள். இத்தக் கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுத்தால், அந்தப் பகுதி மக்கள் எளிதில் சென்று வரக்கூடிய நிலையிருக்கும் என்பதையும், அவர்களுடைய குறைகள் தீர்க்கும் என்பதையும் கருத்தில்கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2014 ஜூலை 14

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழவந்தான் பேரூராட்சியானது, திருமங்கலம், பள்ளப்பட்டி, சிலுக்குவார்பட்டி சாலை, மாவட்ட சாலை எண் 73, இலோ மீட்டர் 24/0-ல் ஆரம்பித்து, இலோ மீட்டர் 25/6-ல் முடிவடைகிறது. சோழவந்தான் பேரூராட்சியின் இடதுபுறம் வைகை ஆறு மற்றும் வலது புறம் சென்னை-கன்னியாகுமரி இரயில்வே பாதையும் செல்கின்றது. மேலும், சோழவந்தானிலிருந்து 5 இலோ மீட்டர் தூரத்தில் உள்ள தேசிய நெடுஞ்சாலை எண் 7 நான்கு வழிச்சாலையில், மாவட்ட முக்கிய சாலையான சோழவந்தான் வலையபட்டி சாலை இணைகிறது. சமயநல்லூரிலிருந்து கனரக வாகனங்கள் தேசிய நெடுஞ்சாலையில் செல்கின்றன. எனவே சோழவந்தான் புறவழிச் சாலை அமைத்திட தற்போது அவசியம் ஏற்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், சோழவந்தான் தொகுதியில் இரயில்வே மேம்பாலம் அமைத்துக் கொடுப்பதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணைகள் பிறப்பித்து, இப்போது நிலம் கையகப்படுத்தும் வேலைகள் நல்லமுறையில் நடைபெறுகின்றன. அதற்காக இந்த நல்லாட்சிக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குருவித்துறை-முத்துலிங்கபுரத்தை இணைக்கும், மண்ணாடிமங்கலம், பள்ளப்பட்டி-இரும்பாடியை இணைக்கும், கச்சிராயிருப்பு-சோழவந்தான் ஆகிய சாலைகளை இணைக்கும், வைகையாற்றில் தரைப்பாலம் அமைக்க வேண்டுமென்று அப்பகுதி மக்கள் நீண்ட நாட்களாக கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அங்கு வாழ்கின்றவர்கள் 15 இலோ மீட்டர் சுற்றிவரக்கூடிய பரிதாப

2014 ஜூலை 14]

நிலை உள்ளது. உலகப் புகழ்பெற்ற அலங்காநல்லூர் Gate அருகிலுள்ள நெடுஞ்சாலைக்குச் சொந்தமான பாலமும் பழுதடைந்துள்ளது. மேற்கண்ட பணிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடப்பாண்டில் செய்துகொடுக்க முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழவந்தானில் இரயில்வே கடவு எண் 346-க்கு மாற்றாக சாலை மேம்பாலம் கட்ட ஆரம்ப கட்டப் பணிகள் நற்போது நடைபெற்று வருகின்றன. நிலம் கையகப்படுத்துதல், பயன்பாட்டுச் சாலைகளை மாற்றி அமைத்தல், சாலை மேம்பாலம் கட்டும் பணிகள் ஆகியவை முடிவடைந்தவுடன், போக்குவரத்து நெரிசல் வெகுவாகக் குறையும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும் தரைப்பாலம் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதையும் ஆய்வு செய்து, தரைப்பாலம் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இருந்தால், அதுபற்றி பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி நகராட்சியில், நாகை சாலையையும் திருவாரூர் சாலையையும் இணைக்கக்கூடிய புறவழிச் சாலைப் பணிகள் தொடங்கப்பட்டன. ஆனால், என்ன காரணமோ தெரியவில்லை, நற்போது அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. சென்ற முறை நான் இங்கே கேள்வி கேட்டபோது ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே, தடைபட்டிருக்கக்கூடிய அந்தப் புறவழிச் சாலைப் பணியை உடனடியாக இந்த ஆண்டே துவங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி நகரத்திற்கு புறவழிச் சாலை அமைக்க விரைவாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கேட்டிருக்கின்றார்கள். தற்போது நிலம் எடுக்கும் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்தப் பணி நிறைவு பெற்றவுடன், புறவழிச் சாலை அமைக்கும் பணி துவங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தேசிய நெடுஞ்சாலைகளிலும், புறவழிச் சாலைகளிலும் போக்குவரத்திற்கு இடையூறு இருக்கிறது. ஆகவே, புறவழிச் சாலையில் அமைக்கப்பட்டுள்ள கடற்கரை சாலையை மக்களுடைய நலன் கருதி விரிவுபடுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்போது அந்தச் சாலையை விரிவுபடுத்த வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அதை ஆய்வு செய்து, நிதிநிலைக்கேற்ப படிப்படியாக சரிசெய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 122, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

2014 ஜூலை 14]

122—

பதிமுதல் செய்தல்

4833—திரு. ஆர். சுந்தர்ராஜன்:

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கேள்விக்கு விடையளிப்பாரா—

கடைகளில் விற்கப்படும் ஜனஜ. முத்திரை பொறிக்கப்படாத தரமற்ற மின்சாரப் பொருட்களைப் பதிமுதல் செய்ய அரசு ஆணை செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாநிலம் முழுவதும் அதிகாரம் பெற்ற அலுவலர்களால் திடீர் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஐஎஸ்ஐ. முத்திரை இல்லாத தரமற்ற மின் பொருட்களை விற்பனைக்காக கடைகளில் இருப்பு வைத்திருப்பது கண்டறியப்பட்டால், அவை பதிமுதல் செய்யப்படுகின்றன. பதிமுதல் செய்யப்படும் நிறுவனங்கள்மீது குற்றவியல் நடவடிக்கையின்படி நீதிமன்ற வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன. இவ்வாறு கடைகளில் விற்கப்படும் ஐஎஸ்ஐ. முத்திரை பொறிக்கப்படாத தரமற்ற மின்சாரப் பொருட்களைப் பதிமுதல் செய்ய தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன் அவர்கள்.*

திரு. ஆர். சுந்தர்ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்மனத் தலைவி, தங்கத் தாரகை, காவேரி கண்ட தாய், பொன்னியின் செல்வி தமிழக முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் எல்லாம்; மற்றவர்கள் எல்லாம் சும்மா, (மேசையைத் தட்டும் ஒலி) தனித்து நிற்க திராணி இல்லாதவர்களை எல்லாம் மக்கள் தூக்கியெறிகின்ற காலம் வெகுதூரத்தில் இல்லை. தமிழகத்தின் நிரந்தர முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதைக் கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

ஐ.எஸ்.ஐ. முத்திரை இல்லாத தரமற்ற பொருட்களை விற்பனை செய்யும் கடைகளில் பொருட்களைப் பறிமுதல் செய்ய அரசு ஆவன செய்யுமா எனக் கேட்டுக்கொள்கிறேன். தரமற்ற பொருட்களை விற்பதால் பெருத்த உயிர் சேதமும், பொருட்சேதமும் ஏற்படும் என்பது நாம் அறிந்த உண்மை. எனவே, தரக் கட்டுப்பாட்டுச் சட்டத்தைக் கடுமையாக்க அரசு ஆவன செய்யவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் மின் கம்பிகள், கம்பி வடங்கள், உபகரணங்கள், பாதுகாப்பு பொறியமைப்புகள் மற்றும் துணைக் கருவிகள் (தரக்கட்டுப்பாடு) ஆணை, 2013-ல் உள்ள விதிமுறைகளின்படி, தொழில் வணிக இயக்குநரகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள திருவான்மியூர் விக்ரம் சாராபாய் தொழிற்பேட்டையில் அமைந்துள்ள தரக்கட்டுப்பாடு அலுவலர் செயலாக்க மையம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதிலே, 15 வகை மின் சாதனங்களுக்கு ஐ.எஸ்.ஐ. முத்திரை கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஐ.எஸ்.ஐ. முத்திரை இடப்படாத மின் சாதனங்களை விற்பவர்கள்மீது பி.ஐ.எஸ். சட்டம் 1986-ன்படி, ரூ.50,000/- அபராதம் விதிக்கவும் அல்லது ஒரு வருடம் சிறைத் தண்டனை வழங்கவும் அல்லது இரண்டையும் சேர்த்து தண்டனையாக வழங்கவும் அரசு பல்வேறு வகைகளில் நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. அந்த வகையிலே, மத்திய அரசினுடைய இந்தச் சட்டத்தைத் தமிழ்நாடு அரசுதான் முறையாக, சிறப்பாக இந்த மூன்று ஆண்டுக் காலத்தில் செயல்படுத்தி வருகிறது.

முற்பகல் 10-25

கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் தமிழ்நாட்டில் 183 மின் சாதன விற்பனைக் கூடங்களில் ஐ.எஸ்.ஐ. முத்திரை பெறாமல் விற்பனைக்காக இருப்பு வைக்கப்பட்டிருந்த 7,90,665 ரூபாய் மதிப்புள்ள 4,163 மின் சாதனப் பொருள்கள் கண்டறியப்பட்டுள்ளன. அவை பறிமுதல் செய்யப்பட்டு விற்பனையாளர்கள்மீது நீதிமன்றங்களில் வழக்குகள்

2014 ஜூலை 14]

தொடரப்பட்டும், தர நிர்ணய அமைவன சட்டம் 1986-ன்கீழ் நிர்ப்புகள் பெறப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மேலும், மதுரை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், இந்த மூன்று ஆண்டுகளில் எட்டு மின் சாதன விற்பனைக் கடைகளில் ஆய்வு முத்திரை பெறாமல் விற்பனைக்காக இருப்பு வைக்கப்பட்டிருந்த ரூ.30,680/- மதிப்புள்ள 85 மின் சாதனப் பொருள்கள் கண்டறியப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 123, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

123—

சொந்தக் கட்டடம்

42372—திரு. கோவி. சம்பத்குமார்:

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம், வெள்ளக்குட்டை ஊராட்சியிலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், வெள்ளக்குட்டை ஊராட்சியிலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலருக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. மாவட்ட நிருவாகத்தின் அனுமதி பெற்று விரைவில் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள்.

[2014 ஜூலை 14

திரு. கோவி. சம்பத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்று நீராய் ஆயிரம் தலைவர்கள் வந்தாலும், ஊற்று நீராய் வந்து உலகத் தமிழர்களுக்கெல்லாம் வாழ்வளிக்கும் உழைப்பின் சிகரமே, (மேசையைத் தட்டும் ஒலி) உன்னதத் தலைவியே, நான் வணங்கும் தெய்வம் அம்மா அவர்களே, இந்திய தேசமே வியந்து நோக்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கட்டிக் காத்திட, காயங்கள் கமத்து, கண்ணீர் துளிகளால் வளர்த்து, தொண்டர்களின் குருதியெல்லாம் உணர்வுகளால் நிரம்பித் ததும்ப உழைத்து, உழைத்து, தன்னலத்தில் திர்காமல் தமிழர் நலன் ஒன்றே தலையாய கடமையாய், நாடே வணங்குகின்ற தற்றமிழ் அரசியே, (மேசையைத் தட்டும் ஒலி), நல்ல தமிழ் சொல்லாட்சியே, நக்கீரச் சித்தனையே, விடையெல்லாம் மணந்து நிற்கும் 'அம்மா உணவகம்' தந்த மணிமேகலையே, பாரெல்லாம் போற்றுகின்ற பாரதப் புழுரசியே, பண்பாளர், படைப்பாளர், உழைப்பாளர் நெஞ்சமெல்லாம் இருக்கின்ற, இனிக்கின்ற எங்கள் குல தெய்வமே, நித்தம், நித்தம் நான் வணங்கும் எங்கள் அன்னையே, தங்கள் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதி, ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம், வெள்ளக்குட்டை ஊராட்சியில் ஆறு அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இரண்டு மையங்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி நிதியிலிருந்து கட்டடம் கட்டித் தரப்பட்டுள்ளது. இரண்டு மையங்கள் பழுதடைந்த, பழைய அரசு கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள இரண்டு மையங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. வெள்ளக்குட்டை ஊராட்சி 5,500 வாக்காளர்களையும், 9,000 மக்கள் தொகையையும் கொண்ட மிகப் பெரிய ஊராட்சியாகும். எனவே, மையங்களிலுள்ள குழந்தைகளின் நலன் கருதி, அரசுமூலம் புதிய அங்கன்வாடி கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா என தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்தின் அனைத்து

2014 ஜூலை 14]

மாவட்டங்களிலும், எங்கெல்லாம் அங்கன்வாடி மையங்கள் வாடகைக் கட்டடங்களிலும், வாடகையில்லா கட்டடங்களிலும் இயங்கி வருகின்றனவோ, அவையெல்லாம் சொந்தக் கட்டடங்களில் இயங்க வேண்டுமென்று ஆணையிட்டு ஒப்புதல் வழங்கியுள்ளார்கள். அதனடிப்படையில், வாடகைக் கட்டடங்களில் இயங்கும் 15,313 அங்கன்வாடி மையங்களுக்கு பல்வேறு நிதிகளை ஒருங்கிணைத்து, சொந்தக் கட்டடங்கள் கட்ட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அங்கன்வாடி மையம் கட்டுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவருடைய தலைமையிலே குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் ஆய்வு செய்ததற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள்.

திரு. கோவி. சம்பத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பிட்ட கரங்கள் விலகும் முன்பே, கேட்டது கிடைக்கும் என்று வரமளித்த மாட்சிமை தாங்கிய தமிழ்நாட்டின் முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 124, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. குணசேகரன், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

124—

சேமிப்புக் கிடங்கு

*2590—திரு. க. குணசேகரன்:

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டத்தில் சேமிப்புக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஜூலை 14

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திற்குச் சொந்தமான, 9,400 மெட்ரிக் டன் கொள்ளளவில் நவீன வசதிகளுடன்கூடிய சேமிப்புக் கிடங்கும், காரைக்குடியில் 18,500 மெட்ரிக் டன் கொள்ளளவில் மற்றொரு சேமிப்புக் கிடங்கும் இயங்கி வருகின்றன. இது தவிர, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், கூட்டுறவு சங்கங்கள், வேளாண்மை விற்பனைத் துறை மற்றும் டான்பெட் நிறுவனத்திற்குச் சொந்தமான சேமிப்புக் கிடங்குகளும் உள்ளன. விவசாயிகள் மற்றும் இப்பகுதியில் உள்ளோர் அச்சேமிப்புக் கிடங்குகளைப் பயன்படுத்தி வருகின்றனர். எனவே, சிவகங்கை மாவட்டத்தில் தனியாக சேமிப்புக் கிடங்குகள் அமைப்பதற்கு அவசியம் எழுவில்லை என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. குணசேகரன் அவர்கள்.

திரு. கு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பாக நியாய விலைக் கடைகளுக்கு வழங்க வேண்டிய உணவுப்பொருட்கள் வழங்கப்படுகின்றன. அதனடிப்படையில் ஒவ்வொரு வட்டத்திலும் சேமிப்புக் கிடங்குகளை அமைத்து அதற்கான பொருட்களை வழங்குகிற நேரத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பாக 3 மாதங்களுக்கான இருப்புகளை வைக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் சிவகங்கை மாவட்டத்தில், சிவகங்கை, திருப்பத்தூர் மற்றும் புதியதாகப் பிரிக்கப்பட்டுள்ள திருப்புவனம் உள்ளிட்ட பல பகுதிகளில் போதுமான அளவு சேமிப்புக் கிடங்குகள் இல்லாத நிலையில், அரசு விதிகளின்படி உணவுப்பொருட்கள் வைக்கவேண்டிய எண்ணிக்கையில் வைக்கமுடியாத நிலை நீடிக்கிறது. எனவே, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பாக புதிய சேமிப்புக் கிடங்குகள் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2014 ஜூலை 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக பொது விநியோகத் திட்டக் கிடங்குகள் காரைக்குடி., திருப்பத்தூர், மானாமதுரை, சிவகங்கை, இளையான்குடி. மற்றும் தேவக்கோட்டை ஆகிய இடங்களில் 16 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவுடன் இயங்கி வருகின்றன. மானாமதுரை நவீன அரிசி ஆலையில் 5 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளில் நெல் மற்றும் அரிசி சேமித்து வைக்கப்படுகின்றன. நான் ஏற்கெனவே கூறியபடி நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான கிடங்குகள் 27,900 மெட்ரிக் டன் கொள்ளளவுடன் செயல்பட்டு வருகின்றன. இதில் மூன்று மாதங்களுக்குமுன் புதியதாகக் கட்டப்பட்ட 3,400 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கில் சுமார் 3,164 மெட்ரிக் டன் கொள்ளளவு இடம் பயன்பாட்டிற்கு தயார் நிலையிலுள்ளது.

இது தவிர, சிவகங்கை மாவட்டத்தில் கூட்டுறவு நிறுவனங்கள், வேளாண் விற்பனைத் துறை-TANFED நிறுவனங்கள் மற்றும் 20 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளும் செயல்பட்டு வருகின்றன. நற்போதுள்ள சேமிப்புக் கிடங்கு வசதிகள் அம்மாவட்டத்திலுள்ள விவசாயிகள் உள்விட்டவர்களால் இன்னும் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளப்படாமல் உள்ளன. சிவகங்கை மாவட்டத்தில் மொத்தம் 68,900 மெட்ரிக் டன் கொள்ளளவில் சேமிப்புக் கிடங்குகள் இயங்கி வருகின்றன என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. குணசேகரன் அவர்கள்.

திரு. கு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பாக நியாய விலைக் கடைகளுக்குத் தேவையான சேமிப்புக் கிடங்குகள் பற்றி நான் கேட்டேன். அதன் அடிப்படையில் சிவகங்கையில் ஒரு மாதத்திற்குத் தேவையான சேமிப்பு 2,350 மெட்ரிக் டன் என்று சொல்கிறார்கள். அந்த அடிப்படையில் மூன்று மாத இருப்பு, கிடைத்தட்ட 7,000 மெட்ரிக் டன் அளவிற்கான சேமிப்புக்

[2014 ஜூலை 14

இடங்கள் தேவை. அதைப்போல திருப்பத்தூரில் 2,500 மெட்ரிக் டன் அளவில் தேவைப்படுகிறது. ஆனால், இங்கே மூவாயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்குகள்தான் உள்ளன. எனவே, தமிழ்நாடு வாணிபக் கழகத்தின் சார்பாக நியாய விலைக் கடைகளுக்கான பொருட்களைப் பழுதடையாமல் வைப்பதற்கு என்றிருக்கக்கூடிய நவீன சேமிப்புக் கிடங்குகளின் எண்ணிக்கை குறைவாக இருக்கின்ற காரணத்தால், பொருட்களை விநியோகம் செய்யும் பல நேரங்களில் 50 சதவிகிதம், 40 சதவிகிதம் என்கிற அடிப்படையில் பகுதி, பகுதியாக ரேஷன் பொருட்களை வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். அதனால், நேரமிழப்புகளில் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. எனவேதான், நீங்கள் சொல்லியிருக்கின்ற அரசு விதிகளுக்குட்பட்டு, மூன்று மாதங்களுக்கான இருப்பை வைக்கக்கூடிய அளவுக்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நவீன கிடங்குகளை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது தவிர, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதுபோல பிற கிடங்குகள் இருக்கின்றன. அவை பிற பயன்பாட்டிற்குப் பயன்படுத்தப்படுகின்றன. அவை, பல துறைகளின்மூலமாக கட்டப்படுகின்றன. வேளாண்மை துறை மூலமாகக் கட்டப்படுவதன்மூலம் அவர்கள் வேறு சேமிப்புகளைச் செய்கிறார்கள். எனவே, நியாய விலைக் கடைகளுக்கான உணவுப் பொருட்களைப் பாதுகாப்பதற்குப் போதுமான அளவில் அங்கே நவீன சேமிப்புக் கிடங்குகளை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, திருப்புவனம் வட்டம் புதியதாக பிரிக்கப்பட்டுள்ள நிலையில், அங்கும் தனியே ஒரு சேமிப்புக் கிடங்கு கட்டுவதற்கான நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துரிதமாக எடுக்கவேண்டுமென்று தங்கள் வாயிலாக கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தால் போதுமான அளவிற்கு சேமிப்புக் கிடங்குகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதுவரை இல்லாத அளவிற்கு, முன்றாண்டுகால ஆட்சியில் தமிழ்நாட்டில் சேமிப்புக் கிடங்குகளின் கட்டமைப்பு வசதிகள் 13 இலட்சத்து ஆயிரம்

2014 ஜூலை 14]

மெட்ரிக் டன்னிலிருந்து 20 இலட்சத்து 58 ஆயிரம் மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது என்பதை இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-35

இது சேமிப்புக் கிடங்குகள் வரலாற்றில் ஒரு மைல் கல் என்பதனையும் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். அதுமட்டுமல்ல, இதற்காக மத்திய அரசின் முதல் முன்று பரிசுகளையும், இரண்டு சிறப்புப் பரிசுகளையும் கடந்த ஆண்டு தமிழக அரசு பெற்றிருக்கிறது என்பதனையும் இந்த அவையிலே குறிப்பிட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தினுடைய பொருள்களை மூன்று மாதங்களுக்கு முன்னதாக இருப்பு வைக்கவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மூன்று மாதங்களுக்குத் தேவையான பொருட்களை வைப்பதற்குத் தேவையான இடம் வெளங்கை மாவட்டத்திலே முழுமையாக இருக்கின்றது. திருப்புவனம் போன்று புதியதாகப் பிரிக்கப்பட்ட தாலுகா எதுவாக இருந்தாலும், அந்த இடத்திற்குப் புதியதாக சேமிப்புக் கிடங்கு அமைத்துத் தரப்பட வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற திருப்புவனம் தாலுகாவில் புதிய சேமிப்புக் கிடங்கு அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 125, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

126—

பேருந்து வசதி

***34382—திரு. க. தினகரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் மேற்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஜூலை 14

(அ) திருப்பூரிலிருந்து பனப்பட்டிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கோவை சார்பாக திருப்பூர்-பொள்ளாச்சிக்கு பல்லடம், கல்தான்பேட்டை, பனப்பட்டி வழியாக மூன்று பேருந்துகள்மூலம் தினசரி 5 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேற்படி வழித்தடங்களில் பயணிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப 3 பேருந்துகளும் சிறப்பாக இயங்கிக்கொண்டிருக்கின்றன. பயணிகளுடைய எண்ணிக்கை அதிகரிக்கின்றபோது, அதற்கேற்ப கூடுதல் பேருந்துகள் இயக்குவதற்கு தடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன் அவர்கள்.

திரு. க. தினகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்தான்பேட்டை, வாரப்பட்டி, சந்திராபுரம், வேலப்பநாயக்கன்பாளையம், அக்கநாயக்கன்பாளையம், வடவள்ளி, பனப்பட்டி ஆகிய ஊர்களில் உள்ள அதிகப்படியான ஏழை மக்கள் தொழில் நகரமான திருப்பூருக்கு வேலைக்குச் சென்று வருகின்றார்கள். அந்த மக்களின் நலன் கருதி இந்தக் கோரிக்கை வாயிலாக ஒரு பேருந்தை இயக்கினால் சிறப்பாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரிலிருந்து பனப்பட்டிக்கு ஏற்கெனவே மூன்று பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. அந்த மூன்று பேருந்துகளில் இரண்டு பேருந்துகள் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் இயக்கி

2014 ஜூலை 14]

வைக்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அவற்றின் எண்ணிக்கை, நடைகள், அங்கே இருக்கின்ற பயணிகளுடைய பயணத்திற்கு ஏற்ப தற்போது சரியாக இருக்கின்றன. பயணிகளுடைய எண்ணிக்கை அதிகரிக்கின்றபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற திருப்பூர்-பனப்பட்டிக்கு கூடுதல் பேருந்துகள் இயக்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன் அவர்கள்.

திரு. க. தினகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடுமலைப்பேட்டையிலிருந்து சாலைப்புதூர், வலசுப்பாளையம், நத்திபுரம், பச்சாகவுண்டன்பாளையம் பிரிவு, செஞ்சேரிமலை, செஞ்சேரி பிரிவு, கல்தான்பேட்டை வரை பேருந்து இல்லாததால் அந்த கிராம மக்கள் மிகவும் சிரமப்படுகின்றார்கள். மேலும், செஞ்சேரி மலையிலிருந்து செஞ்சேரி, செஞ்சேரி பிரிவு, கல்தான்பேட்டை, வாரப்பட்டி, சந்திராபுரம், புலியமரத்துப்பாளையம் ஆகிய பகுதிகளில் இருக்கின்ற மாணவர்கள் செல்கரிச்சல் பஞ்சாயத்தில் இருக்கின்ற இலக்ஷ்மிநாயக்கன்பாளையம் மேல்நிலைப்பள்ளிக்குச் சென்று வருகின்றார்கள். அங்கு சென்றுவர பள்ளி நேரத்திற்கு சரியான பஸ் வசதி இல்லாததால் மாணவர்கள் தனியார் பேருந்துகளில் நின்றுகொண்டும், தொங்கிக்கொண்டும் செல்கின்றார்கள். மேலும் சாந்திபுரத்திலிருந்து என் தொகுதிக்கு உட்பட்ட பச்சாபாளையம் பஞ்சாயத்து பெரியகுயில் வழியாக அவர்களுக்காக ஏற்கெனவே தடம் எண் 73 காலையிலும், இரவிலும் இயங்கி வருகின்றது. ஆனால் செட்டிப்பாளையம் கிராமத்திலிருந்து பெரியகுயிலுக்கு மாலை 4 மணிக்கு பஸ் வராததால், மாணவர்கள், லாரிகள்மூலம் வருகின்றார்கள். ஆகவே இந்த தடம் எண் 73 பேருந்தை 4-30 மணி அளவில் செட்டிப்பாளையத்திலிருந்து பெரியகுயிலுக்கு இயக்கினால் மிகவும் வசதியாக இருக்கும்.

மேலும் ஒரு கேள்வி. எனது தொகுதிக்குட்பட்டு சுருமத்தம்பட்டி பேருராட்சி இருக்கின்றது. அங்கு 6 வழிச்சாலை இருப்பதால், பேருந்துகள் நிற்பதற்கு இடமில்லாததால் மக்கள் மிகவும்

சிரமப்படுவதால், ஒரு பேருந்து நிலையத்தை கருமத்தம்பட்டியிலே அமைத்துக் கொடுத்தால், போக்குவரத்து நெரிசல் குறையும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இறுதியாக, சூலூர் தொகுதியில் மாணவர்கள் சென்று வருவதற்கு ஏதுவாக இரண்டு வேளையிலும் போக்குவரத்தைச் சீரமைத்துக் கொடுத்தால், ஏழை மாணவர்கள் நன்றாகப் படிக்க ஏதுவாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனவே இதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சீரமைத்துத்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துப் பகுதிகளிலுமுள்ள ஏழை எளிய மக்கள் சிறப்பான பேருந்து வசதிகளைப் பெறவேண்டும், பள்ளிக்குச் செல்கின்ற மாணவ மாணவிகள் சரியான நேரத்திற்கு பள்ளிக்குச் செல்ல வேண்டுமென்ற சீரிய நோக்கத்தோடு, இந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மாவினுடைய திருக்கரங்களால் கொடியசைத்து, 1,436 புதிய வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்பட்டு இன்று மக்களுடைய பயன்பாட்டில் அவை இயங்கி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சட்டமன்றத் தொகுதியில் இரண்டு புதிய வழித்தடங்களை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வழங்கி, அத்தடங்களும் இன்று மக்களுடைய பயன்பாட்டில் உள்ளன. மேலும், எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர் என்றுகூட பாராமல் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், மாண்புமிகு உறுப்பினருடைய சூலூர் சட்டமன்றத் தொகுதியில் வட்டாரப் போக்குவரத்துப் பகுதி அலுவலகத்தை தனது திருக்கரங்களால் 20-6-2013 அன்று காணொலிக் காட்சிமூலமாகத் தொடங்கி வைத்து, அந்தப் பகுதி மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்திருக்கின்றார்கள். இப்படி தேவையான பேருந்துகள் மக்களுடைய பயன்பாட்டிற்கு, மாணவ மாணவிகளுடைய பயன்பாட்டிற்கு முழுமையாக இயக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வழித்தடங்களைப் பற்றி கூட்டிக்காட்டியிருக்கின்றார்கள். அதுபற்றி ஆய்வு செய்து, தேவை ஏற்படின் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும்

2014 ஜூலை 14]

என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் . 126, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

126—

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம்

*42332—திரு. க. அன்பழகன்:

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தினை விரிவாக்கம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு இந்நாள் தெய்வம் தமிழகம் முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் நாளொன்றுக்கு 7,800 லிட்டர் பால் கொள்முதல் செய்து, 5,300 லிட்டர் பால் உள்ளூர் விற்பனை போக, 2,500 லிட்டர் பால் தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது. சங்கத்தின் பால் உற்பத்தி மற்றும் விற்பனையைப் பெருக்கி, சங்கத்தின் பணியை மேலும் விரிவாக்கம் செய்ய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2014 ஜூலை 14

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டி.901 கும்பகோணம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் 1947 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட மிகவும் பாரம்பரியமிக்க பழமையான சங்கம். தற்போது 20 ஆயிரம் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. இவர்களும் மூன்றாயிரம் கறவையாளர்களால் 6 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு, 7 ஆயிரம் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. இதில் 4 ஆயிரம் லிட்டர் பால் கும்பகோணம் பகுதிக்கும், மீதி 2 ஆயிரம் லிட்டர் பால் தஞ்சாவூர் பகுதிக்கும் கொண்டு செல்லப்படுகிறது. தற்போது கொள்முதல் செய்யப்பட்ட பால், குளிரூட்டப்பட்டு கேன்மூலம் விற்பனை செய்யப்படுகிறது. ஏற்கெனவே இரண்டு மகாமக விழாக்களின்போது, கொள்முதல் செய்யப்பட்ட பால் பதப்படுத்தப்பட்டு, பாக்கெட்டில் அடைத்து விநியோகம் செய்யப்பட்டு, அது நல்ல முறையிலும் வரவேற்பைப் பெற்றிருந்தது. எனவே, கும்பகோணம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தினை மேலும் விரிவாக்கம் செய்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தில் நாளொன்றுக்கு 7,800 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இதில் உள்ளூர் விற்பனை சுமார் 5,300 லிட்டர் போக எஞ்சிய சுமார் 2,500 லிட்டர் பால், தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இச்சங்கத்தில் தற்போது கொள்முதல் செய்யப்படும் பாலை குளிர்விப்பு செய்ய 3 ஆயிரம் லிட்டர் திறன் கொண்ட குளிர்விப்பு சாதனம் உள்ளது. இச்சங்கத்தின் செயல்பாடுகளை விரிவாக்கம் செய்யும் வகையில் சங்கத்தில் நாளொன்றுக்கு 5 ஆயிரம் லிட்டர் திறன் கொண்ட பால் குளிர்விப்பான் ஒன்று கூடுதலாக நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. இச்சங்கம் தன்னுடைய சொந்த செலவில் வாடகை வாகனம்மூலம்

2014 ஜூலை 14]

தஞ்சாவூர் ஒன்றிய பால் பண்ணைக்கு பாலை அனுப்பி வந்தது. சங்கத்தின் இத்தச் செலவினத்தைக் குறைக்கும்வகையில், தஞ்சாவூர் ஒன்றியம் மூலமாக இச்சங்கத்தின் பாலினை சேகரம் செய்ய கும்பகோணம், திருவிடைமருதூர் பால் வழித்தடம் என்னும் பெயரில் ஒரு இணைப்பு பால் வழித்தடம் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

மேலும், இச்சங்கத்தின் 17 உறுப்பினர்களுக்கு 100 சதவிகித மானிய அடிப்படையில் தண்ணீர் தொட்டியுடன்கூடிய கறவைக்கூடம் கட்டித் தர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், பால் உற்பத்தியைப் பெருக்க இத்தச் சங்கத்தினுடைய வரவு செலவு வங்கியான இந்தியன் ஓவர்சீஸ் வங்கி திருப்புவனம் மற்றும் சுவாமிமலை கிளைகள்மூலமாக சுமார் 150 உறுப்பினர்களுக்குக் கறவை மாட்டுக் கடன் பெற்றுத் தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

முற்பகல் 10-45

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் பகுதியானது ஏறத்தாழ 5 இலட்சம் மக்களைக் கொண்ட பகுதி. தினந்தோறும் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் சுற்றுலாப் பயணிகள், பக்தர்கள், வியாபாரிகள் என இலட்சம் பேர் வந்து செல்கின்ற ஒரு பகுதி. வர்த்தக நகரமாகவும், பல கோயில்கள் நிறைந்த வழிபாட்டுத் தலமாகவும், வளரும் நகரமாகவும் கும்பகோணம் உள்ளது. மேலும் தென்னிந்தியாவின் கும்பமேளாவாகக் கருதப்படும் கும்பகோணம் மகாமகம் திருவிழா 2016-ல் வரவிருக்கிறது. குடந்தை பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தினுடைய கட்டடத்தில் போதிய இடவசதி உள்ளதாலும், ஏற்கெனவே பாலை பாக்கெட்டில் அடைத்து விநியோகம் செய்ததாலும், வெளியூரிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளுக்கும், பக்தர்களுக்கும், வியாபாரிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட பாலை பாக்கெட்டில் அடைத்து மீண்டும் வழங்கிட, சிறப்பு தேர்வாகக் கருதி, அங்கு பால் பதனிடும்

[2014 ஜூலை 14

இயந்திரம் அமைத்து விரிவாக்கம் செய்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் கும்பகோணம் பகுதியில் தீவிர பால் பண்ணை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இதுவரை ரூ.8 கோடியே 67 இலட்சம் அளவிற்கு நிதி ஒதுக்கப்பட்டு விரிவாக்கப் பணி செய்யப்பட்டிருக்கிறது. அதேபோன்று கும்பகோணம் பகுதியில் இருக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்கெனவே நிலுவையில் இருந்த தொகைகளையெல்லாம் தீர்க்கின்ற வகையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசமூலம் ரூ.7 கோடியே 6 இலட்சம் அளவிற்கு நிதி வழங்கப்பட்டிருக்கிறது. இது மட்டுமல்ல அங்கு பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காக மலுவூட்டும் ஆதாரத் திட்டத்தின்கீழ் ரூ.32 இலட்சம் செலவில் விரிவாக்கம் செய்வதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 127, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

127—

கால்நடை மருத்துவமனை

***22671—திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் இம்மாவட்டங்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருர் தொகுதி, அருர் வட்டம், சாமாண்டஹள்ளி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 14]

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதி, சாமாண்டஹள்ளி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனையை அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். சாமாண்டஹள்ளி ஊராட்சியிலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கால்நடைத் துறை விதிகளுக்கு ஏற்ப 3,000 அலகுக்கும் அதிகமாக கால்நடைகள் இருப்பதால், அங்கே ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சாமாண்டஹள்ளி ஊராட்சியில், ஏறக்குறைய 8 கிலோ மீட்டர் தூரத்தில் அமைத்துள்ள மொரப்பூர் சென்றால் மட்டுமே அப்பகுதி மக்கள் கால்நடை மருத்துவமனையை அணுக முடியும். சாமாண்டஹள்ளி, தொட்டம்பட்டி, பெரியாம்பட்டி, சாமாண்டஹள்ளி புதூர், சென்னாகரம்பட்டி, முல்லைநகர் உள்ளிட்ட 10-க்கும் மேற்பட்ட கிராமங்களில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல 2,000-க்கும் மேற்பட்ட கால்நடைகளும், மாடுகளும் உள்ளன. அதுபோல, சென்னாகரம்பட்டி, எளவடை உள்ளிட்ட கிராமப் பஞ்சாயத்தைச் சார்ந்தவர்களும் இந்த மையப் பகுதிக்கு வந்துதான் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கின்ற ஒரு நிலைமை இருக்கிறது. கூடிய விரைவில் தமிழக அரசின் உத்தரவைப்பெற்று அந்தப் பகுதியிலே புதிய கால்நடை மருத்துவமனையைத் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோல், ஏற்கெனவே நரிப்பள்ளி, வடுகப்பட்டி, சட்டப்பட்டி பகுதிகளிலே இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகவே அங்கு புதிய கால்நடை மருத்துவமனை தொடங்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார்கள். அது இந்த ஆண்டாவது தொடங்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2014 ஜூலை 14

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு கால்நடைக் கிளை நிலையங்கள் புதிதாக அமைக்கப்படும்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை விரைவாகப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருகில் கால்நடைத் துறையின் சார்பாக நூலக இயக்குநர் அலுவலகம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகக் கொண்டு வரப்பட்டது. உண்மையிலேயே அருகி தொகுதி மக்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது. ஆனால், அதற்குரிய கட்டடம், அலுவலர்கள், மருத்துவர்கள் உள்ளிட்ட கட்டமைப்புப் பணிகள் எதுவுமே இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை. ஏற்கெனவே இருந்த இடத்திலேயே அலுவலகம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே, கால்நடைத் துறையின் நூலக இயக்குநர் அலுவலகம் கட்டுவதற்கும், அதற்குரிய அதிகாரிகளை, மருத்துவர்களை நியமிப்பதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்றும், அதனை இந்த ஆண்டு முதல் கொண்டு வருவதற்கு உத்தரவிடுவார்களா என்பதையும் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த ஆண்டு புதிய கட்டடங்கள் கட்ட ஏற்கெனவே ரூ.80.25 கோடி அளவிற்கு நிதியினை ஒதுக்கியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய நூலக இயக்குநர் அலுவலகத்திற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு, இந்த ஆண்டு, ஒதுக்கப்பட்ட நிதியிலேயே கட்டடம் கட்ட ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 ஜூலை 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 128, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

128—

விசைத்தறிப் பூங்கா

*43808—திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிப்பட்டி தொகுதி, சப்புலாபுரம் கிராமத்தில் விசைத்தறிப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10-50

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாதவம் செய்தே இம்மாநிலம் பெற்ற; மேதினி போற்றும் மேன்மையுறு நிட்டங்கள் பற்பல தந்து பாங்குடனே மக்கள் போற்றும்; பல்கல்வி வித்தகம் பயின்ற பைந்தமிழ்த் தாரகை எங்கள் அம்மா!

பாராளுமன்றத் தேர்தலில் (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்த்த எதிரிகளையெல்லாம் தனி ஒரு சிம்மமாய் சின்னாபின்னமாக்கிய அரசியல் சாணக்கியர்; வழக நிரந்தரப் பொதுச் செயலாளர்; தமிழகத்தின் தன்னிகரில்லா தனிப்பெரும் தலைவி எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) இத்தியத் துணைக் கண்டத்தின் அரசியல் வித்தகர் மாண்புமிகு இதய தெய்வம் தங்கத் தாரகை தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைப் பணிந்து, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சராகப் பணியாற்ற மீண்டும் எனக்கு ஒரு வாய்ப்பு நல்கிய எங்களுடைய குல தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன்

[2014 ஜூலை 14

அவர்கள் எழுப்பிய வினாவிற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி தொகுதி, சுப்புலாபுரம் பகுதியில் ஏற்கெனவே பணிகள் தொடங்கப்பட்ட வைகை உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்கா செயல்படாத சூழ்நிலையில், மற்றுமொரு விசைத்தறி பூங்கா அமைக்க சாத்தியக்கூறுகள் தற்போது இல்லையெனினும், தொழில்முனைவோர் எவரேனும் முன்வரக்கூடிய சூழ்நிலையில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு கோரிக்கையை எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும், மறையாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்கள் திலகம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு 'நீர்க்குதிரி' என்பதை நிரூபிக்கின்ற வகையில் ஒரு பாடல் பாடியிருப்பார். அது 'வெற்றிமீது வெற்றி வந்து என்னைச் சேரும், அதை வாங்கித் தந்த பெருமையெல்லாம் அம்மாவைச் சேரும்' என்ற பாடல். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவிற்கு மிகப் பெரிய வெற்றியைப் பெற்று, சரித்திரம் படைக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு தத்துவத்தையும் சொல்லியிருக்கிறார்கள்.

மாபெரும் வெற்றி என்பது ஒரே நாளில் படைக்கிற அற்புதம் அல்ல. அது சிறு, சிறு வெற்றிகளின் கூட்டுத் தொகை என்ற தத்துவத்தை தமிழக முதல்வர் அம்மா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சிறு, சிறு கூட்டுத் தொகையினுடைய வெற்றிகள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக தமிழகத்தில் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, இன்றுவரை 'தொட்டில் குழந்தைத் திட்டம்' கொண்டுவந்து, 'மழைநீர் சேகரிப்புத் திட்டம்' கொண்டுவந்து, 1 கோடியே 86 இலட்சம் குடும்பங்களுக்கு

2014 ஜூலை 14]

20 கிலோ விலையில்லா அரசி வழங்கி, 1 கோடியே 86 இலட்சம் குடும்பங்களுக்கு மின்விசிறி, மிக்ஸி, கிரைண்டர் வழங்கி, 1 கோடியே 76 இலட்சம் குடும்பங்களுக்கு இலவச சேலை வழங்கி, 1 கோடியே 75 இலட்சம் குடும்பங்களுக்கு இலவச வேட்டி வழங்கி, எண்ணற்ற வெற்றிகளின் காரணமாகத்தான், நாடாளுமன்றத் தேர்தலில் 39-க்கு 37 இடங்களைத் தமிழக மக்கள் வெற்றியாகக் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி உறுப்பினராக இருந்தபோது Hi-Tech Park என்ற திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். தனியாரால் அந்தத் திட்டம் வேறு திட்டமாக மாற்றப்பட்டு மத்திய அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டிருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் மீண்டும் அதே திட்டத்தை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா எனக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஜவுளிப் பூங்கா அமைக்க குறைந்தபட்சம் 50 ஏக்கர் நிலமும், 25 தொழிற்கூடங்களும் அமைக்கப்பட வேண்டும். இவ்வாறு அமையும் ஜவுளிப் பூங்காவின் திட்ட மதிப்பீடு குறைந்தபட்சம் 50 முதல் 65 கோடி ரூபாய் வரை இருக்கவேண்டும். தற்போது நாடு முழுவதும் 61 ஜவுளிப் பூங்காக்கள் அமைக்கக்கூடிய வாய்ப்புகளை மத்திய, மாநில அரசுகள் சேர்ந்து, இணைந்து அனுமதி வழங்கியுள்ளது. இவற்றில் தற்போது 10 ஜவுளிப் பூங்காக்கள் தமிழகத்திலே இயங்கி வருகின்றன. தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி தொகுதியிலே ஏற்கெனவே ஜவுளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு ஒருங்கிணைந்த திட்டத்தில் ரூ.61.01 கோடி மதிப்பீட்டில் வைகை உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்கா அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டு, மத்திய அரசு மானியத் தொகை ரூபாய் 2 கோடியே 44 இலட்சமும், மாநில அரசு மானியத் தொகை ரூபாய் 4 கோடியே 37 இலட்சமும் விடுவிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்ற நிலையில், அங்கே அந்தத் தொழில்நுட்பப் பூங்காவை அமைக்கக்கூடிய வகையிலே மத்திய அரசு ஆய்வு

செய்து, அவை சரிவர செயல்படவில்லை என்ற ஒரு மதிப்பீடு செய்யப்பட்டு, மேற்கண்ட பூங்கா அமைவதற்கான பணிகள் தொடர இயலாத சூழ்நிலை உள்ளது. இப்பூங்கா நிரம்பவும் செயல்படுவது தொடர்பாக மத்திய அரசின் நிட்டக் குழு மறு ஆய்வு செய்து முடிவு செய்யவேண்டிய சூழ்நிலை உள்ளது. எனினும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆண்டிப்பட்டி தொகுதிக்குட்பட்ட சுப்புலாபுரம் கிராமத்தில் புதியதாக விசைத்தறிப் பூங்கா அமைக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொண்டதன்பேரில், மீண்டும் மறு ஆய்வு செய்து, தொழில்முனைவோர்கள் எவரேனும் முன்வரக்கூடிய நிலையில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு வைத்தித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 129, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

129—

சமுதாயக் கூடம்

***26851—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடி வராட்சி ஒன்றியம், குராயூர், முனியாண்டிபுரம், வில்லூர் ஆகிய கிராமங்களில் தாட்கோமூலம் சமுதாயக் கூடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 14]

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், திருமங்கலம் சட்டமன்றத் தொகுதியைச் சார்ந்த கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியம், வில்லூர் கிராமத்திற்கு 2013-2014 ஆம் ஆண்டில் ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டில் சமுதாயக் கூடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு, அது கட்டி முடிக்கப்படும் தருவாயில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், குராயூர் மற்றும் முனியாண்டிபுரம் ஆகிய கிராமங்களில் ஆதி திராவிட மக்கள் அதிகமாக இருப்பின், விதிமுறைகளுக்குட்பட்டு ஆய்வு செய்து, நிதிநிலைக்கேற்ப சமுதாயக் கூடம் கட்டுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.*

திரு. ம. முத்துராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைதி, வளம், வளர்ச்சி என்ற புதிய இலக்கியத் தத்துவத்தை உருவாக்கி, இந்தியாவில் அமைந்திருக்கக்கூடிய அரசாங்கம் தமிழகத்தைப் புறக்கணித்து எந்தவொரு செயலையும் செய்ய முடியாது என்ற நிலையை உருவாக்கி, தமிழக மக்கள்மீதும், தமிழகத்தின்மீதும் மிகுந்த அக்கறையும், பாசமும் கொண்டிருக்கிற நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், மதுரை மாவட்டம், திருமங்கலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியம், வில்லூர் கிராமங்களைச் சேர்ந்த ஆதி திராவிட மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையான சமுதாயக் கூடம் கட்டுவதற்கு 15 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, சமுதாயக் கூடம் கட்டி முடிக்கப்பட்ட இந்த வேளையில், தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி*

[2014 ஜூலை 14

அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் அந்தப் பகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், அதே ஒன்றியத்திலுள்ள, குராயூர் மேற்குத் தெரு என்பது அதிக அளவில் ஆதி திராவிட மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய பகுதி. முனியாண்டிபுரம் என்பது தனி ஊராட்சி. முழுமையாக ஆதி திராவிட மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய பகுதி. கல்யாணம் மற்றும் காதணி விழா போன்ற நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு அந்த மக்கள் மிகவும் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, இந்த நிதி ஆண்டிலேயே அந்த இரண்டு கிராமங்களுக்கும் சமுதாயக் கூடம் கட்டித் தருவதற்கு முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குராயூர் கிராமத்தில் 300 ஆதி திராவிடர் குடும்பங்களும், முனியாண்டிபுரம் கிராமத்தில் 250 ஆதி திராவிடர் குடும்பங்களும் வசித்து வருகின்றன. எனவே, நிதிநிலைக்கேற்ப, சமுதாயக் கூடம் கட்டுவதற்குப் போதுமான இட வசதி இருப்பின், விதிமுறைகளுக்குட்பட்டு அவ்வு செய்து, ஆதி திராவிட மக்களின் பாதுகாவலராகத் திகழும், தமிழக மக்களின் காவல் தெய்வம் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வு செய்து, நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 ஜூலை 14]

மேலும், திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம், காண்டை-யிலே சமுதாயக் கூடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இடம் தேர்வு செய்யும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தப் பணியையும் விரைந்து முடிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னறுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் நிதியாண்டில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செகு. தமிழரசன் அவர்கள்.

முனைவர் செகு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் மக்கள் தொகையிலே, ஐந்தில் ஒரு பங்காக இருக்கக்கூடிய ஆதி திராவிட மக்கள் 70 சதவிகிதம் பேர் கிராமப்புறங்களில்தான் வசித்து வருகிறார்கள். அதேபோல்தான், ஆதி திராவிட மக்களின் வசிப்புத் தன்மை இருக்கின்றதே, பொதுவாகவே கூட்டம் கூட்டமாக, அருகி அமைந்தாக, ஒரே இடத்தில் வசித்து வருகிற அந்தச் சூழலை நாம் நீண்ட காலமாகப் பார்க்க முடிகிறது.

இப்போது வளர்ந்துவரும் மக்கள் நெருக்கடிக்கேற்ப, பொது இடங்கள் குறைந்து வருகிற அந்தச் சூழலைக் கருத்திலேகொண்டு, எங்கெல்லாம் 500 ஆதி திராவிட குடும்பங்கள் இருக்கிறதோ, அங்கெல்லாம், அந்த மக்கள் மங்கல நிகழ்வுகள், திருமணம், சடங்குகள் போன்றவற்றையெல்லாம் நடத்துவதற்கு உறுதியான ஒரு சமுதாயக் கூடம், உருவாக்குவதற்கு அரசு முன்வருமா? அதிலும் குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்களின் உற்ற தோழனாக, நலிந்த மக்களுடைய நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிக்

கொண்டிருக்கக்கூடிய நம்முடைய போற்றுதலுக்குரிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த நல்லாட்சியிலே, (மேசையைத் தட்டும் ஒலி) குறைந்தபட்சம் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியிலாவது 500 ஆதி திராவிட குடும்பங்கள் வாழும் பகுதிகளிலே இந்தச் சமூகக் கூடங்களைக் கட்டாயம் உருவாக்கினால், அவர்களுடைய தேவை நிவர்த்தியாகும். அதேநேரத்தில் அவர்கள் வேறு இடங்களுக்குச் சென்று இருமண நிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்கிறபோது, வருகிற சச்சரவுகளும், சமூக மாறுபாடுகளும் குறையும். ஆகவே, அதை ஒரு மரபாக, முன்னுரிமையாக வருங்காலங்களிலே உருவாக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து இம்மாதிரியான கோரிக்கைகள் அரசுக்கு நிறைய வந்து கொண்டிருக்கின்றன. இப்பொருள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 130, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு, மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

130—

மணிமண்டபம்

***42350—திரு. கடம்பூர் ராஜு :**

மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2014 ஜூலை 14]

கோவில்பட்டி தொகுதி, காமதாயக்கன்பட்டியில் வீரமாமுனிவருக்கு மணிமண்டபம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கோவில்பட்டி தொகுதி, காமதாயக்கன்பட்டியில் வீரமாமுனிவருக்கு மணிமண்டபம் அமைத்தல் தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள்.*

திரு. கடம்பூர் ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் நாடாளும் தகுதி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒருவருக்கே உண்டு என்பதோடு, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ் மண்ணில் எவருக்கும் இல்லை அலை; இலையைக் காத்து நிற்கின்ற காவல் தெய்வம் அம்மா அவர்களின் அலையே தமிழகத்தில் என்றென்றும் உண்டு என்னும் வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்ப்பை தமிழக வாக்காளர்கள் வழங்கி, 37 நாடாளுமன்ற உறுப்பினர்களையும், 217 சட்டமன்றத் தொகுதிகளில் மகத்தான வெற்றியையும் அளித்து அம்மா அவர்களுக்கு மகுடம் சூட்டினார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்களின் பேரலை, எதிரிகளுக்கு சுனாமியாக மாறி, எதிரிக் கட்சியை Zero ஆக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) சவால் விட்ட எதிர்க்கட்சிக்குச் சமாதி கட்டி, உதிரிகளை ஒன்றும் இல்லாமல் ஆக்கி, கழகத்தைப் பெயருக்கேற்ப அகில இந்திய அளவில் மூன்றாவது பெரிய சக்தியாக மாற்றிக் காட்டிய வெற்றித் தலைவி, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் பொற்கால முதல்வர், இந்தியாவின் இமயம் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.

வாழ்ந்து மறைந்த வரலாற்றுத் தலைவர்களுக்கு மணிமண்டபங்கள், நினைவுத் தூண்கள், அரசு விழாக்கள் என்று

[2014 ஜூலை 14

பெருமை சேர்த்து வாழவைக்கும் வள்ளல், வாழ்கின்ற வரலாற்றுத் தலைவி எங்கள் அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்குகிறேன்.

தமிழ்த் தொண்டாற்றி, தமிழின் புகழை உலகெங்கும் அறியச் செய்திட்ட வீரமாமுனிவர் அவர்கள் பங்குத் தந்தையாகப் பணியாற்றிய, புனித பரலோக மாதா ஆலயம் அமைந்துள்ள காமநாயக்கன்பட்டியில் அவருக்கு திருவுருவச் சிலையும், மணிமண்டபமும் அமைக்க வேண்டுமென்று தென் மாவட்டங்களில் அதிகமாக வாழும் கத்தோலிக்க கிறித்துவர்களும், தமிழ் சான்றோர்களும் நீண்டநாட்களாக கோரிக்கை வைத்துக்கொண்டு வருகிறார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று நிறைவேற்றிட மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் வளர்த்த இத்தாலியப் பேரறிஞர் வீரமாமுனிவர் அவர்களின் திருவுருவச் சிலை சென்னை மாநகரில், மெரினா கடற்கரை, காமராஜர் சாலையில் உலகத் தமிழ் மாநாட்டை முன்னிட்டு 1968 ஆம் ஆண்டு நிறுவப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசின் சார்பில் வீரமாமுனிவர் அவர்களின் பிறந்த நாளான நவம்பர் திங்கள் 8 ஆம் நாளன்று அன்னாரின் திருவுருவச் சிலைக்கு அருகில் புகைப்படம் வைத்து, மலர் தூவி மரியாதை செலுத்தப்படுகிறது. நம் தாய்த் திருநாட்டை தலை நிமிரச் செய்திட, தமிழகத்தின் நியாகச் செம்மல்களைப் பெருமைப்படுத்திட, அவர்களது புகழ் என்றென்றும் நிலைத்திட, நினைவு மண்டபங்களும், நினைவுச் சின்னங்களும் அமைத்து கௌரவப்படுத்துவதில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நிகராக இவ்வுலகில் எவரையும் எடுத்துச்சொல்ல முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-05

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு கயத்தாறில் மணிமண்டபம் அமைக்க

2014 ஜூலை 14]

வேண்டுமென்ற கோரிக்கையை இந்தச் சபையிலே சென்ற கூட்டத் தொடரில் வைத்தார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பரிசீலனை செய்து கயத்தாறில் வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கப்படும் என்று 9-4-2013 அன்று சட்டமன்றப் பேரவையில் உடனடியாக அறிவித்தார்கள். அதன் தொடர்ச்சியாக, கயத்தாறில் வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு மணிமண்டபம் அமைத்திட ரூ.1.20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

கோவில்பட்டி தொகுதி, காமநாயக்கன்பட்டியில் வீரமாமுனிவருக்கு மணிமண்டபம் அமைத்தல் தொடர்பான மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான கவனத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள்.

திரு. கடம்பூர் ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற நிதிநிலை அறிக்கைக் கூட்டத் தொடரில் முதல் சுதந்திரப் போராட்ட வீரன், மாவீரன் கட்டபொம்மனுக்கு மணிமண்டபம் அமைக்கப்படும் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பை அறிவித்ததோடு, 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் நிதியை உடனடியாக ஒதுக்கீடு செய்து, கட்டடப் பணிகளை நிறைவேற்றி, விரைவில் திறக்க இருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு இந்த நல்ல நேரத்திலே நன்றியினை உரித்தாக்கிக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று காமநாயக்கன்பட்டியில் வீரமாமுனிவருக்கு மணிமண்டபம் அமைக்க பரிசீலிக்கப்படும் என்று உறுதிவழங்கிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 131, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அல்லம் பாஷா, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

[2014 ஜூலை 14

131—

தரம் உயர்த்துதல்

*12775—திரு. அ. அஸ்லம் பாஷா:

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் மேற்கானும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம், இரிசமுத்திரம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆம்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியத்தில் செயல்பட்டு வரும் இரிசமுத்திரம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது தொடர்பான செயற்குறிப்பு பெறப்பட்டு, தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம், இரிசமுத்திரம் அரசு உயர்நிலைப் பள்ளியில் மொத்தம் 531 மாணவர்கள் பயின்று வருகிறார்கள்; அதில், 10 ஆம் வகுப்பில் மட்டும் 143 மாணவர்கள் பயில்கிறார்கள். இந்த உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்குத் தேவையான 2 இலட்சம் ரூபாய் பணம், இந்தப் பள்ளியிலுடைய பெற்றோர்-ஆசிரியர் கழகத்தின் சார்பாக செலுத்தப்பட்டு 5 ஆண்டுகள் நிறைவுபெற்றுவிட்டன. அதுமட்டுமல்ல, இந்தப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்குத் தேவையான 5 ஏக்கர் நிலமும் இருக்கின்றது. மேலும், இந்தப் பகுதியிலுள்ள

2014 ஜூலை 14]

மாணவர்கள் மேல்நிலைக் கல்விக்கு 8 கி.மீ. தூரத்திற்கு அப்பாற்பட்டு உள்ள வடசேரி கிராமத்திலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிக்குத்தான் செல்லவேண்டும். பக்கத்தில் இருக்கக்கூடிய வாணியம்பாடி நகரத்தில் அரசு மேல்நிலைப் பள்ளி கிடையாது. அதேபோல, ஆம்பூர் நகரிலும் அரசு மேல்நிலைப் பள்ளி கிடையாது. ஆகவே, இரிசமுத்திரம் உயர்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் 10 ஆம் வகுப்பு முடித்த பிறகு, மேல்நிலைப் பள்ளிக்குச் செல்ல வேண்டுமென்றால், பேருந்து வசதி குறைவாக இருக்கக்கூடிய வடசேரி கிராமத்திற்குத்தான் செல்லவேண்டும். இல்லையெனில், அரசு உதவி பெறுகின்ற தனியார் பள்ளிகளுக்குச் செல்லவேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே இரிசமுத்திரத்திலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவது குறித்து அரசால் கீழ்க்கண்ட நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அரசால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள 2 இலட்சத்தை பொது மக்கள் பங்களிப்புத் தொகையாக செலுத்தவுள்ள பள்ளிகளுக்கு முதலிடம் அளிக்கப்பட வேண்டும்; மகளிர் பள்ளிகளுக்கு முதலிடம் அளிக்கப்பட வேண்டும்; மலைப் பகுதி, ஆதி திராவிடர் மக்கள் தொகை அதிகமுள்ள இடங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும்; ஊரகப் பகுதியில் குறைந்தது 3 ஏக்கர் நிலம் தேவை; 10 ஆம் வகுப்பில் குறைந்தபட்சம் 100 மாணவர்கள் இருத்தல்வேண்டும்; ஒரு மேல்நிலைப் பள்ளிக்கும், அடுத்த மேல்நிலைப் பள்ளிக்கும் குறைந்தபட்சம் 8 கி.மீ. தூரம் இடைவெளி இருக்கவேண்டும். இதற்கேற்ப பல்வேறு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களிடமிருந்து தொடர்ந்து வேண்டுகோள் பெறப்படுகின்றன. மேற்கண்ட விதிமுறைக்குட்பட்டும், தேவையின் அடிப்படையிலும் அந்தந்த மாவட்டத்திலுள்ள பிற்படுத்தப்பட்ட பகுதியிலுள்ள மாணவர்கள் பயனடைவதைக் கருத்திற்கொண்டும்

நிதிநிலைமைக்கேற்றவாறு உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விசமுத்திரம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த தொடர்ந்து கோரிக்கை விடுப்பதால், மேலே தெரிவித்துள்ள அரசின் நெறிமுறைகளை அங்கு பூர்த்தி செய்துள்ளதால், அரசின் நிதிநிலைக்கேற்ப, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, நடப்பு ஆண்டிலேயே நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அல்லம் பாஷா அவர்கள்.

திரு. அ. அல்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய அத்தனை நிபந்தனைகளும் இதற்குப் பொருத்தமில்லாது. அதுமட்டுமல்ல, கடந்த 3 ஆண்டுகளிலே ஓர் அரசு உயர்நிலைப் பள்ளிகூட மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தப்படவில்லை. (குறுக்கீடு) இந்த ஆண்டு அறிவிக்கும்படி கேட்டுக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி கூறி, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 132, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணிதரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

132—

பாலம் கட்டுதல்

***27708—திரு. எஸ்.எஸ். ரமணிதரன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அத்தியூர் தொகுதி, பர்கூர் மலைப் பகுதி மணியாச்சி ஓடையில் பாலம் கட்ட அரசு ஆணை செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 14]

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அந்தியூர் தொகுதி, பர்கூர் மலைப் பகுதி மணியாச்சி ஓடைப் பகுதி காப்புக் காட்டில் அமைந்துள்ளது. வன நிலத்தில் பாலம் கட்டுவதற்கு பழங்குடியினர் மற்றும் இதர மரபு வழி வன வாழ்வினர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டம், 2006-ன்படி., 10-4-2013 அன்று ஈரோடு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு, வனத் துறை அனுமதி வழங்கியுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு ரூ.10 கோடி நிதியினை இதற்கு ஒதுக்கி, இப்போது பாலத்திற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.*

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகத்தான சாதனைகளின் இமய நாயகி எங்கள் அம்மா; தமிழக மக்களின் இதயத்தை வென்ற வரலாற்றுத் தலைவி எங்கள் அம்மா; முன்றாண்டு ஆட்சியில் உலகம் வியந்த, ஒப்பற்ற சாதனைகளைப் புரிந்த சாதனைத் தலைவி எங்கள் அம்மா; (மேசையைத் தட்டும் ஒலி) வியப்பே வியந்துப் போற்றும் வித்தைத் தலைவி எங்கள் அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினா அலையில் எடுத்துக்கொள்வதற்கு முன்பே பர்கூர் மலைப் பகுதி மக்களின் 40 ஆண்டுக்கால கனவாக இருந்த மணியாச்சி ஓடையில், பாலம் கட்ட உத்தரவு வழங்கி, அதற்கு நிதியும் ஒதுக்கி, பாலம் கட்டும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. அதற்காக மிகப் பெரிய வரலாற்றை உருவாக்கிக் காட்டிய எங்கள் வரலாற்றுப் பொக்கிஷம், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு என் சார்பாகவும், தொகுதி மக்களின் சார்பாகவும் கோடானு கோடி நன்றிகளைச் சமர்ப்பித்து அமர்கின்றேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

[2014 ஜூலை 14

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 133, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

133—

சுகாதார சீர்கேடுகளைத் தடுத்தல்

•**28661—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள முந்திரி ஆலைகளிலிருந்து வெளியேறும் புகையினால் ஏற்படும் சுகாதார சீர்கேடுகளைத் தடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புனித பாதங்களைப் பணிவோடு வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் செயல்பட்டு வருகின்ற அனைத்து முந்திரி ஆலைகளுக்கும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் நிர்ணயித்த அளவின்படி, புகைபோக்கியை அமைக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. போதிய காற்று, மாசுத் தடுப்புச் சாதனங்கள் அமைக்காத ஆலைகளின்மீது, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மற்ற முந்திரி ஆலைகளும் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், தொழில் மற்றும் வேலைவாய்ப்பில் பின்தங்கிய மாவட்டம். இருப்பினும், இங்கு

2014 ஜூலை 14]

சுமார் 1,000 முந்திரி ஆலைகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றைப் பெரும்பாலும் கேரள மாநிலத்தைச் சார்ந்தவர்கள்தான் நடத்தி வருகிறார்கள். முந்திரி ஆலைகள், புகைபோக்கிகளில் filter வைத்து புகையினைக் கட்டுப்படுத்த வேண்டியது அவசியம். ஏனென்றால், அத்தப் பகுதியில் புகைபோக்கி வைக்காத முந்திரி ஆலைகளால், சுமார் 2 கிலோ மீட்டருக்குப் பக்கத்திலுள்ள மக்களெல்லாம் ஆஸ்துமா, கேன்சர் மற்றும் காச நோய் போன்ற வியாதிகளால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே, இதைத் தடுக்க வேண்டுமென்றும், முந்திரி ஆலைகள் புகைபோக்கியை வைக்க கட்டாயப்படுத்த வேண்டுமென்ற எனது கோரிக்கையையும் இந்த அவையிலே வைக்கிறேன். இதன்மூலம் மாசுப் பிரச்சினையால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான மருத்துவம் மற்றும் உதவித் தொகை வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-15

மாண்புமிகு திரு. எஸ்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே மொத்தம் 431 முந்திரி ஆலைகள் செயல்பட்டு வருகின்றன. அந்த முந்திரி ஆலைகளில், முந்திரி ஓடுகளை எரிபொருளாகப் பயன்படுத்துகின்ற காரணத்தால், கரும்புகை உண்டாகிறது. எனவே, அனைத்து முந்திரி ஆலைகளும், காற்று மாசு தடுப்புச் சாதனங்கள் அமைக்க வேண்டுமென்று மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. புகை போக்கியிலுள்ள உயரத்தை குறைத்தபட்சம் 9 மீட்டருக்கு மேலும், அருகிலுள்ள கட்டடத்தைவிட 3 மீட்டர் உயரமாக இருக்கும்படியும் அமைக்க வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே, அனைத்து முந்திரி ஆலைகளும் புகை போக்கியினுடைய உயரத்தை 9 மீட்டருக்கு மேலே உயர்த்தியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். கரும்புகை வெளியே வராதபடி இருக்கவும், நச்சுத்தன்மையைக் குறைக்கவும் நீர்த் தெளிப்பான் அமைக்க வேண்டுமென்பது மாசுக் கட்டுப்பாடு

[2014 ஜூலை 14

வாரியத்தினுடைய நிபந்தனை. எரி அடுப்புகளில் முந்திரி ஓடுகளை எரிப்பதற்குப் பதிலாக, விறகு போன்ற எரிபொருட்களைப் பயன்படுத்தவேண்டும் என்பது நிபந்தனை. ஆகவே, மேற்கண்ட நிபந்தனைகளை நடைமுறைப்படுத்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று, ஆலை உரிமையாளர்களுக்குத் தொடர் கூட்டங்கள் மூலமாக அறிவுறுத்தப்பட்டு வருகின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த இரண்டாண்டுகளில் மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் நிபந்தனைகளை மீறிய, போதிய காற்று மாசுத் தடுப்புச் சாதனங்கள் அமைக்காத 14 முந்திரி ஆலைகளிடமிருந்து முகாந்திரம் கோரப்பட்டு, அதில் இரண்டு ஆலைகளை மூடவும், மின் இணைப்பைத் துண்டிக்கவும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உத்தரவிட்டிருக்கிறது என்பதையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் நோய்களால் பாதிக்கப்படுகிறபோது, மாண்புமிகு அம்மா அவர்கள், தமிழ்நாட்டிலே இன்றைக்கு சுகாதாரத் துறையிலே செயல்படுத்திக் கொண்டிருக்கின்ற, முதலமைச்சரின் விரிவுபடுத்தப்பட்ட மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்மூலமாக, அனைவருக்கும் உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தக்க நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவித்ததற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுவதாகக் கூறி, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அனைத்து கல் குவாரிகளும் மூடப்பட்டிருக்கின்றன. ஆனால், மேற்குத் தொடர்ச்சி மலைகளிலுள்ள சிறிய கிராமங்களில் திட்டங்களுக்குப் பாதிப்பு இல்லாமல், கல் குவாரிகள் செயல்பட சுற்றுச்சூழல் துறையின் அனுமதி வழங்கப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2014 ஜூலை 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாத கேள்வி. தனிக் கேள்வி போடவும்.

வினா வரிசை எண் 134, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. தமிழரசன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

134—

தரம் உயர்த்துதல்

*1807—**திரு. கா. தமிழரசன்:***

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மேற்கு தொகுதி, காஞ்சரம்பேட்டையிலுள்ள கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒவ்வொரு மாநாட்சி ஒன்றியத்திலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தரமுயர்த்தப்பட வேண்டுமென்ற நியதியில், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரமுயர்த்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கக்கூடிய காஞ்சரம்பேட்டை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் மதுரை மேற்கு மாநாட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இதே மாநாட்சி ஒன்றியத்தில் சமயநல்லூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக மேம்படுத்தப்பட்டு, அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், காஞ்சரம்பேட்டை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரமுயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. தமிழரசன் அவர்கள்.

திரு. கா. தமிழரசன்: கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா

[2014 ஜூலை 14

அவர்களை வணக்குகிறேன். மதுரை மாவட்டம், மதுரை கிழக்குத் தொகுதியில் அமைந்துள்ளது இந்தக் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது, சோழவந்தான் தொகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம். மதுரை மாவட்டம், நத்தம் சாலையிலுள்ள கடவூர் அருகில், கிட்டத்தட்ட 75 குக்கிராமங்கள் அமைந்துள்ளன. இங்குள்ள அனைவரும் மதுரை, இராஜாஜி அரசு மருத்துவமனைக்குத்தான் சிகிச்சைக்காகச் செல்லவேண்டும். காஞ்சரம்பேட்டை மருத்துவமனை சுமார் 6 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. இங்கு வருடத்திற்கு சுமார் 250-லிருந்து 300 பிரசவங்கள் நடைபெறுகின்றன. ஒரு மாதத்தில் சுமார் 20-லிருந்து 25 பிரசவங்கள் நடைபெறுகின்றன. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்குக்கூட அங்கு நிலைமை என்னவென்று தெரியும். கடவூர், இராஜாஜி மருத்துவமனையிலிருந்து 18 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இதுதான் அங்குள்ள 75 குக்கிராமங்களுக்கும் மையப் பகுதி. இந்தக் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. எனவே, நிலைமையைக் கருத்திலே கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு இதை எடுத்துச் சென்று, நல்ல முறையில் ஆய்வு செய்து, 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரமுயர்த்தித் தரவேண்டுமென்று மிகத் தாழ்மையுடன், மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களிலுள்ள மக்களுக்கு தரமான, உயர்வான மருத்துவ வசதிகள் கிடைக்கவேண்டும் என்ற அடிப்படையில், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தேர்ந்தெடுத்து, அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்துகின்ற உன்னதமான திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் கொண்டு வந்தார்கள். இத்திட்டம் 2001-லேயே

2014 ஜூலை 14]

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய சிந்தனையில் உதித்த சீர்மிகு இட்டம் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) இது படிப்படியாக தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு, இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கக்கூடிய அனைத்து மாராட்சி ஒன்றியங்களிலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகளைக் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டு மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 13 மாராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. 13 மாராட்சி ஒன்றியங்களிலும் உள்ள 13 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தப்பட்டு மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற காஞ்சரம்பேட்டையும், சமயநல்லூரும் தொகுதி வேறு வேறாக இருந்தாலும், ஒரே மாராட்சி ஒன்றியத்திலிருந்து வருவதால், அரசின் கொள்கையின்படி, ஓர் மாராட்சி ஒன்றியத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம்தான் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படும். அந்த வகையில் அந்த ஒன்றியத்தில் சமயநல்லூரில் ஏற்கெனவே ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட்டுவிட்டது என்ற கருத்தை இந்த அவையிலே பதிவு வைத்தேன். இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், காஞ்சரம்பேட்டை நல்லம்பாறை பகுதியில் இருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையம் நல்ல முறையிலே செயல்பட்டு வருகிறது என்றும், அந்த மருத்துவமனைக்கு வரக்கூடிய நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார். அது உண்மை. அங்கு ஒரு மாதத்தில் 50 உள் நோயாளிகளும், நாள் ஒன்றுக்கு 170 புற நோயாளிகளும், ஒவ்வொரு மாதமும் 16 அல்லது 17 பிரசவங்களும் நடைபெறுகின்றன. ஆக, உறுப்பினருடைய கோரிக்கை சிறப்பு நிகழ்வாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

தமிழ்நாடு கிரிக்கெட் கிளப்பில் நடைபெற்ற விழாவிற்கு வேட்டி அணிந்து சென்ற நீதியரசர் மற்றும் வழக்கறிஞர்களுக்கு அனுமதி மறுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒவ்வொருவராகப் பேசவும். பிரச்சினையின் முக்கியத்துவத்தைக் கருதி அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் தங்கள் கருத்துகளை இங்கே mention செய்யலாம். தங்கள் கருத்துகளை இங்கே mention செய்வதற்கு அனுமதி அளிக்கிறேன். ஒவ்வொருவரும் விரிவாகப் பேசாமல், கருக்கமாக தங்கள் கருத்துகளைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.*

திரு. வி.சி. சந்திரகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்திரகுமார், தங்கள் என்னிடம் எழுதிக் கொடுத்திருக்கும் அறிவிப்பை மட்டும் படித்தால் போதும்.*

***திரு. வி.சி. சந்திரகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர்களின் பாரம்பரிய உடை வேட்டி ஆகும். இதை தமிழ்நாட்டின் தலைநகரிலேயே ஒருசில இடங்களில் அணிந்துவரக் கூடாது என்று சொல்வது தமிழர்களின் பண்பாட்டைக் கொச்சைப்படுத்துவதற்கு சமமாகும். வேட்டி என்பது தமிழக கலாச்சாரத்தின் அடையாளம். சென்னை, சேப்பாக்கத்திலுள்ள தமிழ்நாடு கிரிக்கெட் சங்க இளைப் கட்டடத்தில், கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழாவில் கலந்துகொள்வதற்காக சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி திரு. அரிபரந்தாமன் அவர்கள் தன்னுடைய சைரன் பொருத்தப்பட்ட காரில் சென்றிருந்தும், அவர் வேட்டி அணிந்து வந்தார் என்ற காரணத்தினால், அந்த இளப்பில் பாதுகாவலர்கள் அவரை உள்ளே அனுமதிக்கவில்லை. நான் இந்த இளப்பில் உறுப்பினர் அல்ல; விருத்தினராகத்தான் அந்த விழாவிற்கு வந்திருப்பதாக அவர் சொல்லியும், அவரை உள்ளே அனுமதிக்கவில்லை. மேலும், மூத்த வழக்கறிஞர்கள் திரு. காந்தி, திரு. சுவாமிநாதன் போன்றோரும் வேட்டி . கட்டிக்கொண்டு வந்ததால், உள்ளே அனுமதிக்கப்படவில்லை. கர்ம வீரர் காமராசர், பேரறிஞர்*

2014 ஜூலை 14] [திரு. வி.கி. சத்திரகுமார்]

அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். போன்றோரெல்லாம் வேட்டி கட்டிக்கொண்டுதான் டெல்லிக்கே சென்றனர். தற்பொழுதுகூட தமிழகத்திலிருந்து பாராளுமன்றத்திற்குச் செல்கின்ற, சட்டத்தை இயற்றும் அதிகாரம் படைத்த (குறுக்கிடு) பாராளுமன்ற உறுப்பினர்களும், சட்டம் இயற்றும் சட்டமன்ற உறுப்பினர்களும், அனைவரும் வேட்டி அணிந்துதான் செல்கின்றனர். எனவே, தமிழகத்தில் எங்குமே வேட்டி அணிந்து செல்லத் தடையில்லை என்ற நிலையை ஏற்படுத்தவேண்டும். வேட்டி அணிந்து வரக் கூடாது என்று சொல்லி வேட்டி அணிந்து வந்தவர்களை உள்ளே அனுமதிக்காதவர்கள்மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லி, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, செப்பாக்கம் தமிழ்நாடு ஹிக்கெட் அசோசியேஷன் இன்ப் சார்பாக நடைபெற்ற ஒரு பொது நிகழ்ச்சிக்கு உயர் நீதிமன்ற நீதிபதி திரு. அரிபரந்தாமன் அவர்களும் மற்றும் அவரோடு சில மூத்த வழக்கறிஞர்களும் உள்ளே சென்றபோது அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. அங்கே நடைபெற்ற நிகழ்ச்சி அந்த இன்பின் சொந்த நிகழ்ச்சி அல்ல. அது தனியாரால் நடத்தப்பட்ட தனிப்பட்ட ஒரு நிகழ்ச்சி. சென்னை உயர் நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி எழுதியிருக்கக்கூடிய ஒரு புத்தகத்தின் வெளியீட்டு விழா நிகழ்ச்சி அங்கே நடைபெற்றது. அந்தப் புத்தகத்தை குஜராத் மாநிலத்தின் முன்னாள் தலைமை நீதிபதி வெளியிட, இமாச்சலப் பிரதேசத்தின் முன்னாள் தலைமை நீதிபதி அதைப் பெறுவதாக அந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அந்த நிகழ்ச்சிக்கு சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் எல்லாம் அழைக்கப்பட்டிருந்தார்கள். அதிலே குறிப்பாக சென்னை உயர் நீதிமன்ற நீதியரசர் திரு. அரிபரந்தாமன் அவர்கள் உள்ளே செல்ல முயன்ற நேரத்தில், வேட்டி கட்டிச் சென்ற காரணத்தினால் அவரை உள்ளே அனுமதிக்க மறுத்திருக்கிறார்கள். அப்படி மறுத்த நேரத்தில் அவருடன் சென்ற மற்ற சில மூத்த வழக்கறிஞர்கள் என்னவோ வாதாடி பார்த்திருக்கிறார்கள், இருந்தாலும் அவரை

[திரு. மு.க. ஸ்டாலின்] [2014 ஜூலை 14

உள்ளே செல்ல அனுமதிக்க மறுத்திருக்கிறார்கள். ஆங்கிலேயர் ஆட்சியினை இந்தியாவிலிருந்து விரட்டி ஏறக்குறைய 67 ஆண்டுகள் ஆகின்றன. அதில் தமிழகத்திற்கு முதன்மையான பங்கு உண்டு என்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கிறோம். அந்தப் போராட்டத்தினை முதன்முதலில் தொடங்கியவர்களே வேட்டி கட்டிய தமிழ் மன்னர்களும், புடவை கட்டிய தமிழ் அரசிகளும்தான் என்பதை யாராலும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. அதுமட்டுமல்ல, சென்னை மாநகரத்தில் இருக்கக்கூடிய T.N.C.A. Club, Gymkhana Club, MCC Club, Madras Club மற்றும் Boat Club போன்ற பல்வேறு இளைகளில்கூட வேட்டி கட்டிச் செல்வதற்கு அனுமதியைத் தொடர்ந்து மறுத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, வேட்டி என்கிற தமிழ் பாரம்பரிய உடையை இன்றைய தலைமுறையினரும் அறிவதற்குத் தூண்டுகோலாக நாம் இருக்கவேண்டும்.

முற்பகல் 11-25

நம்முடைய அரசுக்குச் சொந்தமான கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் சார்பில் ஒவ்வோர் ஆண்டும் "வேட்டி தினம்" என்றுகூட கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம். சில ஆண்டுகளுக்கு முன்பு, முன்னாள் நீதியரசர் திரு. கிருஷ்ண அய்யர் அவர்கள் இதேபோன்ற நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றார். அந்த நேரத்தில் அங்குள்ள ஆலோசனைப் புத்தகத்தில், "நான் வேட்டி கட்டுவதைப் பெருமையாகக் கருதுகிறேன். உங்களது விதிகளுக்காக எனது பாரம்பரிய உரிமையை, என்னுடைய உடையை நான் விட்டுக் கொடுக்க முடியாது" என்று பதிவு செய்திருக்கின்றார். எனவே, இது பற்றியெல்லாம் தமிழகத்தில் இருக்கக்கூடிய ஒரு சில அரசியல் கட்சியினுடைய தலைவர்கள் மட்டுமல்ல, சமூக ஆர்வலர்கள்கூட இதைக் கண்டித்து சில செய்திகளையெல்லாம்கூட வெளியிட்டிருக்கின்றார்கள். எனவே, இதுகுறித்து உடனடியாக அரசு தலையிட்டு உரிய நடவடிக்கைகளை எடுத்து, தமிழ் பாரம்பரியத்திற்குரிய அந்தப் பெருமையை நிலை நாட்டிட வேண்டுமென்று நான் அரசினுடைய கவனத்தை ஈர்த்து அமைகிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் சுருக்கமாகச் சொல்லி முடியுங்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நிகழ்ச்சியைப் பற்றி விரிவாகச் சொல்லாமல்

2014 ஜூலை 14] [திரு. அ. சவுந்தராசன்]

இருக்க முடியாது. தங்களுடைய ஆணைக்கேற்ப நான் கருக்மாகச் சொல்லி முடிக்கிறேன். கடந்த மூன்று நினங்களுக்கு முன்பு சென்னை பெல்ஸ் ரோடில் உள்ள தமிழ்நாடு இரிக்கெட் அசோசியேஷன் கிளப்பில், தமிழ்நாட்டினுடைய பண்பாடு, கலாச்சாரம் மற்றும் பழக்கவழக்கங்களுக்கு எதிரான ஒரு பெரும் தாக்குதல் வெளிப்பட்டிருக்கிறது. நீதியரசர் அரிபரந்தாமன் அவர்கள் வேட்டி கட்டிக்கொண்டு கிளப்பிற்கு உள்ளே வரக்கூடாது என்று தடுக்கப்பட்டுள்ளார். அங்கே ஒரு புத்தக வெளியீட்டு பொது நிகழ்வு நடைபெற்றது. அதற்கு வாடகைக்கு இடம் தந்திருக்கின்றார்கள். அந்த நிகழ்விற்கு அழைக்கப்பட்ட விருந்தினர்கள் அந்த இடத்திற்குச் சென்றார்கள். அவர்கள் வேட்டி கட்டிக் கொண்டிருந்தார்கள். அவர்களை உள்ளே அனுமதிக்க முடியாது என்று தடுத்திருக்கிறார்கள். இந்தக் கோட்டைக்கு வடக்கே இருக்கக்கூடிய பகுதியெல்லாம் 'Black Town' என்று வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் சொல்லப்பட்டு வந்தது. வெள்ளைக்காரர்களின் இன ஒதுக்கல் கொள்கையின் ஒரு வடிவமாகவே வேட்டி மறுப்பு என்பதை அப்போது பயன்படுத்தினார்கள். அவர்கள் புழங்குகின்ற இடங்களில் நம்மவர்கள் போய்விடக் கூடாது என்பதற்காக, நம்மவர்களை தடுப்பதற்கான ஒரு உபாயமாக அவர்கள் வேட்டியை நிபந்தனையாக வைத்திருந்தார்கள்.

சுதந்திரம் பெற்று 67 ஆண்டுகள் ஆன பிறகும், பிரிட்டிஷ் ஆட்சி இந்த வேட்டி மறுப்பு விஷயத்தில் இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. கோயிலில் நுழைவதற்கு இருந்த தடையை தகர்த்து 75 ஆம் ஆண்டினை நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் நம்முடைய கலாச்சார பண்பாட்டு உடையை அணிந்து கொண்டு தமிழ்நாட்டின் தலை நகரத்தின் ஒரு மைய இடத்தில் இருக்கிற கிளப்பில் நுழைய முடியாது என்றால் இது மிகப் பெரிய அவலமான, கேவலமான நிலை. ஆகவே, இதைப் போக்குவதற்கு அரசாங்கம் உடனடியாக உறுதியான நடவடிக்கை எடுக்கவேண்டும். இதனை அவர்களுக்கு அறிவுறுத்தி வேட்டிக்கு தடைபோடும் விதியை, நீக்கச் சொல்லவேண்டும் அல்லது அரசு ஒரு சட்டத்தை இதற்காக இயற்ற வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் அரசின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர்களுடைய பண்பாட்டை, கலாச்சாரத்தைப் பாதுகாக்கக்கூடிய முறையில் தமிழகத்திலேயிருந்து வெளிநாடுகளுக்குச் செல்லக்கூடிய தமிழகத் தலைவர்கள்கூட தமிழர்களுடைய பண்பாட்டை வெளிப்படுத்தக்கூடிய முறையில் பெரியார் போன்றவர்கள் சோவியத் யூனியனுக்குச் சென்ற போதும்கூட வேட்டி அணிந்துதான் சென்றார்கள். அதேபோன்று அறிஞர் அண்ணா மற்றும் ஜீவா போன்றவர்கள் வெளிநாட்டிற்குச் சென்றபோதுகூட தமிழர்களுடைய பண்பாட்டை எடுத்துக்காட்டக்கூடிய முறையில் வேட்டி அணிந்துதான் சென்றிருக்கின்றார்கள். அங்கேகூட, இப்படிப்பட்ட தெருக்கூடியும் இல்லை, சிக்கல்களும் இல்லை. ஆனால், தமிழகத்திலே பிறந்து, தமிழர்களுடைய பண்பாட்டை, கலாச்சாரத்தைப் பாதுகாக்கக்கூடிய முறையில் நம்முடைய தமிழகத்தின் உயர் நீதிமன்றத்தினுடைய நீதியரசர் அவர்கள் சென்னையில் இருக்கக்கூடிய சேப்பாக்கம் கிரிக்கெட் மைதானில் நடைபெற்ற தூல் வெளியிட்டு நிகழ்ச்சிக்காகச் சென்ற நேரத்தில், அவரை அங்கேயே நிறுத்தி, சோதனையிடக்கூடிய முறையிலும், அவர் வேட்டி அணிந்து வந்த ஒரே காரணத்திற்காக உள்ளே அனுமதிக்காமல் தம்முடைய பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் கேலி செய்யக்கூடிய முறையிலும், கேலிப்படுத்தக்கூடிய முறையிலும் அங்கே இருக்கக்கூடியவர்கள் நடந்து கொண்டிருக்கின்றார்கள் என்பது வேதனைக்குரிய விஷயம் மட்டுமல்ல; பிரிட்டிஷ்காரனை 67 ஆண்டுகளுக்கு முன்னாலே இந்திய நாட்டைவிட்டே வெளியேற்றியதற்குப் பின்னாலுங்கூட, நம்முடைய தமிழகத்தில் இப்படிப்பட்ட கலாச்சாரத்தை உலகுவிக்கக்கூடிய முறையில், இந்தப் பண்பாட்டை சீர்குலைக்கக்கூடிய முறையில் தமிழர்களே நடந்துகொள்கிறார்கள் என்று சொன்னால், அதனை ஒரு வெட்கக்கேடான விஷயமாக நாங்கள் கருதுகிறோம். எனவே, நம்முடைய நீதியரசர் அரிபரந்தாமன் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய நிலை எதிர்காலத்தில் யாருக்கும் ஏற்பட்டக்கூடாது, அது தடுத்து நிறுத்தப்படவேண்டும். தமிழர்களுடைய பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் பாதுகாக்கக்கூடிய முறையிலே தமிழக அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

2014 ஜூலை 14]

முற்பகல் 11-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் தலைநகர் சென்னை கிரிக்கெட் அசோசியேஷனில் நடந்த ஒரு புத்தக வெளியீட்டு விழாவிலே வேட்டி அணிந்துசென்ற நீதிபதியையும், மூத்த வழக்கறிஞர்களையும் அனுமதிக்க மறுத்திருப்பது, உண்மையிலேயே தமிழ்நாட்டில் இப்படி ஒரு செய்தி நடந்திருப்பது மிகவும் வருந்தத்தக்கது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். தமிழர்களுடைய பண்பாடு வேட்டி அணிவது, சட்டை அணிவது, 1947-லே இந்திய நாட்டை விட்டு ஆங்கிலேயர்களை விரட்டி விட்டோம். ஆனால், இன்றும் வேட்டிக் கட்டிக் கொண்டு விரல் ஆலாத நிலை இருப்பது . மிகவும் வருந்தத்தக்கது. நீதிமன்றத்தில்கூட வேட்டி கட்டி வாதாட முடியும் என்ற நிலை இருக்கிறது. நீதிபதிகளுக்கும், மூத்த வழக்கறிஞர்களுக்கும், சிறந்த கல்விமான்களுக்குங்கூட இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது. இதில் தமிழக அரசு உடனடியாக கவனம் செலுத்தி இதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்த்து, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கோபிநாத் அவர்கள்.

திரு. கே. கோபிநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்று நாட்களுக்கு முன்னாலே சேப்பாக்கத்தில் நடந்த ஒரு சம்பவத்திலே நீதியரசர் வேட்டி கட்டிக்கொண்டு சென்ற ஒரே காரணத்தினாலே அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. கர்ம வீரர் காமராஜ் அவர்கள்கூட டெல்லிக்கும், ரஷ்யாவிற்கும் வேட்டி கட்டிக் கொண்டுதான் போனார். அது மட்டுமல்ல; இந்திய நாட்டின் முன்னாள் நிதியமைச்சர் மாண்புமிகு திரு. சிதம்பரம் அவர்கள்கூட வேட்டி கட்டிக்கொண்டு பாராளுமன்றத்தில் உட்கார்ந்து கொண்டிருப்பார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கோபிநாத், இந்தப் பிரச்சினையைப் பற்றி மட்டும்

பேசுங்கள். (குறுக்கீடு) தேவையில்லாதவற்றை எல்லாம் பேச வேண்டாம்.

திரு. கே. கோபிநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் பாராளுமன்றத்தில் இருக்கிற நம்முடைய தமிழ்நாட்டைச் சேர்ந்த பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்கள் கேட்டி அணித்துகொண்டுதான் செல்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால், 234 உறுப்பினர்களைக் கொண்ட இந்த அவையிலே 99 சதவிகிதம் உறுப்பினர்கள் கேட்டிதான் அணித்திருக்கிறோம். எதிர்காலத்தில் இம்மாதிரியான ஒரு அவல நிலை ஏற்படாமல் இருக்க வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

திரு. அ. கணேஷ்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 3 தினங்களுக்கு முன்பாக சேப்பாக்கத்தில் அமைந்திருக்கும் தமிழ்நாடு கிரிக்கெட் அசோசியேஷனில் ஒரு புத்தக விழாவிற்கு வருகை தந்திருந்த மாண்புமிகு உயர் நீதிமன்ற நீதிபரசர் ஒருவரும், மூத்த வழக்கறிஞர்கள் இருவரும் கேட்டி அணிந்து வந்த ஒரே காரணத்தினால் அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. இது ஒட்டுமொத்த தமிழர்களின் பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் இழிவுபடுத்தும் செயலாகும். மேலும், இதுபோன்ற செயல் வேறு எங்கும் நடைபெறாதவண்ணம் தமிழக அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும், மேலும், அந்த நீதிபரசர் அவர்கள் தான் விருந்தினராகத்தான் வந்திருக்கின்றேன். சிறப்பு அழைப்பாளராகத்தான் வந்திருக்கின்றேன், இந்த விதி உறுப்பினர்களுக்குத்தான் பொருந்தும், எங்களுக்குப் பொருந்தாது என்று வேண்டுகோள் விடுத்தும், அந்த வேண்டுகோளை ஏற்காமல், அவரை அவமதித்து திருப்பியனுப்பிய அந்த Club-ன் நிர்வாகிகள் மீதும் இதற்குக் காரணமானவர்கள்மீதும் வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டு, இந்த அவையின் கவனத்தை ஈர்த்து அமருகிறேன்.

முற்பகல் 11-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அல்லம் பாஷா அவர்கள்.

2014 ஜூலை 14]

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற 3 நாட்களுக்கு முன்பாக Tamil Nadu Cricket Association Club சார்பாக நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழாவிலே, மாண்புமிகு தீநியரசர் அவர்கள் தமிழர்களுடைய பாரம்பரியமிக்க உடையான வேட்டியை அணிந்து சென்றார் என்ற ஒரே காரணத்திற்காக அவரை அந்த விழாவிலே கலந்துகொள்வதற்கு அனுமதிக்கவில்லை. இத்தச் சம்பவம், இந்த நிகழ்ச்சி, தமிழர்களை மாத்திரமல்ல, தமிழ்க் கலாச்சாரத்தையும் அவமானப்படுத்தியதாகவே நாங்கள் கருதுகின்றோம். ஆகவே, இப்படிப்பட்ட நிகழ்ச்சி நடக்கக் காரணமாக இருந்த அந்த Club மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு அரசின் கவனத்தை ஈர்த்து அமருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

திரு. உ. தனியரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக நாகரிகத்தின் தொட்டிலாக மானுட சமூகத்திற்கு தன்மானம், சுயமரியாதை, கௌரவத்தைக் கற்றுக் கொடுக்கின்ற, கற்றுக் கொடுத்த, கல்லும், மண்ணும் தோன்றுவதற்கு இணையாகத் தோன்றிய மூத்த தமிழ்ச் சமூகத்தினுடைய பாரம்பரியமிக்க பண்பாட்டு உடைதான் வேட்டி. அது நமது தமிழர்களுடைய அடையாளம், வீரம். இந்த உடையை அண்ணா தமிழ்நாட்டில், நம்முடைய தலைநகரத்திலேயே அவமதிப்பதா? சேப்பாக்கம் கிரிக்கெட் சங்க விளையாட்டு மன்றத்தினுடைய அரங்கத்தில் நம்முடைய உயர் நீதிமன்ற நீதிபதியை, மூத்த வழக்கறிஞரை, அந்த நிகழ்விலே பங்கேற்க விடாமல் வேட்டி அணிந்து வந்தார்கள் என்பதற்காக தடுத்து நிறுத்தியிருப்பது மிகவும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. அதுவும் உலகம் முழுக்கப் பரவி வாழ்கின்ற ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்தின் உரிமைகளுக்காக அயராது தொண்டாற்றி வருகின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த நல்லாட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நிகழ்வு நடந்திருப்பதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விரைந்து விதியைத் திருத்தி, கனைந்து அந்த சம்பவத்திலே ஈடுபட்டவர்கள், சம்பந்தப்பட்டவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லரசு, இனியும் இப்படிப்பட்ட அவமான சம்பவம் தொடராமலிருக்க உரிய நடவடிக்கை எடுக்க ஆவன செய்திட கவனத்தை ஈர்த்து அமைகின்றேன், நன்றி, வணக்கம்.

[2014 ஜூலை 14

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்க் கலாச்சாரம், தமிழன் என்றாலே எல்லோரும் வேட்டி கட்டிக்கொண்டுதான் இருப்போம். எந்த நாட்டிற்குப் போனாலும் வேட்டி கட்டியிருந்தாலே அது தமிழன் என்று சொல்லும் அளவிற்கு, தமிழனின் அடையாளமானது இந்த வேட்டி. இந்த வேட்டி கட்டிச் சென்றதற்காகவே கடந்த 3 நாட்களுக்கு முன்னாலே Cricket Club-லே ஒரு நீதிபதி தடுக்கப்பட்டார். நீதிபதிக்கே இந்த நிலைமை என்று சொன்னால் சாதாரண நடுத்தர மக்கள் மற்றும் நடுத்தரத்திற்கும் கீழே வாழ்கின்ற மக்களுக்கெல்லாம் எவ்வளவு கஷ்டம் என்பதை உணர்ந்து அந்த Club-மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2 தினங்களுக்கு முன்னால் சென்னையிலே, cricket club-லே ஒரு நிகழ்விற்குப் பங்கேற்கச் சென்ற சென்னை உயர் நீதிமன்ற நீதியரசர், திரு. அரிபரந்தாமன் அவர்களும், அவரோடு சென்ற மூத்த வழக்குரைஞர்களும், அவர்கள் தமிழர்களுடைய தொன்மை மற்றும் பாரம்பரியமிக்க உடையான வேட்டி சட்டை அணிந்து சென்றார்கள் என்பதற்காக தடுத்து நிறுத்தப்பட்டு, அனுமதி மறுக்கப்பட்டு, திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறார்கள் என்கிற அந்தச் செய்தி நம்மையெல்லாம் மிகுந்த வேதனைக்கும் இழிவிற்கும் உள்ளாக்குகிறது. 67 ஆண்டு கால சுதந்திரத்திற்குப் பிறகும் தமிழகத்தின் தலைநகரிலே, பிரிட்டிஷ் ஆட்சியர் காலத்திலே உருவாக்கப்பட்ட Cricket Club, Gymkhana Club, MCC Club, Boat Club போன்ற மனமகிழ் மன்றங்களுக்கெல்லாம் தமிழர்களினுடைய அடையாளமான வேட்டி-சட்டை அணிந்து வருகிறவர்கள் தொடர்ந்து தடுக்கப்பட்டு வருகிறார்கள். உச்ச நீதிமன்ற நீதிபதியாக இருந்த மேதகு திரு. வி.ஆர். கிருஷ்ண அய்யர் அவர்களுக்கு மட்டுமல்ல; எனக்குக்கூட ஒரு முறை அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. பலரும் இப்படி தொடர்ந்து இந்த மனமகிழ் மன்றங்களிலே தடுக்கப்பட்டு வருகிறார்கள் என்பது நம்முடைய பாரம்பரியத்திற்கும், பண்பாட்டிற்கும் மட்டுமல்ல; நம்முடைய உரிமைகளுக்கேகூட ஒரு சவாலாக இருந்துகொண்டிருக்கிறது.

2014 ஜூலை 14] [முனைவர் செ.கு. தமிழரசன்]

முற்பகல் 11-40

இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் என்று இருந்த தமிழுக்கு அறிவியல் தமிழ் என்று ஒரு பரிணாமம் தந்து நான்காவது தமிழாக இந்த அவைத்திற்கு அறிமுகப்படுத்திய நம்முடைய மேற்றுதலுக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழர்தம் பண்பாட்டைத் தலைநிமிரச் செய்வதற்கு 100 கோடி ரூபாய் அளவிலே மதுரையிலே தமிழ்த் தாய்க்கு திருவுருவச் சிலை வைக்கப்படும் என்று இந்த மாமன்றத்திலே அறிவித்து (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய தமிழ்ப் பண்பாட்டை உயர்த்திப்பிடித்திருக்கிறார்கள். இத்தகைய உயரிய பணிகளிலே செயலாற்றி வருகிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் இருக்கிற இத்தருணத்திலே நாம் இதற்கு மிகக் கடமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். தமிழர், தமிழ் மண், தமிழ் மொழி ஆகிய முன்றிற்கும் விடியலாக இருந்துகொண்டிருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிச்சயம் இதற்கு ஒரு விடியலையும் உருவாக்கவேண்டும். ஒன்று, இளைப்புகளுடைய இத்தகைய போக்கை மாற்றி, வேட்டிக்கும், சட்டைக்கும் அனுமதி தருகிற ஓர் உணர்வை, அனுமதியை அங்கே பெறவேண்டும்; இல்லாவிட்டால் அவர்களுக்கு நாம் வழங்கி இருக்கிற அந்த அனுமதியை இரத்து செய்யவேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்கிற அந்த உணர்வை நான் இங்கே வெளிப்படுத்தி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழர்களின் விடியல், இதற்கும் ஒரு விடியலை நிச்சயம் காண்பார். ஆகவே, அவையின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மற்றும் பிற நகரங்களில் செயல்படும் இளைப்புகள் அனைத்தும் Societies Act-ன்கீழ் பதிவு செய்யப்பட்டு, தனியாரால் நடத்தப்படுகின்றன. மேலும், இக்னிளைப்புகள் தங்களுக்கென வகுக்கப்பட்ட சங்கத் துணை விதிகளின்படி செயல்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியுள்ளவாறு தனியார் இளைப்புகளில் தமிழ்க் கலாச்சார உடையணிந்து செல்வது தொடர்பாக சட்டத் துறையிடம் கலந்து

[திரு. கே.சி. வீரமணி] [2014 ஜூலை 14

ஆலோசித்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு ஆவன செய்யப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

3. உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்களை பேரவைப் பணிகளினின்று கூட்டத்தொடர் முழுவதும் நீக்கியதை மறுபரிசீலனை செய்யக் கோருதல்

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய உத்தரவை எதிர்பார்த்து தங்களுடைய மேலான கவனத்திற்கு ஒரு பிரச்சினையை எடுத்துரைக்கிறேன். எங்களுடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவசங்கர் அவர்கள் இந்தக் கூட்டத்தொடர் முழுவதும் வரக்கூடாது என்று சொல்லியிருக்கிறீர்கள். எனக்கு 5 நாள் கொடுத்து, கடைசி நாள் வரவில்லை, இன்றைக்கு வந்துவிட்டேன். நேற்று வந்தேன். ஆனால், திரு. சிவசங்கர் அவர்களை இந்தக் கூட்டத்தொடர் முழுவதும் நாங்கள் நீக்கி வைப்பதால், அவர் தொகுதிப் பிரச்சினையைப் பேசுவதற்கு இயலாது. அவருடைய பணியை ஆற்றுவதற்காவது தாங்கள் அருள்கூர்ந்து, பெருமனது வைத்து அவரை இந்தக் கூட்டத்தில் நாளையிலிருந்து கலந்துகொள்ளும்படியான உங்கள் மேலான உத்தரவை அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

4. மானியக் கோரிக்கைகள், 2014–2015, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

கோரிக்கை எண் 27–தொழில் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2014-2015 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 27-தொழில் துறை. மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் 3-வது முறையாக இந்த மானியக் கோரிக்கையைத் தாக்கல் செய்வதற்கு அனுமதி அளித்ததற்கு

2014 ஜூலை 14] [திரு. பி. தங்கமணி]

மீண்டும் ஒரு முறை அம்மா அவர்களுக்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

"தொழில் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 27-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,683,32,13,000/-, மூலதனக் கணக்கில் ரூ.30,05,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.500,00,07,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 593, திரு. எம். ஆறுமுகம்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,683,32,13,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,05,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,00,07,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1312, திரு. டி. இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1745, திரு. வெ. பொன்னுப்பாண்டி.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,683,32,13,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,05,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,00,07,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1621, திரு. ப. டில்லி பாபு.

[2014 ஜூலை 14

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,683,32,13,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,05,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,00,07,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1782, திருமதி ர. சுபா.

திருமதி ர. சுபா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,683,32,13,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,05,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,00,07,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2284, திரு. பி.வி. கதிரவன்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,683,32,13,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,05,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,00,07,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 257, திரு. ந. நஞ்சப்பன்.

திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைத்து ஒன்றியங்களிலும் தொழிற்சாலைகளை உருவாக்கி

2014 ஜூலை 14] [திரு. த. தஞ்சப்பன்]

வேலைவாய்ப்பினைப் பெருக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,683,32,13,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,05,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,00,07,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 333, திருமதி எஸ். விஜயதரணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 531, திரு. டி.. செங்குட்டுவன்.

திரு. டி.. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதி, ஓசூரில் அரசு சார்பில் இரானைட் தொழில் பூங்கா அமைத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,683,32,13,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,05,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,00,07,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 560, திரு. ஆர். ராமமூர்த்தி.

திரு. ஆர். ராமமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டத்தில் கிடைக்கும் பல்வேறு கச்சாப் பொருட்களைப் பயன்படுத்தி ஒரு தொழில் மையம் அங்கே அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,683,32,13,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,05,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,00,07,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

[2014 ஜூலை 14

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 652, திரு. ஜெ.ஜி. பிரின்ஸ்.*

***திரு. ஜெ.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் ஏற்படும் மின் வெட்டால் தொழிற்சாலைகள் இயங்க முடியாத நிலையை மாற்றி தொழிற்சாலைகள் தொடர்ந்து இயங்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,683,32,13,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,05,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,00,07,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 914, திரு. க. குணசேகரன்.*

திரு. க. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விவசாய விளை நிலங்களை அரசு தொழிற்சாலைகளுக்கு கையகப்படுத்துவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,683,32,13,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,05,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,00,07,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 977, திரு. ஏ. லாசர்.*

திரு. ஏ. லாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரியகுளம் தொகுதியில் பெரும்பகுதி தனியாருக்குச் சொந்தமான தொழிற்சாலைகளே உள்ளன. அரசுத் துறை சார்ந்த பெருத் தொழில்கள் இல்லை. எனவே, உற்பத்தியாகும் தேங்காய், மாம்பழம், பருத்தி, திராட்சைப் பழம் இவற்றைக் கொண்டு நூற்றுக்கணக்கான பேர்களுக்கு வேலைவாய்ப்பைத் தரக்கூடிய தொழிற்சாலைகளை நிறுவ வேண்டியதன் அவசியம் குறித்து"*

2014 ஜூலை 14] [திரு. ஏ. வாசு]

விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,683,32,13,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,05,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,00,07,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1030, திரு. பி.எச். பேண்.

திரு. சி.எச். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கும்பிடிப்பூண்டி சிப்காட் தொழிற்பேட்டையில் உடனடியாக தார்ச் சாலை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,683,32,13,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,05,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,00,07,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1035, டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்.

டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பத்மநாபபுரம் தொகுதி, பெருஞ்சாணியில் கனரக ரப்பர் தொழிற்சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கைகளின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,683,32,13,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,05,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,00,07,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1183, திரு. அ. சவுந்தரராசன்.

[2014 ஜூலை 14

***திரு. அ. சவுந்தராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தொழில் நிறுவனங்கள் வரி செலுத்துவதை ஆண்டுதோறும் கண்காணித்து வரி வருவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,683,32,13,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,05,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,00,07,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு போவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1357, திரு. எஸ்.ஆர். பார்த்திபன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1496, திரு. ர.ம. பாபு முருகவேல்.

திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆரணி தொகுதியில் சிப்காட் தொழிற் பூங்கா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,683,32,13,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,05,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,00,07,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு போவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1915, திரு. அ. அஸ்லம் பாஷா.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், ஆம்பூரில் தோல் மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிற் பூங்கா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,683,32,13,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,05,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,00,07,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

2014 ஜூலை 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1821, திரு. வி. முத்துக்குமார், இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-45

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புகளை நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் தேமுதிக-வின் மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

***திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2014-2015 ஆம் ஆண்டுக்கான தொழில் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் பங்கேற்று பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த தேமுதிக முற்போக்கு திராவிட கழகத்தின் தலைவர் கேப்டன் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் வணக்கத்தினைத் தெரிவித்து எனது உரையை துவங்குகிறேன். மூன்று முறை இத்தத் துறையினுடைய அமைச்சராக

@ 197 முதல் 292 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளன.

[திரு. வி.சி. சந்திரகுமார்] [2014 ஜூலை 14

இருந்து மானியக் கோரிக்கையை தாக்கல் செய்திருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய கோரிக்கையை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். கரூர் மாவட்டம், காகிதபுரத்தில் இயங்கிவரும் டி.என்.பி.எல். நிறுவனத்தில் 1,500 ஒப்பந்தத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். தற்போது பாராளுமன்ற உறுப்பினராக இருக்கின்ற திரு. தம்பிதுரை அவர்களையும், இந்த அவையிலே அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு திரு. செந்தில்பாலாஜி அவர்களையும், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. சின்னசாமி மற்றும் திரு. பாப்பாசுந்தரம் ஆகியோரையும் உள்ளடக்கிய ஒரு கூட்டுக்குழு 2009 ஆம் ஆண்டு அந்த ஆலையின் பிரச்சினைக்காக அமைக்கப்பட்டது. அந்தக் குழுவிலே தெரிய முற்போக்கு தொழிற் சங்கப் பேரவையும் இணைந்து ஒரு கோரிக்கையை வலியுறுத்திப் போராட்டம் நடத்தினோம். கடந்தமுறை எங்களுடைய மாமன்ற உறுப்பினர் திரு. சம்பத்குமார் அவர்கள் பேசும்போது, அவர் கேட்டதற்கு, 1,500 ஒப்பந்தத் தொழிலாளர்களும் விரைவில் நிரந்தரம் செய்யப்படுவார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால், ஓராண்டு கடந்தும், இன்னும் அந்த அறிவிப்பு நடைமுறைக்கு வரவில்லை; செயல்பாட்டுக்கு வரவில்லை. ஆட்சிக்கு வந்து மூன்று ஆண்டுகள் முடிவுற்ற பின்பும், இதுவரையிலும் அந்த ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு விடிவுகாலம் பிறக்கவில்லை. இனியாவது அவர்களுக்கு ஒரு நல்ல தீர்வு இடைக்கும் வகையில் அவர்களை பணி நிரந்தரம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஈரோடு மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளில் 1,570 தோல், சாயம் மற்றும் சலவை ஆலைகள் இயங்கி வந்தன. அதில் நீதிமன்றம் மற்றும் அதிகாரிகளின் கெடுபிடியின் காரணமாக 1,342 ஆலைகள் மூடப்பட்டும், மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டும் இயங்காமல் உள்ளன. தற்போது 328 ஆலைகள் மட்டுமே இயங்கி வருகின்றன. அதற்கும் பல்வேறு கெடுபிடிகள் தொடர்ந்து இருந்துகொண்டிருக்கின்றன. ஓராண்டுக்கு ரூ.20,000 கோடிக்கு மேல் ஜவுளி வணிகம் ஈரோட்டில் நடைபெற்றது. ஆனால், தற்போது அதில் 25 சதவிகிதம் அளவிற்கே ஜவுளி வணிகம் நடைபெறுகிறது. ஒருகாலத்தில் ஜவுளி என்று சொன்னாலே ஈரோடு என்று பொருள்படும். ஆனால் அந்தச் சிறப்பினை தற்போது ஈரோடு இழக்கின்ற அபாயம் ஏற்பட்டிருக்கின்றது. திருப்பூர், கரூர், நாமக்கல், சேலம், கோவை போன்ற மாவட்டங்களில் இருந்து

2014 ஜூலை 14] [திரு. வி.சி. சந்திரகுமார்]

ரோட்டிற்குத்தான் சாயமிடுவதற்கும், சலவை செய்வதற்கும் ஜவுளித் துணிகள் வந்துகொண்டிருந்தன. ஆனால், இன்றைக்கு நிலைமையே தலைகீழாக மாறியுள்ளது. நான் இதை ஈரோட்டிற்காக மட்டும் கேட்கவில்லை. ஈரோட்டின் நிலைதான் கரூர், சேலம், கோவை போன்ற மாவட்டங்களிலும் இருக்கின்றன. எனவே, ஜவுளித் தொழிலில் சிறந்து விளங்கும் இந்தப் பகுதிகளில் ஜவுளித் தொழிலை வளர்ச்சியடைவதற்காக பொது சுத்திகரிப்பு நிலையமும், கழிவுநீரைக் கடலில் கொண்டுசென்று சேர்க்கும் இட்டத்தினையும் செயல்படுத்தி ஜவுளித் தொழிலைப் பாதுகாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், கடந்த முறை இதுகுறித்து நான் பேசும்போது, ஈரோட்டிற்கு பொது சுத்திகரிப்பு நிலையம் தேவையில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால், மாண்புமிகு அமைச்சரின் மாவட்டத்தில் 21 ஏக்கர் நிலப் பரப்பளவில் பொது சுத்திகரிப்பு நிலையம் கட்ட முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது. அங்கே தேவைப்படும்போது ஈரோட்டுக்கு தேவையில்லை என்று சொல்வது ஆச்சரியமாக இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்திலே பனியன் உற்பத்தியில் தலைசிறந்த நகரமாக விளங்கிய திருப்பூர் நகரிலே பனியன் உற்பத்தி தொழிற்சாலைகள் கழிவுநீரை வெளியேற்றுகின்ற முறையைச் சரியாகப் பின்பற்றாத காரணத்தினாலே, உச்ச நீதிமன்றத்தினுடைய ஆணையின்படி அந்த ஆலைகள் மூடப்பட்டு, கடந்த ஆட்சிக் காலத்திலே பனியன் தொழிலே முடக்கப்பட்ட சூழல் எல்லாம் இருந்தது நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியும். மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக மூன்றாவது முறையாகப் பொறுப்பேற்ற பின்னர், மூடப்பட்ட சாயம் மற்றும் சலவைத் தொழிற்சாலைகளைத் திறப்பதற்காக அந்த ஆலையினுடைய உரிமையாளர்களையெல்லாம் சென்னைக்கு வரவழைத்து அவர்களுடைய வேண்டுகோளையும், அவர்களுடைய கோரிக்கைகளையெல்லாம் பெற்று, பல்வேறு கட்டங்களில் அதற்காக ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

[திரு. எஸ்.டி. வெங்கடாச்சலம்] [2014 ஜூலை 14

இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையிலே, முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராக விளங்கிக்கொண்டிருக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) நமது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்ற பொற்கால ஆட்சியிலேதான் 180 கோடி ரூபாயை (மேசையைத் தட்டும் ஒலி) பொது சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்காக வட்டியில்லாத கடனாக வழங்கப்பட்டது. என்பதை இந்த நேரத்திலே அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-50

சாயக் கழிவு நீரால் அங்கு இருக்கக்கூடிய சூழ்நிலை மாசுபடுகிறபொழுது, அந்த மாசுக்களைக் கட்டுப்படுத்தவேண்டுமென்று பல்வேறு பொது நல அமைப்புகளும் போராட்டம் நடத்தியபொழுது, அதைக் கட்டுப்படுத்த வேண்டிய கடமையும் இந்த அரசுக்கு இருக்கிறது. தொழிற்சாலைகளையும் அங்கீகரிக்கவேண்டும்; தொழிற்சாலைகளில் உற்பத்தியையும் அதிகரிக்கவேண்டும்; தொழிற்சாலைகளை அதிகப்படுத்தவேண்டும்; அதேசமயத்தில், மக்களுக்கு நோய்களை ஏற்படுத்துகிற மாசுகளைக் கட்டுப்படுத்தவேண்டுமென்ற அடிப்படையிலே மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்தச் சாய சலவைத் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறுகிற கழிவு நீரைச் சுத்திகரித்து, பூஜ்ய திரவ நிலைக்குக் கொண்டு வரக்கூடிய திட்டத்தைச் செயல்படுத்தவேண்டுமென்று உத்தரவிட்டார்கள். Zero Liquid Discharge-ZLD என்று சொல்லக்கூடிய பூஜ்ய திரவ நிலைக்குக் கொண்டுவரக்கூடிய அந்தத் திட்டம் இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திலே மட்டும்தான் செயல்படுத்தப்படுகிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுச் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கிற திட்டத்தை செயல்படுத்துகிற காரணத்தினாலேயே இந்த ஆண்டு பனியன் உற்பத்தியிலே தலைசிறந்த மாவட்டமாக ஆயிரக் கணக்கானத்திலேயே திருப்பூர் மாவட்டம் முதலிடத்தை வகிக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்குக் காரணம் அம்மா அவர்கள் எடுத்த சீரிய நடவடிக்கை. அதேபோல நீங்கள் எல்லோரும் பத்திரிகையிலே பார்த்திருப்பீர்கள், ஈரோட்டைப்

2014 ஜூலை 14] [திரு. என்.டி. வெங்கடாச்சலம்]

பொறுத்தவரையிலே, சாய நீர்க் கழிவுகள் ஆற்றிலே கலக்கிறதென்று பல்வேறு பொதுநல அமைப்புகளும் கூறிவரும் நிலையிலே தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் இதற்காக சரிய முறையில் நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆனால், அதேசமயத்தில் மாசுக் கட்டுப்பாடு வாரியம் எந்த ஒரு தொழிற்சாலையையும் தேவையில்லாமல் மூடுவதற்கு உத்தரவிடவில்லை. சாயக் கழிவு நீரைக் கலக்கிற ஆலைகளின்மீது மட்டும்தான் நடவடிக்கை எடுத்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், கொஞ்சம் சுருக்கமாக முடியுங்கள்.

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: ஆகவே, அந்த அடிப்படையிலே பொது சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஈரோட்டிலே பொதுச் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கவேண்டுமென்ற உறுப்பினரின் கோரிக்கை மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

திரு. வி.சி. சந்திரகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு மிக்க நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கிடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன? (குறுக்கிடு) உட்காருங்கள்.

திரு. வி.சி. சந்திரகுமார்: கடந்த ஆண்டு அரியலூர் (குறுக்கிடு) இமெண்ட் ஆலை விரிவாக்கம் மற்றும் அதன் செயல்பாடு குறித்து அறிக்கை சமர்ப்பிக்க அரசினுடைய அனுமதியோடு தனியார் நிறுவனத்தை நிட்டா மேலாண்மை ஆலோசகராக டான்செம் நியமித்தது. அத்தத் தனியார் நிறுவனம் விரிவான நிட்டா அறிக்கை தயாரித்துக் கொடுத்ததா? ஆலையின் விரிவாக்கப் பணி எந்த நிலையில் உள்ளது என்பது குறித்த எந்தவிதத் தகவலும் இந்த ஆண்டு கொடுக்கப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பிலே இல்லை. அதேபோல காஞ்சிபுரம் மாவட்டம், மாமல்லபுரம் அருகே 1,270

[திரு. வி.சி. சந்திரகுமார்] [2014 ஜூலை 14

ஏக்கரில் சிங்கப்பூர் அசென்டாஸ் நிறுவனமும், ஜப்பான் ஜேஜிசி நிறுவனமும் இணைந்து "மேம்படுத்தப்பட்ட ஒரு மையத் தொழில் நகரியம்" உருவாக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டது என்றும், இந்த மையத் தொழில் நகரியத்தின்மூலம் ஜப்பான் நிறுவனங்களின் ஆர்வத்தால் 15,000 கோடி முதலீடு எதிர்பார்க்கப்படுவதாகவும் சொல்லப்பட்டது. அதுகுறித்த விவரம் இந்த ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் எதுவுமில்லை. தமிழ்நாடு கனிம நிறுவனத்திடம் சுமார் 2,136 ஹெக்டேர் பரப்பளவில் 148 சுரங்கக் குத்தகைகள் இருந்துள்ளன. தற்போது சுமார் 2,066 ஹெக்டேர் பரப்பளவில் 146 சுரங்கக் குத்தகைகள் மட்டுமே உள்ளதாகச் சொல்லப்பட்டுள்ளது. மீதியுள்ள சுமார் 60 ஹெக்டேர் பரப்பளவுள்ள அதாவது 150 ஏக்கர் பரப்பளவுள்ள 2 சுரங்கக் குத்தகைகள் குறித்த தகவல்கள் எதுவுமே இந்த ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் இடம்பெறவில்லை. அதிலே ஒரு சுரங்கக் குத்தகை கருப்பு கிரானைட் வகையைச் சார்ந்தது. இன்னொன்று பல வண்ண கிரானைட் வகையைச் சார்ந்தது. அதேபோல, கவனிக்கப்படவேண்டிய ஒரு விஷயம் இருங்காட்டுக்கோட்டை தொழிற்பூங்காவிலே 52.63 ஏக்கர் நிலப்பரப்பில் காலணிப் பொருட்கள் தயாரிக்க 18 நிறுவனங்களுக்கு நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும், இதன்மூலம் சுமார் 750 நபர்கள் வேலைவாய்ப்பு பெறுவார்கள் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

இது தொடர்ந்து 3 ஆண்டுகளாக கொள்கை விளக்கக் குறிப்பில் ஒரே மாதிரியாக சொல்லப்பட்டிருக்கிறதேபொழிய, 18 நிறுவனங்கள் தங்கள் உற்பத்தியைத் துவங்கிவிட்டதா, 750 நபர்கள் அதிலே வேலைவாய்ப்பினை பெற்றார்களா என்பது எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை.

அதேபோல, தமிழ்நாடு அரசின் முகவாண்மை அமைப்பாக சிப்காட் நிறுவனம் பெரும் தொழில் நிறுவனங்களுக்கு தொகுப்பு ஊக்க நிதி உதவித் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. கடந்த ஆண்டில் 33 நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு, 15 நிறுவனங்களுக்கு 1,748.58 கோடி ரூபாய் ஊக்க நிதியாக வழங்கப்பட்டுள்ளது. பிற விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளதாகச் சொல்லப்பட்டது. இந்த ஆண்டு இதுவரையிலும், 2,898.80 கோடி ரூபாய் சிப்காட் நிறுவனத்திற்கு அரசு

2014 ஜூலை 14] [திரு. வி.சி. சந்திரகுமார்]

வழங்கியுள்ளதாகவும், செப்காட் நிறுவனம் இதுவரையில் 16 நிறுவனங்களுக்கு 2,690.20 கோடி ரூபாயை மானிய நிதியாக வழங்கியுள்ளதாகவும் சொல்லப்பட்டுள்ளது. அப்படியானால் எத்தனை நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டன. மானிய நிதி வழங்கிய நிறுவனத்தின் பெயர் பட்டியல் அதிலே இல்லை. கடந்த ஆண்டும், இந்த ஆண்டும் ஒப்பிடும்போது ஒரு நிறுவனம் மட்டுமே மானிய நிதி பெற்றுள்ளதாகத் தெரிகிறது. அப்படியானால் அந்த ஒரு நிறுவனத்திற்கு மட்டுமே சுமார் 941.62 கோடி ரூபாய் மானிய நிதி வழங்கப்பட்டதா? பல்வேறுபட்ட நிறுவனங்கள் எது எது என்பது குறித்து அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்றபோது அந்த VAT Refund-ஐ ஒரு கம்பெனிக்கு மட்டும் கொடுத்திருக்கின்றார்கள். இன்னும் எத்தனை கம்பெனிகள் இருக்கின்றன என்று கேட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் 900 கோடி ரூபாய் ஒரு கம்பெனிக்கு கொடுத்ததாக சொல்கின்றார்கள். 900 கோடி ரூபாய் என்பது இந்த மூன்று ஆண்டுகளுக்கு வேண்டுமானால் கொடுத்திருக்கலாம். மொத்தம் 7 கம்பெனிகள் அதற்குண்டான E.C.-ஐ கொடுத்திருக்கிறார்கள். தொழில் தொடங்க MoU போடும்போதே ஒரு கண்டிஷன் போடுகின்றார்கள், 10 வருடம், 14 வருடம், 21 வருடம் என்று VAT Refund தொகையை திருப்பித் தர வேண்டுமென்ற அடிப்படையிலேதான் இங்கே தொழில் துவங்க வருகின்றார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் VAT Refund-ஐ கொடுத்தது தவறு என்று சொல்கின்றாரா, இல்லை ஒரே கம்பெனிக்கு மட்டும் கொடுக்கப்பட்டது என்று சொல்கின்றாரா என்று விளக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

திரு. வி.சி. சந்திரகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்பிலே கடந்த முறை விரிவாக இருந்தது. ஆனால், இந்த முறை எத்தனை நிறுவனங்கள் என்று விரிவாக இல்லை. ஒட்டுமொத்தமாக 16 நிறுவனங்கள் என்று

மட்டும்தான் இருக்கின்றது. அதனால்தான் எனக்கு அந்த சந்தேகம் எழுந்தது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கிவிட்டார்கள் எனக்கு மிக்க சந்தோஷம்.

அதேபோல, கூட்டுத மே மாதம் வரை தனியார் சர்க்கரை ஆலைகள், விவசாயிகளுக்கு சுமார் 675 கோடி ரூபாய் பாக்கி வைத்துள்ளன. குறிப்பாக சிவகங்கை மற்றும் ஆப்பக்கூடலிலுள்ள சக்தி சர்க்கரை ஆலை மட்டும் 2011-2012, 2012-2013 காலத்தில் 53 கோடி ரூபாய்ய பாக்கி வைத்துள்ளது. இதுவரையிலும் எந்தத் தனியார் சர்க்கரை ஆலையும், 2011-2012, 2012-2013 ஆம் ஆண்டு காலத்தில் பாக்கி வைக்கவில்லை. இந்த சர்க்கரை ஆலைகள் மட்டும் பாக்கி வைத்துள்ளன. தனியார் ஆலைகள்தான் இப்படி என்று சொன்னால், கூட்டுறவு மற்றும் பொதுத் துறை ஆலைகள் சுமார் 181 கோடி ரூபாய் பாக்கி வைத்துள்ளன. தமிழக கரும்பு விவசாயிகளுக்கு இதுவரையிலும் மொத்தம் சுமார் 844 கோடி ரூபாய் பாக்கி கொடுக்கப்படாமல் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது 844 கோடி ரூபாய் தரவேண்டுமென்று சொல்லியிருக்கின்றார். 844 கோடி ரூபாய் எந்த அடிப்படையிலே எந்தெந்த மில்கள் என்று சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கவேண்டும். இந்தியாவிலேயே மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டு மேலசையைத் தட்டும் ஒரே தமிழக மாநிலத்தில் மட்டும் 527 கோடி ரூபாய்தான் கொடுக்க வேண்டிய தொகை பாக்கியிருக்கிறது. அதுவும் அவர்களை அழைத்துப் பேசி, இன்னும் 15 நாட்களுக்குள் கொடுத்துவிடுவதாக அந்த ஆலை அதிபர்கள் சொல்லியிருக்கின்றார்கள். வெளியே இருந்துகொண்டு ஆயிரம் கோடி ரூபாய் என்கின்றார். ஒருவர் 900 கோடி ரூபாய் என்கிறார். இப்போது சட்டமன்ற எதிர்க்கட்சியினுடைய கொறடா அவர்கள் 844 கோடி ரூபாய் என்கின்றார். 844 கோடி ரூபாய் என்று எதை வைத்து சொல்கின்றார். ஆதாரத்தோடு கூறுங்கள். எந்தெந்த மில்லில் எவ்வளவு கொடுக்கவேண்டுமென்பதற்கு ஆதாரம் என்னிடத்திலே இருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்கள் யாரோ சொல்லிக்கொடுத்ததை தயவுசெய்து சொல்ல

2014 ஜூலை 14] [திரு. பி. தங்கமணி]

வேண்டாமென்று கேட்டு, இங்கே பேசுகின்றபோது முழு புள்ளிவிவரத்தோடு பேசவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.சி. சந்திரகுமார், ஆதாரத்தோடு பேசுங்கள்.

திரு. வி.சி. சந்திரகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் யாரோ எழுதிக்கொடுத்ததையெல்லாம் பேசவில்லை. Cane price dues paid and balance report as on 31-5-2014 ரிப்போர்ட்டின் அடிப்படையில்தான் நான் பேசுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குப் பின்னர் இட்டத்தட்ட ஒன்றரை மாதம் ஆகிவிட்டது. அதற்குப் பின்னர் நிறைய தொகைகள் விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன. 2014 ஆம் ஆண்டு மே மாத இறுதியில் வேண்டுமானால் 844 கோடி ரூபாய் இருந்திருக்கலாம். இன்றைய தேதியில் 527 கோடி ரூபாய் மட்டும்தான் விவசாயிகளுக்கு பாக்கியிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டு இன்னும் 15 நாட்களுக்குள் அனைத்து தொகையையும் கொடுப்பதாக ஆலை அதிபர்கள் ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக எதிர்க்கட்சி கொறடா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பகல் 12-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் வேறு சப்ஜெக்ட்டுக்குப் போங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியபிறகு கடைசியாகப் பேசலாம். (குறுக்கீடு) என்ன பேசவேண்டும்? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியபிறகு கடைசியாகப் பேசலாம். இல்லை, விவாதம் நீண்டுகொண்டே போகும்.

திரு. வி.சி. சந்திரகுமார்: கரும்பு பாக்கி 844 கோடி ரூபாய் என்று நான் சொன்னேன். ஆனால், மாண்புமிகு அமைச்சர்

[திரு. வி.சி. சந்திரகுமார்] [2014 ஜூலை 14

அவர்கள் 577 கோடி ரூபாய் என்று சொல்கிறார். மிக்க நன்றி. அந்தப் பணம் விவசாயிகளுக்குப் போய்ச் சேர்ந்தால் போதும் என்பதுதான் என்னுடைய நிலை. அதேபோல, அரசால் இந்த ஆண்டு கரும்பிற்கு அறிவிக்கப்பட்ட விலை டன்னுக்கு ரூ.2,650/-ஐ 9 கூட்டுறவு ஆலைகளும், 1 பொதுத் துறை ஆலையும், 1 தனியார் ஆலையும்தான் தருகின்றது. வேறு எந்த ஆலையும் தருவது இல்லை. ஆரூரான் குழுமத்தைச் சேர்ந்த நான்கு ஆலைகளும் டன்னுக்கு ரூ.2,100/- மட்டுமே வழங்கி வருகிறது. மதுபான ஆலையில் இருக்கின்ற molasses-ஐ ஆந்திரா, கர்நாடகாவில் ரூ.4,000/-த்திற்கு வாங்குவதாகவும், ஆனால், தமிழ்நாட்டிலுள்ள மதுபான ஆலைக்கு குறைந்த விலைக்கு விற்கவேண்டுமென்று கட்டாயப்படுத்துவதனாலேயே தங்களால் இலாபம் சட்ட முடியவில்லை என்றும் ஆலை அதிபர்கள் கூறுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீண்டும் மீண்டும் தவறான தகவலைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆந்திராவில் molasses ரூ.4,000/-க்குப் போகின்றது, இங்கே குறைத்துக் கேட்கின்றார்கள் என்று சொல்லியிருக்கின்றார். அவர் எந்த அடிப்படையில் சொன்னார் என்று தெரியவில்லை. ஆனால், உண்மை நிலையை நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டும். இதுகாறும் தமிழகத்தினுடைய வரலாற்றிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியிலேதான் முதன்முதலாக ரூ.6,000/-க்கு molasses கொடுக்கப்பட்டிருக்கின்றது என்ற செய்தியைச் சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி) எந்தத் தனியாரையும் நாங்கள் மிரட்டுவதில்லை என்பதை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும். அதேபோல கரும்பிற்கு ரூ.2,650/-தனியார் ஆலைகளில் தரவில்லை என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அதற்குத்தான் நான் ஏற்கெனவே சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டு, அவர்களை அழைத்துப்பேசி இன்னும் 15 நாட்களுக்குள் கொடுப்பதாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் சீசன் இருந்துகொண்டுதான் இருக்கிறது.

2014 ஜூலை 14] [திரு. பி. தங்கமணி]

அதேபோல, சர்க்கரை விலை குறைந்து விட்ட காரணத்தால் எஸ்.டி.எஃப். லோன் வருகிற வரைக்கும் கொஞ்சம் காத்திருங்கள் நாங்கள் கொடுத்துவிடுகிறோம் என்று சொல்லியிருக்கின்றார்கள். அங்கே, டெல்லியில் இருந்து கனியரன்ஸ் வந்த உடனேயே ஒவ்வொரு மில்லும் அந்த எஸ்.டி.எஃப். லோன் வாங்க இருக்கின்றார்கள். அந்த லோனை வாங்கினால் முழுக்க முழுக்க விவசாயிகளுக்குத்தான் அந்தப் பணத்தைக் கொடுக்கவேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். ஆகவே, எதிலேயும் நாங்கள் பின்வாங்க மாட்டோம் என்பதைச் சொல்லி மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், என்ன குறுக்கிட்டுப் பேசுகிறீர்களே? இன்னொரு உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்போது திடீரென்று எழுந்தால் எப்படி?

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனியார் சர்க்கரை ஆலைகளில் கரும்பு பாக்கிப் பணம் வழங்கப்படுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்று இங்கே சொல்லி இருக்கிறார்கள். ஆனால், சக்தி சர்க்கரை ஆலை 2011-2012, 2012-2013 மற்றும் 2013-2014 ஆம் ஆண்டுகளிலே பாக்கி வைத்திருக்கிறது. கிட்டத்தட்ட அவர் சொல்கிற. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் நீங்கள் சுருக்கமாகப் பேசுங்கள். இதை எல்லோரும் பேசமுடியாது. உங்களுடைய உறுப்பினர் பேசும்போது நீங்கள் பேசச் சொல்லுங்கள். திரு. சந்திரகுமார், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) உங்களுடைய உறுப்பினர் பேசும்போது பேசச் சொல்லுங்கள். உங்களுடைய உறுப்பினர் அடுத்து பேச இருக்கிறார் அப்போது பேசச் சொல்லுங்கள். திரு. தங்கவேல் அவர்களிடம் கொடுத்துப் பேசச் சொல்லுங்கள். உட்காருங்கள். திரு. சந்திரகுமார், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) இல்லை. உட்காருங்கள். விவாதம் நீண்டு கொண்டே போகிறது. நீங்கள், உட்காருங்கள். திரு. சந்திரகுமார் நீங்கள் பேசுங்கள்.

[2014 ஜூலை 14

திரு. வி.சி. சந்திரகுமார்: தென் மாவட்டங்களில் தொழிற்பூங்காவிற்கு 25 ஆயிரம் ஏக்கர் நிலம் தெரிவு செய்யப்பட்டிருப்பதாக கடந்த கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லப்பட்டது. இந்த ஆண்டு 2,650 ஏக்கர் நிலப்பரப்பில் தொழிற்பூங்காக்களை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், 11 ஆயிரம் ஏக்கர் நிலம் மட்டுமே தெரிவு செய்யப்பட்டு, அரசின் நிருவாக அனுமதி கேட்டிருப்பதாகவும் சொல்லப்பட்டுள்ளது. சுமார் 1½ ஆண்டுகளாக அரசின் நிருவாக அனுமதி கோரப்படுகிறது. மீதி உள்ள சுமார் 14 ஆயிரம் ஏக்கர் நிலம் தெரிவு செய்யப்பட்டதா, இல்லையா அல்லது அதனுடைய நிலை என்ன என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது தென் மாவட்டங்களில் உள்ள நிலமை வங்கி பற்றி பேசினார்கள். 25 ஆயிரம் ஏக்கர் என்று கடந்த ஆண்டு இருந்தது. இந்த ஆண்டு 20 ஆயிரமாகக் குறைந்து விட்டது என்று சொல்லுகிறார்கள். அதாவது நிலத்தை ஆக்கிரமிப்பு செய்தவர்களாக இருந்தாலும், பல்வேறு பிரச்சினைகள் இருப்பதனால், பேச்சுவார்த்தைகள் நடந்துதான் அந்த இடத்தை நாம் எடுக்க வேண்டியிருக்கிறது. அதுமட்டுமல்ல, கடந்த கால மத்திய அரசு நிலம் எடுப்பதற்கு நான்கு மடங்கு விலை கொடுக்கவேண்டுமென்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தது. மேலும், பல்வேறு காரணங்களினால் இடம் எடுப்பது உடனடியாக நடக்கக்கூடிய காரியம் இல்லை. அதற்கு ஒரு வருடம்கூட ஆகலாம். ஒருவர் நீதிமன்றத்திற்குச் சென்றால்கூட அது இரண்டாண்டு காலம் இழுத்து விடுகிறது. தென் மாவட்டங்களைப் பொறுத்தவரை, 11 ஆயிரம் ஏக்கர் நிலம் இப்போது கண்டறியப்பட்டிருக்கிறது. தொழில் முனைவோர் வந்தால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அறிவித்திருக்கின்ற அத்தனை சலுகைகளோடும் அங்கே தொழில் துவங்குவதற்கு இடம் தயாராக இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இது தொடர் நிகழ்வு. ஏதோ இதோடு முடிந்து விட்டது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுகிறார்கள். இடம் எடுப்பது என்பது தொடர் நிகழ்வு. பல்வேறு வழக்குகள் இருக்கின்றன. இதையெல்லாம் பார்த்துத்தான் நாம் அந்த இடத்தை

2014 ஜூலை 14] [திரு. பி. தங்கமணி]

எடுக்கமுடியும் என்ற காரணத்தினால் 11 ஆயிரம் ஏக்கர் நிலம் இப்போது கண்டறியப்பட்டிருக்கிறது என்று சொன்னால், நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தி, அந்த இடம் எடுப்பதற்கு தயாராக இருக்கின்றது என்றுதான் அர்த்தமேயொழிய, 25 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் நாங்கள் 11 ஆயிரம் ஏக்கர் என்று குறைத்து விட்டதாக யாரும் நினைக்கவேண்டாம். நிச்சயமாக தென் மாவட்டங்களில் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த அத்தனை திட்டங்களுக்கான இடங்களும் எடுக்கப்பட்டு, ஒவ்வொரு தொழில் முனைவோருக்கும் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.சி. சந்திரகுமார், ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

திரு. வி.சி. சந்திரகுமார்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.சி. சந்திரகுமார், அது தொடர்பாக ஏற்கெனவே வழக்குகள் இருக்கின்றன. அதை ஏன் பேசுகிறீர்கள்? மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கிடு) திரு. வி.சி. சந்திரகுமார் பேசிய அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

திரு. வி.சி. சந்திரகுமார்: தென் மாவட்டங்களில் கடற்கரை தாது மணல்கள் அள்ளப்பட்டன. தமிழ்நாட்டில் 31 உரிமங்கள் கடற்கரை தாது மணல் அள்ளுவதற்கு வழங்கப்பட்டிருந்தன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது குறித்த வழக்கு நீதிமன்றத்தில் இருக்கின்ற காரணத்தினால், இந்த சட்டமன்றத்திலே அதனை விவாதிக்க வேண்டாமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2014 ஜூலை 14

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வழக்கு மன்றத்தில் இருக்கின்ற matters-ஐ எல்லாம் ஏன் இங்கே பேசுகிறீர்கள்? வேறு பொருள் குறித்து பேசுங்கள்.

திரு. வி.சி. சந்திரகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லைசென்ஸ் கொடுப்பதும், இரத்து செய்வதும் மத்திய அரசினுடைய பொறுப்பில்தான் இருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு வந்தவுடன் உடனடியாக அந்த டிரான்ஸ்போர்ட் பெர்மிட்டை கொடுக்க வேண்டாம் என்று சொல்லி நிறுத்தியது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) உங்களைப் போலவோ மற்றவர்களைப் போலவோ மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு யாருக்கும் சலுகை செய்யவில்லை என்பதை முதலில் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது என்று சொன்னால், அதுகுறித்து நாம் இங்கே பேசுகின்றபோது அங்கே அந்த வழக்கிற்கு பாதிப்பாகிவிடக் கூடாது என்பதால்தான், நீதிமன்றத்திலே வழக்கு இருக்கின்றபோது பேச வேண்டாம் என்று நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம். நீங்கள் நினைப்பதைவிட மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் எத்தனை கோடி ரூபாய் அதிகமாக வருமானம் வந்திருக்கிறது; இதுகாறும் இல்லாத அளவிற்கு இந்தக் கனிம வளத்திலே எவ்வளவு வருமானம் வந்திருக்கிறது என்பதையெல்லாம் என்னுடைய பதிலுரையில் சொல்லவிருக்கின்றேன். ஆகவே, கொடநாடு அவர்கள் இந்த நாடு மணலைப் பொறுத்தவரை, நீதிமன்றத்திலே இருக்கின்ற காரணத்தினால், அதுகுறித்து எதுவும் பேச வேண்டாமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது என்று சொன்னதற்கு பின்னரும், திரு. வி.சி. சந்திரகுமார் பேசிய வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. திரு. வி.சி. சந்திரகுமார், ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2014 ஜூலை 14]

திரு. வி.சி. சந்திரகுமார்: ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு. கண்திப் சிங் பேடி அவர்களுடைய அறிக்கை அரசுக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையை இந்த அவையிலே வெளியிடுவதற்கு அரசு முன்வருமா என்பதைக் கேட்டு, எனக்கு பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சொல்லியதுபோல் வழக்கு நீதிமன்றத்திலே இருக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு அம்மா அவர்கள் ஏதோ, வேறு யாரோ சொல்லி அந்த Commission-ஐ போடவில்லை. புகார் என்று வந்தவுடன், மாண்புமிகு அம்மா அவர்களே திரு. கண்திப் சிங் பேடி அவர்கள் தலைமையில் ஒரு குழு போட்டார்கள். அதனுடைய்பையில், அவர்கள் அறிக்கை கொடுத்துள்ளார்கள். அது அரசினுடைய ஆய்விலே இருக்கின்றது. அதைச் சட்டமன்றத்திலே வைப்பது பற்றி ஆய்வு முடிவடைந்தற்கு பின்னால்தான், சொல்ல முடியும். ஏனென்று சொன்னால் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிற வழக்கினுடைய போக்கு மாறிவிடக் கூடாது என்பதற்காக, அது அரசின் பரிசீலனையில் வைக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. விதி 110-ன்கீழ் அறிக்கைகள்

(அ) எம்.ஜி.ஆர். அரசு நிறைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் நவீன படப்பிடிப்புத் தளங்கள் அமைப்பது குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன் கீழ் இரண்டு அறிக்கைகளை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதன் நாகரிகம் அடைந்து உருவாக்கிய படைப்புகளில் உன்னத கலைப் படைப்பாக திகழும் திரைப்படம்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2014 ஜூலை 14

இன்றைய மனித வாழ்க்கையில் இன்றியமையாத இடத்தினைப் பெற்றுள்ளதோடு மட்டுமல்லாமல், பல இலட்சக்கணக்கான குடும்பங்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வாழ்வாதாரத்தை வழங்கிக் கொண்டிருக்கிறது.

இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த திரைப்படத் துறையின் வளர்ச்சிக்காகவும், தலைவருக்காகவும் நான் பல்வேறு சலுகைகளை அளித்துள்ளேன். நான் மூன்றாவது முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்ற பின்னர், இந்திய சினிமா நூற்றாண்டு விழாவினை நடத்திட தமிழ்நாடு அரசின் சார்பாக, 10 கோடி ரூபாய் நிதி உதவி வழங்கினேன். (மேசையைத் தட்டும் ஒலி) எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் 9 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் உயிர்ப்பூட்டல் மற்றும் காட்சிப்பயன் அதாவது, Animation and Visual Effects எனும் பாடப் பிரிவு தொடங்கப்பட்டு அங்கு மாணவர்கள் பயின்று வருகின்றனர். அங்குள்ள முன் காண் திரையரங்கம், அதாவது Preview Theatre, நவீன வசதிகளுடன் 99 இலட்சம் ரூபாய் செலவிலும், படப்பிடிப்புத் தளம் 1 கோடியே 43 இலட்சம் ரூபாய் செலவிலும் புனரமைக்கப்பட்டன.

பிற்பகல் 12-10

திரைப்படத் துறையினர் நல வாரியத்தில் ஏறத்தாழ 20 ஆயிரம் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு அவர்களுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் மாறிவரும் டிஜிட்டல் தொழில்நுட்ப முறைகளால் தயாரிக்கப்படும் திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சித் தொடர்கள் அதிகரித்துள்ளதால், படப்பிடிப்புத் தளங்கள் அதிகளவில் தேவைப்படுகின்றன என்றும், எனவே, புதிய படப்பிடிப்புத் தளங்களை ஏற்படுத்தித் தர வேண்டுமென்றும் தென்னிந்திய திரைப்பட தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் என்னிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவர்களின் கோரிக்கையினை நிறைவேற்றும்வகையில், எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன வளாகத்தில் காலியாகவுள்ள 2.5 ஏக்கர் நிலப்பரப்பில் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அதிநவீன வசதிகளுடன்கூடிய

2014 ஜூலை 14] [செல்வி ஜெ ஜெயலலிதா]

முழுவதும் குளிரூட்டப்பட்ட இரண்டு படப்பிடிப்புத் தளங்கள் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன வளாகத்தில் புதிய படப்பிடிப்புத் தளங்கள் அமைவதன்மூலம், திரைப்படத் துறையினர் பயன்பெறுவதோடு மட்டுமல்லாமல், திரைப்படப் பயிற்சி பெறும் மாணவ மாணவியருக்கும் இது பெரும் வாய்ப்பாகத் திகழும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) அரசு கைய அச்சகத்திற்குப் புதிய கட்டடம் மற்றும் நவீனமயமாக்குதல் குறித்த முதல்வரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நவீனமயமாக்கத்தின்மூலம் நாட்டை முன்னேற்றப் பாதையில், அழைத்துச் செல்வதில் எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. ஆளுநர் உரை, நிதிநிலை அறிக்கை, சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்புகள், கொள்கை விளக்கக் குறிப்புகள், குறிப்பேடுகள், கையேடுகள் உள்பட, அரசுக்குத் தேவையான அனைத்து அச்சகத் தேவைகளையும் பூர்த்தி செய்யும் பணியை அரசு கைய அச்சகம் மேற்கொண்டு வருகிறது.

182 ஆண்டுகள் பழமை வாய்ந்த, அரசு கைய அச்சகத்தின் பணிப் பளு அதிகரித்து வருவதைக் கருத்தில்கொண்டும், பெரும்பாலான பணிகள் குறிய காலத்திற்குள் முடிக்க வேண்டியிருப்பதைக் கருத்தில்கொண்டும், அச்சகத்தின் இயந்திரப் பிரிவினை நவீனமயமாக்கும்வகையில் 6 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தனித் தான் பல வண்ண அச்சு இயந்திரம் 1 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கணினியிலிருந்து அச்சுத் தகடு தயாரிக்கும் இயந்திரம், 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தானியங்கி சேகரிப்பு இயந்திரம், 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இரை அச்சு இயந்திரம் என மொத்தம் 8 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் இயந்திரங்கள் வாங்கி நிறுவப்பட்டுள்ளன. இதேபோன்று, 67 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய காகிதக் கிடங்கு கட்டுவதற்கான பணிகள் தடையின்றி நடைபெற்று வருகின்றன.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2014 ஜூலை 14

மேலும், சென்னை, அரசு மைய அச்சகத்தில் எதிர்பாராது ஏற்பட்ட தீ விபத்தில் கட்டடங்களும், அச்சு இயந்திரங்களும் சேதமடைந்ததால், சீரமைப்பு நடவடிக்கையாக இயந்திரக் கொள்முதல் மற்றும் தொடர்புடைய பிற பணிகளுக்காக 19 கோடியே 7 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய், கட்டடப் பணிகளுக்காக 3 கோடியே 57 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் என மொத்தம் 22 கோடியே 64 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

சுமார் 5 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இந்த அச்சகத்தின் 84,000 சதுர அடிகள் கொண்ட பழமை வாய்ந்த கிவப்புக் கட்டடமானது, இந்தத் தீ விபத்தில் முழுவதுமாக எரிந்து சேதமடைந்துவிட்டதாலும், பணியாளர்கள் சிரமமின்றி பாதுகாப்புடன் பணிபுரிய நிரந்தரமான கட்டடம் அவசியம் என்பதைக் கருத்தில்கொண்டும், 21 கோடியே 59 இலட்சம் ரூபாய் செலவில் புதிய நிரந்தரக் கட்டடம் அமைக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை, அரசு மைய அச்சகத்தில் மேற்கொள்ளப்படும், அனைத்து அச்சுப் பணிகளும் ஒரே தேரத்தில், குறைந்த காலத்தில், விரைந்து மேற்கொள்ளப்பட வேண்டுமென்றால், அங்குள்ள அச்சகப் புத்தகம் கட்டும் பிரிவு அதாவது Binding Section மேம்படுத்தப்படுவது அவசியம் ஆகும். எனவே, அரசு மைய அச்சகத்தின் அச்சகப் புத்தகம் கட்டும் பிரிவிற்காக 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தானியங்கி புத்தகம் தைக்கும் இயந்திரம், அதாவது, Automatic Sewing Machine for Binding வாங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கை கூடுதல் உற்பத்தித் திறனுடன் அதிக நேர்த்தியாகவும், விரைவாகவும் புத்தகங்கள் கட்டும் பணியினை மேற்கொள்ள வழிவகுக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2014 ஜூலை 14]

பிற்பகல் 12-15

6. எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் நவீன படப்பிடிப்புத் தளங்கள், அரசு மைய அச்சகத்திற்குப் புதிய கட்டடம் மற்றும் நவீனமயமாக்குதல் குறித்த முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெற்றிகளையெல்லாம் விழுத்திய ஒரு வெற்றியை, தமிழக வரலாறு இதுவரையில் காணாத ஒரு வெற்றியை, இந்தியத் துணைக் கண்டமே வியந்து பாராட்டுகின்ற அப்படிப்பட்ட ஒரு மாபெரும் வெற்றியை (மேசையைத் தட்டும் ஒலி) நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலிலே பெற்று, இந்தக் கூட்டத் தொடரிலே 110 விதியின்கீழ் முதல் அறிக்கையில் இன்னைக்கு இரண்டு நலத் திட்டங்களை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தந்திருக்கின்றார்கள். அதற்கு நான் எனது பாராட்டைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழகத்திலே இசையரசுகளையெல்லாம் திரைத்தவெளிப் பல்கலைக்கழகங்களாக ஆக்கி, வரலாற்றுச் சிறப்புமிக்க கதைகளாலும், உணர்வுபூர்வமான பாடல்களாலும் தமிழகத்திலே ஒரு சமூகப் புரட்சிக்கு வித்திட்டவர் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் என்பதை தமிழக மக்கள் ஒருபோதும் மறந்திருக்க முடியாது. அத்தத் தலைவருடைய வழியிலே, ஒரே அரசியல் வாரிசாக இருந்து, இன்றைக்கு மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்று, தமிழகத்திலே ஒவ்வொரு நாளும் பல நலத் திட்டங்களை வழங்கிக்கொண்டிருக்கின்றார்கள் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு காட்சி உலகம்தான் உலகை அப்படியே ஆக்கிரமித்துக்கொண்டிருக்கின்றது; காட்சி உலகம்தான் உலகை கைகளில்கொண்டிருக்கின்றது என்று சொல்லுகின்ற வகையிலே, ஒவ்வொரு வீட்டிலும் அந்தக் குடும்ப உறுப்பினர்களோடு கூடிய ஓர் உறுப்பினராக ஒரு தொலைக்காட்சிப் பெட்டி. அந்தக்

கூடத்திலே வந்து உட்கார்ந்துகொள்ளும். அவர்கள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், அதுவும், ஒரு குடும்ப உறுப்பினரைப்போலவே, அவர்கள் வாழ்வோடும், மகிழ்வோடும், உணர்வோடும், சிந்தனையோடும் அன்றாட நடவடிக்கைகளில் இணைந்துபோய் இருக்கின்றது. அப்படிப்பட்ட காட்சி உலகத்திலுடைய அடிப்படைத் தேவைகளை, அவர்களுடைய நலன்களை பாதுகாக்கின்ற வகையிலே, மேம்படுத்துகின்ற வகையிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பெயரில் இருக்கின்ற திரைப்பட நகரிலே வெற்றிடமாக இருக்கின்ற 2.50 ஏக்கர் நிலத்திலே 15 கோடி ரூபாய் அளவிலே திரைப்படத் துறையினருக்காக புதிய படப்பிடிப்புத் தளங்களை உருவாக்கி இருப்பது, நலிந்த திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கும், வளர்ந்துவரும் திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கும் மிகுந்த உற்சாகத்தையும், துணையையும் தரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய சட்டமன்றத்திலேகூட நாம் பார்த்திருக்கின்றோம்; நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சாதனைகளெல்லாம், அவர் பேசிய பேச்சுக்களெல்லாம் இரண்டே நாளில் இந்தச் சட்டமன்றத்திற்குப் புத்தகமாக வந்துவிடுகிறது. அவ்வளவு வேகமாக செய்தி விளம்பரத் துறையிலே செயலாற்றிக்கொண்டிருக்கின்றார்கள். அந்த வகையிலே அரசு அச்சகத்தை மேலும் மேம்படுத்துகிற வகையிலே, அங்கு நிரந்தரக் கட்டடத்திற்காக 29 கோடி ரூபாயும் ஒதுக்கியிருப்பது மகிழ்ச்சிக்குரியது, பாராட்டுக்குரியது என்கிற வகையிலே என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

4. மானியக் கோரிக்கைகள், 2014–2015, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

கோரிக்கை எண் 27–தொழில் துறை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கையின்மீது விவாதம் தொடரும். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.வ. மார்க்கண்டேயன் அவர்கள்.

திரு. கு.வ. மார்க்கண்டேயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வரலாற்றில் ஒரு தனி மனிதன், குடும்பம், ஊர்,

2014 ஜூலை 14][திரு. கு.வ. மார்க்கண்டேயன்]

மாநிலம், நாடு, உலகம் முழுவதும் அனைவரும் வெற்றி பெறுவது எப்படி என்பதனை சாதனை செய்து காட்டிய உலக மக்களின் தைரியலட்சுமி, மாட்சிமை பொருந்திய மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) "என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்; ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில், ஒழுங்காய்ப் பாடுபடு வயல்காட்டில், உயரும் உன் மதிப்பு அயல்நாட்டில்" என்று பட்டுக்கோட்டை, கவிஞர் மருதகாசி அன்று தன்னுடைய பாடல் வரிகளில் சொன்னார்கள். இன்றைக்கு உலகத் தமிழ் மக்களையெல்லாம் ஆட்சி செய்துகொண்டிருக்கின்ற, உலகத் தமிழ் மக்களுக்கெல்லாம் ஒரே தலைவராக விளங்குகின்ற தங்கத் தாரகை புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில், என்ன வளம் இல்லை நம் தமிழ்நாட்டில், ஒழுங்காய்ப் பாடுபடு நம் தமிழ்நாட்டில், உயரும் உன் மதிப்பு வெளிநாட்டில். (மேசையைத் தட்டும் ஒலி) காரணம் என்ன?

நமது புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சிரிய தலைமையின்கீழ், என்ன வளம் இல்லை? (மேசையைத் தட்டும் ஒலி) தொழில் துறையில் நம் இந்தியத் திருநாட்டில் முதல் மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருகிறது என்பது ஓர் அதிகாரபூர்வமான உண்மைச் செய்தியாகும்.

பிற்பகல் 12-20

மாண்புமிகு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் பிரதமராவதற்கு முன்பே, Andy Marino என்னும் இங்கிலாந்து நாட்டு எழுத்தாளர் எழுதிய, 'நரேந்திர மோடி' என்னும் புத்தகத்தில், பக்கம் 261-ல் நரேந்திர மோடி அவர்களினுடைய நேரடிப் பேட்டியில் "அனைத்து வளர்ச்சியும் சேர்ந்துதான், ஒரு மாநிலத்தினுடைய ஒட்டுமொத்த வளர்ச்சி. தமிழ்நாடு, மகாராஷ்டிரா மாநிலங்களுக்கு இணையாக விரைவில் குஜராத் முன்னேறும்" என்று சொன்ன வார்த்தைகளை நான் நமது சட்டப் பேரவையில் பதிவு செய்ய விரும்புகிறேன். காரணம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசுதான் அமைதி, வளம், வளர்ச்சி என்ற அடிப்படைக் கொள்கைகளைக் கொண்டு இந்தியாவில் செயல்படுட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் அனைத்து நாடுகளின் பெரும் கம்பெனிகளெல்லாம் முதலீடு செய்திருக்கிறார்கள் என்று

[திரு. கு.வ. மார்க்கண்டேயன்][2014 ஜூலை 14

சொன்னால், இந்த நாட்டில் எந்த ஒரு சாதிப் பிரச்சினையும் இல்லை; எந்த ஒரு மதப் பிரச்சினையும் எழுந்தது இல்லை. கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து திருவள்ளூர் மாவட்டம் வரையில், எந்த மாவட்டத்தில், எந்தத் தொழிற்சாலையை அமைக்க வேண்டுமென்றாலும், அது மத்திய அரசினுடைய நிறுவனமாக இருந்தாலும் சரி, மாநில அரசினுடைய நிறுவனமாக இருந்தாலும் சரி, தனியார் ஒருவரின் நிறுவனமாக இருந்தாலும் சரி, அமைதியாகவும், எந்த ஒரு பிரச்சினையும் இல்லாமலும் ஆரம்பிக்கமுடியும். ஒரு சிறிய பிரச்சினை எழுந்தாலும், சட்டம்-ஒழுங்கைப் பராமரித்து, பிரச்சினைகளை இரும்புக் கரம் கொண்டு அடக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) உலகத்திலேயே அமைதியான மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தொழில் வளத்தைப் பெருக்குவதற்கு, இந்த நாட்டு மக்களின் வளர்ச்சியை உறுதி செய்வதற்கு உலக வரலாற்றில் என் தலைவி, புரட்சித் தலைவி தங்கத் தாரகை அம்மா அவர்களுக்கு இணையாக வேறு ஒருவரும் இல்லை என்ற ஒரு நிலைப்பாட்டை தமிழ்நாட்டு மக்கள் எடுத்திருப்பதுதான் காரணம். (மேசையைத் தட்டும் ஒலி)

முண்டாசுக் கவிஞன் பாரதியார்,

"பட்டங்க ளாள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்"

என்ற ஒரு கவிதையைச் சொன்னவர்தான்,

"வெட்டுக் கனிகள் செய்து தங்க முதலாம்
வேறு பல பொருளுங் குவைத் தெடுப்போம்,
எட்டுத் திசை களிலுஞ் சென்றிவை விற்றே
எண்ணும் பொருளனைத்தும் கொண்டு வருவோம்.

பட்டினி லாடையும் பஞ்சி நூடையும்
பண்ணி மலைகளென வீதி குவிப்போம்
கட்டித் திரவியங்கள் கொண்டு வருவார்
காசினி வணிகருக் கவை கொடுப்போம்.

ஆயுதம் செய்வோம் நல்ல ஞானம் செய்வோம்
ஆலைகள் வைப்போம் கல்விச் சாலைகள் வைப்போம்
ஓயுதல் செய்யோம் தலை சாயுதல் செய்யோம்
உண்மைகள் சொல்வோம் பல வண்மைகள் செய்வோம்

2014 ஜூலை 14[திரு. குவ. மார்க்கண்டேயன்]

குடைகள் செய்வோம் உழு படைகள் செய்வோம்
கோணிகள் செய்வோம் இரும்பாணிகள் செய்வோம்
நடையும் பறப்பு முணர் வண்டிகள் செய்வோம்
சூலம் நடுங்க வரும் கப்பல்கள் செய்வோம்

காவியஞ் செய்வோம் நல்ல காடு வளர்ப்போம்
கலை வளர்ப்போம் கொல்ல முலை வளர்ப்போம்
ஓவியம் செய்வோம் நல்ல கணிகள் செய்வோம்
உலகத் தொழிலனைத்து முவந்து செய்வோம்"

என்று பாடிய முண்டாசுக் கவிஞன் பாரதியினுடைய வரிகளை நினைவுபடுத்துகின்ற வகையில், அவர் சொன்ன அத்தனை தொழில்களையும் தமிழ்நாட்டில் நிறைவேற்றிக் காட்டிய தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்று சொன்னால், அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டில் டிட்கோ நிறுவனத்தின்மூலம் பினாஸ்டிக் பொருட்களின் உற்பத்தி வளாகம், திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், வாயலூர் கிராமத்தில் 243 கோடி ரூபாய் தொடக்க முதலீட்டில் தொடங்கியிருக்கிறார்கள். இது முழுமை பெறுகிறபோது, 2,100 கோடி ரூபாய் அளவிற்கு முதலீட்டை ஈர்க்கும் வகையிலும், 25 ஆயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு இடைக்கும் வகையிலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் இன்றைக்குத் தொழில் துறை சிறப்பாகப் பீடுநடை போட்டுக்கொண்டிருக்கிறது.

சூரிய மின் சக்தியுடன்கூடிய மின் பூங்கா: 1,000 மெகாவாட் கொண்ட ஒரு சிறப்பான மின் பூங்காவை உருவாக்குவதற்கு முதல் கட்டமாக இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையின்படி, 100 மெகாவாட் ராசி இரீன் எர்த் எனர்ஜி பிரைவேட் லிமிடெட்டும், நம்முடைய டிட்கோவும் இணைந்து தொடக்க முதலீடாக 920 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான ஆரம்ப கட்டப் பணிகள் நடைபெறுக் கொண்டிருக்கின்றன. 1985 ஆம் ஆண்டில், உதயமான தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் ஆண்டில், உதயமான உற்பத்தி 90 ஆயிரம் டன் என்ற அளவில் இருந்தது, தற்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய தலைமையின்கீழ் அமைந்துள்ள அரசால், 4 இலட்சம் டன் உற்பத்தி செய்கின்ற அளவிற்கு அது உயர்த்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) உலகிலேயே

[திரு. குவ. மார்க்கண்டேயன்][2014 ஜூலை 14

கரும்புச் சக்கையைக் கொண்டு காகிதக் கூழ் தயார் செய்யும்வகையில், காகித ஆலையைத் தொடங்கியிருக்கிற தமிழ்நாடு காகித நிறுவனம், தன்னுடைய 16 சதவித உற்பத்தி அலகை 40 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துவருகிறது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய தலைமையின்கீழ் செயல்படும் தமிழ்நாடு காகித நிறுவனம் மின்சாரத்தை, தானே உற்பத்தி செய்துகொள்ள வேண்டுமென்பதற்காக 35.5 மெகாவாட் திறன்கொண்ட காற்றாலைப் பிரிவையும் தனக்குத் தானே உருவாக்கியிருக்கிறது. 81.12 மெகாவாட் திறனாக இருந்த அதனுடைய மின் உற்பத்தித் திறனை, 103.62 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் அலகாக மேம்படுத்தி, அதே இடத்தில் தெர்மல் பவர் ஸ்டேஷனையும் நிறுவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் தமிழ்நாடு காகித நிறுவனம் உலக நாடுகளோடு நிகர்படப் போட்டி போட்டு, இலாபத்தை ஈட்டி வருகிறது. அதனுடைய இலாபப் பங்குகளை அங்கு பணிபுரியும் தொழிலாளர்களுக்கும், தமிழக அரசுக்கும் வழங்கக்கூடிய அளவிற்கு, என் தலைவி, தங்கத் தலைவி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு சாதனைமிக்க தொழில் துறையைப் படைக்கின்ற அரசாகக் காட்சியளிக்கின்றது.

பிற்பகல் 12-25

இதைப்போன்று பல்வேறு தொடர் இட்டுள்ளன: இந்தக் காகித நிறுவனம் 600 டன் அளவிற்கு சிமெண்ட் உற்பத்தி நிறுவனத்தை அங்கே அமைத்திருக்கிறது. 100 டன் ஈரப்பதம் உள்ள கால்சியம் கார்பனேட் தயார் செய்யும் ஆலை, 200 டன் வீழ்படிந்த கால்சியம் கார்பனேட் ஆலை உள்ளிட்ட பல்வேறு அலகுகளைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது என்று அதனுடைய பெருமைகளை அடுக்கிக்கொண்டே செல்லலாம். இந்த ஆண்டு ரூ.2,301.94 கோடி அளவிற்கு, காகித ஆலை நிறுவனம், தனது வருவாயை ஈட்டியுள்ளது. அதிலே ஏறக்குறைய ரூ.202 கோடி அளவிற்கு இலாபம் ஈட்டியிருக்கிறது. 2012-2013 ஆம் ஆண்டில் ரூ.12.22 கோடி அளவிலும், 2013-2014 ஆம் ஆண்டில் ரூ.14.56 கோடி அளவிலும் ஈட்டியுள்ளது. நேரடி மற்றும் மறைமுகமாக, 5,078 பேருக்கு அந்த நிறுவனம், எங்கள் தங்கத் தலைவி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், வேலை கொடுத்திருக்கிறது.

2014 ஜூலை 14][திரு. குவ. மார்க்கண்டேயன்]

இந்திய தேசத்தில் முன்னோடி மாநிலமாக தமிழ்நாடுதான் தொழில் துறையில் விளங்கிக்கொண்டிருக்கிறது என்பதற்கு இதைவிட வேறு எந்த எடுத்துக்காட்டையும் நாம் சொல்லத் தேவையில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனின் பங்குகளை கூடுத்த மத்திய சர்க்கார் தனியாருக்கு விற்கவேண்டுமென்று நினைத்தபோது, பெரிய தேசபக்தியோடு, விவேகானந்தரின் வரிகளை மெய்ப்பிக்கும்வகையில், இந்திய தேசத்தைக் காப்பாற்றுவதற்காக, தமிழர்களுடைய மானத்தைக் காப்பாற்றுவதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூ.37.50 கோடி ரூபாய் தமிழக அரசினுடைய பணத்தைக் கொண்டு, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின்மூலம் அரசு சார்பில் அந்தப் பங்குகளை வாங்கினார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த நடவடிக்கையின்மூலம்தான் இந்திய தேசத்தில், தொழில் துறையில் தமிழகம் முதன்மையாக இருக்கிறது என்பதற்கு இதைவிட சான்றுகள் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி).

இதேபோன்று தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம், தமிழ்நாடு உப்பு நிறுவனம் போன்றவற்றில் சாதனைகள்: மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நாட்டு மக்களுக்கு எதைக் கொடுக்கவில்லை? அன்பான எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் பேசுகிறபோது, பல்வேறு கருத்துகளை எடுத்துச் சொன்னார்கள். 'தனியொருவனுக்கு உணவில்லையெனில், ஜகத்தினை அழித்திடுவோம்' என்று பாரதி சொன்னான். எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தொழில் சார்ந்திருக்கிற, ஏழையெளிய மக்கள் வாழ்கிற இந்த நாட்டில், அத்தனை பேருக்கும் உணவு கொடுத்தார்கள். 20 இலோ விலையில்லா அரசியைக் கொடுத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை மற்றும் பல்வேறு மாநகராட்சிப் பகுதிகளில் அம்மா உணவகம் மூலமாக பல்வேறு தொழிலாளர்கள், சிறு தொழில்களை செய்கிற வேலையாட்கள், பொதுமக்கள் பயன்படுகிற அளவிற்கு, ஒரு ரூபாய்க்கு ஒரு இட்லி கொடுக்கிற திட்டத்தை மிகச் சிறப்பாக நடைமுறைப்படுத்தியிருக்கிறார்கள்.

இதேபோன்று, அம்மா உணவகத்தைச் சிறப்பான முறையில் இந்த நாடு முழுவதும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்பாடு செய்து கொடுத்திருக்கிறார்கள். அந்தவகையில்,

[திரு. சு.வ. மார்க்கண்டேயன்][2014 ஜூலை 14

இந்த நாட்டில் இருக்கக்கூடிய தொழிலாளர் மக்களையெல்லாம் வாழ வைத்திருக்கிற ஒரே தலைவர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்கள், உணவு கொடுத்திருக்கிறார்கள்; 3 இலட்சம் பேருக்கு வீடுகளைக் கொடுத்திருக்கிறார்கள்; பசுமை வீடுகளைக் கொடுத்திருக்கிறார்கள். பாரதி உறைவிடம் கொடுக்கவேண்டுமென்று சொல்லவில்லை. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உறைவிடமும் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்பது பழமொழி. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொழிலாளர்களுக்கு உறைவிடம் கொடுத்தது மட்டுமல்ல; உப்பையும் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சாதாரண உப்புகளால் நாட்டு மக்கள், தொழிலாளர் மக்கள், நோயுற்று கஷ்டப்படக்கூடாது என்பதற்காகவும், காடு களைத்து, கழனி நிருத்தி, மேடு பள்ளங்களை சமன் செய்து, நெற்றி வியர்வை நிலத்தில் சிந்துகிற விவசாயியும், "சீர்திருள் போக பொறுவியே ஒன்று கிழிருக்கும் கடைக்கால்; எங்கள் சீர்தொழிலாளர்கள் உழைந்த நரம்புகள், தோள்கள்" என்று தொழிலாளர் வர்க்கத்தினர் உயர்வு, மேம்பாடு அடையவேண்டும் என்பதற்காகவும், அவர்கள் நோயில்லா மனிதர்களாக, மனித சக்தியாக உருவாக வேண்டுமென்பதற்காகவும், அயோடின் உப்பு, சோடியம் குறைந்த உப்பு என்று உப்புகளையே மூன்று விதமாகப் பிரித்து, அவர்களுடைய நல்வாழ்க்கை உயர்வதற்காக உப்புத் தொழிற்சாலைகளை நாடு முழுவதிலும் உருவாக்கி, மக்களின் வாழ்க்கையை உயரச் செய்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-30

நிலத்தைக் குடைந்து பல்வேறு கனிமங்களை எடுத்து ஆலைகள் தொடங்க வேண்டும், உழுபடைகள் செய்ய வேண்டும், தொழிற்சாலைகள் செய்ய வேண்டும், ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள் செய்ய வேண்டும் என்று பாரதியார் சொன்னார்கள். தமிழ்நாடு கனிம நிறுவனம் தொடங்கி இருந்த காலகட்டத்தில்,

2014 ஜூலை 14][திரு. கு.வ. மார்க்கண்டேயன்]

அதை மீட்டு எடுத்து, இந்த நாட்டு மக்களினுடைய வளர்ச்சிக்காக, பல ஆயிரக்கணக்கான கோடி ரூபாயை இலாபம் ஈட்டிக் கொடுக்கிற அளவிற்கு அந்த நிறுவனத்தை உயர்த்தியிருக்கிற தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த நாட்டின் தொழில் வளம் மட்டும் வளர்ச்சி அல்ல; தொழில் முன்னேறினால் மட்டுமே வளர்ச்சி அல்ல; மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் ஹூண்டாய் நிறுவனம் வந்திருக்கின்றது; நோக்கியா நிறுவனம் வந்திருக்கிறது; சாம்சங் நிறுவனம் வந்திருக்கிறது. Industrial corridor ஆக சென்னையிலிருந்து பெங்களூரு வரை இருக்கக்கூடிய சாலையை மேம்படுத்தினார்கள். எங்களைப்போன்று கரிசல் காட்டில் வாழ்கின்ற மக்கள், குடிதண்ணீர் பிரச்சினையில் இருக்கிற மக்கள், தென்மாவட்ட மக்களை வாழ்க்கையில் உயர்த்திக் காட்ட வேண்டுமென்பதற்காக, சங்கம் வளர்த்த மதுரையிலிருந்து முத்துக் குளித்த தூத்துக்குடி வரையுள்ள சாலைகளை Industrial corridor ஆக அறிவித்து, மேம்படுத்தி, கரிசல் காட்டுப் பகுதி மக்களுடைய வாழ்வாதாரமாக இருப்பவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சிவகங்கையில் கார்பெட் தொழிற்சாலை, திருச்சி, மத்தியப் பகுதியில் மிகப் பெரிய தொழிற்சாலை என பல்வேறு தொழிற்சாலைகளை இந்த நாட்டிற்குக் கொடுத்திருக்கிறார்கள். எந்தெந்தப் பகுதிகளில் என்னென்ன வளம் இருக்கிறது? தூத்துக்குடி பகுதியில் மின்சாரம் தயாரிக்க முடியுமா? துறைமுகத்திலிருந்து நிலக்கரி வருகிறதா? அங்கு மின்சார தொழிற்சாலைகள் ஆரம்பிக்க முடியுமா? சென்னையில் கார் தொழிற்சாலைகள் ஆரம்பிக்க எங்கு, என்ன இருக்கின்றது? என்ன வளம் அந்தந்தப் பகுதிகளில் இருக்கின்றன என்பதைப் பார்த்து, இந்த நாட்டு மக்களுக்கு தொழிற் வளர்ச்சித் திட்டங்களைக் கொடுப்பதில் மாண்புமிகு புரட்சித் தலைவியைப்போன்று ஒரு சமுதாய சிற்பி உலகத்தில் யாருமே இல்லையென்பதை நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எந்த நாட்டிலும் இல்லை. அன்பார்ந்த பேரவைத் தலைவர் அவர்களே, கூடுதலாக ஒரு நிமிடம் ஒதுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. குவ. மார்க்கண்டேயன்][2014 ஜூலை 14

எங்கள் ஊரிலே பள்ளிக் கூடத்திற்குச் சென்று படிக்கச் சிரமப்பட்டார்கள். ஒரு காலத்தில் என் தந்தை பள்ளிக்கூடத்துக்குச் சென்றபோது, பேருந்து கிடையாது; சைக்கிள் கிடையாது; வசதி வாய்ப்புகள் கிடையாது; உயர்நிலைப் பள்ளிகளோ, மேல்நிலைப் பள்ளிகளோ கிடையாது. அவர்கள் தூக்கு வாளியில், தூக்குச் சட்டியிலே கஞ்சியைக் கொண்டு போய் 12 மீலோ மீட்டர் தொலைவிலுள்ள பள்ளிக் கூடத்தில் படிக்கவேண்டும். அவருடைய தாய், தந்தை இவனை காட்டுக்கு அழைத்துக் கொண்டு போனாலாவது கனை எடுத்து 10 ரூபாய் சம்பளம் கிடைக்கும். இவனை, நாம் பள்ளிக் கூடத்தில் விட்டால் என்ன கிடைக்கும்? தம்மோடு அவனும் சேர்ந்து வந்தால் ஒரே தூக்கு வாளியில் கஞ்சியை வாற்றிக் கொண்டு போய்விடலாம். ஆனால், பள்ளிக் கூடத்திற்கு அனுப்பினால், அவனுக்குத் தனியாக ஒரு தூக்கு வாளி கொடுக்கவேண்டுமே என்று சொல்லி, பெற்றோர் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவதற்கு மறுத்த காலத்தில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அன்றைய காலகட்டத்தில் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அது இரண்டாவது தலைமுறை.

இப்போது நடைபெறுவது மூன்றாவது தலைமுறை. Steve Jobs, Apple Computer நிறுவனர் உலகத்தை கணினிமூலம் வலம் வந்ததற்குப் பிறகு, கணினிமூலம்தான் உலகம் முழுவதும் ஆள முடியும் என்ற நிலை வந்ததற்குப் பிறகு, உலக நாடுகளிலுள்ள அமெரிக்க ஏகாதிபத்தியம் மட்டுமல்ல; நம்மை ஆண்ட பிரிட்டிஷ்காரர்கள் மட்டுமல்ல; யாருமே, ஒரு குப்பனுக்கும்; ஒரு சுப்பனுக்கும், சாதாரண குடிமக்களின் மகனுக்கும் லேப்-டாப், கணினி வழங்கிய சரித்திரம் (மேசையைத் தட்டும் ஒலி) உலகில் வேறு எந்த இடத்திலேயும் கிடையாது. யாராலும் அதை தடைமுறைப்படுத்த முடியவில்லை. நம்மைவிட ஆற்று வளம், மழை வளம், உணவு உற்பத்தி, வற்றாத ஜீவ நதிகள் ஓடுகின்ற வளமிக்க மாநிலமாக உள்ள உத்தரபிரதேசத்தை ஆளுகின்ற திரு. அகிலேஷ் சிங் யாதவ், அவருடைய Election Manifesto-வில் லேப்-டாப் வழங்குவேன் என்று சொன்னார்கள். ஆனால், அவர்களால் வழங்க முடியவில்லை. தொடர்ந்து அவர்களால் வழங்க முடியவில்லை. ஆனால், எந்தத் திட்டத்தைக் கொண்டுவந்தாலும், எதைச் சொன்னாலும், சொன்னதைச் செய்கிற ஒரே தலைவி (மேசையைத்

2014 ஜூலை 14][திரு. குவ. மார்க்கண்டேயன்]

தட்டும் ஒலி) எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டும்தான். அவர்களால் மட்டும்தான் இதுபோன்று வழங்க முடியும். இதுதான் மூன்றாவது தலைமுறை.

என்னுடைய தொகுதியில் மட்டும் 11 Primary Health Centres இருக்கின்றன. நம்முடைய வீட்டில் உள்ள பெண்கள் pregnant ஆக இருந்து ஆஸ்பத்திரிக்குப் போனால்கூட மாதாமாதம் அட்டையில் குறித்து வைத்துக்கொள்ளமாட்டார்கள். ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி, தங்கத் தாரகை, இந்த நாட்டில் வாழ்கின்ற குழந்தைகளையெல்லாம் தன்னுடைய பிள்ளையாகப் பார்க்கிற அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான், (மேசையைத் தட்டும் ஒலி) ஒவ்வொரு Primary Health Centre-லிலும் கர்ப்பிணிப் பெண்கள் ஒவ்வொரு மாதமும் Blood check பண்ணியாகிவிட்டதா? Scan report எப்படி இருக்கிறது என்று பார்க்க உத்தரவிட்டிருக்கிறார்கள். கர்ப்பிணிப் பெண்களுக்கு, குழந்தை பெறுவதற்கு 12,000 ரூபாய் கொடுப்பதைக்கூட ஒரேநேரத்தில் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கொடுக்க முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், முதல் மூன்று மாதத்தில் ரூ.4,000/- அதற்கடுத்த மூன்று மாதத்தில் ரூ.4,000/- ஒட்டுமொத்தமாக குழந்தை பிறந்ததற்குப் பிறகு ரூ.4,000/- கொடுக்கிறார்கள். அவர்கள் தடுப்பூசி போடாமல் விட்டுவிட்டால் பிறக்கிற குழந்தை தோஷனியாகப் பிறந்துவிடுமோ என்ற எண்ணத்தில்தான் தடுப்பூசி போட்டதற்குப் பிறகு ரூ.4,000/- கொடுக்க வேண்டுமென்று என் தலைவி சொல்லியிருக்கிறார். தடுப்பூசி போட்டதற்குப் பிறகு, ஸ்கேன் ரிப்போர்ட் முழுமையாக வந்ததற்குப் பிறகு, குழந்தை நலமாக இருக்கிறது என்று தெரிந்ததற்குப் பிறகு, அந்தத் தாய் ஆரோக்கியமாக இருக்கவேண்டும்; அவள் அடிக்கடி மருத்துவமனைக்கு வர வேண்டுமென்பதற்காக ரூ.4,000/- கொடுக்கிறார்கள். குழந்தையை முழுமையாக, சிறப்பாகப் பெற்றெடுக்கவேண்டும் என்பதற்காக 4,000/- ரூபாய் கொடுக்கிறார்கள். இதையெல்லாம் எதற்காகச் சொல்கிறேனென்று சொன்னால், ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது தொழில் வளர்ச்சி, தொழில் முன்னேற்றம் மாத்திரமல்ல; மூன்றாவது தலைமுறை குழந்தைகள் அத்தனை பேருக்கும் கனிவினையைக் கொடுத்தது மட்டுமல்ல; சைக்கிள் கொடுத்தது மட்டுமல்ல; ஊனமுற்றவர்களுக்கு, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 54,000/- ரூபாய் மதிப்பீட்டில் ஸ்கூட்டி பெப் கொடுத்தது மட்டுமல்ல; சமூக முன்னேற்றத்திற்காக

[திரு. குவ. மார்க்கண்டேயன்][2014 ஜூலை 14

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எவ்வளவோ செய்திருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உணவுக்காக என்ன செய்திருக்கிறார்கள்; உறைவிடத்திற்காக என்ன செய்திருக்கிறார்கள்; மருத்துவத்திற்காக என்ன செய்திருக்கிறார்கள் என்று தமிழ்நாட்டில் செய்துள்ள சாதனைகளையும் ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், இந்திய தேசத்தில் அல்ல; உலகத்திலேயே என் தாய், தங்கத் தாரகை மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சியில்தான் தொழில் துறை உள்ளிட்ட அனைத்தும் சிறப்பாக நடக்கின்றன என்பதை நான் இந்த அவையிலே பதிய வைக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-35

இறுதியாக ஒரே ஒரு கருத்தை மட்டும் நான் இந்த அவையிலே பதிவு செய்து என்னுடைய உரையிலே சேர்த்துக்கொள்கிறேன். ஒரு மருத்துவரும், ஒரு பயணியும் ஒரு காரில் பயணம் செய்துகொண்டிருந்தார்கள். அந்தப் பயணி காரில் போகும்போது அந்த மருத்துவரிடம் 'எனக்கு ரொம்ப தலை வலிக்கிறது, ஒரு மாத்திரை கொடுங்கள்' என்று கேட்டார். டாக்டர், 'நாம் இப்பொழுது பயணம் செய்து கொண்டிருக்கிறோம், இப்பொழுது நம்மிடம் மாத்திரை இல்லையே, இப்பொழுது போய் மாத்திரை கேட்கிறாரே' என்று சொல்லிவிட்டு, 'ஒரு மாத்திரை தருகிறேன், ஆனால், அதை நீங்கள் விழுங்கக்கூடாது, அதை கலைத்துவிட்டு மறுபடியும் என்னிடத்தில் கொடுத்துவிட வேண்டும் அந்த மாத்திரையை கொஞ்சம் நேரம் கலைத்தீர்களானால், தலைவலி தீர்ந்துபோகும், அதற்குப் பிறகு அந்த மாத்திரையைத் திரும்பக் கொடுத்துவிடுங்கள்' என்று சொல்லிவிட்டு, அவர் தன் பையிலிருந்து ஒரு பொத்தானை எடுத்து சக பயணியின் வாயில் போட்டார். அவர் அதை சிறிது நேரம் கலைத்துவிட்டு, "எனக்கு தலைவலி தீர்ந்துவிட்டது" என்று சொல்லி டாக்டரிடம் திரும்பக் கொடுத்துவிட்டார். அந்தப் பயணி, டாக்டர் என்ன கொடுத்தார் என்றே பார்க்கவில்லை. இதைப்போலத்தான், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒன்றரை கோடி உறுப்பினர்களும் 'என் தாய் 39 தொகுதிகளிலும் வெற்றிபெற வேண்டுமென்று ஆகாயப் பயணமாகப் புறப்பட்டிருக்கிறாரே, (மேசையைத் தட்டும் ஒலி) விமானம், விமானமாக ஏறுகிறாரே, ஒரே நாளில் இரண்டு இடத்தில் பிரச்சாரம் செய்கிறாரே, அவருடைய உடல் என்னவாகும்? அவருடைய கஷ்டம் என்னவாக

2014 ஜூலை 14][திரு. குவ. மார்க்கண்டேயன்]

இருக்கும்? எதையும் பொருட்படுத்தாமல், வெற்றிபெற வேண்டுமென்று புறப்படுகிறாரே, கூட்டணி எதுவுமே வேண்டாம் என்று சொல்கிறபோது, என்ன செய்யப் போகிறோம் என்று நினைத்து இருக்கின்றபோது, "நான் சொல்கிற காரியங்களை மட்டும் செய்யுங்கள், மக்களைச் சந்தியுங்கள், மக்களைச் சந்தியுங்கள், வாக்காளர்களைச் சந்தியுங்கள், நம்மால் நல்லாட்சியைக் கொடுக்க முடியும் என்று சொல்லிச் சந்தியுங்கள்" என்று சொல்லி, மறைமுகமாக மூடி வைத்திருந்த மாத்திரையைக் கொடுத்தார்கள். எங்களுக்கும் கஷ்டம் தீர்த்து, நாங்களும் ஓடி., ஓடி. மக்களைச் சந்தித்தோம், வெற்றியைப் பெற்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் என் தாயின் கையில் அந்த மாத்திரை இருக்கின்றது. தேர்தல் களம் மீண்டும் வரும். எங்கள் தாய்க்கு முழுமையான வெற்றியைப் பெற்றுக் கொடுப்போம் என்று சொல்லி, வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி பாராட்டி விடைபெறுகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கேசி. பழனிசாமி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது N.L.C. பங்கு பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் பொதுச் சொத்தை எந்த அளவுக்குக் காப்பாற்றியிருக்கின்றார் என்பதற்கு ஒரே ஒரு உதாரணத்தைச் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். ஐந்து நிறுவனங்களின் வாயிலாக 358 கோடி ரூபாய்க்கு நாம் share வாங்கினோம். அவர்கள் டிவிடென்டாக இதுகாறும் 16 கோடியே 71 இலட்சம் ரூபாய் கொடுத்துவிட்டார்கள். ஆனால், இன்றையதினம் அதனுடைய மதிப்பே 582 கோடி ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அறு மாத காலத்தில் 200 கோடி ரூபாய் உயர்ந்திருக்கிறது. இது தனியாருக்குத் தாரை வார்க்கப்பட்டிருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும். மத்திய ஆட்சியிலேயிருந்த காங்கிரஸும், தி.மு.க.-வும் சேர்ந்து தனியாருக்கு விற்பதற்கு முயற்சி செய்தார்கள். அவர்கள் இந்த இலாபத்தைக் கொள்ளையடிக்கவேண்டும் என்பதற்காகத்தான் அதைத் தனியாருக்குக் கொடுப்பதற்கு முயற்சி செய்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் சரியான நேரத்தில் சரியாக முடிவெடுத்து அதைச் செய்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

[2014 ஜூலை 14

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசுகிறார். (குறுக்கீடு) உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசுகிறார். திரு. கே.சி. பழனிசாமி, நீங்கள் பேசுங்கள்.

***திரு. கே.சி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். எனது மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் திருப்பாதம் தொட்டு வணங்கி எனது கன்னி உரையைத் தொடங்குகிறேன்.

என்னைப் பொறுத்தவரை சுமார் 60 ஆண்டுக் காலம் அரசியலிலும், சுமார் 50 ஆண்டுக் காலம் தொழில் துறையிலும் ஈடுபட்டுள்ளவன் எனும் முறையில், தொழில் துறை மானியக் கோரிக்கை விவாதத்தில் எனது கருத்துகளை எடுத்துச் சொல்ல வாய்ப்பளித்த எங்களது சட்டமன்றக் கட்சித் தலைவர், தமிழகத்தின் எதிர்கால நம்பிக்கை நட்சத்திரம், அன்பிற்குரிய தளபதி அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரவக்குறிச்சி தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராக என்னை வெற்றி பெறச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கும், தி.மு.க. நிருவாகிகளுக்கும் மற்றும் தோழமைக் கட்சி நிருவாகிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திராவிட... இயக்கத்திற்கு வரவில்லையென்று சொன்னால், கம்யூனிச இயக்கத்தில்தான் நான் இணைந்திருப்பேன் எனும் தலைவர் கலைஞர் அவர்களின் கருத்துகளை எனது வாழ்தான் அனுபவமாக உணர்ந்தவன் என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். உயர்ந்த கம்யூனிச இலட்சியத்தையும், கோட்பாட்டையும் ஏற்று, சமதர்ம சமுதாயத்தை மலரச் செய்யவேண்டும் எனும் உத்வேகத்தோடு, சுமார் இருபது ஆண்டுக் காலம் தோழர் பா. ஜீவானந்தம், தோழர் பி. ராமமூர்த்தி, தோழர் எம். கல்யாணசுந்தரம் மற்றும் தோழர் ஆர். உமாநாத் போன்ற தலைவர்களோடு கம்யூனிச இயக்கத்தில் இருந்தவன் நான்.

பிற்பகல் 12-40

அதன்பிறகு, தி.மு.கழகத்தில் 1971 ஆம் ஆண்டு நான் இணைந்தபிறகு, இயக்கத்திற்காக உழைப்பவனுக்கு மரியாதை கொடுக்கும் தலைவர் கலைஞர் அவர்கள், எனக்கு ஒரு முறை நகர மன்றத் துணைத் தலைவர் பொறுப்பு, இரண்டு முறை

2014 ஜூலை 14] [திரு. கே.சி. பழனிசாமி]

பழனி அறங்காவலர் குழுத் தலைவர் பொறுப்பு, ஒரு முறை நாடாளுமன்ற உறுப்பினர் பொறுப்பு மற்றும் இப்பொழுது சட்டமன்ற உறுப்பினர் பொறுப்பையும் வழங்கி, இத்தத் தொண்டனைக் கௌரவித்துள்ளார்கள் என்பதை நான் நன்றியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நம் வாழ்நாளிலேயே கம்யூனிச இலட்சியத்தை சிறிதளவாவது அடையவேண்டும் எனும் எண்ணைப் போன்றவர்களின் ஆசையை, எங்கள் கண் முன்னால் நிகழ்த்தியவர் தலைவர் கலைஞர் ஆவார்கள். நில உச்சவரம்புச் சட்டம், குத்தகை வார பாதுகாப்புச் சட்டம், விவசாயத் தொழிலாளர்களுக்கு மனைப் பட்டா, கூட்டுறவு அமைப்பின் செயல்பாடுகளைக் கிராமப்புறத்திற்கும், கைத்தொழிலுக்கும் கொண்டு சென்றது, குடிசைப்பகுதி மாற்று வாரியம், குடிநீர் வடிகால் வாரியம், தொழிலாளர்களுக்கு குறைத்தபட்ச போனஸ் உச்சவரம்பை உயர்த்தியது, தொழிற்சங்கச் செயல்பாடுகளுக்கு இருந்த சட்ட இடர்பாடுகளை நீக்கியது, பிற்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீட்டை உயர்த்தியது என டாக்டர் கலைஞர் அவர்களால் ஆரம்ப காலத்தில் கொண்டு வரப்பட்ட இத்திட்டங்கள், இந்தியாவின் இதர மாநிலங்களால் அப்போது கற்பனைகூட செய்திடாத திட்டங்களாகும்.

இத்திட்டங்களின் தல்ல விளைவுகளில் மனதைப் பறிகொடுத்த அருமைத் தோழர் மணலி கந்தசாமி அவர்கள், "கம்யூனிச கொள்கையை ஒரு மாநிலத்தில் நடைமுறையில் சாத்தியமாக்கியவர் கலைஞர் அவர்கள்தான்" என வாயாரப் புகழ்ந்ததோடு, "கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் போராட்டங்கள் நடத்தி, இரத்தம் சிந்தி சாதிக்க முடியாததை, விவசாயத் தொழிலாளர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கியது போன்ற திட்டங்களை, தலைவர் கலைஞர் அவர்கள் தன் பேனாவின் ஒரு சொட்டு மையினால் நிறைவேற்றிக் காட்டியவர்" என்று மணலி கந்தசாமி அவர்கள் பாராட்டினார்கள்.

அருமைத் தோழர் மணலி கந்தசர்மி அவர்களைப்போல, டாக்டர் கலைஞர் அவர்களிடம் மனதைப் பறிகொடுத்த இலட்சக்கணக்கானவர்களில் நானும் ஒருவன். இம்மனநிலையில்தான் நான் தி.மு.கவில் இணைந்தேன். அதே மன நிலையில்தான் இன்றும் உங்கள் முன்னால் நின்று கொண்டுள்ளேன்.

[திரு. கே.சி. பழனிசாமி] [2014 ஜூலை 14

அடுத்து, தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்த காலத்தில் வியாபாரிகளுக்கு இருந்த கஷ்டங்களைப் போக்குவதற்கு வணிக வரித் துறையின்மூலமாக தமிழகத்தின் மாவட்ட எல்லைகளில் இருந்த வணிக வரி சோதனைச் சாவடிகளை அகற்றி உதவினார்கள் என்பதோடு, வணிக வரி அதிகாரிகள் அடிக்கடி வியாபாரிகளிடம் சோதனை என்ற பெயரில் அந்த அதிகாரிகள் கொடுத்து வந்த தொல்லைகளையும் அறவே நிறுத்தியிருந்தார்கள். அவை இன்றளவும் நடைமுறையில் உள்ளன. அதைத் தொடர்ந்து கடைபிடித்து வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் தொழிலில் தொடர்ந்து சீனாவோடு போட்டி போட்டு, போட்டியைச் சமாளிக்க முடியாத அளவுக்கு பல ஆண்டுகளாக இருந்து வருகிற இந்தச் சூழ்நிலையில், இப்பொழுது மின் தட்டுப்பாடு ஓரளவு குறைந்து இருந்தாலும்கூட, குறிப்பாக கொங்கு மண்டலத்தில் சிறு, குறு தொழில்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு மின் பற்றாக்குறையைப் போக்குவதற்கு மின் ஆக்கி மூலமாக, ஜெனரேட்டர் மூலமாக (குறுக்கிடு)

மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தெரிவிப்பது என்னவென்றால் மின்தட்டுப்பாடு ஓரளவு குறைந்திருக்கிறது என்றுதான் சொல்லியிருக்கிறேன். (குறுக்கிடு) மின் தட்டுப்பாடு என்று சொல்லவில்லை, தயவுசெய்து தவறாக நினைக்காதீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கமாகச் சொல்ல இருக்கிறார்.

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கிடு) கன்னிச் பேச்சு பேசுகிற உறுப்பினர் குற்றச்சாட்டு இல்லாமல் பேசவேண்டும். அவைக்குத் தவறான தகவலைச் சொல்லக்கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கிடு) சரி.

திரு. கே.சி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றம் வேறு, குறை வேறு. நாங்கள் குறையைச் சொல்வித்தான் ஆகவேண்டும். குறையைத்தான் சொல்கிறேன். தயவுசெய்து மன்னித்துவிடுங்கள். (குறுக்கிடுகள்) ஓரளவு மின் தட்டுப்பாடு குறைத்தாலுங்கூட, பெரிய தொழிற்சாலைகளில்

2014 ஜூலை 14] [திரு. கேசி. பழனிசாமி]

மின்சாரக் கட்டுப்பாடு காரணமாக,—தட்டுப்பாடு என்று சொல்லவில்லை, கட்டுப்பாடு காரணமாக—தனியார் உற்பத்தி செய்யும் மின்சாரத்தை வாங்குவதற்கு யூனிட் ஒன்றுக்கு ஒரு ரூபாய்க்கு மேல் அரசுக்கு செலுத்த வேண்டியுள்ளதை, இரத்து செய்து, தனியார் நிறுவனத்திடமிருந்து மின்சாரம் வாங்குவதற்கு உதவவேண்டும். இப்பொழுது தனியார் தொழிற்சாலைகளுக்கு அரசாங்கம் separate feeder line கொடுத்து உதவுகிறது. அதைக் கேட்பவர்களுக்கு துரிதமாகக் கொடுத்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன். அதோடு தொழிற்சாலை வைத்திருப்பவர்கள் சொந்தமாக உற்பத்தி செய்யும் மின்சாரத்திற்கு யூனிட் ஒன்றுக்கு அரசுக்கு 10 பைசா செலுத்த வேண்டியுள்ளது. அதையும் இரத்து செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். பொதுவாகவே மழையில்லாத காரணத்தாலும், மின்சாரப் பற்றாக்குறையினாலும் நலிவடைந்துள்ள தொழில்களைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

2014 ஆம் ஆண்டுக்கான தொழில் துறை மானியக் கோரிக்கையில் மேற்படி கொள்கை விளக்கக் குறிப்புகளைப் படித்துப் பார்த்தேன். அதன் சாராம்சத்திற்குள் போவதற்கு முன்னால் சில தகவல்களை இந்த அவைக்குத் தெரிவிப்பது எனது கடமையாகும்.

பிற்பகல் 12-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்பது முதுமொழி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கிடு) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசி முடித்த பிறகு கடைசியில் விளக்கம் கூறலாம் என்றுதான் இருந்தேன். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொடர்ந்து தவறான செய்தியைச் சொல்லிக் கொண்டிருப்பதால், குறுக்கிட்டு விளக்கம் சொல்வதைத் தவிர்க்க முடியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னும் எந்த உலகத்தில் இருக்கிறார் என்றே தெரியவில்லை. ஏனென்றால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில், கடந்த 1 ஆம் தேதி முதல் தமிழ்நாட்டில் மின்வெட்டு முற்றிலுமாக நீக்கப்பட்டிருக்கிறது.

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2014 ஜூலை 14

(மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, தொழிற்சாலைகளுக்கு 24 மணி நேரமும் மின்வெட்டே இல்லாமல் தொடர்ந்து தடையின்றி மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேபோன்று, Peak Hours-ல் இருந்த restriction- *கட்டுப்பாடுகள். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டியது என்னவென்றால், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின்போது 2008 ஆம் ஆண்டு தொழிற்சாலைகளுக்கு விதிக்கப்பட்ட மின்வெட்டை இப்பொழுதுதான், 2014 ஆம் ஆண்டில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் முழுவதுமாக நீக்கி இருக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்ன விளக்கத்தினைத் தொடர்ந்து, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியினால் மின்வெட்டு கொண்டுவரப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மின்வெட்டையே ஒரு திட்டமாக 'மின்வெட்டுத் திட்டம்' என்பதைக் கொண்டு வந்ததே தி.மு.க. ஆட்சிதான். அதை நீக்கிய பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்களும், மத்தியிலே உங்களுடைய ஆதரவில் ஆண்டு . கொண்டிருந்த காங்கிரஸ் ஆட்சியாளர்களும் தமிழகத்தில் மின்வெட்டுப் பிரச்சினை தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்ற குறுகிய எண்ணத்தோடு, மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்து வந்த அனைத்து நடவடிக்கைகளுக்கும் முட்டுக்கட்டை போட்டதையும் மீறி, மாண்புமிகு அம்மா அவர்கள் அளப்பரிய, தொடர் முயற்சியின்மூலம் இந்தச் சாதனையை நிறைவேற்றி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு மின்வெட்டு இல்லை என்றே சொல்லவேண்டும். தொழிற்சாலைகளுக்கு மட்டுமல்ல, முற்றிலுமாக அனைத்துத் தரப்பினருக்கும் முழுமையான,*

2014 ஜூலை 14] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

தடையில்லா மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, "மின்வெட்டுப் பிரச்சினை ஓரளவு குறைந்திருந்தாலும்" என்று சொன்னார்கள். என்ன ஓரளவு குறைந்திருக்கிறது? மின்வெட்டு முற்றிலுமாகக் குறைக்கப்பட்டு, இப்பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்கிறது. இன்னும் மின்வெட்டு இருக்கிறது என்ற தவறான தகவலைத் தெரிவித்திருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய ஊருக்குச் சென்று ஸ்விட்சைப் போட்டு மின்சாரம் வருகிறதா, இல்லையா என்று பார்க்கவேண்டும். இல்லையெனில், அவர் தன்னுடைய மனைவியிடம்கூட போன் போட்டு, 'எங்கேயாவது மின் தடை இருக்கிறதா அல்லது அவருடைய வீட்டில் மின் தடை இருக்கிறதா' என்று செக்-அப் பண்ணிவிட்டு, இந்த அவையில் உண்மையான தகவல்களைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன், உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடு)

திரு. துரைமுருகன்: ** (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசிக் கொண்டிருக்கிறார்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளுக்கு மட்டுமல்ல, வீட்டு உபயோகத்திற்கும் மின்வெட்டு இல்லை. (குறுக்கீடு)

திரு. துரைமுருகன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2014 ஜூலை 14

திரு. துரைமுருகன்: ** *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் பேசியது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் முற்றிலும் தவறான செய்தியை இங்கே தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். தொழிற்சாலைகளுக்கான மின்வெட்டு நீக்கப்பட்டதோடு மட்டுமல்ல, வீட்டு உபயோகத்திற்கான மின்சாரத்தில் மின்வெட்டு அமல்படுத்தப்படவில்லை. வீட்டு உபயோகத்திற்காக இருந்தாலும் சரி, தொழிற்சாலைகளுக்காக இருந்தாலும் சரி, எல்லா தரப்பினருக்கும், பயனாளிகளுக்கும் முற்றிலுமாக மின்வெட்டு நீக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோன்று மின்வெட்டு இல்லை. அவர், இத்தனை ஆண்டு காலம் அமைச்சராக இருந்தவர், அவருக்கு மின்வெட்டுக்கும், மின் தடைக்கும் உள்ள வித்தியாசம் தெரியவில்லை. மின்வெட்டு என்பது, தேவைக்கேற்ப மின் உற்பத்தியே செய்யாமல் பற்றாக்குறை ஏற்படுகின்றபோது அமல்படுத்துவது மின்வெட்டு. தேவைக்கேற்ப உற்பத்தி செய்யாமல் பற்றாக்குறையாக மின் விநியோகம் செய்யும்போதுதான் மின்வெட்டு அமல்படுத்தப்படுகிறது. ஆனால், இப்பொழுது தேவையான மின்சாரம் கிடைக்கிறது. இன்னும் சொல்லப்போனால், சில நேரங்களில் தேவைக்கும் அதிகமாகவே மின்சாரம் கிடைக்கிறது. சில நேரங்களில், மாலை நேரங்களில் கிடைக்கும் கூடுதலான மின்சாரத்தை முழுவதுமாகப் பயன்படுத்த முடியவில்லை. ஒரு சில நேரங்களிலே காற்றாலைகளில் கூடுதல் மின்சாரம் கிடைக்கின்றபொழுது excess-மிகை மின்சாரத்தை போதிய அளவிற்கு நாம் பயன்படுத்த முடியாத சூழ்நிலைகூட ஏற்படுகிறது. எதற்காக நான் சொல்கிறேன் என்று சொன்னால், இன்றைக்குத் தேவைக்கு அதிகமாக மின்சாரம் வந்துகொண்டிருக்கிறது. ஒரு சில இடங்களிலே தடை ஏற்பட்டால், அங்கேயிருக்கிற கட்டமைப்பு வசதிகளினால், sub-station-களில்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2014 ஜூலை 14] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

எதிர்பாராத பழுது அல்லது மின்மாற்றியிலே எதிர்பாராத பழுது ஏற்பட்டிருக்கும். உள்ளூரிலே கட்டமைப்பு வசதிகளில் ஏற்பட்டிருக்கின்ற பழுதின் காரணமாக, அங்காங்கு ஒரு சில மணி நேரங்கள் தடை ஏற்படலாம். அது மின் தடை, மின்வெட்டு அல்ல. இரண்டிற்கும் குறைந்தபட்சம் வித்தியாசம் இருக்கிறது. நீங்கள் நீண்ட காலம் அமைச்சராக இருந்தவர். புரிந்துகொண்டு பேசவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. பழனிசாமி, ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

திரு. கே.சி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணீர் பேச்சில்தான் என் உரையை ஆரம்பிக்கிறேன். சென்ற இரண்டு ஆண்டுகளும் இப்படித்தான் முடித்துவிட்டீர்கள். இந்த ஆண்டாவது என்னைப் பேச விடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், பேசி முடியுங்கள்.

திரு. கே.சி. பழனிசாமி: 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்கிற முதுமொழிக்கேற்ப, உழவுத் தொழில் எந்த அளவிற்கு முக்கியமானதோ, அந்த அளவிற்கு மனித வளத்தின் முன்னேற்றத்திற்கு, தொழில் துறையின் வளர்ச்சி மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகவும், எங்கள் தளபதி அவர்கள் துணை முதலமைச்சராகவும் இருந்த 2006 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை தொழில் துறையில் புரிந்துள்ள அளப்பரிய திட்டங்களையும், தொழில்கள் துவங்குவதற்காகப் போடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களையும், தொடங்கப்பட்ட தொழிற்சாலைகளைப் பற்றிய சில தகவல்களை மட்டும் கோடிட்டுக் காட்ட வேண்டியது எனது கடமையாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. பழனிசாமி, உரையை முடியுங்கள். (குறுக்கிடு) மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபொழுது,

[திரு. பி. தங்கமணி] [2014 ஜூலை 14

2006-லிருந்து 2011 ஆம் ஆண்டு வரை தொழில் தொடங்குவதற்கு பல்வேறு ஒப்பந்தங்களைப் போட்டதாகச் சொல்கின்றார்கள். அதுகுறித்து அவர் விளக்கமாகச் சொன்னால், எத்தனை நிறுவனங்கள் கடந்த ஆட்சியில் MoU போட்டுவிட்டு வெளியே சென்றுவிட்டன என்பதை நான் விளக்கமாகச் சொல்வேன். பொத்தாம்பொதுவாகச் சொல்லக்கூடாது. 2006-லிருந்து 2011 ஆம் ஆண்டு வரை இத்தனை MoU-க்கள் போடப்பட்டிருக்கின்றன. இவ்வளவு தொகை என்று நீங்கள் தெளிவாகச் சொல்லவேண்டும். கையெழுத்துப் போட்டுவிட்டு வெளியே சென்றுதையும் சொல்ல வேண்டும். 2008 ஆம் ஆண்டு Ashok Leyland-க்கு MoU போட்டுவிட்டீர்கள். ஆனால், 2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நிலம் கொடுத்திருக்கிறீர்கள். எப்படி உங்கள் ஆட்சியில் தொழில் வளர்த்திருக்கும்? ஹுண்டாய் நிறுவனத்தைப் பொறுத்தவரைக்கும், இதே நிலைதான் இருந்தது. மாண்புமிகு அம்மா அவர்கள் இல்லையென்றால், இன்றைக்குத் தமிழகத்திலே தொழில் வளர்ச்சியே இல்லையென்று சொல்லலாம். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால், ஃபோர்டு நிறுவனமும், ஹுண்டாய் நிறுவனமும் வந்த காரணத்தினால்தான், இன்றைக்குப் பல்வேறு நிறுவனங்கள் தமிழ்நாட்டில் வந்து கொண்டிருக்கின்றன. அதிலே ஒரு சின்ன விளக்கம். ஹுண்டாய் நிறுவனத்தை உங்களுடைய MoU-ல் சேர்த்திருக்கின்றீர்கள். நீங்கள் நன்றாக யோசித்துப் பார்க்கவேண்டும். நீங்களும் ஒரு தொழில் அதிபராக இருக்கின்றீர்கள். 22-1-2008 இல் MoU போடப்பட்டது. அதேசமயத்தில் 2-2-2008-ல் factory-ஐ திறக்கிறார்கள். MoU போட்டு, 10-வது நாளில் திறக்கிறார்கள் என்றால், எப்படித் திறக்க முடியும்? இது அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டம் தானே? நீங்கள் போட்ட அரசாணையிலே, 1-6-2006-லிருந்து இந்தத் திட்டத்தில் பயன்பெறலாம் என்று சொல்லியிருக்கிறீர்கள். இது எப்படி நீங்கள் கொண்டு வந்ததாக இருக்கும்? 10 நாட்களில் ரூ.4,000 கோடி மதிப்பிலான நிறுவனத்தை எப்படி மந்திரத்தில் கொண்டுவர முடியும்? (மேசையைத் தட்டும் ஒலி) அப்படியென்றால் அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டத்தை ஏன் ஏற்றுக்கொள்ளாமல் மறுத்துக் கொண்டிருக்கிறீர்கள்? நான் நேரடியாகக் கேட்கின்றேன். உங்களிடம் ஆதாரம் இருந்தால், கொடுத்துவிட்டுச் சொல்லுங்கள். இன்னும் சொல்லப்போனால், உங்கள் ஆட்சியில் G.O. போட்டிருக்கின்றீர்கள். 2005-லேயிருந்து அம்மா அவர்கள் தொடர்ந்து கடிதங்கள் எழுதி, பேச்சுவார்த்தை நடந்ததை பற்றியெல்லாம் நீங்களே குறிப்பிட்டிருக்கின்றீர்கள். அப்படி

2014 ஜூலை 14] [திரு. பி. தங்கமணி]

குறிப்பிட்டிருக்கின்றபொழுது, எப்படி 10 நாட்களில் ரூ.4,000 கோடி முதலீட்டில் கட்டடத்தைக் கட்டி, மெஷினைப் போட்டு, இறக்கி வைக்க முடியும்? ஆகவே, 4,000 கோடி ரூபாய் முதலீடு, அம்மா அவர்கள் கொண்டு வந்தது என்பதை தீங்கள் புரிந்துகொள்ளவேண்டும். உங்களுடைய கணக்கில் இந்த ரூ.4,000 கோடியையும் சேர்த்து உங்களுடைய ஆட்சியில் வந்தது என்று எப்படிச் சொல்கின்றீர்கள்? எப்படி அது வந்திருக்கும்? உங்களுடைய ஆட்சியில் மொத்தம் வந்த தொகை வெறும் ரூ.13,000 கோடிதான் என்பதை நான் ஆதாரத்தோடு நிருபிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேநேரத்தில், நீங்கள் யாராவது இன்னும் அதிகமாக வந்திருக்கிறது என்று சொன்னால், எந்த ஆண்டு, எவ்வளவு முதலீடு என்பதைச் சொல்வதற்கு நான் தயாராக இருக்கின்றேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. பழனிசாமி, ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

திரு. கே.சி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதுகுறித்து பட்டியல் வைத்திருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டால் அதை உங்களிடம் கொடுத்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. பழனிசாமி, நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. கே.சி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி சம்பந்தப்பட்டவற்றை மட்டும் சொல்லி, உரையை முடித்துவிடுகிறேன். கரூர் மாவட்ட மாணாக்கர்கள் பயன்பெற வேண்டி புதியதாக அரசு மருத்துவக் கல்லூரியும், அரசு தொழில்நுட்பப் பொறியியல் கல்லூரியும் அமைத்துத்தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். அரவக்குறிச்சி பகுதியில் பெண்கள் கலைக் கல்லூரி அமைத்திட வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், தொகுதி கோரிக்கைகளை எழுதிக் கொடுத்துவிடுங்கள். பதிவு செய்து கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள். (குறுக்கிடு) ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

[2014 ஜூலை 14

திரு. கே.சி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதி விவசாயிகளின் நீண்ட நாளைய கோரிக்கையான அமராவதி ஆற்றின் வெள்ள உபரி நீரை விவசாயிகள் பயன்பெறும் வகையில், நஞ்சைத்தலையூர் அணையிலிருந்து வாய்க்கால் வெட்டி தாதம்பாளையம் ஏரிக்கு நீராதாரத்தைக் கொண்டுவர வேண்டுகிறேன். காவேரி நதிநீர் ஆணையத்தின் தீர்ப்பும் வெளிவந்த நிலையில், இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியில் மலைக்கோவிலூர் பகுதியில் அமைந்துள்ள திருச்சி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை மூடப்பட்டிருக்கிறது. இதை மீண்டும் துவக்கிட அரசு ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையை முடியுங்கள்.

திரு. கே.சி. பழனிசாமி: தொகுதிப் பிரச்சினை குறித்த கோரிக்கைகளை தங்களிடம் கொடுத்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைக் கொடுத்துவிடுங்கள். அவைக்குறிப்பில் பதிவு செய்துகொள்ளலாம்.

திரு. கே.சி. பழனிசாமி: தொகுதிக் கோரிக்கைகள்.

அரவக்குறிச்சி பகுதியில் எந்தவொரு தொழிற்சாலையும் இல்லை. ஆகவே, அரசு சார்பில் தேசிய நெடுஞ்சாலைப் பகுதியில் தொழிற்சாலை தொடங்க இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். அரவக்குறிச்சி பகுதியில் உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். அரவக்குறிச்சி பகுதியில் முருங்கைக்காய் பதனிடக்கூடிய குளிர்பதனக் கூடம் அமைத்துத் தருவதோடு, முருங்கைக்காய் பவுடர் தொழிற்சாலை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள கபரமத்தி பகுதியில் அவசர விபத்து சிகிச்சை மையம் ஒன்று அமைக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். வேலாயுதம்பாளையத்தில் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டுகிறேன். வேலாயுதம்பாளையத்திலிருந்து தமிழ்நாடு காகித ஆலை வழியாக ஈரோடு சாலைக்குச் செல்லும் வழியில் இடையே உள்ள

2014 ஜூலை 14] [திரு. கே.சி. பழனிசாமி]

இரவில்வே கூடவில் ஓர் உயர்மட்ட மேம்பாலம் அமைத்துத் தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளப்பட்டி அரசு மருத்துவமனையில் தற்பொழுது பகலில் இரண்டு மருத்துவர்கள் மட்டுமே பணிபுரிகின்றனர். இரவில் ஒரு மருத்துவர்கூட பணியில் இல்லை. எனவே, அனுமதிக்கப்பட்ட மருத்துவர்களைத் தேவையான அளவில் உடனடியாகப் பணி நியமனம் செய்ய வேண்டுகிறேன். அதேபோல, வேலாயுதம்பாளையம் அரசு பொது மருத்துவமனையில் போதிய மருத்துவர்கள் பணியில் இல்லை. அங்கே ஒரு காசித ஆலை மற்றும் சர்க்கரை ஆலை உள்ளது. அந்தச் சுற்று வட்டாரத்தில் சுமார் 50 ஆயிரம் மக்கள் வசித்து வருகின்றனர். அவர்களுக்கு உதவக்கூடிய வகையில் வேலாயுதம்பாளையம் அரசு மருத்துவமனையில் தேவையான மருத்துவர்களைப் பணி நியமனம் செய்திட இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

வேலாயுதம்பாளையம் பகுதியில் ஒரு வேளாண் விளைபொருட்கள் விற்பனைக் கூடம் அமைத்திடக் கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியில் கபரமத்தினைத் தலைமையிடமாகக் கொண்டு, ஒரு புதிய வருவாய் வட்டம் அமைத்திட வேண்டுகிறேன்.

தொகுதியில் உள்ள பாசன வாய்க்கால்கள், குளம் குட்டைகள் அனைத்தையும் தூர்வாரி நீராதாரத்தைப் பெருக்கிட வேண்டுகிறேன். குடிநீர் ஆதாரத்தைப் பெருக்கிடவும், விவசாயம் செழித்திடவும், புலவூர் அருகே காவேரி ஆற்றில் நடுப்பணை அமைத்துத் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதி மக்களின் மேற்கண்ட கோரிக்கைகளை உடன் நிறைவேற்ற வேண்டுமாய் கேட்டுக்கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்து உரையை நிறைவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

திரு. கே. தங்கவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறை மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் பேச வாய்ப்பளித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. கே. தங்கவேல்] [2014 ஜூலை 14

புதிதாகப் பதவியேற்றுள்ள மத்திய அரசின்மீது மக்கள் நம்பிக்கை வைத்து வாக்களித்தார்கள். காங்கிரஸ் ஆட்சியில் நிலவிய விலைவாசி உயர்வுக்கும், தொழில் துறை நெருக்கடிக்கும் தீர்வு கிடைக்குமென நம்பினார்கள். புதிய அரசோ, காங்கிரசின் கொள்கையிலிருந்து இம்மியும் விலகாமல் செல்கின்றது. அவர்கள் விலைவாசியைக் குறைப்பதற்கு எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. மேலும், விலையேற்றத்திற்கு வழிவகுக்கும் விதத்தில், டீசல் விலை உயர்வையும், வரலாறு காணாத அளவில் 14.2 சதவிகித அளவிற்குப் பயணிகள் கட்டண உயர்வையும், 15 சதவிகித அளவிற்கு சிசன் டிக்கெட் உயர்வையும் மற்றும் 6.5 சதவிகித அளவிற்குச் சரக்கு கட்டண உயர்வையும் அறிவித்திருக்கிறார்கள்.

அவர்கள் சமர்ப்பித்திருக்கும் பொது மற்றும் இரயில்வே நிதிநிலை அறிக்கைகள் அன்னிய மூலதனத்திற்கும், பங்குச் சந்தைக்கும் சாதகமளிப்பதாக உள்ளன. இன்னும் கட்டண உயர்வுகள் தொடரும் எனவும், பெட்ரோல், டீசல் விலை உயர்ந்து, தொடர்ந்து உயரும் எனவும் மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் அவர்கள் தனது உரையில் குறிப்பிட்டிருக்கிறார். நாட்டின் வளர்ச்சிக்காக கடுமையான முடிவுகளை எடுக்க வேண்டுமென்று சொல்லும் புதிய அரசின் நடவடிக்கைகளால், அத்தியாவசியப் பொருட்களின் விலை தொடர்ந்து ஏறுமுகமாகவே உள்ளது. அதேசமயத்தில், தொழில் உற்பத்தி வளர்ச்சியில் தேக்கம் நீடிக்கிறது. மத்திய அரசின் இந்த முடிவுகள், நாடு முழுவதும் உள்ள தொழில் சூழலிலும், மக்கள் வாழ்விலும் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும்; தமிழகத் தொழில் துறையையும் அது பாதிக்கும். இந்தச் சூழலில், மத்திய அரசின் கட்டண உயர்வு நடவடிக்கைகளை எதிர்க்காமல், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், மக்களுக்குச் சுமை கூட்டும் விதத்திலான நிதிநிலை அறிக்கைகளை, 'துணிச்சலான பட்ஜெட்' என்றும், 'எதிர்காலத்திற்கேற்ற பட்ஜெட்' என்றும் கூறி வரவேற்றிருப்பது சரியானதல்ல. மத்திய அரசின் தாராள பொருளாதாரக் கொள்கையின் பாதையிலே, தமிழக அரசும் தொடர்ந்து பயணிப்பது மக்களுக்குக் கடுமையான சுமைகளை ஏற்படுத்தும்.

இந்தியாவில் உள்ள மாநிலங்களில், புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொள்ளும் நிறுவனங்கள் சலுகைகளை அனுபவிக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

2014 ஜூலை 14]

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் மத்திய அரசின் பட்ஜெட்டை வரவேற்றது தவறு என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். மத்திய அரசு டீசல் விலை, பெட்ரோல் விலையை உயர்த்துகிற போதெல்லாம், அந்தப் பிரச்சினையின் அடிப்படையிலே, மக்களைப் பாதிக்கின்ற விஷயங்களைப் பொறுத்து, மாண்புமிகு அம்மா அவர்கள் அதற்கு கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தார்கள். அதேநேரத்தில், விலை உயர்வைத் திரும்பப் பெறவேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்கள். மக்கள் நலனுக்கு எதிராக மத்திய அரசு ஏதேனும் கொள்கைகளை அமல்படுத்துகின்றபோது, எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். மக்கள் நலனுக்கு ஆதரவான நிலையை மத்திய அரசு எடுக்கின்றபோது, அதை வரவேற்கிறார்கள். ஆகவேதான், மாண்புமிகு அம்மா அவர்கள், இதுவரையில் ஒட்டுமொத்தமாக எதிர்ப்பதோ, ஒட்டுமொத்தமாக ஆதரிப்பதோ இல்லை. ஒவ்வொன்றையும், பிரச்சினையின் அடிப்படையிலே அணுகி, எதிர்க்க வேண்டியதை எதிர்க்கிறார்; ஆதரிக்க வேண்டியதை ஆதரித்தும் இருக்கிறார். இதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

திரு. கே. தங்கவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சணுகை காலம் முடிந்தநிலும், மீண்டும் சணுகைகளைத் தேடி வேறு மாநிலங்களுக்கு மாறிச் செல்ல நடைபேறும் இல்லை. இதனால் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பும், அரசுக்கு இழப்பும் ஏற்படுகின்றது. சென்ற முறை இதுகுறித்துப் பேசிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஆந்திரமும், பிற மாநிலங்களும் நம்மைவிட கூடுதலான சணுகைகள் கொடுத்து, முதலீட்டை ஈர்க்க முயற்சிக்கிறார்கள். அதனால் பன்னாட்டு நிறுவனங்களுக்கு சணுகைகள் கொடுக்க வேண்டியுள்ளது எனத் தெரிவித்தார்கள். மத்திய அரசின் சட்டங்களும் அதற்கு ஏதுவாக இருக்கின்றன. அமெரிக்காவின் டெட்ராய்டு நகரம் போன்ற நிலைமை தமிழகத்திற்கு ஏற்படாமல் தடுக்க வேண்டுமென்றால், அன்னிய மூலதனத்திற்கும், தனியார் பெருநிறுவனங்களுக்கும் அவசியமான கட்டுப்பாடுகள் விதிக்கவேண்டும். முதலீடு காரணமாக வேலைவாய்ப்பு பெருகினால், அது மகிழ்ச்சிக்குரியது. அதன் பெயரால் அரசின் சணுகைகளைப் பெறும் நிறுவனங்கள் இத்தனை ஆண்டு காலம் தொடர்ந்து செயல்பட வேண்டும்; இத்தனை

[திரு. கே. தங்கவேல்] [2014 ஜூலை 14

பேர்களுக்கு வேலை வழங்க வேண்டுமென்ற நிபந்தனைகளை விதிக்க முடியாது என்றால், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி எப்படி ஏற்படும்? அரசுக்கும், நிறுவனங்களுக்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்த விவரங்கள் வெளிப்படையாக இல்லை. தொழிலாளிகளுக்கும், மக்களுக்கும் புரியாத ஒப்பந்தங்களாக அவை இருக்கின்றன. இதனால் சலுகைசார் முதலாளித்துவம் வளர்கிறது; தவறுகளுக்கு வழி ஏற்படுகிறது.

பிற்பகல் 1-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபொழுது, புரிந்துணர்வு ஒப்பந்தம் போடுகின்றபொழுது, வெளி நாட்டு நிறுவனங்கள் தங்களுடைய ஒப்பந்தக் காலம் முடிந்த பின்னர் வெளியே சென்றுவிடுகிறார்கள் என்ற கருத்தைச் சொல்லியிருக்கின்றார். அதுமட்டுமல்ல, புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடும்போது, அதுகுறித்து வெளிப்படையாகத் தெரியப்படுத்தவேண்டும் என்றும் சொல்லியிருக்கின்றார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒன்றை தெரிந்துகொள்ளவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்படுகிறது என்று சொன்னால், அது 4,000 கோடி ரூபாயாக இருந்தாலும் சரி, 400 கோடி ரூபாயாக இருந்தாலும் சரி, எவ்வளவு பேருக்கு அதன்மூலம் வேலைவாய்ப்பு தர வேண்டும் என்பதுதான் அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கம் என்பதை முதலில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், அதில் குறிப்பிட்டதில் ஒரு எண்ணிக்கை குறைந்தால்கூட அரசினுடைய சலுகைகளைப் பெற முடியாது என்ற விதி இருக்கிறது. ஆகவே, இத்தனை பேருக்கு வேலை கொடுக்கவேண்டும் என்ற அடிப்படையில்தான் அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்படுகிறது.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எப்பொழுதுமே பன்னாட்டு நிறுவனங்களுக்குத்தான் சலுகைகள் அளிக்கப்படுகின்றன என்றும் சொல்கின்றார். உன்நாட்டு

2014 ஜூலை 14] [திரு. பி. தங்கமணி]

நிறுவனங்களுடனும் இதுபோன்று புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடுகின்றபோது, அவர்களுக்கும் இந்தகைய சலுகைகள் அளிக்கப்படுகின்றன. ஏதோ பன்னாட்டு நிறுவனங்களுக்கு மட்டும் அரசு சலுகைகள் கொடுக்கிறது என்ற அவரது எண்ணத்தை தயவுசெய்து மாற்றிக்கொள்ளவேண்டும். எந்தவொரு பெரிய நிறுவனமாக இருந்தாலும், அதிலும் குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்றால், தென் மாவட்டங்களைப் பொறுத்தவரையில், ரூ.50 கோடியிலிருந்து முதலீடு செய்பவர்களுக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் சலுகைகளை அறிவித்திருக்கிறார்கள். ரூ.10 கோடி முதலீடு செய்பவர்களுக்குங்கூட சலுகைகள் அளிக்கப்படுகின்றன. அந்தப் பகுதி வளரவேண்டும் என்பதற்காகத் திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். எனவே, இந்தச் சலுகைகள் பன்னாட்டு நிறுவனங்களுக்கு மட்டுமல்ல, உள்நாட்டு நிறுவனங்களுக்குந்தான் இருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபொழுது, 'போட்டி நிறைந்த உலகம்' என்று குறிப்பிட்டார்கள். இதுகுறித்து எனது பதிலுரையில் விளக்கமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எவ்வளவோ சிரமங்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் மீறி, மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்திற்கு எவ்வளவு முதலீடுகளைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதையும் பதிலுரையில் விளக்கவிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

திரு. கே. தங்கவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. உதாரணமாக, ஸ்ரீபெரும்புதூரில் தொழில் தொடங்கிய நோக்கியா நிறுவனம், தமிழக அரசிடமிருந்து 3,000 கோடி ரூபாய் மதிப்பிலான சலுகைகளையும், மத்திய அரசிடமிருந்து ஆண்டுக்கு 300 கோடி ரூபாய் மதிப்பிலான சலுகைகளையும் பெற்றுள்ளன. முதல் 5 ஆண்டுகளில் 10,000 கோடி ரூபாய் இலாபம் ஈட்டியுள்ளனர். அதோடு மட்டுமல்லாமல் சுமார் 23,000 கோடி ரூபாய் அளவிற்கு வரி இழப்பை ஏற்படுத்தி, அதன் காரணமாக தொழிற்சாலைகளை மூடக்கும் நிலைக்குச் சென்றுள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

[2014 ஜூலை 14

மாண்புமிகு திரு. மீ. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 3,000 கோடி ரூபாய் அளவிற்கு நோக்கியா நிறுவனத்திற்கு அரசு சலுகை அளித்திருப்பதாகச் சொல்கின்றார். அதற்கு ஏதேனும் ஆதாரம் இருக்கிறதா? இதுகுறித்து நான் சென்ற முறை பேசும்போதுகூட குறிப்பிட்டேன். அரசு, நோக்கியா நிறுவனத்திற்கு ஒரு ரூபாய்கூட சலுகை அளிக்கவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறேன். இடத்தைப் பொறுத்தவரையில்கூட, அந்த நேரத்தில் என்ன விலை நிர்ணயம் செய்யப்பட்டிருந்ததோ, அந்த விலைக்குத்தான் நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர, எத்தனிதத்திலும் தனிப்பட்ட சலுகை நோக்கியா நிறுவனத்திற்குக் கொடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, நோக்கியா நிறுவனத்திற்கு என்ன பிரச்சினை, எப்படி பிரச்சினை வந்தது என்பது பற்றி கடந்த முறை விளக்கிச் சொன்னேன். ஏற்கெனவே மத்திய அரசு ஒரு சட்டத்தைக் கொண்டுவந்ததன் வாயிலாகத்தான், அதுபோன்ற சிக்கல் ஏற்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு கடந்த முறை சொல்லியிருக்கிறேன். ஆக, நோக்கியா நிறுவனத்திற்கு ஒரு ரூபாய் சலுகைகூட மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கொடுக்கவில்லை என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல். (குறுக்கிடு) உங்கள் கட்சி உறுப்பினர்தானே பேசுகிறார். (குறுக்கிடு) இல்லை. அவர்கள் பேசியபிறகு கடைசியாகப் பேசலாம். (குறுக்கிடு) திரு. கே. தங்கவேல், பேசுங்கள். (குறுக்கிடு) Point of order இதில் எதுவும் இல்லை. உட்காருங்கள்.

திரு. கே. தங்கவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூபாய் 650 கோடி முதலீடு செய்த நோக்கியா நிறுவனம் சுமார் 35,000 கோடி ரூபாய் அளவிற்கு ஆதாயம் பெற்றுள்ளது. தற்போதுதான் அந்த நிறுவனத்தை மைக்ரோ சாஃப்ட் நிறுவனத்திற்கு மாற்றிவிட்டார்கள். நம்பிக்கையோடு பணியில் சேர்ந்த தொழிலாளர்களுக்கு 25 வயதில் விருப்ப ஓய்வு வழங்கப்படுகிறது என்றால் நாம் அடைந்த பலன் என்ன?

வெள்ளிக்கிழமையன்று நடைபெற்ற விவாதத்தில் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள், முந்தைய காங்கிரஸ் அரசின் சதியால் நோக்கியா நிறுவனம் மூடப்பட்டதாகத் தெரிவித்தார்.

2014 ஜூலை 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சரி என்று சொல்லவில்லை. சட்டம் போட்டிருக்கிறார்கள் என்றுதான் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறார். சட்டம் என்றுதான் சொன்னேன். சரி என்று சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

திரு. கே. தங்கவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் முந்தைய காங்கிரஸ் அரசினால் போடப்பட்ட சட்டத்தால் நோக்கியா நிறுவனம் மூடப்பட்டதாகத் தெரிவித்தார். புதுடில்லி உயர் நீதிமன்றம் அளித்துள்ள இடைக்கால தீர்ப்பில், நோக்கியா நிறுவனம் செய்த முறைகேடுகள் நிரூபணமாகியுள்ளன என்பதையும் மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

தமிழகத்தில் தென் மாவட்டங்களில் 9 தொழிற் பூங்காக்களை ஏற்படுத்த முடிவுசெய்தபோதும், அங்குள்ள முதலீடுகளை ஈர்க்க முடியவில்லை. தற்போது கூறுதலான சலுகைகளை வழங்க அரசு முடிவு செய்திருக்கிறது. தொழிலாளர்களைக் கூடுதல் நேரம் வேலை வாங்குதல், பெண் தொழிலாளர்களை இரவுப் பணிக்கு அமர்த்துதல், ஒப்பந்தத் தொழிலாளர் முறையை பின்பற்ற அனுமதித்தல் ஆகிய சலுகைகளை அளித்ததால் வரும் முதலீடு நிரந்தரமானதா? தமிழ் மக்களுக்கு அது நலம் தருமா? ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதற்கு நோக்கியா நிறுவனம் ஒரு உதாரணம்.

பிற்பகல் 1-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மீண்டும், மீண்டும் தவறான

[திரு. பி. தங்கமணி] [2014 ஜூலை 14

கருத்தையே பதிய வைத்துக்கொண்டிருக்கிறார். நோக்கியா கம்பெனிக்கு நாங்கள் எதுவுமே கொடுக்கவில்லை, கொடுக்கவில்லை என்று பலமுறை சொல்லிவிட்டோம். நாங்கள் என்ன கொடுத்தோம் என்பதை ஆதாரத்தோடு சொல்லுங்கள். நான் அதற்கு பொறுப்பேற்றுக்கொள்கின்றேன். நான் இதுகாறும், (குறுக்கிடு) இருங்கள், நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கிடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நோக்கியா கம்பெனிக்கு நாம் சலுகைகள் கொடுப்பதாக MoU-ல் போட்டிருக்கிறோம். வரிச் சலுகை என்ற வகையில் 650 கோடி ரூபாய் அளவிற்கு, அவர்களுக்கு நாம் பணம் தர வேண்டியிருக்கிறது. அவர்கள் இன்னும் பெற்றுக்கொள்ளவில்லை; அவ்வளவுதான். எப்போது அவர்கள் கேட்டாலும், நீங்கள் அதைக் கொடுத்துதான் ஆகவேண்டும். பிறகு, நாங்கள் ஒன்றும் கொடுக்கவில்லை, ஒன்றும் கொடுக்கவில்லை என்று நீங்கள் சொல்வது எனக்கு வியப்பாக இருக்கிறது. (குறுக்கிடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Clearance Certificate மட்டும்தான் கொடுத்திருக்கிறோமேயொழிய, இதுகாறும் ஒரு ரூபாய்கூட நாங்கள் அவர்களுக்குக் கொடுக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் தவறாக 500 கோடி ரூபாய் என்று சொல்கிறார். 95 கோடி ரூபாய்க்கு மட்டும்தான் அவர்களுக்கு Clearance Certificate கொடுத்திருக்கிறோம். தயவு செய்து 500 கோடி ரூபாய் என்பதை மாற்றிக்கொள்ளுங்கள். அதுவும் 95 கோடி ரூபாய் என்பது இந்தப் பிரச்சினை வந்த காரணத்தினால், அப்படியே முடக்கி வைக்கப்பட்டிருக்கின்றது. இன்னும் சொல்லவேண்டுமென்றால், கூடுதல் வெளிக்கிழமையன்றுகூட சொன்னேன். அந்த இடம் சிப்காட்டிற்குச் சொந்தமான இடம். அந்த இடத்தைத்தான் அவர்கள் முடக்கி வைத்திருப்பதாக சொல்லப்படுகிறது. அதை எப்படி அவர்கள் முடக்க முடியும்? கோர்ட்டிலேயே அந்த இடத்தை முடக்கி வைத்திருக்கின்றார்கள். எனவே, அரசுக்குத் தெரியாமல் அங்கிருந்து ஒரு பிட்கூட வெளியே போகாது

2014 ஜூலை 14] [திரு. பி. தங்கமணி]

என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். திரும்பத் திரும்பச் சொல்கின்றேன். அந்தக் கம்பெனி இதுவரும் 95 கோடி ரூபாய் VAT refund வேண்டும் என்று மட்டும்தான் கேட்டிருக்கிறார்கள். Clearance கொடுத்திருக்கின்றார்கள். ஒரு ரூபாய்கூட அவர்களுக்கு நாங்கள் இதுவரை கொடுக்கவில்லை. அன்றைய தினம் நாங்கள் இடம் வழங்கியபோதுகூட 4½ இலட்சம் ரூபாய், அதாவது அப்போது சந்தை மதிப்பு என்ன இருந்ததோ, அந்த ரேட்டைத்தான் அவர்களுக்கு நாங்கள் கொடுத்திருக்கிறோமேயொழிய, ஏதோ நோக்கியாவிற்கு மட்டும் நாங்கள் சலுகைகள் செய்துவிட்டோம், நோக்கியாவிற்கு சலுகை செய்துவிட்டோம் என்று சொல்வது சரியில்லை. 30,000 தொழிலாளர்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் பணியில் இருந்தார்கள். அந்த 30,000 தொழிலாளர்களுடைய குடும்பங்கள் பாதிக்கப்படும் என்பதற்காகத்தான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அந்த நடவடிக்கையை எடுத்தது. உங்களுக்கும் அது தெரியும். நீங்கள்தான் அந்தத் தொழிற்சங்கத்தின் தலைவராக இருக்கின்றீர்கள். உங்களுக்கும், இராயிட முன்னேற்றக் கழகத்திற்கும் இது சம்பந்தமாக கடும் அறிக்கைப்போர்கூட நடந்தது. அதில் என்ன நடந்தது என்பது உங்களுக்குத் தெரியும். அப்படி இருக்கும்போது, மீண்டும் 500 கோடி ரூபாய் தந்துவிட்டார்கள், 1,000 கோடி ரூபாய் தந்து விட்டார்கள். இப்போது அவர் 3,000 கோடி ரூபாய் என்று சொல்கிறார். ஒன்றைப் புரிந்துகொள்ளுங்கள். புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டு, அதில் என்ன முதலீடு செய்கின்றார்கள் என்று சொல்கின்றார்களோ, அதற்குமேல் ஒரு ரூபாய்கூட எந்த கம்பெனிக்கும் சலுகை அளிக்கவில்லை. 1,000 கோடி ரூபாய் என்றால், 1,000 கோடி ரூபாய்க்குத்தான் அந்த VAT refund-ஐ கொடுக்கின்றோமேயொழிய, 1,000 கோடி ரூபாய்க்கு மேல் ஒரு ரூபாய் கூட கொடுக்க முடியாது என்பதுதான் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் முக்கிய அம்சமாகும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கிடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படி எல்லோரும் குறுக்கிட்டு, எழுந்து நின்று பேசினால் எப்படி? நான் எப்படி சபையை நடத்த முடியும்? எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

[2014 ஜூலை 14

திரு. அ. சவுந்தராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை நம்மால் ஏன் தடுக்க முடியவில்லை என்கிற வேதனையைத்தான் நாங்கள் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். 'எங்களுக்குப் பொறுப்பு இல்லை' என்று அரசு சொல்வதில் எங்களுக்கு உடன்பாடில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கிடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் அன்றைக்கும் இப்படித்தான் சொன்னீர்கள். இன்றைக்கும் அதையேதான் சொல்கிறீர்கள். பொறுப்பு இல்லை என்று நாங்கள் சொல்லவில்லை. எங்கள் மேல் என்ன தவறு இருக்கிறது என்பதைச் சொல்லுங்கள். நாங்கள் பிறகு சொல்கிறோம். மாநில அரசின்மீது என்ன தவறு என்பதைச் சொல்லுங்கள். அதற்கு பதில் சொல்கிறோம். (குறுக்கிடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தராசன் அவர்கள்.

திரு. அ. சவுந்தராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நோக்கியா கம்பெனியில் ஆள் குறைப்பு செய்ய முயற்சிக்கிறார்கள் என்று நான் அரசிற்கு எழுதினேன். தொழில் துறைச் செயலாளரைச் சந்தித்தேன். மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரை சந்தித்தேன். ஆனால், அந்த மைக்ரோசாப்ட் . . . (குறுக்கிடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்தராசன், நீங்கள் விவாதத்தை எங்கேயோ கொண்டு போகிறீர்கள். (குறுக்கிடு) நான் இடையில் உங்களைப் பேச விட்டதே தவறு என்பது தெரிகிறது. நீங்கள் மாண்புமிகு அமைச்சர் சொல்வதற்கு நேர்மாறாக விவாதத்தை எங்கேயோ கொண்டு போகிறீர்கள். (குறுக்கிடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல், நீங்கள் உங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கிடு) மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, நீங்கள் உட்காருங்கள். கடைசியாக உங்களுக்கு வாய்ப்புக் கொடுக்கப்படும். (குறுக்கிடு) மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

(குறுக்கிடு) மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும். *(குறுக்கிடு)* மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் பதில் உரை முடிந்தவுடன், நீங்கள் பேசலாம். *(குறுக்கிடு)* இப்போழுது உட்காருங்கள். *(குறுக்கிடு)* பதில் உரைக்குப் பின்னால் உங்களைப் பேச அனுமதிக்கிறேன். இப்போது உட்காருங்கள். *(குறுக்கிடு)* நீங்கள் கையைத் தூக்கும்போதெல்லாம், பேச நான் வாய்ப்புத் தர முடியாது. *(குறுக்கிடு)* உட்காருங்கள். *(குறுக்கிடு)* மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல். நீங்கள் பேசுங்கள்.

திரு. கே. தங்கவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேது சமுத்திரக் கால்வாய் திட்டத்தை நிறைவேற்றுவது அவசியம். மேலும், தமிழகத்திலுள்ள தனியார் கனிம வள நிறுவனங்கள் இந்தியாவிலேயே அதிகளவில் கனிமங்களை எடுத்து ஏற்றுமதி செய்துள்ளன. அந்த நிறுவனங்கள் விதிகளை மீறி கனிமங்களை சுரண்டியும் உள்ளன. இது தொடர்பாக முதலில் தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை மாவட்டங்களில் உள்ள குவாரிகளில் ஆய்வு நடத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி வீரபாதரணி, நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கிடு)* உங்கள் கட்சி உறுப்பினர் திரு. பிரின்ஸ் பேசும்போது அவரிடம் கூறி, பேசச் சொல்லுங்கள். *(குறுக்கிடு)* உங்களுக்கு வாய்ப்பு இல்லை. *(குறுக்கிடு)* கடைசியாகப் பார்க்கலாம். உட்காருங்கள். *(குறுக்கிடு)* மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல். நீங்கள் பேசுங்கள்.

திரு. கே. தங்கவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குவாரிகளில் நடத்த முறைகேடுகளின் மதிப்பு 10 கோடி ரூபாய்க்கு மேல் இருக்கும் என்ற செய்தி நம்மை அச்சுறுத்துகிறது. அரசு தரப்பில் ஆய்வுகள் முடிந்த பிறகும், ஆய்வு அறிக்கை விவரங்கள் இரகசியமாக உள்ளன. ஒரு பக்கம் அரசுக்கு இழப்பையும், மறுபக்கம் சுற்றுச்சூழல் பாதிப்பையும் ஏற்படுத்தி இருக்கும் அந்த முறைகேடுகளை மக்களிடம் பகிரங்கப்படுத்தவேண்டும். கனிம வளங்கள் . . .

பிற்பகல் 1-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் நீங்கள் உங்கள் உரையை முடியுங்கள்.

[பேரவைத் தலைவர்] [2014 ஜூலை 14

(குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் என்னைப் பார்த்து பேசுங்கள். உங்கள் சௌகரியத்திற்கு மாண்புமிகு உறுப்பினரைப் பார்த்துப் பேசக்கூடாது. (குறுக்கீடு) நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி, நீங்கள் உட்காருகிறீர்களா? நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். பேசுவதற்கு வாய்ப்பில்லை. உட்காருங்கள். உங்களுக்கு வாய்ப்பில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல், நீங்கள் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி, இந்தமாதிரி நீங்கள் செய்வது முறையல்ல. நான் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடு) இல்லை, நான் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். அவையை நடத்த விடாமல் சட்டமன்றத்திற்கு வந்து உங்கள் சௌகரியத்திற்குப் பேசுவதற்கு உங்களுக்கு வாய்ப்பில்லை. (குறுக்கீடு) உங்களுக்கு வாய்ப்பில்லை. பேரவைத் தலைவர் வாய்ப்பு கொடுத்தால்தான் பேச முடியும், உட்காருங்கள். நீங்கள் பேச முடியாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல், நீங்கள் பேசி முடியுங்கள். (குறுக்கீடு)

திரு. கே. தங்கவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கனிம மணல் மற்றும் ஜல்லைட் கற்கள் ஆற்று மணல் கொள்ளைகளில் ஈடுபட்டுள்ளவர்களைச் சட்டப்படி தண்டிப்பதுடன், அரசுக்கு ஏற்பட்ட இழப்பை கறாராக வசூலிக்கவேண்டும். இத்துறைகளில் தனியார் சுட்டும் இலாபம் பல்லாயிரம் கோடியாக இருக்கிறது. அரசு கனிம வள நிறுவனங்களின் இலாபமோ சில நூறு கோடிகள் மட்டுமே. 2023 ஆம் ஆண்டு வரை தொலைநோக்குத் திட்டம் வகுத்து செயல்படும் அரசு, வேலைவாய்ப்பையும், உற்பத்தியையும் பெருக்கும் திட்டங்களுக்கு நிதியில்லாமல் தவிக்கிறது. மறுபக்கம் நமது இயற்கை வளங்கள் வரன்முறையற்று சூரண்டப்படுகின்றன. சிலரது கைகளிலே இருக்கும் கனிம இயற்கை வளங்களை அரசுடமையாக்கி, உள்நாட்டிலே தொழில்களை ஏற்படுத்துவதன்மூலம் ஏற்றுமதியைக் கட்டுப்படுத்தினால் தொழில் ஆதாரங்களைப் பெருக்கலாம். தென் மாவட்டங்களை மேம்படுத்தும்வகையில், சிவரக்கோட்டையில் சிப்காட் அமைப்பதை விவசாயிகள் தொடர்ந்து எதிர்த்து வருகிறார்கள். வினைநிலங்களை எடுக்காமல் தரிக நிலத்தில் சிப்காட் தொழிற்பேட்டையை

2014 ஜூலை 14] [திரு. கே. தங்கவேல்]

ஏற்படுத்துவோம் என்ற உறுதியை அரசு பின்பற்றவேண்டும். வினைநிலங்களைக் கைப்பற்ற நேர்ந்தால், உரிய இழப்பீடு வழங்குவதுடன், விவசாயத் தொழிலாளர்களையும் கணக்கில் கொண்டு, இழப்பீடு மற்றும் வேலை உத்தரவாதம் வழங்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல், உரையை முடியுங்கள்.

திரு. கே. தங்கவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப் பேசுவதற்கு விடவில்லை. குறுக்கே குறுக்கே சத்தம்போட்டு பேசிக்கொண்டேயிருக்கிறார்கள். (குறுக்கீடு) நீங்கள் அதனைக் கட்டுப்படுத்தவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல், அதெல்லாம் இல்லை. நீங்கள் பேசிக் கொண்டேதான் இருக்கிறீர்கள். ஒரு நிமிடத்தில் பேசி உரையை முடியுங்கள்.

திரு. கே. தங்கவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சலுகை பெற்று தமிழகத்தில் தொழில் தொடங்கியுள்ள பன்னாட்டு மற்றும் பெரு நிறுவனங்கள், சுமார் ஐந்து இலட்சம் பேருக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் வழங்குகின்றன. ஜவுளி, ஆயத்த ஆடை தயாரித்தல், விசைத்தறி, தோல் பதனிடுதல் என உள்நாட்டு உற்பத்தி நிறுவனங்கள் சுமார் 50 இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுக்கின்றன. மத்திய அரசின் பஞ்சாலை ஏற்றுமதிக் கொள்கையினால், ஜவுளித் தொழில் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், உட்கார்ந்து கொண்டு பேசாதீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

திரு. கே. தங்கவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுத் துறை மற்றும் சர்க்கரை ஆலைகளில் கரும்பு விவசாயிகளுக்குப் பாக்கித் தொகையை உடனடியாக வழங்க வேண்டும். விவசாயிகளுக்கும் நிருவாகத்திற்கும் இணக்கமான சூழ்நிலையை ஏற்படுத்தினால் அவற்றின் இலாபத்தை அதிகரிக்க முடியும். மொலாசஸ் எனப்படும் சர்க்கரை ஆலைக் கழிவு விற்பனையில் கவனம் செலுத்தினால் கூடுதல் வருமானத்தை ஈட்ட முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள். (குறுக்கிடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல், சிக்கிரம் பேசி முடியுங்கள்.

திரு. கே. தங்கவேல்: இதனால் எரிசாராய உற்பத்தியை அரசே தொடங்குவது வரவேற்புக்குரியதாகும். அனைத்து கூட்டுறவு ஆலைகளிலும் இத்திட்டத்தை விரிவாக்கவேண்டும். கூட்டுறவு சர்க்கரை ஆலை ஊட்பட அனைத்துத் தொழிலாளர்களுக்கும் ஊதிய உயர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தவேண்டும். பிழிதிறனுக்கேற்ப தொழிலாளர்களை அதிகரிக்கவேண்டும் என்று கூட்டுக் கொண்டு, என்னுடைய தொகுதி கோரிக்கைகளை எழுதிக்கொடுத்துவிடுகிறேன். அவற்றை அலுவல் குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தொகுதிக் கோரிக்கைகள்:

திருப்பூர், கோவை, ஈரோடு மாவட்டங்களை மையப்படுத்தி மெட்ரோ இரயில் மற்றும் இணைப்புச் சாலைத் திட்டங்களை ஏற்படுத்தவேண்டும்.

விசைத்தறி ஜவுளி உற்பத்தியை ஊக்கப்படுத்தும்விதத்தில் திருப்பூர் மாவட்டம் தெக்கலூரில் அறிவிக்கப்பட்ட ஜவுளிச் சந்தையை செயல்படுத்தவேண்டும். இத்தச் சந்தையில் உற்பத்திச் சரக்கை அடமானமாகப் பெற்று, குறைந்த வட்டியில் கடன் கொடுக்கும்வகையில் செயல்படுத்தவேண்டும்.

விசைத்தறிகளை நவீனமயமாக்க வார்ப்பு வெப்ட் இணைத்தல், 4 நாடாக்கள் பொருத்தும் விதத்தில் நவீன ட்ரா பாக்ஸ் பொருத்துதல், நாடா இல்லாத தறி அமைத்தல் ஆகியவற்றிற்கு அரசு மானியம் வழங்கவேண்டும்.

திருப்பூர், கோவை, உள்ளிட்ட பகுதிகளில் சர்வதேச வர்த்தகர்கள் வந்து செல்லும்விதத்தில் கோவை விமான நிலைய விரிவாக்கம் அவசியமாகும். இதற்கு மாநில அரசு தரப்பிலான பணிகளை விரைந்து முடிக்கவேண்டும்.

இத்துடன் என் பேச்சை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

2014 ஜூலை 14]

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சபையை மிக சமுதாயமாக தாங்கள் நடத்தி வருகின்றீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி அவர்கள் ** இந்த அவைக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய வகையில் உட்கார்ந்து கொண்டுபேசுவது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் நீங்கள் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் தங்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி பேசியது ஏதும் அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கிடு) நான் உங்களை இறுதியாக எச்சரிக்கிறேன், இது முறையல்ல, இதுபோன்று நிறைய முறை நடந்துகொண்டீர்கள், நீங்கள் கேட்கும்போதெல்லாம் வாய்ப்பு தொடர்க்க முடியாது. அவையை நான் நடத்தவேண்டும். காலம் என்று ஒன்று இருக்கிறதல்லவா? நீங்கள் கையைத் தூக்கி வாய்ப்பு கேட்கும்போதெல்லாம், கொடுப்பதற்கு நேரம் இல்லை, (குறுக்கிடு) முடியாது, நான் பேசும்போது பிற உறுப்பினர்களுடன் பேசிக்கொண்டு சண்டைபோடுவதுபோல் பேசுகிறீர்கள், இது முறையல்ல, இதற்கு நான் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்கும். (குறுக்கிடு) எச்சரிக்கிறேன், எச்சரிக்கிறேன், உங்களை எச்சரிக்கிறேன். உட்காருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. குணசேகரன் அவர்கள்.

திரு. க. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் தொழில் துறை மானியக் கோரிக்கையின்மீது பேச அனுமதித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கிடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி விஜயதரணி, உட்கார்ந்துகொண்டு பேசாதீர்கள். திரும்பத் திரும்பச் சொல்கிறேன், உட்கார்ந்துகொண்டு பேசாதீர்கள். (குறுக்கிடு) உட்கார்ந்துகொண்டு பேசுகிறீர்கள். (குறுக்கிடு) இல்லை, இது முறையல்ல, சபை விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டாகவேண்டும். சபை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

விதிமுறைகளுக்குக் கட்டுப்படமாட்டார்களா? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், திரு. சு. குணசேகரன், நீங்கள் ஏதும் பேச வேண்டாம், நான் பேசிக்கொள்கிறேன். நீங்கள் பேசாமல் இருங்கள். (குறுக்கீடு) அவை விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும். உட்காருங்கள், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய நேரத்தை இப்போதிலிருந்து கணக்கிட்டுக் கொள்ளுங்கள். தமிழ்நாட்டினுடைய சராசரி வளர்ச்சி, தேச வளர்ச்சியான, 4.74 சதவீதத்தைக் காட்டிலும் கூடுதலாக 6.13 சதவீதம் வளர்ச்சி அடைந்து நாட்டினுடைய தொழில் வளர்ச்சியில் மூன்றாவது இடத்திலிருந்து இரண்டாவது இடத்திற்கு முன்னேறியிருப்பதாக கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். ஆனால், அதே சமயத்தில் மத்தியிலே ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. கடந்த 10 ஆண்டுக்காலமாக ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி மத்தியிலேயிருந்து அந்திய முதலீடுகளை ஈர்க்கிறோம் என்ற வகையில், நாட்டினுடைய பொதுத் துறை, இந்திய நாட்டினுடைய இயற்கை வளங்களை அந்திய நிறுவனங்களுக்குத் தாரை வார்த்ததை நாம் அறிவோம். அந்த அடிப்படையில் இடதுசாரிக் கட்சிகளோடு, நமது அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசும் மத்திய அரசு எடுத்த எல்லாக் கொள்கைகளையும் எதிர்த்து நின்ற நிலையும் இந்த சட்டமன்றத்திலே நடைபெற்றது.*

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆனால், இன்றைக்கு இந்தியாவை வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டு செல்வதாகவும், ஏதோ மோடி என்ற ஒரு மனிதரால் மட்டுமே அது சாத்தியம் என்ற ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்கி, இந்தியாவில் ஒரு மாபெரும் வெற்றியை தேர்தலின்மூலமாக அவர்கள் பெற்றிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் சமர்ப்பித்த முதல் வரவு-செலவுத் திட்ட அறிக்கையை எங்களுடைய இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாநிலச் செயலாளர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, பழைய, மோசமான வீட்டிற்கு வெள்ளையடித்து வைப்பதைப்போல கொடுத்திருக்கிறார்கள். அதற்குச் சான்றாக, கடந்த 8 ஆண்டுக்காலமாக ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் திரு. ப. சிதம்பரம் அவர்கள்,

2014 ஜூலை 14] [திரு. க. குணசேகரன்]

எந்த ஒரு மக்கள் விரோத நிதிக் கொள்கையை வரவு-செலவுத் திட்டமாக முன்வைத்தாரோ, அவரே, இன்றைக்கு திரு. அருண் ஜெட்லியினுடைய அந்த வரவு-செலவுத் திட்டத்தை ஆதரித்து, கருத்துகளைச் சொல்லியிருக்கிறார். இதிலிருந்தே ஆட்சி மாறினாலும், காட்சிகள் மாறினாலும், அதனுடைய கொள்கைகளும், திட்டங்களும், பொருளாதாரக் கோட்பாடுகளும், நடைமுறைகளும் மாறாத ஒரு நிலையில் இந்திய தேசத்தைக் கொண்டு சென்றுகொண்டிருக்கிறார்கள் என்பது தெரியும். எனவே, கடந்த காலத்தில் நெருக்கடி எப்படியிருந்ததோ, அந்த நெருக்கடி இன்றைக்கும் இந்தியாவிலிருந்து மீளப்போவதில்லை. உலகப் பெரும் நிறுவனங்கள் இந்தியாவின் வளங்களை கொள்ளையடிப்பதை கடந்த ஆட்சியாளர்களைவிட கூடுதலாக இவர்கள் அனுமதிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கிறார்கள் என்பதையெல்லாம் நாம் கண்கூடாகப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இந்த நிலையில்தான் அவர்கள் மேலும் பகிரங்கமாகவே திரு. அருண் ஜெட்லியினுடைய வரவு-செலவு அறிக்கையில், இந்திய நாட்டிலிருக்கக்கூடிய பொதுத் துறை பங்கு நிறுவனங்களின் நிதி ஆதாரத்தைச் சமப்படுத்துவதற்காக, சரி செய்வதற்காக எவ்வளவு பங்குகளை வேண்டுமானாலும் விற்றுக்கொள்ளலாம் என்பதற்கான அனுமதியையும் வழங்கி, அந்த வரவு-செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் தொழில் துறை மானியக் கோரிக்கை மீது பேசுங்கள். (குறுக்கிடு)

திரு. க. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் துறைதான். இந்தியாவுடன் சேர்ந்ததுதான் அது. கொள்கை விளக்கக் குறிப்பில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், தமிழ்நாட்டு தொழில் துறை மானியக்கோரிக்கை மீது பேசுங்கள். தமிழ்நாட்டிற்கு வாருங்கள்.

திரு. க. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்பில் இருப்பதுதான்.

அதனடிப்படையில், **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பிற்பகல் 1-20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கிடு) நீங்கள் தமிழ்நாடு அரசு தொழில் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுங்கள். (குறுக்கிடு) நீங்கள் தமிழ்நாடு தொழில் துறை மானியக் கோரிக்கையின்மீது மட்டும் பேசுங்கள்.

திரு. சு. குணசேகரன்: இந்தியாவின் ஒட்டுமொத்தக் கொள்கைதான் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும் உட்பட்டது என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். ஏனென்றால், தற்போது நோக்கியாவைப் பற்றிப் பேசும்போது மத்திய அரசு எடுத்த நடவடிக்கை இங்கே பாதிப்பை உண்டாக்குகின்றது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் தமிழ்நாடு அரசு தொழில் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுங்கள்.

திரு. க. குணசேகரன்: நான் சரியாகத்தான் பேசிக்கொண்டிருக்கிறேன். அந்த அடிப்படையில் இன்றைக்குக் கொள்கை விளக்கக் குறிப்பில் பல விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. முதலில் தொழில் துறையில் முக்கியமானது விவசாயிகளும் இணைந்திருக்கின்ற சர்க்கரை உற்பத்தி. சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 47 ஆலைகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. அதில் கூட்டுறவு, தனியார், பொதுத் துறை நிறுவனங்கள் மூலமாக ஆலைகள் இயங்கினாலும், அந்த ஆலைகள் கடந்த 2 ஆண்டுக் காலமாக கிட்டத்தட்ட ரூ.850 கோடி வரை கடனாகவும், ரொக்கமாகவும் விவசாயிகளுக்குக் கொடுக்கவேண்டிய பணத்தைக் கொடுக்காமல் நிலுவையில் வைத்திருக்கின்றன. அந்த அடிப்படையில் முத்தைய மத்திய அரசு 6,500 கோடி ரூபாய் அவர்களுக்கு நீண்டகால வட்டியில்லாத கடனை வழங்கிய நிலையிலும், இந்த மத்திய அரசும் 4,400 கோடி ரூபாயை வழங்கியதற்குப் பிறகும், அந்தக் கடன் தொகை நிலுவையில் இருந்துகொண்டிருக்கின்றது. தனியார் ஆலைகளுக்கு இந்தப் பணம் கொடுக்கப்பட்டாலும், அதைக் கொண்டு விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தை முழுமையாகக் கொடுக்க முடியாது என்று அவர்கள் ஏற்கெனவே பகிரங்கமாக அறிவித்திருக்கிறார்கள்.

2014 ஜூலை 14] [திரு. க. குணசேகரன்]

எனவே, இந்த நிலையில் தமிழ்நாட்டில் தனியார் சர்க்கரை ஆலைகள். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, முதலில் 840 கோடி ரூபாய் என்று ஏற்கெனவே சொன்னதைத் திரும்பச் சொல்லியிருக்கிறார்கள். நான் அதற்கு மே மாதம் 31 ஆம் தேதி வரை 840 கோடி ரூபாய் இருந்திருக்கலாம் என்று சொன்னேன். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பல்வேறு முயற்சிகள் எடுத்ததன் காரணமாக, தற்போது அது 527 கோடி ரூபாயாகக் குறைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்திருக்கின்றேன். அதுமட்டுமல்ல, கடனைப்பற்றிச் சொன்னார்கள். எல்லா மாநிலங்களிலுமே விவசாயிகளுக்குப் பணம் கொடுக்க முடியாமல் மில்கள் எல்லாம் தடுமாறிக்கொண்டிருக்கின்ற காரணத்தினால், மத்திய அரசு ஒரு திட்டத்தினை அறிவித்தது. அந்தத் திட்டத்தின் வாயிலாக, வருகின்ற மொத்தத் தொகையையும் கரும்பு விவசாயிகளுக்குத்தான் கொடுக்கவேண்டும் என்று ஆணையிட்டு, அதன்படிதான் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் சொல்வதுபோல் அவர்கள் வேறு செலவுகள் செய்ய முடியாது. ஏனென்றால் கடனைக் கொடுக்கும்போதே, விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும் என்பதைத்தான் கண்டிஷனாகப் போடுகிறார்கள். அதனை அந்த வங்கிகளும் கண்காணித்துக் கொண்டுதான் இருக்கின்றன. யாருக்குக் கடன் கொடுத்தார்கள் என்கிற விவரத்தினை வங்கிக்குக் கொடுக்கவேண்டும். 2011-2012 ஆம் ஆண்டு எந்த மில்லும் தரவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். அதற்கு என் பதிலுரையில் விளக்கம் சொல்லலாம் என்று இருந்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க நாங்கள் 2 மாத காலமாக பல்வேறு முயற்சிகள் எடுத்ததன் காரணமாக, 2012-2013-ல் மட்டும் ரூ.19 கோடி இருக்கின்றது. அதையும் இன்னும் ஒரு வார காலத்திற்குள் கொடுத்துவிடுவார்கள். மீதியை இந்த மாதக் கடைசிக்குள் கொடுத்துவிடுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் எந்த அளவிற்கு விவசாயிகள்மீது அக்கறை கொண்டிருக்கிறீர்களோ, அதற்கும் மேலாக மாண்புமிகு அம்மா அவர்கள் விவசாயிகள்மீது

[திரு. பி. தங்கமணி] [2014 ஜூலை 14

அக்கறை கொண்டு, படங்கள் அவர்களைச் சென்றடையும்வகையில் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், அடுத்த கருத்துக்குச் செல்லுங்கள்.

திரு. க. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது மத்திய அரசு அறிவித்திருக்கின்ற ரூ.4,400 கோடி கடனைப் பெறவேண்டும் என்று சொன்னால், தனியார் ஆலைகள் அடமானப் பத்திரம் கொடுக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், சக்தி சர்க்கரை ஆலை போன்ற நிறுவனங்களுக்கு அடமானம் கொடுப்பதற்கு எத்தகுதிமான சொத்துகளும் இல்லாத நிலையில், அந்தப் பணம் கிடைப்பது கேள்விக்குறியாக மாறியிருக்கிறது. சக்தி சர்க்கரை ஆலை போன்ற ஆலைகளிலுமே 2012-2013-லிருந்து பாக்கி இருக்கிறது. கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு, இப்பொழுது 50 கோடி ரூபாய் அளவில் கடன் பாக்கி வைத்திருக்கிறார்கள். எனவே, அவர்கள் உடனடியாகக் கொடுப்பதற்கான வாய்ப்புகள் இல்லை என்பதைத்தான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, அதைச் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும். கரும்பு விவசாயிகள் மற்றும் சர்க்கரை ஆலை நிருவாகத்தினரை அரசு அழைத்து பேச்சுவார்த்தை நடத்தவேண்டும். ஏனென்று சொன்னால், சர்க்கரை ஆலை நிருவாகத்தினர் பல காரணங்களை சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்; கரும்புக்கு விலையை உயர்த்துகிறார்கள். ஆனால் அவர்கள் சர்க்கரையை உற்பத்தி செய்து, 60 சதவிகிதம் பெப்சி, கோலா போன்ற பன்னாட்டு நிறுவனங்களுக்குக் கொடுக்கிறார்கள். ஆனால், சர்க்கரைக்கான விலையை கூடுதலாகக் கொடுத்து வாங்குவதற்கு பன்னாட்டு நிறுவனங்களுக்கு அரசு அனுமதி கொடுப்பதில்லை. அதைப்போல, எத்தனால் எடுத்து பெட்ரோலில் கலப்பதற்கான அனுமதியை மத்திய அரசு அறிவித்தும், அதனை நடைமுறைப்படுத்தாத காரணத்தினால் எத்தனால் உற்பத்தி பாதிக்கப்படுகிறது.

அதேபோல இன்றைக்கு சர்க்கரை ஆலைகளின் ஒரு தொடர் நடவடிக்கையாக Co-generation Firm-என்ற முறையில் மின்சாரம்

2014 ஜூலை 14] [திரு. க. குணசேகரன்]

தயாரிக்கின்ற ஆலையை நிர்வகித்துவருகின்றார்கள். ஆனால், மின் தட்டுப்பாடு இருக்கின்ற காலத்தில்கூட, நமது தமிழ்நாடு அரசு அந்த ஆலைகளிலிருந்து மின்சாரம் வாங்க மறுத்திருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது)

மேலும், சக்கையிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய காலங்கள் போக, மற்ற காலங்களில் நிலக்கரியைப் பயன்படுத்தியும், மின்சாரத்தை உற்பத்தி செய்கிற அளவில் மின் நிலையங்களை அமைத்திருப்பதாகவும், அதன் மூலமாக 300-லிருந்து 400 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும் என்றும், தகுந்த விலையைக் கொடுத்து அரசு வாங்க மறுக்கிற காரணத்தால், கரும்பு விவசாயிகளுக்குக் காலத்தில் பணம் கொடுக்கமுடியாவில்லை என்றும் சொல்கிறார்கள். இது ஆலை சம்பந்தப்பட்டது மட்டுமல்ல, விவசாயிகள் சம்பந்தப்பட்டதுங்கூட என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது விவசாயின் மற்றும் ஆலைத் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டதுதான். ஆனால் சொல்கிற தகவல் உண்மையான தகவலாக, சரியான தகவலாக இருக்க வேண்டுமல்லவா? சர்க்கரை ஆலைகள் உற்பத்தி செய்கின்ற இணை மின் உற்பத்தியை எந்தச் சூழ்நிலையிலும் தமிழ்நாடு மின்சார வாரியம் வாங்க மறுத்ததேயில்லை. அதற்கு ஏதாவது ஆதாரம் இருந்தால் அதை முதலில் மாண்புமிகு உறுப்பினர் கொடுங்கள். நாங்கள் பொறுப்பேற்றுக்கொள்கிறோம். இன்னும் சொல்லப்போனால், தனியார் ஆலைகளாக இருந்தாலும் சரி, கூட்டுறவு ஆலைகளாக இருந்தாலும் சரி, இணை மின் உற்பத்தி செய்கிற அத்தனை பேரும் "கொள்முதல் கட்டணம் போதுமான அளவுக்கு இல்லை" அதை அவர்களுக்குக் கூடுதலாக உயர்த்தித் தரவேண்டுமென்ற ஒரே கருத்தைத்தான் சொல்கிறார்களே தவிர, அவர்கள் உற்பத்தி செய்ததை நாங்கள் வாங்க மறுக்கிறோம் என்று குற்றச்சாட்டு எதுவும் சொல்வதில்லை. கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் Co-generation முறையில் இணை மின் உற்பத்திப் பிரிவை இப்பொழுதுதான் நிறுவியிருக்கிறார்கள். உற்பத்தி இன்னும் ஆரம்பிக்கவில்லை. தனியார் ஆலைகளில் அவர்கள் தேவைக்குப் போக மீதியிருப்பதை நாங்கள் கொள்முதல் செய்துகொண்டுதான்

[திரு. தத்தம் அர். விசுவநாதன்] [2014 ஜூலை 14

இருக்கிறோம். அவர்கள் கட்டணத்தை எங்களுக்கு உயர்த்தித் தாருங்கள் என்றுதான் கேட்கிறார்கள். ஆனால், தமிழ்நாடு மின்சார வாரியம் நேரடியாக கட்டணத்தை உயர்த்தமுடியாது. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்தான் அதை முடிவு செய்யவேண்டும். தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தில் அவர்கள் முறையிட்டால், அதனுடைய நீர்ப்பின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும் என்றுதான் சொல்லியிருக்கிறோம். எந்த இடத்திலும் எப்போதும் அவர்களிடமிருந்து மின்சாரம் கொள்முதல் செய்ய மறுக்கவில்லை என்பதை மீண்டும் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கிடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் நீங்கள் பேசுங்கள்.

திரு. க. குணசேகரன்: Biogasse மூலமாக உற்பத்தி செய்யக்கூடிய மின்சாரத்தைத் தவிர்த்து, நிலக்கரி மூலமாக அவர்கள் உற்பத்தி செய்வதற்கான வாய்ப்பிருந்தும், அதைப் பயன்படுத்த முடியவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அதை சரிபார்க்க வேண்டும். அதைப்போல, கடந்த ஆண்டு நமது மத்திய அரசும், தமிழக அரசும் இணைந்து கரும்புக்கான விலையை டன்னுக்கு 2,350 ரூபாய் என்று அறிவித்தது. ஆனால், தனியார் சர்க்கரை ஆலைகள், அதற்கு முந்தைய ஆண்டு கொடுத்த விலையைத்தான் கொடுப்போம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இதுபற்றி பலமுறை சொல்லியிருக்கிறோம். நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், அவர்களை அழைத்துப் பேசி அரசு அறிவித்திருக்கிற அந்த விலையைக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியபோது, மத்திய அரசும், மாநில அரசும் சேர்த்து 2,550 ரூபாய் என்று அறிவித்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசு அறிவித்த விலை ரூ.2,100/- மாண்புமிகு அம்மா அவர்கள்தான் போக்குவரத்துக் கட்டணமாக ரூ.550/-ம் சேர்த்து ஆக மொத்தம் ரூ.2,650/- கொடுத்து விவசாயிகளைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்களே தவிர, மத்திய அரசுக்கு இதில் எவ்விதப்

2014 ஜூலை 14] [திரு. பி. தங்கமணி]

பங்குமில்லை. இன்னொரு விளக்கத்தையும் பதிலுரையில் சொல்லலாமென்றிருந்தேன். தனியார் மில்களைப் பொறுத்தவரை, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க மூன்று முறை நாங்கள் அழைத்துப் பேசினோம். அதன் விளைவாக, விவசாயிகளுக்கு ஆலைகள் கொடுக்க வேண்டிய நிலுவைத் தொகை 840 கோடி ரூபாயாக இருந்தது, இப்பொழுது 527 கோடி ரூபாயாகக் குறைந்திருக்கிறது. இன்னும் ஒரு மாத காலத்திற்குள் முழுமையாகக் கொடுத்து முடித்துவிடுவதாகவும் சொல்லியிருக்கின்றார்கள். நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்போில், பணத்தை வாங்கி கரும்பு விவசாயிகளுக்குக் கொடுப்பார்கள் என்பதில் எந்த மாற்றமுமில்லை என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்னுமொன்றை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். உயர் நீதிமன்றத்தின் வாயிலாக Area Delimitation Committee-ஐ அமைத்து, அதன்மூலம், விவசாயிகள் கூட்டுறவுச் சங்க ஆலையோடு இருக்க விருப்பமா அல்லது தனியார் ஆலையோடு இருக்க விருப்பமா என்று கேட்டபோது, 50% விவசாயிகள் நாங்கள் தனியார் ஆலைகளோடு செல்கின்றோம் என்று சொன்னார்கள். அங்கே பணம் கொடுக்கவில்லையென்றால் மட்டும் அரசை நெருக்குகின்றார்கள். மேலும், தனியார் மில்கள் அருகில் விளையும் பதிவு செய்யப்படாத கரும்பை வெட்டிக்கொண்டிருந்தார்கள் இப்பொழுது விலை அதிகமாகிவிட்ட காரணத்தினால், தனியார் மில்கள் பதிவு செய்யப்படாத கரும்பை வெட்டுவதில்லை. இது மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குச் சென்றவுடன், கள்ளக்குறிச்சி-1, கள்ளக்குறிச்சி-2 ஆகிய இரண்டு மில்களையும் சீனில் ஓட்டச்சொல்லி கிட்டத்தட்ட 2,40,000 டன் கரும்பை எடுத்து, விவசாயிகளைக் காப்பாற்றி, 2,650 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், நீங்கள் பேசுங்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகம் 19 ஆம் பக்கத்தில்

[திரு. க. குணசேகரன்] [2014 ஜூலை 14

தமிழக அரசால் நில வங்கி உருவாக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் நில எடுப்பு சம்பந்தமாகச் சொல்லும்போது, இத்த நில வங்கி விவசாய நிலங்களைக் கவனமாகத் தவிர்த்து, தரிசு மற்றும் சாகுபடிக்கு உதவாத நிலங்களைக் கொண்டு உருவாக்கப்படும் என்று அறிவித்திருக்கிறீர்கள். ஆனால், மதுரை, செவரக்கோட்டை நில எடுப்புப் பிரச்சினையில் அதைக் கைவிடுவோம் என்று இன்று வரை அரசு சொல்லவில்லை. மறைமுகமாக நிலங்களை கையகப்படுத்துவதற்கான பணிகள் நடந்து கொண்டேயிருக்கின்றன. அங்கே அரியவகை தாவரங்கள், விளைபொருட்கள், தானியங்கள் ஆகியவை உற்பத்தி செய்யப்படுவதைப் பற்றி பலமுறை இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்களைச் சந்தித்து, விவசாயிகளை அழைத்து வந்து சொல்லியிருக்கிறோம். 1,500-க்கும் மேற்பட்ட விவசாயிகள் பாதிப்பிற்கு உள்ளாகியிருக்கிறார்கள். தரிசு நிலங்கள் பக்கத்திலே ஏராளமாக இருக்கின்றன. அவற்றைக் கையகப்படுத்தலாம் என்று சொன்னால்கூட, அதை விடுத்து மீண்டும் விளைநிலங்களை எடுப்பதற்கான நடவடிக்கையைத் தொடர்வது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இத்தப் பிரச்சினை உச்ச நீதிமன்றம் வரை எடுத்துச் செல்லப்பட்டு, உச்ச நீதிமன்றம் இடத்தை அரசு கையகப்படுத்தலாம் என்ற உத்தரவும் தந்திருக்கிறது. அதற்குப் பிறகுதான் அவர்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அழைத்து வந்தார்கள். இருந்தாலும், மொத்தம் 1,478 ஏக்களில் 100 விவசாயிகள்தான் தரமாட்டோம் என்று சொல்லியிருக்கிறார்கள். மற்றவர்களெல்லாம் எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்கின்றார்கள். ஒன்பது தென் மாவட்டங்களிலும் நிலத்தை எடுத்து தொழில் வளர்ச்சி வரவேண்டுமென்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். அதையும் குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்று சொன்னால், மதுரை-தூத்துக்குடி Industrial Corridor அமைக்க இருக்கின்ற காரணத்தினால், அதிகமான அளவில் நிலங்கள் தேவையாக இருக்கிறது. பாரையும் வற்புறுத்தி வெள்ளாமை இடத்தை எடுக்கின்ற நோக்கம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்கு இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 2 ஆயிரம்

ஏக்கர் நிலம் எதிரில் இருக்கின்றது என்று சொல்லி இருக்கின்றார்கள். அதையும் நாங்கள் ஆய்வு செய்துகொண்டிருக்கிறோம். அது வந்தால்கூட, மறுபரிசீலனை செய்வோம் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) clarification இல்லை. உறுப்பினர் திரு. சு. குணசேகரன், பேசுங்கள். (குறுக்கீடுகள்) No clarification. (குறுக்கீடுகள்) நீங்கள் அப்புறம் பேசலாம். (குறுக்கீடுகள்) இன்னும் 3 உறுப்பினர்கள் பேசவேண்டும். அதற்குப் பிறகு மாண்புமிகு அமைச்சருடைய பதிலுரை இருக்கிறது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செவரக்கோட்டையில் கடந்த ஆட்சியில் நிலம் எடுக்கப்பட்டது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அதை எதிர்த்தது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தேர்தல் நேரத்தில், கையகப்படுத்தப்பட்ட விளைநிலங்கள் திரும்பக் கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய இன்றைய பதில் மீண்டும் அந்த நில எடுப்புப் பணியை உறுதிப்படுத்தும் விதமாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) செல்வி பாலபாரதி, நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள்? (குறுக்கீடு) நீங்கள் சுருக்கமாகப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) பேசச் சொல்கிறேன். இருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் திருமதி விஜயதரணி பேசட்டும். அப்புறம் நீங்கள் பேசுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: Point of order என்ன என்று சொல்லி நேரடியாக கருத்துக்கு வாருங்கள். கேள்வியெல்லாம் கேட்டுக்கொண்டிருக்கக்கூடாது. Point of order என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) Come to the Point of order .

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் அனுமதிக்கிணங்க அகற்றப்பெற்றது.

திருமதி எஸ். விஜயதரணி: **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் பேசியது Point of order இல்லை. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. செல்வி பாலபாரதி, நீங்கள் கேளுங்கள். (குறுக்கீடு) இல்லை. நீங்கள் உட்காருங்கள். இப்போது இந்தப் பேச்சில் Point of order இல்லை.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் அருகில் இருக்கக்கூடிய செவரக்கோட்டை விவசாய விளை நிலங்கள் சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்த 3 ஆண்டுகளாக ஒரு வாக்குறுதி கொடுத்தார்கள். அதாவது, நிச்சயமாக இந்த ஆட்சியில் விளை நிலங்களை எடுக்கமாட்டார்கள் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். அந்த வாக்குறுதியின் அடிப்படையில், இப்போது சிப்காட்டும் அமைக்கவில்லை. ஏனென்றால் அந்த உத்தரவு இன்னும் ரத்து செய்யப்படவில்லை. ஆகவே, அந்த உத்தரவை ரத்து செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் முதலிலேயே சொன்னேன். அங்கே இருக்கின்ற விவசாயிகளில் 50% பேர் எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் முன்னிலையில் அவர்களை அழைத்து வந்து பேசினோமா இல்லையா? அவர்களில் 50% பேர் தருவதாகச் சொன்னாலும், குறிப்பிட்ட அளவிற்குக் குறைவாகத்தான் நிலம் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். ஆகையால் கடுமையான நடவடிக்கை எடுக்காமல், அதற்கு எதிரில் இருக்கின்ற நிலத்தை நாங்கள் பார்த்துக்கொண்டிருக்கிறோம். நிலம் எடுப்பதில் இதுபோன்ற சிக்கல்கள் வந்தால் எப்படி தொழிற்சாலைகளைக் கொண்டுவர முடியும். பக்கத்தில் இருக்கின்ற ஆந்திர மாநிலம், நடாவில் இடம் இருக்கிறது, வாருங்கள், வாருங்கள் என்று இங்கே வந்து அழைத்துவிட்டுச் சென்று இருக்கிறார்கள். போட்டி நிறைந்த

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2014 ஜூலை 14] [திரு. பி. தங்கமணி]

உலகம். இந்த அளவுக்கு இருக்கின்றபோது, யாரும் பாதிக்கப்படுகிற அளவிற்கு, விளை நிலங்கள் எடுக்கப்படமாட்டாது என்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் கொள்கை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. குணசேகரன் அவர்கள்.

திரு. க. குணசேகரன்: இந்த அரசு கவனமாகப் பரிசீலித்து விவசாய நிலங்களைக் கையகப்படுத்துவதைக் கைவிடும் என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். அது கடந்த ஆட்சியில் எடுக்கப்பட்ட நிலம்; நீங்கள் எடுக்கவில்லை. அதை நீங்கள் எதிர்த்தீர்கள். தேர்தல் நேரத்தில் நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். ஆனால், அந்த நில எடுப்பினை மீண்டும் உறுதிப்படுத்துவது என்பது சரியல்ல. ஏனென்றால் பக்கத்திலே 6 ஆயிரம், 7 ஆயிரம் ஏக்கருக்குமேல் நிலங்கள் இருக்கின்றன. நீங்கள் அந்த நிலத்தை எடுங்கள். அங்கே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடியாக ஆய்வு செய்துவிட்டு, அதன்பிறகு நீங்கள் முடிவு செய்யுங்கள். ஆய்வு செய்யாமல் முடிவு எடுப்பது என்பது பொருத்தமாக இருக்காது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதேபோல, இந்த அறிக்கையில் சிமெண்ட் நிறுவனத்தைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. 1969 ஆம் ஆண்டில் டிட்கோ சார்பில். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. குணசேகரன், நீங்கள் பேசத் தொடங்கி 18 நிமிடங்கள் ஆகிவிட்டன. சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. க. குணசேகரன்: நான் பேசத் தொடங்கி 18 நிமிடங்கள் ஆகவில்லை. நான் மட்டுமல்ல, மற்றவர்கள் எல்லோரும் பேசினார்கள். 1969 ஆம் ஆண்டு தொடங்கப்படும்போது, 4 இலட்சம் டன் ஆலங்குளத்தில் உற்பத்தி செய்திருக்கிறீர்கள். ஆனால், இப்போது உற்பத்தி 2 இலட்சம் டன்தான். அதேசமயத்தில், அரசு சார்ந்த ஜாரக வளர்ச்சித் துறைக்கே 13 இலட்சம் டன் அளவிற்கு ஆண்டுதோறும் தேவை இருக்கிறது. அப்படி இருக்கிற நேரத்தில் சிமெண்ட் விலையைத் தனியார்

[திரு. கு. குணசேகரன்] [2014 ஜூலை 14

இஷ்டத்திற்கு உயர்த்துவதும், கட்டுமானப் பொருட்களின் விலையை ஏற்றுவதும் தறிகெட்டுப் போயிருக்கக்கூடிய நிலையில், சாதாரண ஏழைமெனிய மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அரசு சிமெண்ட் நிறுவனம் புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி கூடுதலான தொழிற்சாலைகளைத் தொடங்கி, அரசு வேலைகளுக்கும், சாதாரண நடுத்தர மக்களுக்கும் பயனுள்ள வகையில் செயல்படவேண்டும். எனவே, அதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆலங்குளத்திலே சிமெண்ட் உற்பத்தி 4 இலட்சம் டன்னாக இருந்து, இப்போது 2 இலட்சம் டன்னாகக் குறைத்தது என்று சொல்கின்றார். ஆலங்குளத்தைப் பொறுத்தவரை அது மிகவும் பழமையான மில். ஈரப்பதத்தோடு இருக்கின்ற காரணத்தினால் அதிலே குறிப்பிட்ட அளவிற்கு மேல் எடுக்கின்றபோது அதிக நஷ்டம் ஏற்படுகின்றது. இருந்தாலும் அங்கு இருக்கின்ற தொழிலாளர்களுடைய வேலைவாய்ப்பைப் பறிக்கக்கூடாது என்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் எவ்வளவு நஷ்டம் வந்தாலும், அந்த மில்லை ஓட்டிக்கொண்டிருக்கிறோம். அரியலூர் மில்லைப் பொறுத்தவரை இப்போது D.P.R. கிடைத்துவிட்டது. இப்போது டெண்டர் கோரும் நிலைக்கு வந்துவிட்டது. அது வந்ததற்குப் பிறகு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உறுதியாக நடவடிக்கை எடுத்து, 5 இலட்சம் டன் உற்பத்தியை 15 இலட்சம் டன்னாக அதிகரிக்க இருக்கின்றார்கள். அதற்குப் பிறகு, ஆலங்குளம் ஆலைக்கும் அதேபோன்று நடவடிக்கை எடுக்க இருக்கின்றோம் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாகச் சொல்லிக்கொள்கிறேன். சிமெண்ட் விலையைப் பற்றி அவர் சொன்னார். அதற்கு என்னுடைய பதிலுரையில் விளக்கம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. குணசேகரன் அவர்கள். சுருக்கமாகப் பேசுங்கள்.

2014 ஜூலை 14]

திரு. கு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சி பற்றிய கோரிக்கை நீண்டகாலமாக இந்த அவையிலே முன்வைக்கப்படுகிறது. வாக்குறுதிகள் தரப்படுகின்றன. ஆனால் போதிய அளவிற்கு தென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சி இல்லாத நிலையே நீடித்துக்கொண்டிருக்கிறது. அதனால்தான் அவை பின்தங்கியிருக்கின்றன. பல்வேறு விதமான பிரச்சினைகளும் உருவாகி, சட்டம்-ஒழுங்கு பாதிப்பு ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்திருக்கின்றன. எனவே, நீங்கள் கடந்த முறை அறிவித்த நிலங்களைக் கையகப்படுத்தி, உடனடியாக தொழிற்சாலைகளைத் தொடங்கவேண்டும். இப்பொழுது மரபு சாரா எரிசக்தி என்பதில் சோலார் மின்சாரமும், காற்றாலை மின்சாரமும் பயனுள்ள மின்சாரமாக மிக அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. கடந்த வாரம்கூட நான் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு சென்றபோது, எங்கு பார்த்தாலும் இடைவிடாது காற்றாலை மின்சாரம் 3 ஆயிரம் மெகா வாட்டிற்கு மேல் உற்பத்தி செய்வதைப் பார்த்தேன். இது மிகவும் சிறப்புக்குரியது. ஆனால், உபகரணங்கள் முழுவதும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. இங்கு பொறியியல் கல்லூரிகள் அதிகமாக இருக்கின்றன, படித்தவர்கள் அதிகமாக இருக்கிறார்கள், இடங்கள் இருக்கின்றன. தொழில் செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனால், நாம் உற்பத்தி செய்யக்கூடிய காற்றாலை, சோலார், அதனுடைய டெக்னாலஜி உபகரணங்கள், உதிரி பாகங்கள் அனைத்தும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுவது எந்தவகையில் பொருத்தமாக இருக்கும்? எனவே, மின்சாரத்தை அதிகமாக உற்பத்தி செய்கின்ற இந்த நேரத்தில் காற்றாலை, சோலார் உதிரி பாகங்களை உற்பத்திச் செய்வதற்கான பொதுத் துறை நிறுவனங்களை சிவகங்கை போன்ற மாவட்டங்களில் தொடங்குவது சரியாக இருக்கும். அதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காற்றாலை மின் உற்பத்தி, சூரிய ஒளி மின்சக்திக்கு வேண்டிய உபகரணங்களைச் செய்வதற்கு தனியார் யாராவது முன்வந்தால் மாண்புமிகு அம்மா

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2014 ஜூலை 14

அவர்களுடைய அரசு நிச்சயமாக அவர்களை மகிழ்ச்சிப்படுத்தி, அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதற்குத் தயாராக இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் சொல்வதுபோல் உங்களுக்கு தெரிந்த தொழிலதிபர்கள் யாரேனாவது சிவகங்கையில்கூட தொழிற்சாலையைத் துவங்கச் சொல்லுங்கள், அட்சேபணை இல்லை. அதற்கு அரசு ஒத்துழைப்பு வழங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. குணசேகரன் அவர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல பதிலைச் சொல்லியிருக்கிறார்கள். உடனே முடித்துவிடுங்கள். நல்ல பதிலோடு முடித்துவிடுங்கள்.

திரு. கு. குணசேகரன்: நமது மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் நல்ல பதிலைச் சொன்னார்கள், மிக்க நன்றி. நாங்கள் கூப்பிட்டால் யாரும் வரமாட்டார்கள். அதனால் நீங்கள் கூப்பிடுங்கள். பொதுத் துறை நிறுவனமாக அரசு சார்பில் செய்யலாம் என்பது என்னுடைய கருத்து. அதையும் பரிசீலிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: நீங்கள் சொல்வது உண்மை. ** மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியிலே தொழில் அமைதி நிலவுவதால் எல்லாரும் இங்கே வருகிறார்கள். சம்பந்தப்பட்டவர்கள் வந்தால் அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

பிற்பகல் 1-40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. குணசேகரன், பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் உறுப்பினர்தான் பேசுகிறார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: எங்களுடைய தொழிற்சங்கம் இரண்டு கண் போன்றது. தொழில் நிறுவனமும்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் குறிப்பினைக் அகற்றப்பெற்றது.

2014 ஜூலை 14] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

ஒரு கண், அதில் பணிபுரிகிற தொழிலாளியும் ஒரு கண். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நிறுவனம் இருந்தால்தான் அங்கே தொழில் புரிய முடியும். தொழிலாளி நன்றாக இருந்தால்தான் அந்த நிறுவனம் வாழ முடியும். அதாவது, இரண்டு பேர்களுடைய நலனையும் பார்ப்பது எங்களுடைய ஏடிபி. தொழிற்சங்கம். ஒரு தலைபட்சமாக பார்ப்பது உங்களுடைய தொழிற்சங்கம். (குறுக்கீடுகள்) எப்போதுமே ஏடிபி. சங்கம் சமூகவிரோத செயல்களில் ஈடுபடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள்தான் தவறான தகவல்களைத் தெரிவித்திருக்கள். அண்ணா தொழிற்சங்கத்தைப் பொறுத்தவரையில் (குறுக்கீடுகள்) கொஞ்சம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) என்னை பேச விடுங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது, நீங்கள் குறுக்கிடக் கூடாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: உறுப்பினர் எதை நீக்கச் சொல்றார்? (குறுக்கீடுகள்) அண்ணா திமுக. தொழிற்சங்கம் எப்போதுமே சாத்வீக அடிப்படையில்தான் போராடும். (குறுக்கீடுகள்) எந்தவிதத்திலும் வன்முறையைக் கையில் எடுக்காது. (குறுக்கீடுகள்) கட்சியும் சரி, ஆட்சியும் சரி, (குறுக்கீடுகள்) புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பொறுத்தவரையில், எங்களுடைய தொழிற்சங்கமாக இருந்தாலும் சரி, கட்சியாக இருந்தாலும் சரி, ஆட்சியாக இருந்தாலும் சரி, ஒருவர் தவறு செய்தால், அவர் அடிப்படை உறுப்பினர் நிலையிலிருந்து நீக்கப்படுகிறார். இங்கே சாமியார் தவறு செய்தாலும் சரி, சாமானியர் தவறு செய்தாலும் சரி, எல்லோர்மீதும் நடவடிக்கை உண்டு. இங்கே தவறு செய்பவர்களை மாண்புமிகு அம்மா அவர்கள் ஊக்கப்படுத்துவதில்லை. கட்சியிலும் சரி, தொழிற்சங்கத்திலும் சரி, அவர்கள் (குறுக்கீடுகள்) அப்படித் தவறு செய்திருந்தால் மாண்புமிகு அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்து விடுவார்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள், என்ன சொல்லுகிறீர்கள்? நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. சவுந்தரராசன், நீங்கள் பேசுவது எதுவுமே அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்)

[பேரவைத் துணைத் தலைவர்] [2014 ஜூலை 14

திரு. சு. குணசேகரன், நீங்கள் பேசி முடியுங்கள். (குறுக்கிடுகள்) மாண்புமிகு அமைச்சர் தவறான கருத்து எதுவும் சொல்லவில்லையே? (குறுக்கிடுகள்) திரு. சு. குணசேகரன், நீங்கள் பேசி முடியுங்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அண்ணா நிராவிட முன்னேற்றக் கழகத்தில் தவறு செய்பவர்களை நீக்குவார்கள் என்று சொன்னார்கள். நான் பணிவன்பாக, தெளிவாகச் சொல்லிக்கொள்கிறேன். கம்யூனிஸ்டு கட்சியில் உறுப்பினரைச் சேர்க்கும் போதே பரிசீலித்து, தவறு செய்யாதவர்களைத்தான் நாங்கள் உறுப்பினராகச் சேர்க்கிறோம் என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. குணசேகரன், தொழில் துறை மானியத்தில் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் த. ஹரிதாஸ், பேசுங்கள். (குறுக்கீடு) உங்களுக்குக் கொடுத்த நேரம் முடிந்துவிட்டது. (குறுக்கீடு) திரு. குணசேகரன், நீங்கள் சப்ஜெக்ட்டை வேறு பக்கம் கொண்டு போகிறீர்கள். (குறுக்கீடு)

திரு. க. குணசேகரன்: நான் சப்ஜெக்ட்டை வேறு பக்கம் கொண்டு போகவில்லை. அவர்தான் கொண்டு போனார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் வேறு பக்கம் கொண்டு போகிறீர்கள். (குறுக்கீடு) பேசி முடியுங்கள்.

திரு. சு. குணசேகரன்: இங்கே இரண்டு நாட்களுக்கு முன்பு மேசையில் மாண்புமிகு தமிழக முதல்வருடைய பொன்மொழிகள் அடங்கிய ஒரு புத்தகம் வைக்கப்பட்டது. அதிலே இயற்கை வளங்களைப் பற்றி ஒரு கருத்தை மிகச் சிறப்பாக அவர் சொல்லியிருக்கிறார். 'ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி என்பது இயற்கை வளங்களான கனிம வளம், நீர் வளம், நில வளம், எரிபொருள் வளம் ஆகியவற்றை முறைப்படி பயன்படுத்துவதாகும்' என்று சொல்லியிருக்கிறார். அதில் எங்களுக்கு முற்றிலும் உடன்பாடு உண்டு. அந்த அடிப்படையிலே, மணலையும் கனிம வளத் துறையோடு இணைக்கவேண்டும். ஏனென்று சொன்னால் மணலை தங்குதடையில்லாமல் பயன்படுத்துவதால் சுற்றுச்சூழல் மிகப் பெரிய பாதிப்பு அடைகிறது. குடிநீர் பாதிப்பு அடைகிறது. அதைப்போல, செம்மண்

2014 ஜூலை 14] [திரு. க. குணசேகரன்]

குவாரிகளுக்குக்கூட மணல் ஒரு அரிதான பொருளாக மாறியிருக்கிற நேரத்தில், அதை கனிம வளத்திலே கொண்டு வந்து இணைக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் த. ஹரிதாஸ், பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசி முடிக்கமாட்டீர்கள். டாக்டர் ஹரிதாஸ் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்தரராசன் பேசிய பேச்சுகள் எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடு) நீங்கள், இன்றைக்கு கோபமாக வந்திருக்கிறீர்கள். டாக்டர் ஹரிதாஸ், நீங்கள் பேசுங்கள்.

டாக்டர் த. ஹரிதாஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். அரை மணிநேரம் உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசியிருக்கிறார். (குறுக்கீடுகள்) இதை அவையில்லாமல் நீங்கள் இப்போது பேசுகிறீர்கள். (குறுக்கீடுகள்) திரு. குணசேகரன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் பேசுவதற்குப் போதுமான நேரம் வழங்கப்படுகிறது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: எங்கள் கட்சி நல்ல கட்சி என்று சொன்னோம். அதில் உங்களுக்கு என்ன வருத்தம்? (குறுக்கீடுகள்) முக்கியமாக கட்டுப்பாடு கொண்ட தொழிற்சங்கம் எங்கள் இயக்கம் என்று சொல்கிறோம், அதில் உங்களுக்கு என்ன வருத்தம்? (குறுக்கீடுகள்)

பிற்பகல் 1-45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பாலகிருஷ்ணன் நீங்கள் எதற்காக எழுந்து நின்று பேசுகிறீர்கள், அமருங்கள். (குறுக்கீடு) நான் விளக்கம் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு என்ன உரிமை கொடுக்காமல் இருக்கிறது? உட்காருங்கள். (குறுக்கீடு) நான் அவையை நடத்திக்கொண்டிருக்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் என்ன கருத்தைப் பேச வருகிறீர்கள்? (குறுக்கீடு) நீங்கள், தன்போக்கில் எழுந்து, தன்போக்கில் பேசுகின்றீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் (குறுக்கீடு) தேவையான நேரத்தில் தேவையான கருத்தை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அது அவைக் குறிப்பில்

[பேரவைத் துணைத் தலைவர்] [2014 ஜூலை 14

ஏறிக்கொண்டிருக்கிறது. (குறுக்கிடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கிடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுவதற்கு நின்றுகொண்டிருக்கிறார் (குறுக்கிடு) அதெல்லாம் பேசவில்லை, பேசாததையெல்லாம் பேசியதாகச் சொல்கிறீர்கள், நீங்கள் முதலில் உட்காருங்கள். (குறுக்கிடு) அவருடைய கட்சியின் கொள்கையைத்தான் அவர் சொன்னார், உட்காருங்கள். (குறுக்கிடு) மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சம்பூனிஸ்டு கட்சியின் கொறடா அவர்கள் பேசுகின்றபோது எங்களுக்கு வாய்ப்பு மறுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். நீங்கள் சித்தித்துப் பார்க்க வேண்டும். மரியாதைக்குரிய உங்கள் தலைவர் அவர்களும், துணைத் தலைவர் அவர்களும் கேட்டபோது, உடனடியாக வாய்ப்புக் கொடுக்கப்பட்டு, அவர்கள் பேசி, அதற்கு நாங்கள் பதிலும் சொல்லியிருக்கிறோம். (குறுக்கிடு) ஒவ்வொருவரும் எழுந்து ஒவ்வொரு முறையும் கேட்டுக்கொண்டிருந்தால் எப்படி? (குறுக்கிடு) உங்கள் கட்சி உறுப்பினர்தானே இரண்டு பேர் பேசினார்கள். (குறுக்கிடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன் அவர்கள் பேசுகின்றபோது மணலைப் பற்றிச் சொன்னார்கள். மணலை நேரடியாக அரசோ, பொதுப் பணித் துறையோ, கனிம வளத் துறையோ கொடுப்பதில்லை. நாங்கள் இடத்தை மட்டும்தான் தேர்வு செய்து கொடுக்கின்றோம். மாதிரி சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம், அந்த இடத்தில் குடிநீர் பாதிக்கப்பட்டிருக்கிறதா, சுற்றுசூழல் பாதிக்கப்பட்டிருக்கிறதா என்று மதிப்பீடு செய்து அரசுக்குப் பரிந்துரை செய்தால் மட்டுமே அரசு அந்த ஆணையை வழங்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எந்த நேரத்திலும் குடிநீர் பாதிப்படையோ, சுற்றுச்சூழல் பாதிப்படையோ மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு அனுமதிக்காது என்பதையும் தான் இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் குறிப்பிட்டு ஏதாவது இடத்தைச் சொன்னால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 ஜூலை 14]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹரிதாஸ் அவர்கள்.

டாக்டர் த. ஹரிதாஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "எண்ணங்களைப் பற்றி கவனமாக இருங்கள்; அவை வார்த்தைகளாக வெளியேறுகின்றன, வார்த்தைகளில் கவனமாக இருங்கள்; அவை செயலாக உருப்பெறுகின்றன. செயல்களில் கவனமாக இருங்கள்; அவை பழக்கமாக மாறுகின்றன, பழக்கங்களில் கவனமாக இருங்கள்; அவை ஒழுக்கமாக உயர்வு பெறுகின்றன, ஒழுக்கத்தில் கவனமாக இருங்கள்; அது நம் வாழ்க்கையை மேம்படுத்தும், ஒன்றரை கோடி தமிழ் தொண்டர் எண்ணங்களில் கவனமாக, வார்த்தைகளில் கவனமாக, செயல்களில் கவனமாக, பழக்கங்களில் கவனமாக, ஒழுக்கங்களில் கவனமாக இருக்கச் செய்து, வழி நடத்தும்" அன்புத் தாயே! மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் அம்மா அவர்களே! எங்களை வாழவைக்கும் தெய்வம் நீங்கள்! எங்கள் நெஞ்சில் வாழும் தெய்வமும் நீங்களே! காக்கும் தெய்வமான உங்களைக் கனவிலும் மறவோம் நாங்களே, உங்களின் பொற்பாதம் தொட்டு, என் உரையைத் தொடங்குகிறேன்.

தமிழக மக்களையே, தன் மக்களாகத் தத்தெடுத்துக் கொண்டவர்தான், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அம்மா அவர்களேகூட, மற்றவர்கள் என்னை "அம்மா" என்று அழைப்பதிலேதான் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன் என்று கூறியுள்ளார்கள். அந்தவகையில் என்னையும் தன் மகனாகத் தத்தெடுத்துக்கொண்ட அம்மாவின் பொற்பாதங்களை மீண்டும் வணங்குகிறேன்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் அம்மா அவர்களே, தமிழக மக்கள் உங்கள்மீது வைத்துள்ள எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் புனிதப் பணியில் நீங்கள் நிறைவு பெற்றிருக்கிறீர்கள். அத்தவகையில், இந்தியாவின் முதல்வர்களிலேயே முதலிடத்தில் நீங்கள்தான் இருக்கின்றீர்கள் என்று இம்மாமன்றத்தில் சொல்வதில் பெருமைகொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு அண்மையில் நடந்துமுடிந்த பாராளுமன்றத் தேர்தலே சான்று.

கயவாலத்தால், கபோகம் கண்டவர்கள் யார்? அதை மறைக்கச் சொற்சிலம்பம் ஆடியவர்கள் யார்? பொது நலத்தை நாடு

கடத்தியவர்கள் யார்? உண்டு கொழுத்தவர்கள் யார்? ஊழல்களின் உச்சத்தைத் தொட்டவர்கள் யார்? இவற்றையெல்லாம் நிரந்தரத் தொழிலாகக் கொண்டவர்கள் யார் என்பதையும், மக்கள் தெளிவாக அடையாளம் கண்டுதான், அவர்களை மீண்டும் எழ முடியாத அளவிற்கு வீழ்வைத்தார்கள். மீண்டும் துளிர்க்க முடியுமா என்று நினைக்கும் அளவுக்கு கலங்கச் செய்தார்கள்.

விவசாயம் என்பது ஒரு தொழில், களையெடுப்பதும் ஒரு தொழில். பயிருக்குப் பக்கத்தில், பயிருக்கு வேண்டாத ஒன்றிரண்டு புல், பூண்டுகளைத்தான் களை எடுப்பார்கள். பயிர் செழிக்க, அவற்றை எடுத்துவிடுவார்கள்.

இங்கேயும் ஒரு கட்சியில் ஒருவர், களையெடுக்கப் போகிறேன் என்கிறார். அந்தக் கட்சி என்னும் வயலில் பயிர்களே இல்லை. வயல் முழுக்கக் களைகள்தாவே இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

களைகளை எடுத்தால் நிலம் வெறும் நிலமாகும். ஆனால் மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகச் சுரணியில் விளைந்த பயிர்களில் மக்களுக்குத் தீமை செய்ய கலந்திருந்த களைகளை முழுவதுமாக அகற்றி உலகமே பாராட்டும்படி செய்தார்கள்.

பிற்பகல் 1-50

முடி வளர்ந்தால் வெட்டிக் கொள்ளலாம், நகம் வளர்ந்தால் வெட்டிக் கொள்ளலாம்; ஆனால், அறிவு வளர்ந்தால் என்ன செய்வது என்று ஒருவன் கேட்டானாம். அதற்கு மற்றவன் கவலைப்படாதே, உன் நல்ல மனசுக்கு அப்படி எதுவும் நடக்காது என்றானாம். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல் இங்கே ஒருவர் கூட்டணியில் அவர் வந்தால் சேர்த்துக்கலாம், இவர் வந்தால் சேர்த்துக்கலாம், எவர் வந்தாலும் சேர்த்துக்கலாம்; ஆனால் ஆட்சியைப் பிடித்தால் என்ன செய்வது என்று கேட்க, அதற்கு, கவலைப்படாதீங்க; உங்க கூட்டணிக்கு அப்படி எதுவும், எந்தக் காலத்திலும் நடக்காது என்பதைத் தொழில் துறை மூலமாக நிரூபித்துக் கொண்டிருப்பவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

சிரித்த முகமே அம்மாவின் சொத்து, செங்கரும்பே அவரின் பேச்சு, உரித்த பலா அவரின் திட்டங்கள், உலகமே புகழ்வதைக் கேளுங்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்

2014 ஜூலை 14] [டாக்டர் த. ஹரிதாஸ்]

தொலைநோக்குப் பார்வையையும், அறிவார்ந்த முடிவுகளையும் தொழில் துறையிலும் பதித்துள்ளார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திருத்திய நெல் சாகுபடி முறை, மாநிலத்தில் கோழி வளர்ப்புத் துறைக்கு 25 கோடி ரூபாய், பால் பதப்படுத்தும் கட்டமைப்புகள் உருவாக்கி, பால் உற்பத்தித் துறைக்காக இந்த ஆண்டு 70.67 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளார்கள். மீன்பிடி தொழிலுக்குத் துறைமுகங்கள் தரம் உயர்த்த 264.50 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளார்கள். தொழிற்சாலைப் பகுதிகளின் சாலை வளர்ச்சிக்காக 260.75 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் தமிழகம் நமது நாட்டின் முக்கிய உற்பத்தி மையமாக விளங்குகிறது.

இங்குள்ள தொழிற்சாலைகள் இணைப்பு, நல்ல கட்டமைப்பு வசதிகள், சிறந்த பணிப் பண்பாடு, திறன்மிக்க மனித ஆற்றல் ஆகியவற்றால், பழுமரம் நாடிவரும் பறவைகள் போல முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டைத் தேடி வருகிறார்கள். 2011 ஆம் ஆண்டு மே மாதம் முதல் இதுவரை அம்மா ஆட்சியில் 26,625 கோடி ரூபாய் அளவிற்கு பரிந்துரை செய்து ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டு, 10,660 கோடி ரூபாய் அளவிலான முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நமது மாநிலத்தில், தொழில் வளத்தையும், கட்டமைப்பையும் மேலும் ஊக்குவிக்க புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசு, வரும் அக்டோபர் மாதத்தில் சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாட்டை சென்னையில் நடத்த உள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் நினைவூட்டுவதில் மகிழ்ச்சியும், பெருமையும் கொள்கிறேன். இதற்காக, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த வரவு செலவுத் திட்டத்தில் 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளார்கள். இளைஞர்களின் திறனை மேம்படுத்த, திறன் மேம்பாட்டு மையங்கள் அமைக்க இந்த ஆண்டு 100 கோடி ரூபாயை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒதுக்கீடு செய்துள்ளார்கள். அரசு தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனங்கள், தகவல் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனங்கள் என்று இப்படி தொழில் துறையில் மட்டுமல்ல, தொழில்நுட்பங்களிலும் கவனம் செலுத்தி, தொழில் துறையை மாண்புமிகு அம்மா அவர்கள் மேம்படுத்தி வருவதை இந்தியாவே பாராட்டுகிறது.

[டாக்டர் த. ஹரிதாஸ்] [2014 ஜூலை 14

மாநில வேலைவாய்ப்பு இணையதளம் மிகப்பெரிய அரசுப் பொறுப்பில் இருந்துகொண்டு, பல்வேறு பொறுப்புகளை நிறைவேற்றக்கூடிய ஒருவர், மான் ஆடுவதைப் பார்த்துக்கொண்டிருந்தால், மயில் ஆடுவதைப் பார்த்துக்கொண்டிருந்தால், அந்த நாட்டில் எந்தத் துறையும் வளர்வதற்கு வாய்ப்பே இருக்காது. மாண்புமிகு அம்மா அவர்கள் "மக்கள் பணியில் எங்கும் நான்" என்ற உன்னத நிலையில், வேலை தேடுபவர்களையும், வேலை வாய்ப்பு அளிப்பவர்களையும் சந்திக்கச் செய்தார்கள். வேலை வாய்ப்பு ஆலோசனைகள், பயிற்சிகள் மற்றும் பணியமர்வு உதவிகள் குறித்த தகவல்களை ஒரே இடத்தில் வழங்கிட மாநில வேலைவாய்ப்பு இணையதளம் அமைத்து, அதன் பணிகள் சரிவர நடக்கிறதா என்று பார்த்தால்தான், தொலைநோக்குப் பார்வையுடன் எடுக்கும் இதுபோன்ற திட்டங்களால் தொழில் துறை விரைவான வளர்ச்சிபெறும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் நினைத்தார்கள். இணையதளம் அமைத்தார்கள். மக்கள் நலனில், அதாவது, தனது மக்கள் அல்ல, "தமிழக மக்கள்தான் நம் மக்கள்" என்று எண்ணி ஒருமனதாக கவனத்தைச் செலுத்தி, தன்னிகரற்ற தமிழகத்தை வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டுசெல்லும் அம்மாவிற்கு நிகராக யாரையும் சொல்ல முடியாது என்பதே உண்மை.

சென்டினல் என்ற தீவில் இருட்டு நண்டுகள் என்று ஓர் இனம் உண்டாம். அவற்றின் உணவு தென்னைமரம் ஏறி தேங்காயைத் திருடி, உண்பதுதானாம். இங்கும் தமிழகத்தையும், இந்தியாவையும் சுரண்டி, உண்ணும் திருட்டு நண்டுகள் இருந்தன. ஆனால் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடத்துமுடிந்த நாடாளுமன்றத் தேர்தலின்மூலம் அந்த நண்டுகள் வெளியில் வர முடியாதபடி, பூமிக்குள்ளேயே புதைத்து விடக்கும் நிலையை உண்டாக்கினார். 40-க்கு 37 நாடே கண்டறியா செய்தி என்று பெருமை கொள்ளலாம். இந்த மாமன்றத்திற்கு ஒரு வரலாற்று நிகழ்ச்சியை நினைவுபடுத்த விரும்புகிறேன். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு தொழிலாளர்கள் நலம் காக்கும் அரசு. தொழிலாளர்கள் அச்சம் போக்கும் அரசு. தொழிலாளர்கள் வாழ்வில் ஒளி வீசச் செய்யும் அரசு என்பதற்குச் சான்றுதான், நான் இங்கே குறிப்பிடப்போகும் வரலாற்றுச் செய்தி.

பிற்பகல் 1-55

முன்னாள் பிரதமராக இருந்த மாண்புமிகு மன்மோகன் சிங் அவர்கள் முன்பு ஒரு முறை நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் 3.56% பங்குகளைத் தனியாருக்கு விற்க முற்பட்டபோது, அப்போது தமிழகத்தில் மிகப் பெரிய பொறுப்பிலிருந்தவர் அதை வாங்குவதற்கு மிக மிக, மிக மிக என்று எத்தனை மிக வேண்டுமானாலும் போட்டுக் கொள்ளலாம்; அந்த அளவிற்கு முயன்று வாங்க முயற்சித்தார். உடனே ஒட்டுமொத்தத் தமிழர்களும் அதை எதிர்த்தனர், எரிமலையாயினர். தொழிலாளர்கள் போராட்டத்தைத் தொடங்கினர். அந்த எதிர்ப்புத் தீயின் வெப்பம் தாங்காது அதை வாங்க முற்பட்டவர், அதை அப்போது விற்க வேண்டாம் என்று தடுத்து நிறுத்தினார். நான் இந்தியாவின் பிரதமர், நானே விற்க முடிவு செய்து அறிவித்ததை நானே திரும்பப் பெறும் நிலையா என்று கேட்டு மனம் நொந்தார் மாண்புமிகு மன்மோகன் சிங்.

சில ஆண்டுகள் கழித்து, மத்திய அரசின் நிதி நெருக்கடியால் மீண்டும் அதே பங்குகளை விற்க வேண்டிய சூழ்நிலை. எனவே, மீண்டும் தனியாருக்கு விற்க மாண்புமிகு மன்மோகன் சிங் முடிவெடுத்தார். அப்போது தமிழக முதல்வராய் இருந்த மாண்புமிகு அம்மா அவர்கள் உடனே அறிக்கை விடுத்தார். "கூடாது, கூடாது. பொதுத் துறை நிறுவனத்தின் பங்குகளைத் தனியாருக்கு விற்கக் கூடாது. இதை நான் அனுமதிக்கமாட்டேன்" என்று திட்டவட்டமாக அறிவித்தார். அப்படி விற்றே தீர வேண்டுமென்றால், அந்தப் பங்குகளைத் தமிழக அரசுக்குத்தான் விற்கவேண்டும் என்று போர்க் குரல் கொடுத்தார். ஒட்டுமொத்தத் தமிழர்களும் அம்மாவின் பின் அணி திரண்டனர். (மணியடிக்கப்பெற்றது) தமிழகத்தில் உள்ள அனைத்துத் தொழிலாளர்களும், அனைத்துத் தொழிற் சங்கங்களும் அம்மாவின் பின் அணி வகுத்தன. அகில இந்திய தொழிற் சங்கங்களும் ஆதரவு தெரிவித்தன. இறுதியில் அம்மாவே வென்றார். நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் பங்குகளைத் தமிழக அரசுக்காக அம்மா வாங்கினார். இந்த நடவடிக்கைகளின் காரணமாக மாநிலத்தின் தொழில் துறை அமைதியையும், மின்சார விநியோகத்தைப் பாதிக்கக்கூடிய சிக்கலான பிரச்சினைக்குத் தீர்வும் கண்டார். இந்த அறிவார்ந்த செயலால் தொழிலாளர்கள் மனதில் நிலவி வந்த

[டாக்டர் த. ஹரிதாஸ்] [2014 ஜூலை 14

சந்தேகமும், பயமும் போக்கப்பட்டதுடன் இப்பிரச்சினையால் வெடிக்க இருந்த ஒரு பெரிய தொழிலாளர் போராட்டமும் தவிர்க்கப்பட்டது. தக்க தருணத்தில் உரிய முடிவுகளைத் திறம்பட மேற்கொண்டு, தான் எடுக்கும் பெரு முயற்சிகளில் எல்லாம் வெற்றி வாகைச் சூடியவர் மாண்புமிகு முதல்வர் நம் அம்மாதான். இதை நியாயமான வெற்றிதான் என்று 'தினமணி' நாளேடு தலையங்கமே எழுதிப் பாராட்டியது. தனக்காக வாங்க நினைத்தவர்கள் பதவியை இழந்தார்கள். தமிழக மக்களுக்காக வாங்கிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை மக்களெல்லாம் புகழ்ந்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொழில் துறை வளர்ச்சியில், தொழிலாளர்கள் நலனில் எவ்வளவு ஈடுபாடு கொண்டிருந்தார் என்பதற்கு இந்த வரலாற்றுச் சான்றே வைர வரிகளாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹரிதாஸ், உரையை நிறைவு செய்யுங்கள்.

டாக்டர் த. ஹரிதாஸ்: பேசி முடித்துவிடுகிறேன். எனது தொகுதி சம்பந்தப்பட்ட கோரிக்கைகளைச் சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டுகிறேன். ஒரே ஒரு கோரிக்கை. சென்னை-திருச்சி நெடுஞ்சாலையில் உள்ள நகரம் திண்டிவனம். எங்கள் நகரத்தில் பேருந்து நிலையம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டும், இரண்டு ஆண்டு காலமாக எந்தப் பணியும் தொடங்கப்படவில்லை. மாண்புமிகு அம்மா அவர்களின் பார்வை பட்டால் கூழாங் கற்கள்கூட மாணிக்கமாக மாறும். ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களின் பார்வை திண்டிவனம் நகரப் பேருந்து நிலையம்மீது படவேண்டுமென்று மிகவும் பணிவோடு தாழ்பணிந்து வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆரணி, திண்டிவனம், திருவத்திபுரம், பெரியகுளம் ஆகிய நான்கு நகராட்சியில் வாழும் 217 இலட்சம் மக்களுக்குப் பயனளிக்கும் குடிநீர் வழங்கும் திட்டத்திற்காக 117.69 கோடி ரூபாய் ஒதுக்கி, என் தொகுதி மக்களின் நாகம் தீர்க்கும் தாய்க்கு கோடி நன்றிகளைச் சமர்ப்பிக்கிறேன்.

நாட்டு மக்களின் குறைகளையெல்லாம் நீக்கும் நிறைகுடமான தாயே! எங்கள் இதய தெய்வமே! சென்ற முறை மானியக் கோரிக்கையில் வைத்த என் கோரிக்கைகளில் ஒன்றான ஆரம்ப

2014 ஜூலை 14] [டாக்டர் த. நீதிதாஸ்]

கொதார நிலையம் ஒன்றை எண்டியூரில் அமைக்க ஆணையிட்டுச் செயல்படுத்திய தாய்க்கு என் சார்பாகவும், என் தொகுதி மக்களின் சார்பாகவும் கோடி நன்றி தாயே! இப்போதும் கனிவோடு பரிசீலிக்க மேற்கண்ட கோரிக்கைகளை முன்வைக்கிறேன்:

1. சுமார் 40 கிலோ மீட்டர் சுற்றளவில் எந்தக் கல்லூரியும் இல்லாத கல்வியில் பின்தங்கிய மரக்காணம் பகுதியில் ஒரு கல்லூரி அமைத்து, அப்பகுதி மக்களுக்கும் கல்வித் தாகம் தீர்த்து வைக்க மிக மிகப் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

2. இண்டிவனம் தொகுதி, மரக்காணம் பேருராட்சிக்குட்பட்ட அழகன்குப்பம், முட்டுக்காடு ஆகிய கிராமங்களை ஒட்டியுள்ள கடலோரப் பகுதியில் ஒரு சிறு துறைமுகம் அமைத்துத் தர வேண்டுகிறேன். ஏனென்றால், தமிழ்நாட்டிலுள்ள மீனவர்கள் தங்களது படகுகளை பாண்டிச்சேரி துறைமுகத்தில் நிறுத்துவதால் பாதுகாப்பற்ற சூழ்நிலை உள்ளது.

3. இண்டிவனம் தொகுதி, மரக்காணம் ஒன்றியம், நகர் மற்றும் நாகல்பாக்கம் ஊராட்சி ஒன்றியங்களை மாற்றி அருகில் உள்ள 10-க்கும் மேற்பட்ட கிராமங்கள் பயன்பெறும்படி அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். இவ்வழியாக ஓங்கூர் ஆறு செல்கிறது. அதில் நீரும் மீனாகக் கடலில் கலப்பதைத் தவிர்க்கலாம்.

4. இண்டிவனம், ஓங்காம்பேட்டையிலிருந்து இண்டிவனம் சந்தை மேடு வரை தென்புறமாக ஒரு புறவழிச்சாலை அமைத்துத் தரும்படி வேண்டுகிறேன்.

5. இண்டிவனத்திற்கென்று அரசு பல்வகை தொழில்நுட்பக் கல்லூரி (Polytechnic College) அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

6. இண்டிவனம் தாலுகா அலுவலகம் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. கோட்டாட்சியர் அலுவலகம் அருகில் போதுமான இட வசதி உள்ளதால் அதை அங்கு அமைத்துத் தரும்படி வேண்டுகிறேன்.

7. இண்டிவனம் தொகுதி, மரக்காணத்தில் உப்பு உற்பத்தி அதிகம் உள்ளது. மழைக் காலத்தில் சிரமமாக உள்ளதால், அவர்களுக்கு ஒரு கூடம் (Shelter) அமைத்துத் தரும்படி பணிவுடன் வேண்டுகிறேன்.

[டாக்டர் த. ஹரிதாஸ்] [2014 ஜூலை 14

கரையான் அழிக்க முடியாத மரம் தேக்கு. எத்தக் கட்சியாலும் வெல்ல முடியாதவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான்; அம்மாவின் ஆட்சி இனி நிரந்தரம்தான்; தமிழகத்தில், இந்தியாவில் அவருக்கு நிகர் எவருமில்லை என்று கூறி, (மேசையைத் தட்டும் ஒலி) இல்லை, இல்லை, இனி இல்லை (மேசையைத் தட்டும் ஒலி) இல்லை, எவருக்கும் தமிழகத்தில் ஆட்சி பீடம் ஏறுவதற்கு வாய்ப்பே இல்லை. ஆயுள் முழுவதும் பதவியில் இருந்து கொண்டு மக்களுக்குத் தொண்டு செய்து வாழப்போகும் அம்மா, ஆயிரம் ஆண்டுகள் வாழ வேண்டும் என்று இறைவனை வேண்டி, புரட்சித் தலைவி அம்மாவின் பொற்பாதம் பணிந்து எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், 5 நிமிடங்களில் பேசி உரையை முடியுங்கள், நேரமாகிவிட்டது.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறை மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு கிடைத்தமைக்கு தங்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். இன்று தொழில் துறைதான் தேசத்தினுடைய வளர்ச்சியைக் குறிக்கக்கூடிய ஒரு முக்கியமான துறை. இத்துறை மானியக் கோரிக்கையிலே 10 நிமிடங்கள் பேச அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுரை இருக்கிறது. நேரமாகிவிட்டது. சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான மாணவர்கள் படித்து வேலை தேடி அலைந்து கொண்டிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே பல்வேறு புதிய நிட்டங்களை கொடுத்தமைக்காக நான் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 ஜூலை 14]

பிற்பகல் 2-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *தென் மாவட்டங்களில் புதிதாக தொழில் பூங்காக்கள் அமைக்கவிருப்பதாக கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லப்பட்டுள்ளது. குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் தொழில் பூங்கா அமைக்க நாங்கள் ஆவன செய்வீர்களா? தென் மாவட்டம் என்று சொல்கின்றபோது, எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வாய்ப்பு தருவீர்களா என்பதை நான் இந்த நேரத்தில் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 9 மாவட்டங்களில் இத்தத் திட்டம் செயல்படுத்தப்படவிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மாவட்டமும் இத்தத் திட்டத்தின்கீழ் வருகிறது. கொள்கை விளக்கக் குறிப்பிலும் அதுகுறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியவில்லை என்று நினைக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மாவட்டத்திலும் நிச்சயமாக தொழில் பூங்கா தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டம் 9 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் என்று கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிற காரணத்தால், அதன் முக்கியத்துவத்தை கன்னியாகுமரி மாவட்டத்திற்குத் தாருங்கள் என்று இந்த நேரத்தில் நான் கோரிக்கையாக வைக்கிறேன்.*

குளச்சல் ஒரு இயற்கைத் துறைமுகம். முந்தைய காலங்களில் பல ஆண்டுகளாக ஏற்றுமதி, இறக்குமதி சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருந்தன. அப்பகுதி மக்கள் தங்களுடைய விளைபொருட்களை வெளிநாடுகளுக்கு எடுத்துச்சென்று வாணிபம்

[திரு. ஜே.ஜி. பிரின்ஸ்] [2014 ஜூலை 14

செய்து பிழைத்துக்கொண்டிருந்த காலம். அதனால் குளச்சலிலே ஒரு வர்த்தகத் துறைமுகத்தை அமைத்து என்னுடைய தீண்டாநாள் கோரிக்கையை நிறைவேற்றித் தாருங்கள், தாருங்கள் எனக் கேட்கிறேன்.

மேலும், எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்தில் அதிகமாகக் கிடைக்கக்கூடிய பொருட்கள் இரப்பர், தென்னை, கயறு மற்றும் மீன் போன்றவை ஆகும். குறிப்பாக காற்றாலைகள் கூட கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைந்திருக்கின்றன. அதன் காரணமாக காற்றாலை உபகரணங்கள் உற்பத்தி செய்யக்கூடிய ஒரு நிறுவனத்தை நீங்கள் அமைத்துத் தந்தால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம். அப்பகுதியில் இடம் இருக்கிறது. தொழில்முனைவோர் யாராவது தொழில் தொடங்க முன்வந்தால், எங்களது பொதுத் துறையோடு சேர்ந்து அந்தத் தொழில் நிறுவனத்தை ஆரம்பிப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். நேற்றைக்கு முன்தினம் உங்களுடைய கட்சியைச் சார்ந்த உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள் பேசும்போது, அங்கே மாவட்ட தொழில் மையத்தில் வேன் வாங்கியிருப்பதாகவும், அதை one time settlement ஆக மாற்றித் தரவேண்டுமென்றும் கேட்டார்கள். உடனடியாக அதிகாரிகள் அங்கே சென்று விசாரித்தபோது, அந்தத் தொழிற்சாலையை ஆரம்பித்தவர், மெஷின்களையெல்லாம் கழட்டிக்கொண்டு போய்விட்டார் என்றும், வெறும் கட்டடம்தான் அங்கே இருக்கிறது என்ற விவரமும் தெரிய வந்தது. அதற்குத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒன்றுமே சொல்லவில்லை. திருமதி எஸ். விஜயதரணி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, உட்காருங்கள். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் பற்றி

2014 ஜூலை 14] [திரு. பி. தங்கமணி]

சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் தொழிலதிபருக்காகத்தான் சொன்னார்கள். அவர் அந்த மெஷின் களையெல்லாம் கழட்டிக்கொண்டு சென்றுவிட்டார், வெறும் கூட்டடம்தான் அங்கே இருக்கிறது என்பதைத்தான் தெளிவுபடுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் உங்களைப்பற்றிச் சொல்லவில்லை. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கிடு) சரி, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் அதிகமாகக் கிடைக்கக்கூடிய காரணத்தால், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு மீன் பதனிடும் தொழிற்சாலை அமைத்துத் தருவீர்களா என்ற கோரிக்கையை இந்த அவையின் முன் வைக்கிறேன். தமிழ்நாட்டில் நலிவுற்ற உப்பளங்களைச் சீர்செய்ய வேண்டுகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் உப்பளங்கள் ஒரு காலத்தில் சிறப்பாக இயங்கிக்கொண்டிருந்தன. அந்தப் பணிகள் எல்லாம் தற்போது முடங்கிவிட்டன. உப்பளங்கள் சீர் செய்யப்பட்டு, உப்பு உற்பத்தியை அதிகரித்து, அயோடின் கலந்த கல் உப்பு தயாரிக்கும் தொழிற்சாலையைத் தொடங்க வேண்டுகிறேன்.

இ.எஸ்.ஐ. மருத்துவமனை, தொழிலாளர்களுக்கு உரிய மருத்துவமனையாகும். இதற்காக, முந்தைய காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் ரூ.100 கோடி நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் அதற்குரிய இடத்தை அ.இ.அ.தி.மு.க. அரசு கொடுக்கவில்லை. மாவட்ட நிருவாகம் முன்வந்து 5 ஏக்கர் நிலத்தைக் கொடுத்து இ.எஸ்.ஐ. மருத்துவமனையைக் கட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 3 வருடங்களுக்கு முன்பு 120-க்கும் மேற்பட்ட கல் மற்றும் மணல் குவாரிகள் இயங்கி வந்தன. கடந்த இரண்டு வருடங்களாக புதிய உரிமங்கள் எதுவும் வழங்கப்படவில்லை. பிற மாவட்டங்களில் சுற்றுப்புறச்சூழல் துறையின் அனுமதி இல்லாமல் பல குவாரிகள் இயங்கிவரும் சூழ்நிலையில், கன்னியாகுமரி மாவட்டத்தில் சுற்றுப்புறச்சூழல் துறையின் அனுமதியில்லை எனக் கூறி, இயங்கிவந்த எல்லா குவாரிகளையும் மாவட்ட நிருவாகம் அதிரடியாக தடை

செய்துள்ளது. மாவட்டத்தில் பெரிய தொழிற்சாலைகள் எதுவும் இல்லாத நிலையில் கல், மணல், அச்சுக்கல், செங்கல் சூளை போன்ற தொழில்களை நம்பி சுமார் 1 இலட்சம் பேர் நேரடி வேலைவாய்ப்பு பெற்று வருகின்றனர். மாவட்ட திருவாகத்தின் தடை காரணமாக சுமார் 1 இலட்சத்து 60 ஆயிரம் பேர் வேலை இழந்துள்ளனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 2-05

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலை இந்த அவையில் சொல்லிக் கொண்டிருக்கிறார். சட்டத்திற்குப் புறம்பாக வேறு பகுதிகளில் கல் குவாரிகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன என்றும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மாவட்டத்தில் இரண்டு ஆண்டுகால்மாக தடை செய்துவிட்டார்கள் என்றும் சொன்னார்கள். முழுக்க, முழுக்க அது தவறு. உங்களுடைய மாவட்டத்தில் கல் குவாரிகள் தடை செய்யப்பட்டதற்குக் காரணம், நான் ஏற்கெனவே சட்டமன்றத்தில் சொன்னதுபோல, உச்ச நீதிமன்றம் ஓர் ஆணையிட்டிருந்தது. அதனடிப்படையில், கடந்தகால மத்திய அரசு, அதாவது உங்களுடைய அரசுதான் 18-5-2012 அன்று ஒரு தாக்கீது அனுப்பியிருந்தது. உச்ச நீதிமன்ற உத்தரவின் காரணமாக, State Environment Board-ல் நீங்கள் clearance வாங்காமல் எந்தக் குவாரியையும் நடத்தக்கூடாது என்று அப்போது சொல்லிவிட்டார்கள். எனவே, Court-னுடைய உத்தரவின்போில்தான் நம்முடைய மாவட்ட ஆட்சியர் அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கின்றார், ஏதோ உங்கள் மாவட்டத்தில் மட்டும்தான் நாங்கள் தடை செய்துவிட்டு, மற்ற மாவட்டங்களிலெல்லாம் நடத்த வேண்டுமென்று ஆணையிடப்பட்டுள்ளது போன்று சொல்கிறீர்களே! அவ்வாறு அல்ல. எங்கேயிருந்தாலும், மாண்புமிகு அம்மாவினுடைய அரசு சட்டத்திற்குட்பட்டு, எல்லோருக்கும் என்ன உதவி செய்ய வேண்டுமோ அதைச் செய்வார்கள். சட்டத்திற்கு அப்பாற்பட்டு இருப்பவர்களுக்கு இதுபோன்ற தடை வருவதற்கு நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நீங்கள்தான் அதற்கு உத்தரவு தரவேண்டும்.

2014 ஜூலை 14] [திரு. ஜேஜி. பிரின்ஸ்]

ஒருவேளை சுப்ரீம் கோர்ட்டில் இவ்வழக்கு நிலுவையில் இருந்தால்கூட, தேங்காய்ப்பட்டினம் மற்றும் ஞாச்சல் துறைமுகப் பணிகள், தனியார் கட்டடங்கள், அரசு கட்டடங்கள் கட்டுவதற்கு மற்றும் மக்களின் இன்றைய அத்தியாவசியப் பணிகளுக்கு மணல் வேண்டும். எங்களுடைய மாவட்டத்தின் நிலையை நீங்கள் புரிந்து கொண்டிருக்கிறீர்கள். நான் ஒன்றும் குறையாகச் சொல்லவில்லை. நீதிமன்ற உத்தரவு இருப்பதால், அந்தப் பணிகளெல்லாம் முடக்கப்பட்டிருக்கின்றன. ஒரு இலட்சத்து அறுபதாயிரம் மக்கள் இன்றைக்கு பாதிக்கப்பட்டுள்ளார்கள். யார் தகுதியாக இருக்கின்றார்களோ, யாரால் கல் குவாரிகள் நடத்த முடியுமோ அவர்களுக்கு நீங்கள் உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டுமென்றுதான் நான் இங்கு கேட்கிறேன். நான் இந்த அரசைக் குறை சொல்லவில்லை. எங்களுடைய சங்கடத்தை நாங்கள்தான் சொல்லவேண்டும். ஆகவே, இன்று இலட்சக்கணக்கான மக்களைப் பாதிக்கக்கூடிய இந்தக் கஷ்டத்தை நீங்கள் நிவர்த்தி செய்ய முன்வர வேண்டும் என்பதற்காகத்தான் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதில் ஒன்றும் கஷ்டமான சூழ்நிலை இல்லை. State Environment Board-ல் அனுமதி வாங்கிவிட்டார்கள் என்று சொன்னால், உடனடியாக நாங்கள் அதற்கு permit கொடுப்பதற்குத் தயாராக இருக்கின்றோம். அதை யார் வாங்கவேண்டும்? குவாரி நடத்துகின்றவர்கள்தான் வாங்க வேண்டும். நாங்களா வாங்கித் தர முடியும். நீங்கள் அங்கே இருக்கின்றவர்களிடம் சொல்லுங்கள். அவர்களுக்கு ஏதாவது இடையூறு இருக்கின்றது என்று சொன்னால், அதற்கு அரசு நிச்சயமாக ஆதரவாக இருக்கும். தொழிற்சாலையையோ அல்லது கல் குவாரியையோ மூடச் சொல்லவில்லை. சட்டத்திற்கு உட்பட்டுத்தான் அரசு நடந்து கொண்டிருக்கின்றது. சட்டத்திற்கு அப்பாற்பட்டு நாங்கள் எந்த உதவியையும் செய்ய முடியாது என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுவும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு வழக்கறிஞர். சட்டம் என்ன என்பதை அவர்களுக்குச் சொல்ல வேண்டியதே இல்லை.

[2014 ஜூலை 14

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜே.ஜி. பிரின்ஸ், உங்கள் உரையை ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று இருக்கக்கூடிய மாவட்ட திருவாகம் இந்தக் கஷ்டத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. நீங்கள் இதற்குண்டான சட்ட விதிகளைப்பற்றி சொன்னீர்கள். நான் ஒரு வழக்கறிஞர்தான். ஆனால், இதற்காக போர்க்கால நடவடிக்கையை இந்த அரசு எடுக்கவேண்டும் என்பதைத்தான் வலியுறுத்துகிறேன். இதற்கு நீங்கள் அரசு சார்ந்த கமிட்டியை அமைக்கவேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மக்கள் எல்லோரும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இத்தப் பிரச்சினைக்கு முடிவு தாருங்கள் என்றுதான் நான் கேட்கிறேன். வேறு ஒன்றும் சொல்லவில்லை. இதனுடைய சூழ்நிலையை நான் சொல்லியாகவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறும்பத் நிறும்ப நான் சொல்லின்றேன். அரசினால் எந்தப் பிரச்சினையும் இல்லை. கல் குவாரியினுடைய முதலாளிகள் உடனடியாக எங்கள் State Environmental Impact Assessment Authority-க்கு விண்ணப்பங்கள் அனுப்புவார்கள் என்றால், நாங்கள் அந்தப் பகுதிக்கு உடனடியாக லைசென்ஸ் வாங்கித் தருவதற்குத் தயாராக இருக்கின்றோம். அது உச்ச நீதிமன்றத்தினுடைய உத்தரவு. அதில் மாநில அரசு என்ன செய்ய முடியும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜே.ஜி. பிரின்ஸ், உரையை முடியுங்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குரிய நல்ல முடிவை நீங்கள் தருவீர்கள் என்ற நம்பிக்கையோடு நான் இன்னும் இதைப்பற்றி சொல்ல விரும்பவில்லை. மாண்புமிகு அமைச்சர் பெருமானை வாழ்த்தி, நிச்சயமாக இதற்குரிய பணிகளை நீங்கள் செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

2014 ஜூலை 14] [திரு. ஜே.ஜி. பிரின்ஸ்]

மத்தியில் காங்கிரஸ் ஆட்சியின்போது, என்.எல்.சி. நிறுவனப் பங்குகளை விற்றதற்காகவும், தமிழக அரசு அதை வாங்கி, அதில் 500 கோடி ரூபாய் இலாபம் பெற்றதற்காகவும் வாழ்த்துகிறேன். அது தேவைதான். ஆனால், நல்ல எண்ணத்தோடுதான் முத்தைய காங்கிரஸ் அரசு அதைச் செய்திருக்கிறது என்பதை நான் பதிவு செய்யவேண்டும். காங்கிரஸ் எத்தனையோ சாதனைகளைச் செய்தபோது, இன்று மோடி அரசு வந்துவிட்டது. புதிய சாதனைகளைச் செய்துவிடும் என்று சொல்லிக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில், நாட்டின் பொருளாதாரத்தினுடைய நிதைவு எப்படியிருக்கிறது என்பதைப் புரித்துகொள்ளவேண்டும். (மணியடிக்கப்பெற்றது) இப்போது விலைவாசி உயர்வு எப்படியிருக்கிறது? இதற்கு என்ன நடவடிக்கையை நம்முடைய அரசு எடுத்தது. ஆனால், நம்முடைய அரசு அதற்கு வாழ்த்து சொல்லிக்கொண்டிருக்கிறது. நாங்கள் அதைச் சொல்லவேண்டும். ஏனென்றால், எங்களுடைய ஆட்சியிலே நாங்கள் அற்புதமான ஆட்சியை பத்து ஆண்டுகள் தொடர்ந்து கொடுத்தோம். (குறுக்கீடுகள்) சில வீழ்ச்சிகளின்போது எங்களைக் குறை சொன்னவர்கள், இன்று ** சொல்லி, ** வதந்திகளைச் சொல்லி, மக்களை ஏமாற்றி ஆட்சிசெய்ய வந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு போரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இதெல்லாம் வேண்டாதது. உரையை முடியுங்கள். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை இருக்கின்றது. ** என்று சொன்ன அந்த வார்த்தை நான் சொன்னது உட்பட அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றது.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: 'தவறான பிரச்சாரங்களைச் சொல்லி' என்று திருத்திக்கொள்ளுங்கள். நீண்டகாலம் ஆட்சியில் இருந்தவர்களை மாற்றி, மக்கள் மாற்றத்தை ஏற்படுத்துகின்றார்கள். வருங்காலத்திலாவது நம்முடைய பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றனவா என்பதைத்தான் பார்க்கவேண்டும். ஆகவே, எனக்கு அளித்த வாய்ப்புக்கு நன்றி சொல்லி அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு போரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சரின் பதிலுரை.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2014 ஜூலை 14

பிற்பகல் 2-10

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுக்குத் தாயாய், தந்தையாய், நல்வழிகாட்டும் ஆசானாய், எங்கள் தவறுகளை மன்னித்து வாழ்விக்கும் இறைவனாய், உள்ளிருந்து இயக்கும் உந்து சக்தியாய், ஒன்றரைக்கோடி தொண்டர்களின் உயிர் மூச்சாய், ஒப்பாரும், மிக்காரும் இல்லாத தனிப்பெரும் தலைவியாய், தமிழகத்தின் தவப்பயனாய் இலகும் புகழுக்குரிய, நாங்கள் நித்தம் வழிபடும் எங்கள் குலதெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்று தமிழகத்திலே இருப்பவர்கள் வயது வித்தியாசம் இன்றி உச்சரிக்கின்ற ஒரே வார்த்தை 'அம்மா'. (மேசையைத் தட்டும் ஒலி) பள்ளிக்குச் சென்றால் 'அம்மா'; முதியோர் இல்லத்திற்குச் சென்றால் 'அம்மா'; கோவிலுக்குப் போனால் 'அம்மா'; தோட்டத்திற்குச் சென்றாலும் 'அம்மா'; கல்லூரிக்குச் சென்றாலும் 'அம்மா'; (மேசையைத் தட்டும் ஒலி) மருத்துவமனைக்குச் சென்றாலும் 'அம்மா'; பெண்கள் ஒன்றாகக் கூடினாலும் 'அம்மா'; உணவகத்திற்குச் சென்றாலும் 'அம்மா'; நவித்த வாய்க்குத் தண்ணீர் குடிக்கச் சென்றால், 'அம்மா'; (மேசையைத் தட்டும் ஒலி) மருந்துக் கடைக்குச் சென்றால் 'அம்மா'; மளிகைக் கடைக்குச் சென்றாலும் 'அம்மா'; காய்கறி வாங்கச் சென்றாலும் 'அம்மா'; அறுகலைக்கும் 'அம்மா'; எதிரிகளை புறமுதுகிட்டு விரட்டியடிப்பதும் நம் அம்மாதான். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்று இந்தியாவில் மூன்றாவது பெரிய கட்சியாக அங்கீகாரம் பெற்றுத் தந்தவரும் நம் அம்மாதானே! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டு மக்கள் மட்டுமல்ல, தமிழர்கள் எங்கெல்லாம் இருக்கின்றார்களோ, அங்கெல்லாம் 'அம்மா'. தமிழ் மக்களுக்கு ஒரு துயரம் என்றால், துன்பத்தைத் துடைப்பதற்கு நீளுகின்ற முதல் கரம் 'அம்மா' அவர்களின் பொற்கரம்தானே! (மேசையைத் தட்டும் ஒலி) உதடுகள் உச்சரிக்கும் சொல்லாக நம் அம்மாதான் இருக்கின்றார்கள். இத்தப் பெருமை எத்தத் தலைவருக்கும் இல்லை.

மாநிலக் கட்சியை தேசிய கட்சியாக்கியதும் நம் அம்மா. தேசிய கட்சியை மாநிலக் கட்சியாக்கியதும் நம் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

2014 ஜூலை 14] [திரு. பி. தங்கமணி]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாடு வளர்ச்சியடைய வேண்டுமென்று சொன்னால், இறக்குமதி அளவு குறைந்து, ஏற்றுமதி அளவு அதிகரிக்க வேண்டும். அப்போதுதான் அதனுடைய பொருளாதார வளர்ச்சி சிறப்பாக இருக்கும். இந்தியாவின் பொருளாதாரம் இந்த அளவிற்கு வீழ்ச்சி அடைந்திருப்பதற்கு, கடந்த கால மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கையே காரணமாகும். அதில், தி.மு.க.-வின் பங்கும் உண்டு என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனென்றால், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு மத்திய அரசில் பங்கு பெற்றுள்ள தி.மு.க.-வும் பெரும் பங்காற்றியுள்ளது என்பதை ஸ்டாலின் அவர்கள் துவாவில் ஒரு கூட்டத்திலே சொல்லியிருக்கின்றார்கள். அப்படியானால், வீழ்ச்சிக்கும் தி.மு.கதானே காரணம்?

பன்னாட்டு நிறுவனங்களோடும், உள்நாட்டு நிறுவனங்களோடும் ஒப்பந்தங்களை ஏற்படுத்தி, தொழில்முனைவோர்களின் இலகுவான முயற்சிக்கு கட்டமைப்பு வசதிகளைத் திட்டமிட்டு உருவாக்கித் தருவதிலும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தியாவிற்கே முன்மாதிரி மாநிலமாகத் தமிழகத்தை உருவாக்கியிருக்கின்றார்கள்.

தமிழகத்தில் அந்நிய முதலீடுகளை ஈர்த்து, தொழில்கள் பெருகவேண்டும் என்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் முதன்முதலாக பன்னாட்டுக் கம்பெனிகளான ஃபோர்டு, ஹூண்டாய், செவிலட் கோபன் போன்றவை தமிழகத்தில் தொழில் தொடங்கிட நிட்டங்களை வகுத்துக் கொடுத்தார்கள்.

கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் தமிழகத்தின் வரலாற்றில் 33 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலமாக 31,706 கோடி ரூபாய் அளவிற்கான முதலீடுகளும் (மேசையைத் தட்டும் ஒலி) தொழில் வழிகாட்டி மூலமாக, ஒற்றைச்சாளர முறை மூலமாக 35 நிட்டங்களைச் சேர்த்து, மொத்தம், கடந்த மூன்றாண்டுகளில் 68 நிட்டங்களால் தமிழகம் ஈர்த்த மொத்த முதலீடு 16,012.72 கோடி ரூபாய். நிட்டத்தட்ட அதே அளவு நேரடியாகவும், மறைமுகமாகவும் 1,62,667 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கியிருக்கின்றார்கள். இந்த பெரிய வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்தவர் நமது மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. பி. தங்கமணி] [2014 ஜூலை 14

இப்படி., தொழில் மற்றும் வேலைவாய்ப்பை உருவாக்கிக் கொடுத்து, இந்தியாவிலேயே தமிழகத்தை முதல் மாநிலமாக்கி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சரித்திர சாதனை படைத்துள்ளார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். இளைய தலைமுறையினர் எங்களைத்தான் ஆதரிப்பார்கள் என்று சிலர் அடிக்கடி கூறினார்கள்; கனவு கண்டுகொண்டிருந்தார்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய இந்த மூன்றாண்டுக் கால ஆட்சி அனைத்துத் துறைகளிலும் முன்னணியில் உள்ளதால், இளைய தலைமுறை வாக்காளர்கள் ஒட்டுமொத்தமாக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு வாக்களித்து, இனி தமிழகத்தில் வேறு எந்தக் கட்சிக்கும் இடமில்லை என்ற நிலைமையை உருவாக்கியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆக, இனி வருங்காலங்களில் தமிழகம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையில்தான் இயங்கும் என்பதை வாக்காளர்கள் திருப்பித்துக் காட்டியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

வருகின்ற சட்டமன்றத் தேர்தலில், 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திட்டங்களினாலும், உழைப்பினாலும் வெற்றி பெறுவது நிச்சயம். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நீண்ட ஆயுளையும், நல்ல உடல் ஆரோக்கியத்தையும் கொடுக்கவேண்டும் என்பதுதான், மக்களும் சரி, கழகத்தினரும் சரி, கடவுளிடம் வைக்கின்ற கோரிக்கை.

தன் குடும்பத்தையே திருவிக்க முடியாமல் தடுமாறுகின்ற தலைவர்களுக்கு மத்தியில், தன்னாடுகின்ற தலைவர்களுக்கு மத்தியில், எந்த அரசியல் இயக்கத்திலும் ஒரே நேரத்தில் கட்சி, ஆட்சி, நாடு என்று இந்த மூன்றுக்கும் ஒருவர் மக்களின் மகத்தான பேராதரவைப் பெற்றிருக்கின்றார் என்று சொன்னால், அவர் ஒரே தலைவர் நமது அம்மா அவர்கள் மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-15

"எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்,
இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்"

என்ற இலட்சியத்தை மனதிலே தாங்கி நானும் உழைக்கும் நம் அம்மா ஆட்சியில் இனி இனைய தலைமுறையினர் தமிழ்நாட்டை 'அம்மா நாடு' என்று அழைக்கின்ற நாள் வெகுதூரத்தில் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

2013-2014 ஆம் ஆண்டில், Union Planning Commission- மத்திய திட்டக் குழு அண்மையில் உற்பத்தித் துறையில் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதம் பற்றிய அறிக்கையை வெளியிட்டிருக்கின்றது. அதன்படி, தமிழ்நாடு எட்டியுள்ள வளர்ச்சி விகிதம் 6.13 சதவிகிதம். இந்தியாவின் வளர்ச்சி விகிதம் 4.74 சதவிகிதம் ஆகும்.

2013-2014-ல் தமிழ்நாட்டில் GSDP அளவிலே பார்த்தோம் என்றால், ரூ.4 கோடியே 78 இலட்சத்து 975 கோடி பெற்று இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய மாநிலமாகத் தொழில் துறையில் தமிழகம் திகழ்ந்து கொண்டிருக்கின்றது. ஆனால், மைனாரிட்டி திமுக அரசின் 2009-2010 ஆம் ஆண்டில் ரூ.3,56,632 கோடி மட்டும்தான் பெற்று இந்தியாவில் மூன்றாவது இடத்தில் இருந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையிலான நல்லாட்சியில் தமிழகம், 2013-2014 ஆம் ஆண்டைய Growth rate-ன் சதவிகிதத்தைப் பொறுத்தவரையில் All India's Average Growth Rate-ஐ விட நன்றாக உள்ளது.

வேளாண்மைத் துறையில் தமிழ்நாடு 8.98 சதவிகிதம். All India அளவிலே எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால் 0.91 சதவிகிதம். உற்பத்தித் துறையில் தமிழ்நாடு 3.53 சதவிகிதம். All India அளவிலே -0.71 சதவிகிதம். சேவைத் துறையில் தமிழ்நாடு 8.26 சதவிகிதம். All India அளவிலே 7.0 சதவிகிதம்.

11-7-2014 அன்று நேமுதிக. உறுப்பினர் திரு. வெங்கடேசன் அவர்கள் பேசியபோது, வெளி மாநிலத்தினர் அதிகமாக தமிழகத்தில் வேலை செய்வதாகவும், அதனால் தமிழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்றும், ஒரு உண்மைக்கு மாறான செய்தியைச் சொன்னார்கள். தமிழகத்தில் உள்ள ஃபோர்டு, ஹூண்டாய் போன்ற பெரிய கம்பெனிகளில் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் 90 சதவிகிதம் பேரும், மற்ற மாநிலத்தினர் 10 சதவிகிதம் பேரும்தான் பணிபுரிகின்றார்கள்

என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்போது அவையிலே இல்லை. எந்தெந்த கம்பெனியில் யார், யார் வேலை செய்கின்றார்கள் என்ற பட்டியல் என்னிடத்தில் இருக்கின்றது. எப்போது வேண்டுமென்றாலும் கொடுக்கத் தயாராக இருக்கின்றோம்.

செய்யாறு சிறப்புப் பொருளாதார காலணித் தொழிற்சாலை, அப்பல்லோ டயர்ஸ், செயின்ட் கோபைன், ரேனால்ட் நிசான், ஃபோர்டு, சாம்சங், தோஷிபா, ஹூண்டாய், எம்.ஆர்.எப் டயர்ஸ், ஜே.கே. டயர்ஸ் மற்றும் மிச்சிலின் ஆகிய 11 தொழிற்சாலை திட்டங்களில் மட்டும், இதுவரை நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு பெற்றுள்ள 39,330 நபர்களில், இதில் தமிழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு 36,051 நபர்களுக்கு, அதாவது 91.60 சதவிகிதம் தமிழகத்தைச் சேர்ந்தவர்களுக்குப் பணி வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 8.34 சதவிகிதம் பேர்தான் மற்ற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் வேலை செய்கின்றார்கள்.

சிப்காட் வளாகத்தில் 2,235 தொழில் நிறுவனங்கள் ரூபாய் 103,000 கோடி முதலீட்டில் 5,97,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுத்திருக்கின்றன. அதிலேயும் கணக்கெடுத்தால், 84 சதவிகிதம் தமிழகத்தைச் சேர்ந்தவர்களும், மற்ற மாநிலத்தினர் 16 சதவிகிதம் பேர்தான் பணியாற்றி வருகிறார்கள் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தி.மு.க. தலைவரும் மற்றும் மாண்புமிகு உறுப்பினர் ஸ்டாலின் அவர்களும் தமிழகத்திலிருந்து முதலீட்டாளர்கள் கர்நாடாவிற்கு சென்றுவிட்டதாக ஒரு தவறான கருத்தை மக்கள் மத்தியிலே பரப்பிக்கொண்டு வருகிறார்கள். என்னுடைய பதிலைக் கேட்பதற்காக அவர்கள் அவையில் இருப்பார்கள் என்று நினைத்தேன், ஆனால் அவர்கள் அவையில் இல்லை, சென்றுவிட்டார்கள். அறிக்கை விட்டுக்கொண்டிருக்கின்ற அந்தத் தலைவர்கள் எந்தெந்தத் தொழிற்சாலை, எவ்வளவு முதலீட்டில் அங்கே சென்றது என்கின்ற விவரத்தை கொடுக்கமுடியுமா?

மாண்புமிகு கர்நாடக முதல்வர் அவர்களும், அதிகாரிகளும் கோவையில் நடத்திய ஒரு கூட்டத்தில் கலந்து கொண்டு, அனைவரிடத்திலும் விருப்ப வெளிப்பாட்டு விண்ணப்பம், அதாவது Expression of Interest பூர்த்தி செய்து கொடுக்குமாறு ஒரு மனுவைப் பூர்த்தி செய்து வாங்கிக் கொண்டுள்ளனர். ஆனால்,

2014 ஜூலை 14] [திரு. பி. தங்கமணி]

இவர்கள் எல்லாம் கர்நாடகத்தில் முதலீடு செய்யப் போவதாக அறிவித்துவிட்டு சென்றுவிட்டார்கள். ஆனால், அதற்குப் பின்னர் அந்தத் தொழிலதிபர்கள் நாங்கள் யாரும் கர்நாடகாவிற்குச் செல்வதற்கு வாய்ப்பில்லை, செல்லமாட்டோம் என்று சொன்னார்கள்.

ஆனால், நிமுக. தலைவர் ஓர் அறிக்கை விட்டிருக்கின்றார். திருப்பூரைச் சேர்ந்த ஒரு எக்ஸ்போர்ட் நிறுவனம் ரூ.1,000/- கோடிக்கும், கோயம்புத்தூரைச் சேர்ந்த ஒரு பெண் தொழிலதிபர் ரூ.1,000/- கோடிக்கும் கர்நாடகாவிலே முதலீடு செய்கிறார்கள் என்று சொன்னார். இந்த நேரத்திலே அவையின் வாயிலாகக் கேட்க விரும்புவது என்னவென்றால், ரூ.1,000/- கோடி, ரூ.2,000/- கோடி முதலீடு செய்பவர்களுக்கு முகவரி இல்லையா? அவர்கள் எந்த முகவரியில் இருக்கிறார்கள் என்ற விவரம் தெரியவில்லையா? மொட்டையாக திருப்பூரிலிருந்து ரூ.1,000/- கோடியும், கோயம்புத்தூரிலிருந்து ரூ.1000/- கோடியும் முதலீடு கர்நாடகாவிற்குச் செல்கிறது என்று அறிக்கைவிட்டிருக்கிறார்கள். அவர்கள் சொல்வது உண்மையாக இருந்திருந்தால், அந்த நிறுவனத்தின் பெயரையும், அவர்கள் யார் என்ற விவரத்தையும் சொன்னால் நாங்கள் ஏற்றுக்கொள்வோம். அதைவிட்டு விட்டு பேப்பரில் முதலீடுகள் அங்கே சென்றுவிட்டன என்று அறிக்கைவிடுகிறார்கள்.

கோயம்புத்தூரிலிருந்து தென் மாவட்டங்களுக்கு தொழில் தொடங்க வாருங்கள் என்றால் அவர்கள் கோயம்புத்தூரிலேயே நாங்கள் தொழில் செய்கிறோம், வரமாட்டோம் என்று சொல்கின்ற காலக்கட்டத்தில் அவர்கள் மைசூருக்குச் செல்வார்களா? இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு, மைசூர் எல்லையில் ஒரு லாரி பழுதாகி நின்றுவிட்டது. 14 மணி நேரம் போக்குவரத்து நெருக்கடி, எந்த வண்டியும் போகவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆக, சாலை வசதி இல்லையென்று சொன்னாலே அந்தப் பகுதியில் தொழிற்சாலை வருவது கடினம். அப்படி இருக்கின்றபோது, மலைப்பாங்கான இடத்தைத் தாண்டி, தொழில் தொடங்க கர்நாடகாவிற்குச் செல்வார்கள் என்று சொன்னால், எப்படி சாத்தியமாக இருக்கும் என்பதை இந்த அவையில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 2-20

அதேபோல, கடந்த மைனாரிட்டி நிமுக. அரசு, "இங்கிருந்து தொழிலதிபர்கள் தொழில் தொடங்க வேறு மாநிலங்களுக்குச்

சென்றுவிட்டார்கள்" என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். சென்னையில், மெட்ரோ இரயில் திட்டம் முடிவுற்று, கூடிய விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு வர இருக்கின்றது. அவர்கள், "மெட்ரோ இரயில் திட்டம், நாங்கள் கொண்டு வந்த திட்டம்" என்று அறிக்கை விட்டுக்கொண்டு, பெருமையடித்துக் கொண்டிருக்கிறார்கள். சென்னை மெட்ரோ இரயிலுக்கான பெட்டிகளைத் தயாரிக்கும் Alstom என்ற தொழிற்சாலை வெளிநாட்டிலிருந்து தொழில் தொடங்க வருகின்றது. அவர்கள், பெட்டிகளைத் தயார் செய்து, தமிழகத்திலுள்ள மெட்ரோ இரயில் திட்டத்திற்குத்தான் கொடுக்கிறார்கள். எங்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் 'மெட்ரோ இரயில் திட்டத்திற்கான ஒப்பந்தம் போட்டோம்' என்று சொல்கிறார்கள். ஆனால், மெட்ரோ இரயிலுக்கான பெட்டிகள் செய்யும் தொழிற்சாலை தமிழகத்தில் தொடங்கப்படாமல் ஆந்திர மாநிலம் தடா பகுதிக்குச் சென்றுவிட்டது. இவர்கள், "அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் தொழிற்சாலைகள் வெளிமாநிலங்களுக்குச் சென்றுவிட்டன" என்று சொல்வதை எப்படி நம்புவது? அவர்களுடைய ஆட்சிகாலத்தில்தான், அதுவும், "மெட்ரோ இரயில் திட்டத்தை நாங்கள்தான் ஆரம்பித்தோம்" என்று சொல்லிக் கொண்டிருப்பவர்கள் ஆட்சிக்காலத்தில்தான், இரயில்வே பெட்டியை முழுக்க முழுக்கத் தயார் செய்து தமிழகத்திற்கு வழங்கும் அந்தத் தொழிற்சாலை தடாவிற்குச் சென்றுவிட்டது. அதற்கு என்ன காரணம்? அவர்கள் ஏன் பதில் சொல்ல மறுக்கிறார்கள்?

இது போட்டி நிறைந்த உலகம். சென்னை துறைமுகத்தையும், சென்னை விமான நிலையத்தையும் பயன்படுத்திக் கொண்டு, "நாங்கள் குறைந்த விலைக்கு நிலம் தருகிறோம், வரிச் சலுகையும் அதிகமாகத் தருகிறோம்" என்று சொல்லி, தொழிலதிபர்களைத் தொழில் தொடங்க ஆந்திர மாநிலம் தடாவிற்கு அழைக்கின்றார்கள். இராமாயணத்திலே, "ஆடும் மேய்த்த மாதிரி; அண்ணனுக்குப் பெண்ணும் பார்த்த மாதிரி" என்று ஒரு பழமொழி சொல்வார்கள். மரியாதைக்குரிய ஆந்திர முதல்வர் அவர்கள், இந்த வழியாக வந்து செல்லும்போதெல்லாம், "தமிழகத்தில் என்ன கொடுக்கின்றார்களோ அதற்குமேல் நான் கொடுக்கின்றேன்; Excise Duty exemption தருகின்றேன்; வருமான வரியிலேகூட உங்களுக்கு நான் சலுகை வாங்கித் தருகின்றேன். தொழில் தொடங்க அங்கே வாருங்கள்; உங்களுக்குத் தேவையான

2014 ஜூலை 14] [திரு. பி. தங்கமணி]

அனைத்து வசதிகளும் இருக்கின்றன. உங்களுக்கு விமான நிலையம் என்றால் சென்னை, துறைமுகம் என்றால் சென்னை என நிறைய வசதிகள் இருக்கின்றன. எனவே, நீங்கள் தொழில் துவங்க வாருங்கள்" என்று தொழிலதிபர்களை அழைத்துக் கொண்டிருக்கிறார். அதுமட்டுமல்ல, அங்கே என்ன நடக்கிறது என்றால், தனியார் 20 ஆயிரம் ஏக்கர் நிலம் வைத்திருக்கின்றார்கள். அவர்கள் ஏதாவது ஒரு தொழிற்சாலையை அங்கே கொண்டுவந்துவிட்டார்கள் என்றால், ஒரு யூனிட்டுக்கு ஒரு ஏக்கர் என ஒரு தொழிற்சாலைக்கு 500 ஏக்கர் நிலம் கொடுத்துவிட்டார்கள் எனில், அதனுடைய vendors ancillary unit அங்கே வருகின்றபோது அதற்கு இரண்டு மடங்காக விலையை அதிகரித்து, அங்கே தொழிற்சாலையை ஆரம்பித்துவிடுகின்றார்கள். "நாங்கள் நிலம் குறைவாகத் தருகிறோம், எங்கள் மாநிலத்திற்குத் தொழில் தொடங்க வாருங்கள்" என்று இங்கேயிருக்கின்ற தொழிலதிபர்களை அழைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில், இங்கேயிருக்கின்ற தொழிலதிபர்கள் அத்தனை பேரும் "தமிழகத்தைவிட்டு தொழில் தொடங்க நாங்கள் எங்கேயும் செல்லமாட்டோம்; தமிழகத்தில் மட்டும்தான் தொழில் தொடங்குவோம்" என்று சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைய தினம் அதிகளவில் தமிழகத்திற்கு வந்து தொழில் தொடங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம், தமிழகத்தில், தாயினுடைய ஆட்சியில், சீரான சட்டம்-ஒழுங்கு, பயிற்சி பெற்ற திறன்மிக்க தொழிலாளர்கள், உறுதியான தலைமை ஆகிய காரணங்களினால் தொழில் துவங்கிட இங்கே வந்துகொண்டிருக்கின்றார்கள். எனவே, எத்தனை முதல்வர்கள் இங்கு வந்து அழைத்தாலும், ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களில் முதலீடு செய்யுங்கள் என்று எதிர்க்கட்சிகள் எல்லாம் தூண்டிவிட்டாலும், அதையும் மீறி ஒவ்வொரு தொழிலும் தமிழகத்திற்குத்தான் வந்து கொண்டிருக்கின்றது.

தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023 கொண்டு வந்ததைப்பற்றி, திமுக தலைவர், "பூஜ்ஜியத்திலே ராஜ்ஜியம்" என்று கூறியிருக்கிறார். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அப்படி அறிக்கை விட்டுக்கொண்டிருந்த தலைவருக்கு நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் பரிசாக பூஜ்ஜியத்தை வாங்கிக் கொடுத்தார் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. பி. தங்கமணி] [2014 ஜூலை 14

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில், ஐப்பானிய நிறுவனங்களின் முதலீட்டிற்கு உகந்த மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது என்பதற்குப் பல்வேறு உதாரணங்களை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஐப்பான் முதலீட்டாளர்கள் அனைவரும் தமிழ்நாட்டில்தான் முதலீடு செய்வதில் ஆர்வமாக உள்ளார்கள். அதற்குக் காரணம், மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலும், நிருவாகத் திறமையும், சட்டத்தின் ஆட்சியும், வெளிப்படையான கொள்கையும்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஐப்பான் நாட்டுக் கம்பெனிகள் "தொழில் தொடங்குவதற்குச் சிறந்த இடம் தமிழ்நாடுதான்" என்று கருதுகின்றன. தற்போது, ஐப்பான் நாட்டின் கம்பெனிகள் மட்டும் நமது தமிழ்நாட்டில் 523 இருக்கின்றன; இதுபோன்று எந்த மாநிலத்திலும் இல்லை என்பதை நான் கோடிட்டுக்காட்ட விரும்புகின்றேன். கடந்த கால மைனாரிட்டி திமுக ஆட்சியில், 240 ஐப்பானிய கம்பெனிகள் இருந்தன. இப்பொழுது 523 கம்பெனிகள் வந்திருக்கின்றன என்றால், தொழிலதிபர்கள் தொழில் தொடங்க எங்கே வந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால், மகாராஷ்டிரா-397, குஜராத்-325, கர்நாடகா-299, ஆந்திரா-229, டெல்லி-175, கேரளா-105, மேற்கு வங்காளம்-96, குஜராத்-84, இராஜஸ்தான்-79, உத்திரப்பிரதேசம்-72, மத்தியப்பிரதேசம்-25, ஹரியானா-24, பஞ்சாப்-19, ஒடிசா-15, உத்தராகண்ட்-14 என்ற அளவில்தான் கம்பெனிகளின் எண்ணிக்கை இருக்கின்றன. மற்ற மாநிலங்களைவிட இரண்டு மடங்கு அதிகமாகத் தமிழகத்திலே ஐப்பானிய கம்பெனிகள் தொழில் தொடங்கியிருக்கின்றன. மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியும், அவர்களுடைய நிறைமையும்தான் இத்தத் தொழிற்சாலைகள் இங்கே வருவதற்குக் காரணம் என்பதை இத்த நேரத்தில் உங்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்கின்றேன். திமுக உறுப்பினர்கள் இங்கே பேசிவிட்டுச் சென்றுவிட்டார்கள். நான் அதற்கு ஆதாரத்தோடு திருப்பிக்கின்றேன் என்று சொன்னேன். ஏற்கெனவே, அவர்கள், 23,743 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்ட, கிட்டத்தட்ட 12 கம்பெனிகளில் ஒருவர்கூட இங்கே தொழில் தொடங்கவில்லை என்பதுதான் கடந்த கால மைனாரிட்டி திமுக. அரசின் சாதனை என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். கடந்த மூன்றாண்டு காலத்தில்

2014 ஜூலை 14] [திரு. பி. தங்கமணி]

தமிழ்நாட்டில் ஜப்பானிய கம்பெனிகளின் எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-25

கடந்த கால மைனாரிட்டி திமுக. ஆட்சியில், மொத்த முதலீடு ரூ.21,000/- கோடி அளவிற்கு மட்டுமே இருந்தது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு ஸ்டாலின் அவர்கள் ரூ.66,000/- கோடி அளவிற்கு முதலீடுகளைக் கொண்டு வந்ததாகப் பொதுக் கூட்டங்களிலும், பத்திரிகைகளிலும் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். நான் ஆதாரத்தோடு இந்த புள்ளிவிவரங்களைத் தர தயாராக இருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதை இங்கே நிருபிக்க முடியுமா என்று இத்தச் சட்டமன்றத்தின் வாயிலாக நான் கேட்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையில் இயங்குகின்ற தமிழகம் இந்தியாவிலேயே அதிக கார் உற்பத்தி செய்யும் மாநிலமாக திகழ்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி). கிட்டத்தட்ட வருடத்திற்கு 13,80,000 கார்களை உற்பத்தி செய்கிறது. இவை அனைத்திற்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்குப் பார்வை மற்றும் சிறப்பான வழிகாட்டுதல்களே காரணமாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய தலைமையில், நல்ல நிருவாகம் நடைபெற்றுக் கொண்டிருப்பதற்கு எடுத்துக்காட்டாக தமிழ்நாடு, மின்னணு வன்பொருள் தயாரிப்பு மற்றும் ஏற்றுமதியில் இந்தியாவில் முதலிடத்தை வகிக்கின்றது. மென்பொருள் ஏற்றுமதியில் இரண்டாம் இடத்தையும், அன்னிய நேரடி முதலீட்டை ஈர்ப்பதில் இரண்டாம் இடத்தையும் வகிக்கின்றது. நாட்டிலேயே அதிக எண்ணிக்கையில் சிறு மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில்தான் உள்ளன.

இந்தியாவில், தானியங்கி வாகனங்கள் மற்றும் வாகன உதிரி பாகங்கள் தயாரிப்பில் தமிழகம் 30 சதவிகிதம்; சரக்கு வாகனம் தயாரிப்பில் 17 சதவிகிதம்; பயணிகள் கார் மற்றும் இருசக்கர வாகனத் தயாரிப்பில் 20 சதவிகிதம் என்று முன்னோடி மாநிலமாகத் தமிழகம் இருக்கிறது என்பதைப் பெருமையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

[திரு. பி. தங்கமணி] [2014 ஜூலை 14

என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்போது அவையிலே இல்லை. எந்தெந்த கம்பெனியில் யார், யார் வேலை செய்கின்றார்கள் என்ற பட்டியல் என்னிடத்தில் இருக்கின்றது. எப்போது வேண்டுமென்றாலும் கொடுக்கத் தயாராக இருக்கின்றோம்.

செய்யாறு சிறப்புப் பொருளாதார காலணித் தொழிற்சாலை, அப்பல்லோ டயர்ஸ், செயிண்ட் கோபைன், ரேனால்ட் நிசான், ஃபோர்டு, சாம்சங், தோஷிபா, ஹூண்டாய், எம்.ஆர்.எப் டயர்ஸ், ஜே.கே. டயர்ஸ் மற்றும் மிச்செலின் ஆகிய 11 தொழிற்சாலை நிட்டங்களில் மட்டும், இதுவரை நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு பெற்றுள்ள 39,330 நபர்களில், இதில் தமிழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு 36,051 நபர்களுக்கு, அதாவது 91.66 சதவிகிதம் தமிழகத்தைச் சேர்ந்தவர்களுக்குப் பணி வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 8.34 சதவிகிதம் பேர்தான் மற்ற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் வேலை செய்கின்றார்கள்.

ஒப்காட் வளாகத்தில் 2,235 தொழில் நிறுவனங்கள் ரூபாய் 1,03,100 கோடி முதலீட்டில் 5,97,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுத்திருக்கின்றன. அதிலேயும் கணக்கெடுத்தால், 84 சதவிகிதம் தமிழகத்தைச் சேர்ந்தவர்களும், மற்ற மாநிலத்தினர் 16 சதவிகிதம் பேர்தான் பணியாற்றி வருகிறார்கள் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டாவது தலைவரும் மாண்புமிகு உறுப்பினர் ஸ்டாலின் அவர்களும் தமிழகத்திலிருந்து முதலீட்டாளர்கள் கர்நாடகாவிற்கு சென்றுவிட்டதாக ஒரு தவறான கருத்தை மக்கள் மத்தியிலே பரப்பிக்கொண்டு வருகிறார்கள். என்னுடைய பதிலைக் கேட்பதற்காக அவர்கள் அவையில் இருப்பார்கள் என்று நினைத்தேன், ஆனால் அவர்கள் அவையில் இல்லை, சென்றுவிட்டார்கள். அறிக்கை விட்டுக்கொண்டிருக்கின்ற அந்தத் தலைவர்கள் எந்தெந்தத் தொழிற்சாலை, எவ்வளவு முதலீட்டில் அங்கே சென்றது என்கின்ற விவரத்தை கொடுக்கமுடியுமா?

மாண்புமிகு கர்நாடக முதல்வர் அவர்களும், அதிகாரிகளும் கோவையில் நடத்திய ஒரு கூட்டத்தில் கலந்து கொண்டு, அனைவரிடத்திலும் விருப்ப வெளிப்பாட்டு விண்ணப்பம், அதாவது Expression of Interest பூர்த்தி செய்து கொடுக்குமாறு ஒரு மனுவைப் பூர்த்தி செய்து வாங்கிக் கொண்டுள்ளனர். ஆனால்,

2014 ஜூலை 14] [திரு. பி. தங்கமணி]

மரியாதைக்குரிய எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. சந்திரகுமார் அவர்கள், நில வங்கியைப் பற்றிப் பேசினார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், தமிழ்நாட்டிற்கு மேலும் பல தொழிற்சாலைகளை ஈர்க்கும் வகையில், தொழில்முனைவோருக்குத் தேவைப்படும் தொழில் மனைகளை உடனடியாக வழங்கும்பொருட்டு, சிப்காட் நிறுவனம் 52,000 ஏக்கர் நிலப்பரப்பு கொண்ட நில வங்கி ஒன்றினை உருவாக்க நடவடிக்கை எடுத்து வருகிறது, இந்த நில வங்கி, விவசாய நிலங்களைக் கவனமாகத் தவிர்த்து, தரிசு மற்றும் சாகுபடிக்கு உதவாத நிலங்களை மட்டும் தேர்வு செய்யும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்தியாவில் தமிழ்நாட்டை தலையாய மாநிலமாக உயர்த்துதல் என்னும் உயரிய நோக்கோடு நம் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆற்றிவரும் கடமைகளை இந்திய தேசமே பார்த்துக்கொண்டிருக்கின்றது.

'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்பதற்கேற்ப, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், விவசாயிகளின் நலன் கருதி கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.2,650/- என்று அறிவித்து, அனைத்து சர்க்கரை ஆலைகளும் அந்தத் தொகையை வழங்க வேண்டுமென்று ஆணையிட்டிருக்கின்றார்கள். தனியார் சர்க்கரை ஆலைகள் தங்களுக்கு சரியான விலை கிடைக்கவில்லை என்ற காரணத்தினால், கரும்பை சாகுபடி செய்ய மறுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த விவரம் எங்களுடைய கவனத்திற்கு வந்தவுடன், அதை நாங்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றோம். அம்மா அவர்களும் "நீங்கள் கரும்பை அறுவடை செய்து, உடனடியாக அரசு ஆலைகளில் அரைவையை ஆரம்பிக்க வேண்டும்" என்று ஆணையிட்டார்கள். அதனடிப்படையில் கள்ளக்குறிச்சி-1 சர்க்கரை ஆலையில் கிட்டத்தட்ட 1,40,000 டன்னும், கள்ளக்குறிச்சி-2 சர்க்கரை ஆலையில் 1,25,000 டன்னும் கரும்பை அரைவை செய்து, முழுமையாக கரும்பு விவசாயிகளுக்குப் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-30

மரியாதைக்குரிய அண்ணன் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்கூட நேற்றையதினத்திலிருந்து கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். தனியார் ஆலைகள் பதிவு செய்யாத கரும்பை, சீசன் நேரங்களில், விலை

[திரு. பி. தங்கமணி] [2014 ஜூலை 14

அதிகமாக இருக்கின்றபோது, 100 ரூபாய், 200 ரூபாய் என்று கொடுத்து எடுத்துச் சென்றுவிடுவதாகவும், அதனால் அதிகாரிகளை அழைத்துச் சென்று பதிவு செய்யாத கரும்பை வெளியே எடுத்துச் செல்லக்கூடாது; கூட்டுறவு ஆலைக்குத்தான் தரவேண்டுமென்று கடந்த காலத்திலே கேட்டதாகவும், அதற்கு அவர்கள் தரமாட்டோம் என்று சொல்லி, விலக்கிவிட்டு அவர்கள் சென்று விட்டதாகவும் சொன்னார்கள். ஆனால் இப்பொழுது தனியார் ஆலைகள் அதை எடுக்க மறுத்தார்கள் என்பதையும் சொன்னார்கள். மாண்புமிகு அம்மா அதை எடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து, இன்றையதினம் அரவை செய்து, கரும்பு விவசாயிகளின் வாழ்வாதாரத்தில் ஒளி விளக்கேற்றியிருக்கின்றார்கள் என்பதை நீங்கள் நினைத்துப் பார்க்கவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆனால், விவசாயிகளுக்காகக் குரல் கொடுக்கிறோம் என்று சொல்லி, கடந்த கால மைனாரிட்டி திமுக அரசு என்ன செய்திருக்கிறது? இருக்கின்ற சர்க்கரை ஆலைகளிலேயே இவ்வளவு பிரச்சினைகள் இருக்கின்றன. இந்நிலையில், அவர்கள் தனியார் 9 புதிய சர்க்கரை ஆலைகளைத் தொடங்க அனுமதியைக் கொடுத்து, 8 சர்க்கரை ஆலைகள் இப்போது இயங்கிக் கொண்டிருக்கின்றன. அந்த 8 சர்க்கரை ஆலைகளுக்கும், ஏற்கெனவே கூட்டுறவுத் துறையின் கட்டுப்பாட்டில் இருந்த ஏரியாக்களையும் பிரித்துக் கொடுத்து, தனியாருக்கும் பிரித்துக் கொடுத்ததன் அடிப்படையில் கிட்டத்தட்ட 50 ஆயிரம் ஏக்கர் கொடுத்திருக்கின்றார்கள். ஆக, அவர்கள் தனியாருக்கு ஆதரவாக இருந்துவிட்டு, இன்றையதினம் வெளியே இருந்துகொண்டு 3,000/- ரூபாய் கொடுக்கவேண்டும்; 2,650/- ரூபாய் போதாது என்று அறிக்கை விடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். உண்மையான நிலைமை என்ன என்பதை இங்கே நீங்கள் புரிந்து கொள்ளவேண்டும். இதையெல்லாம் மறைத்துவிட்டு, ஏதோ, விவசாயிகளுக்கு ஆதரவாக இருப்பதாக அறிக்கை விட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் விவசாயிகளின் விரோதி என்பது, நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், மக்கள் அவர்களுக்குக் கொடுத்த பாடமான 'ஜீரோ' என்பதிலிருந்து தெளிவாகி இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அளவிற்குச் செயல்பட்டு, அரசு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் இலாபத்தில் இயங்கவேண்டுமென்றால் எப்படி இயங்கும்? ஏரியாவும் நமக்குக் கிடையாது; கரும்பும் கிடையாது.

2014 ஜூலை 14] [திரு. பி. தங்கமணி]

ஆறு மாதங்களிலே வெட்ட வேண்டியதாக இருந்தாலும், அரசு கூட்டுறவுத் துறைதான் வெட்ட வேண்டியிருக்கிறது. தனியார் அதை வெட்ட மறுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு விவசாயிகூட பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்பதற்காக, உடனடியாக நீங்கள் வெட்டி, சீசன் இல்லாவிட்டாலும்கூடப் பரவாயில்லை; உடனடியாக அதனை அரவை செய்து, அவர்களுக்குப் பணத்தைக் கொடுக்கவேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். நஷ்டம் வந்தாலும், விவசாயிகளின் பக்கம் இருக்கின்ற அரசு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. ஞானசேகரன் அவர்கள் பேசுகிறபோது குறுக்கிட்ட மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள், கேரளா சம்பந்தமாகப் பேசிய பிரச்சினை அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு தொழில் துறை அமைச்சர், பேசுங்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. அரசில் இருந்தவர்கள் இப்பொழுது கரும்புக்கு டன் ஒன்றுக்கு 3 ஆயிரம் ரூபாய் கொடுக்கவேண்டும்; 3,500 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று சொல்கின்றார்கள். இந்த நேரத்தில் ஒன்றை மட்டும் எல்லோருக்கும் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

2005-2006 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ.1,014/- என்று அறிவித்து விட்டுச் சென்றார்கள். ஆனால், 2006-ல் அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால், அவர்கள் கரும்புக்கு அளித்த விலை உயர்வு என்னவென்றால், டன் ஒன்றுக்கு 11 ரூபாய். 2007-2008-லே அவர்கள் ஏற்றிய விலை உயர்வு டன் ஒன்றுக்கு வெறும் 9 ரூபாய். 2009-2010-லே அவர்கள் டன் ஒன்றுக்கு 300 ரூபாய் ஏற்றியிருக்கின்றார்கள். அதற்குப் பின்னால் தேர்தல் வருகிறது என்ற காரணத்தினாலேதான், அவர்கள் 500 ரூபாய் அதிரடியாக ஏற்றினார்கள். ஆனால், உண்மையிலேயே விவசாயிகளுக்குத் தரவேண்டும்; விவசாயிகள் காப்பாற்றப்பட வேண்டுமென்று நினைத்திருந்தால், விலையைச் சற்று ஏற்றிக் கொடுத்திருந்தால் பரவாயில்லை. மூன்றாண்டு காலத்தில் வெறும் 11 ரூபாய், 9 ரூபாய், 8 ரூபாய் என்று ஏற்றிக் கொடுத்துவிட்டு, இப்பொழுது விவசாயிகளுக்கு ஆதரவாக நாங்கள்

கூக்குரலிடுவோம் என்று சொல்வார்களேயானால், மக்கள் அவர்களை நம்புவார்களா என்பதை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

அதேபோல, இணை மின் உற்பத்தி நிலையம்; சரியான ஒப்பந்ததாரர்களைத் தேர்வு செய்யாததாலும், முறையாக நிதி ஒதுக்காத காரணத்தினாலும், 183 மெகா வாட் மின்சாரம் உரிய காலத்தில் கிடைக்கவில்லை. மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு இதை எடுத்துச் சென்றவுடன், உடனடியாக 352 கோடி ரூபாயைக் கடனாகக் கொடுத்து, அந்தப் பணிகள் இந்த ஆண்டு இறுதிக்குள் முடிக்கப்பட்டு, மின் உற்பத்தியைத் தொடங்க வேண்டுமென்று ஆணையிட்டிருக்கின்றார்கள். அதற்குண்டான முயற்சியை நாங்களும் செய்து கொண்டிருக்கின்றோம்.

அதுமட்டுமல்ல, சர்க்கரைத் துறையில் ஒளிவு மறைவற்ற நிருவாகத்தை நடத்திக் கொண்டிருப்பதற்கு எடுத்துக்காட்டாக, இணையதளத்தால் மேற்கொள்ளப்படும் கொள்முதல் மற்றும் விற்பனை தொடர்பான பணிகளில், இந்திய அளவில் பெரும்பாலான நிறுவனங்கள் பங்கேற்கும் வகையில், ஒப்பந்தப்புள்ளி பணிகளில் ஒளிவுமறைவற்ற நடவடிக்கைகள், மின்னணு ஒப்பந்தப்புள்ளி (e-tender) மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து டிட்கோ. தமிழ்நாடு வர்த்தக மேம்பாட்டு நிறுவனமானது, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும், இந்திய வர்த்தக மேம்பாட்டு நிறுவனமும் இணைந்து, கூட்டுத் துறையில் அமைக்கப்பட்ட ஒரு நிறுவனமாகும். இந்நிறுவனம் 25.48 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ.60.70 கோடி முதலீட்டில், கண்காட்சி அரங்குகள் மற்றும் கருத்தரங்கு மையம் கொண்ட சென்னை வர்த்தக மையத்தை அமைத்துள்ளது. இவ்வர்த்தக மையம் மூலமாக, சுமார் 250 நபர்கள் வேலைவாய்ப்பினைப் பெற்றுள்ளார்கள்.

அதேபோல, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், லார்சன் அண்டு டியூப்ரோ நிறுவனத்தோடு சேர்ந்து, கப்பல் கட்டும் தளம் கட்டுவதற்காக தன்னுடைய பங்கை வழங்கி, அங்கேயும் அவர்கள் தொழில் தொடங்குவதற்கு உறுதுணையாக இருந்து கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே

2014 ஜூலை 14] [திரு. பி. தங்கமணி]

சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோல, L & T Port ஆரம்பிக்கப்பட்டபோது, அன்னையவரினம் மைனாரிட்டி நிறுவன அரசு இருந்தது. ஒருமுறை அவர்கள் அங்கே சென்றபோது, அங்குள்ள மக்களெல்லாம் அவர்களை மறித்துக்கொண்டு, 'எங்களுடைய இடம் போய்விட்டது; எங்களுக்கு வேலைவாய்ப்பு வேண்டும்' என்று அவர்களிடம் கேட்டார்கள். ஆனால், அவர்கள், நீங்கள் உரிய ஏற்பாட்டினைச் செய்யுங்கள்' என்று அங்குள்ள அதிகாரியிடம் சொல்லிவிட்டு வந்து விட்டார்கள். இரண்டு ஆண்டுகள் அதைப்பற்றி கவலிக்கவேயில்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன், இப்படியொரு பிரச்சினை இருக்கின்றது என்பதை அறிந்தவுடன், 15 கிராமங்களில் இருக்கின்ற மீனவர்களையும் அழைத்துப் பேசி, அவர்களில் 60 நபர்களுக்கு நேரடியாக வேலையும், 60 நபர்களுக்குப் பயிற்சியும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தார்கள். இப்படி 120 பேர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டதன் அடிப்படையில், அந்த கம்பெனி அவர்களைப் பணிக்கு எடுத்து, இன்றைக்குப் பயிற்சி கொடுத்திருக்கின்றார்கள். அத்துப் பயிற்சிகூட எப்படி அளிக்கப்படுகிறது என்று சொன்னால், மாதந்தோறும் 1,500 ரூபாய்தான் எல். & டி. நிறுவனம் கொடுக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் மாதந்தோறும் 4,500 ரூபாய் கொடுத்து, அவர்களுக்குப் பயிற்சி கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், இதைவிட மாண்புமிகு அம்மாவின் அரசால் என்ன செய்ய முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கித் தரவேண்டும் என்ற நோக்கத்தில்தான் இத்தனைத் திட்டங்களையும் கொண்டு வந்திருக்கிறார்கள்.

பிற்பகல் 2-35

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, வாலூர்தி பூங்கா, சூரிய சக்தி மின் பூங்கா அமைக்கும் திட்டம், பாலிமர் பொருட்கள், ஒருங்கிணைந்த நெசவு மற்றும் தொழில் துறை வளாகம், கதிர்வீச்சமூலம் ஒருங்கிணைந்த உணவுப் பொருள் பதப்படுத்தும் மையம், ஒருங்கிணைந்த நிதி சேவை மையம் போன்ற திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான முயற்சிகளை டிட்கோ நிறுவனம் எடுத்துக்கொண்டு வருகிறது.

அதேபோல, நாகார்ஜுனா எண்ணெய் நிறுவனத்தின் பெட்ரோலிய சுத்திகரிப்பு ஆலைத் திட்டமானது, டிட்கோ

[திரு. பி. தங்கமணி] [2014 ஜூலை 14

நிறுவனத்தின் கூட்டு முயற்சியின்படி (Joint Venture-ல்) ஓராண்டு காலத்திற்குள் செய்து முடிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம், ஆலைகள் வைப்போம், கல்விச் சாலைகள் வைப்போம்' என்பதற்கேற்ப, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் ஆண்டொன்றுக்கு 90,000 டன்னுடன் உற்பத்தியைத் தொடங்கி, இன்றைக்கு அதன் ஆண்டு உற்பத்தி 4 இலட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) காகிதக் கூழ் தயாரிப்பு 250 டன்னிலிருந்து 880 டன்னாக உயர்ந்துள்ளது. இந்நிறுவனம் நேரடியாக 1,976 நபர்களுக்கும் மறைமுகமாக 8,000 தொழிலாளர்களுக்கும் வேலைவாய்ப்பு வழங்கிவருகிறது. இந்நிறுவனத்தில் உற்பத்தியாகும் காகிதங்கள் பள்ளிக் குழந்தைகள் பாடப் புத்தகத்திற்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. காகித நிறுவனத்தின்மூலம் தாள் ஒன்றுக்கு 600 டன் சிமெண்ட் உற்பத்தி செய்யும் ஆலையை 130 கோடி ரூபாய் செலவில் மாண்புமிகு அம்மா அவர்கள் 30-1-2013 அன்று தொடங்கிவைத்தார். இதன்மூலம் மக்களுக்கு குறைந்த விலையில் சிமெண்ட் வழங்கிக்கொண்டிருக்கிறோம். இது தவிர, உபயோகப்படுத்தப்பட்ட காகிதத்திலிருந்து De-inking Plant மூலம் தானொன்றுக்கு 300 டன் காகிதக் கூழ் தயாரிக்கும் ஆலை 30-12-2013 அன்று 164 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டிருக்கின்றது. 40 மெகா வாட் திறன் கொண்ட ஒரு புதிய மின் உற்பத்தி நிலையம் ரூ.160 கோடி செலவில் 30-12-2013 அன்று மாண்புமிகு அம்மா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சுய பண்ணைக் காடுகள், சுய பண்ணைத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. நொய்யல் ஆற்றில் பாதிக்கப்பட்ட பருதிகளில் பண்ணைத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய தல்லாசியுடன் திருச்சி மாவட்டம், மணப்பாறை தாலுகா, மொண்டிப்பட்டி கிராமத்தில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம்மூலம் ஆண்டு ஒன்றுக்கு இரண்டு இலட்சம் டன் திறன் கொண்ட, இருபுறமும் மேற்பூச்சு செய்யப்பட்ட அடுக்கு காகித அட்டை தயாரிக்கும் ஆலையை 1,500 கோடி ரூபாய் முதலீட்டில் நிறுவப்படும் திட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா

2014 ஜூலை 14] [திரு. பி. தங்கமணி]

அவர்கள் 3-6-2013 அன்று அடிக்கல் நாட்டினார்கள். இந்தத் திட்டம் 2013 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் உற்பத்தியைத் தொடங்கவிருக்கிறது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்குத் தேவையான இயந்திரங்களை வாங்குவதில் ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 5 ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு தனியார் பேப்பர் மில் போர்டு வாங்கிய விலையைவிட மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த முயற்சியின் காரணமாக, 150 கோடி ரூபாய் வரை விலை குறைத்து அந்த இயந்திரங்களை வாங்கி, அடுத்த ஆண்டு மே அல்லது ஜூன் மாதத்திற்குள் அந்த இயந்திரங்கள் பெறப்பட்டு, டிசம்பர் மாதத்திற்குள் அந்த ஆலையை மாண்புமிகு அம்மா அவர்கள் தனது பொற்கரங்களால் தொடங்கிவைக்க இருக்கிறார்கள். அதற்காக இரவு, பகல் பாராமல் முழு வீச்சில் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிறுவனம் ஆரம்பித்த காலம்தொட்டு, இதுவரும் இல்லாத அளவிற்கு இந்த ஆண்டுதான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி 202.68 கோடி ரூபாய் அளவிற்கு இலாபத்தை ஈட்டியுள்ள முதல் பொதுத் துறை நிறுவனம் டி.என்.பி.எல். நிறுவனம் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தனியார் ஆலைகளுக்குக்கூட கிடைக்காத விருதுகள் இந்த ஆலைக்குக் கிடைத்திருக்கிறது.

3 விருதுகள். (1) கொல்கத்தாவிலுள்ள இந்திய விலை மதிப்பீட்டு கணக்காயர் கழகம், (Institute of Cost Accountants of India), தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்குச் சிறந்த உற்பத்திச் செலவின மேலாண்மைக்கான தேசிய விருதினை (National award for excellence in Cost Management-2014, First Award) வழங்கியுள்ளது.

(2) மும்பையில் உள்ள Dun & Bradstreet வியாபார தகவல் நிறுவனம், காகித உற்பத்தித் துறையில் இந்தியாவின் முதன்மையான ஆலையாக (Top Indian Company under the sector paper) தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தைத் தொடர்ந்து மூன்றாவது முறையாகத் தேர்ந்தெடுத்து 'Dun and Bradstreet Corporate Award' 2014 ஆம் ஆண்டுக்கும் வழங்கியுள்ளது.

(3) இந்திய தொழில் கூட்டமைப்பின் (Confederation of Indian Industry) 2013 ஆம் ஆண்டிற்கான சிறந்த சுற்றுப்புறச் சூழல் உத்திகளைச் செயல்படுத்தியமைக்கான விருதை தமிழ்நாடு செய்தித்தாள் கதித நிறுவனத்திற்கு வழங்க இருக்கிறது.

அதேபோல, மரியாதைக்குரிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தில் கடன் வாங்கியிருப்பதைப் பற்றி சொன்னார். அதற்கும் இங்கே பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் கடுமையான மின்வெட்டு இருந்த காரணத்தினால், அவர்கள் 125 கே.வி.ஏ.க்கு 1½ இலட்சம் ரூபாய்தான் மானியமாகக் கொடுத்தார்கள். அவர்கள் செய்த தவறுக்கு மாறாக, சிறு தொழில்நிபர்களாக இருந்தாலும், பெரிய தொழில்நிபர்களாக இருந்தாலும், அவர்கள் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக தனது கவனத்திற்கு வந்தவுடன், 320 கே.வி.ஏ. வரை ரூ.5 இலட்சம் மானியமாகக் கொடுத்து அந்த தொழிற்சாலைகளை காப்பாற்றியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-40

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தைப் பொறுத்தவரையில், 1,15,806 நிறுவனங்களுக்கு ரூ.11,621 கோடி கடன் உதவி வழங்கியுள்ளது. இக்கழகம் அளித்து வரும் நிதியுதவியில் சுமார் 90 விழுக்காடு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோர்களின் வட்டி சுமையைக் குறைப்பதற்காக, 3 சதவிகிதம் வட்டி மானியமாக அளிக்கப்படுகின்றது. மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான வழிகாட்டுதலின்படி, இந்நிறுவனம், 2013-2014 ஆம் ஆண்டில், அதாவது 31-3-2014 வரையில், ரூ31 கோடி அளவிற்கு இலாபம் ஈட்டியிருக்கின்றது.

2013-2014 ஆம் நிதியாண்டில், நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் நிறுவனத்தில் முதலீடு செய்ய, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு 37.50 கோடி ரூபாயை அதற்காக கொடுத்திருக்கிறது. இப்படி ஐந்து நிறுவனங்களின்மூலம் 358 கோடி ரூபாய் அளவிற்கு வாங்கப்பட்ட shares-ன் மதிப்பு இந்த ஆண்டு 582 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது என்று சொன்னால், கடந்த

2014 ஜூலை 14] [திரு. பி. தங்கமணி]

கால அரசு எந்த நோக்கத்தோடு, அந்தப் பங்குகளைத் தனியாருக்கு விற்க வேண்டுமென்று நினைத்திருப்பார்கள் என்பதை தயவுசெய்து இங்கிருக்கின்ற உறுப்பினர்கள் எல்லாம் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிக்கை நாயகர் வழக்கம்போல், சிமெண்ட் விலையைப் பற்றி அறிக்கை கொடுத்துள்ளார். அம்மா உணவகம், அம்மா மருந்தகம், அம்மா குடிநீர், அம்மா உப்பு போன்ற திட்டங்கள் மிகச் சிறப்புடன் பொதுமக்களுக்குச் சென்றடைவதைப் பார்த்து தாங்கிக்கொள்ள மனம் இல்லாமல், அறிக்கை விடுத்துள்ளார். தன்னுடைய ஆட்சிக் காலத்தில், தனது குடும்பத்தார்க்கு மட்டுமே சலுகைப்பட்ட கருணாநிதி தான் மக்களைப்பற்றி அப்போது கவலைப்படாமல் தற்போது என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பது தெரியாமல், அக்கறை இல்லாமல் அறிக்கை விட்டுக்கொண்டிருக்கின்றார்.

சிமெண்ட் விலையைப் பற்றி ஒரு சிறிய விளக்கம் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2001-2006 ஆம் ஆண்டு ஆட்சிக்காலத்தின்போது சிமெண்ட் விலை மூடை 150-லிருந்து மூடை 160 வரை இருந்தது. 2006-ல் திராவிட முன்னேற்றக் கழக மைனாரிட்டி ஆட்சி வந்ததற்குப் பின்னால் இட்டத்தட்ட ஒரேயடியாக 65 ரூபாய் ஏற்றி, ரூ.225 ஆக உயர்த்திவிட்டது. அதற்குப் பின் படிப்படியாக சிமெண்ட் விலை உயர்ந்து ரூ.300 முதல் ரூ.320 வரை உயர்ந்துவிட்டது. ஆனால், மாண்புமிகு அம்மாவின் அந்த ஐந்து ஆண்டுக்காலத்தில் 150 ரூபாய், 160 ரூபாய்க்கு மேல் விற்கவில்லையென்பது இங்கிருக்கின்ற அத்தனை உறுப்பினர்களுக்கும் தெரியும். ஏனென்றால் பழைய விலை விவரத்தை அத்தனை பேர்களும் பார்த்திருக்கின்றார்கள். எப்பொழுதுமே இந்த சிமெண்ட் ஆலை அதிபர்கள் கருணாநிதி ஆட்சிக்கு வந்தார் என்று சொன்னால், அவர்களுக்கு வெற்றி என்று நினைத்துக்கொள்கிறார்கள். அவர்கள் வந்தால், எப்போது வேண்டுமானாலும் விலையை ஏற்றிக் கொள்கின்றார்கள். இப்பொழுது விலையை ஏற்றி விட்டார்கள் என்று கருணாநிதி சொல்கின்றார். அதற்கு உதாரணம் சொல்கின்றார். அதாவது Flat Promoters எல்லாம், இனிமேல் வாங்கமாட்டார்கள். அவர்கள் போராட்டம் செய்து கொண்டிருக்கிறார்கள் என ஓர் அறிக்கை விட்டு, அவர்களைத் தூண்டி விடுகிறார். அந்த Builders Association

விலையேற்றத்தின் காரணமாக போராட்டம் நடத்துவார்கள் என்று கருணாநிதி அறிக்கை விட்டதற்குப் பின்னால், 360 ரூபாய், 370 ரூபாய் என்று விற்பனை செய்கிறார்கள் என அறிக்கையில் கூறியிருக்கிறார். ஆனால், உண்மை நிலைமையை இந்த இடத்தில் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் சொல்வதைப்போல, சிமென்ட்டை 350 ரூபாய்க்கு வாங்கியிருந்தால்கூட அவர்கள் கட்டுகின்ற அந்தக் கட்டடத்தின் மதிப்பீட்டை நான் சொல்கின்றேன்.

அதிலும் குறிப்பிட்டு சொல்ல வேண்டுமென்று சொன்னால், மைனாரிட்டி திமுக அரசு இங்கேயில்லை. முன்னாள் அமைச்சர் நேருவினுடைய தம்பி வைத்திருக்கின்ற கட்டுமான கம்பெனியினுடைய விலையை நான் பட்டியலிடக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோல் அந்த அசோசியேஷன் தலைவர்தான் இந்தப் போராட்டத்தை அறிவித்தார். அவரும் எந்த அளவிற்கு இருக்கின்றார் என்பதை இந்த அவைக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அவர்கள் ஒரு கட்டடத்தைக் கட்டி விற்கின்றார்கள். மொத்த பரப்பளவு 4,200 சதுர அடியாகும். விலை 3.99 கோடி ரூபாய். Square feet விலை 9,500 ரூபாய். நீங்கள் நன்றாக புரிந்துகொள்ளவேண்டும். அதற்கு சிமென்ட் 2,100 மூட்டைகள் தேவைப்படும். அதனுடைய மொத்த அடக்கத்தைப் பார்த்தீர்களேயானால், 2 சதவிகிதம் மட்டும்தான். ஏதோ நாங்கள் அந்த சிமென்ட் கம்பெனிக்கு ஆதரவாகப் பேசுகிறோம் என்று தயவுசெய்து யாரும் நினைத்துவிடாதீர்கள். உண்மையை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். சிமென்ட் பத்து ரூபாய் ஏறிவிட்டது என்றால் ஏதோ சிமென்ட் விலை ஏறிவிட்டது என்று கருணாநிதி கூச்சலிடுகிறார். அவருடைய அமைச்சரவையில் அமைச்சராக இருந்தவருடைய தம்பி இன்றையதினம் TVH-True Value Homes என்ற ஒரு நிறுவனத்தை நடத்தி வருகின்றார். அவர் எவ்வளவு சொல்கிறார் என்று சொன்னால், 2,500 சதுர அடி உள்ளதை, ரூ.4.20 கோடி அளவுக்கு விற்றிருக்கின்றார்கள். சதுர அடி விலை எவ்வளவு என்று பார்த்தால், 16,800 ரூபாய். அதற்குத் தேவைப்படும் சிமென்ட் வெறும் 1,250 மூட்டைகள்தான். மொத்த சிமென்ட்டின் விலை என்னவென்றால் ரூ4 இலட்சத்து 40 ஆயிரம் தான். சிமென்ட்டின் விலை ஏறிவிட்டது, ஆகையால் நாங்கள் இனிமேல் கட்டடம் கட்டமாட்டோம் என்று சொல்லிக்கொண்டிருக்கின்றார்.

2014 ஜூலை 14] [திரு. பி. தங்கமணி]

26 ஆம் தேதி அறிக்கை விடுகின்றார்கள். 27-ஆம் தேதி அவர்கள் 295 ரூபாய், 300 ரூபாய்க்குதான் சிமென்ட் வாங்கியிருக்கின்றார்களேயொழிய, நான் சொன்ன கணக்கு அவர்கள் சொல்வதைப் போல 350 ரூபாய்க்கு வாங்கியிருந்தால்கூட அவர்களுக்கு ஒரு சதவிகிதம் மட்டும்தான் அந்த சிமென்ட் விலை ஏறியிருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அந்தளவிற்கு அவர்களை போராட்டம் நடத்துங்கள் என்று தூண்டிவிட்டார்கள். ஆனால், உண்மை நிலைமை என்ன? அதை யார் கேட்பது? அவர்கள் என்ன விலைக்கு விற்றாலும் அதைக் கேட்பதற்கு நமக்கு என்ன இருக்கின்றது? அவர்கள் சிமென்ட் விலை ஏறிவிட்டது, மணல் விலை ஏறிவிட்டது, ஜல்லி விலை ஏறிவிட்டது என்று சொல்லிவிட்டு, 2010 ஆம் ஆண்டிலே 7,500 ரூபாய் விலை இருந்ததை இப்போது 15,000 ரூபாயாக ஆக்கியிருக்கின்றார்கள். இதெல்லாம் அவர்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்தது. ஆதாரத்தோடுதான் சொல்கிறேன். எதுவும் ஆதாரமில்லாமல் சொல்லவில்லை. 50 ரூபாய் ஏறியது என்று சொன்னதற்காக 7,500 ரூபாய் சதுர அடி இருந்ததை 15,000 ரூபாய் ஏற்றியதுதான் இந்த promotors-உடைய சாதனை என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

பிற்பகல் 2-45

அதேபோல, டான்செம் நிறுவனத்தின் உற்பத்தி இப்போது குறைந்துவிட்டது போலவும் அறிக்கை விட்டிருக்கின்றார். அவர் வயது முதிர்வின் காரணமாக, சிலவற்றையெல்லாம் மறந்துவிடுவார் போலிருக்கிறது. அவருடைய ஆட்சிக்காலத்தில் என்ன நடந்தது என்பதையெல்லாம் விட்டுவிட்டு, அவருடைய ஆட்சிக்காலத்தில் அதிகமாக என்ன உற்பத்தி ஆயிற்றோ, அதை மட்டும்தான் கணக்கு கொடுத்திருக்கின்றார். வெறும் 3 இலட்சத்து 60 ஆயிரம் டன் உற்பத்தி மட்டும்தான் இரண்டு சிமென்ட் ஆலைகளில் 2008-2009-ல் கருணாநிதி ஆட்சியில் நடந்தது. அதற்குப் பின்னால் மாண்புமிகு அம்மா அவர்கள் வந்து பல்வேறு நடவடிக்கைகள் எடுத்ததன்காரணமாக, இப்போது கிட்டத்தட்ட 5 இலட்சம் டன், 6 இலட்சம் டன் என்று உற்பத்தியாகிக்கொண்டிருக்கிறது. இருந்தாலும் ஆலங்குளம் ஆலை மிகவும் நஷ்டத்தில் சென்று கொண்டிருக்கிற காரணத்தினாலும், அது முறையான, நமக்குத் தேவையான அளவுக்கு சிமென்ட் உற்பத்தி பண்ண முடியாத

காரணத்தினாலும் அந்த அளவுக்குக் குறைத்திருக்கிறது என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மரியாதைக்குரிய எதிர்க்கட்சி கொறடா அவர்கள் பேசியபோது அரியலூர் சிமென்ட் தொழிற்சாலை என்ன ஆயிற்று என்று கேட்டிருக்கின்றார்கள். அதற்காக ரூபாய் 542.52 கோடியை ஒதுக்கி, நிருவாகக் கூட்டம் முடித்து, இப்போது டெண்டர் விடும் நிலையில் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதன்மூலம் டான்செம், அரசுத் துறை நிறுவனங்களின் சிமென்ட் தேவைகளை முழுமையாக நிறைவேற்றி, அத்துடன் கணிசமான அளவிற்கு சிமென்டினை வெளிச் சந்தையில் பொது மக்களுக்குச் சரியான விலையில் வழங்கிட இயலும். மேலும், இதன்மூலம் வெளிச் சந்தையில் சிமென்ட் விலையேற்றத்தினைக் கட்டுப்படுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் மரியாதைக்குரிய புதிய தமிழகம் கட்சியின் தலைவர் வரவில்லை, அவர் ஆலங்குளம் மில்லிலே கல்நார் தகடு தயாரிக்க வேண்டும் என்று போராட்டம் நடத்தினார். ஏற்கெனவே தயாரித்துக்கொண்டிருந்தோம். ஒருவார காலம் ஏதோ ஒரு காரணத்திற்காக நிறுத்தியிருந்தார்கள். உடனடியாக நிறுத்தி விட்டார்கள் என்று அங்கேயே சென்று போராட்டம் நடத்தினார். நான் உண்மை நிலையினைச் சொல்கிறேன். அங்கே 114 தொழிலாளர்கள் இருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் நஷ்டம் வந்தாலும் பரவாயில்லை. கல்நார் என்பது இந்தியாவில் கிடைக்கக்கூடிய பொருள் அல்ல. வெளிநாட்டிலிருந்து வாங்கவேண்டும். வெளிநாட்டிலிருந்து வாங்க வேண்டுமென்று சொன்னால் மத்திய அரசிடம் அனுமதி வாங்கவேண்டும். அது முடியாது என்கிற காரணத்தினால் உடனடியாக TNPL- தமிழ்நாடு காகித ஆலை தொழிற்சாலையின்வாயிலாக அதனை வாங்க வேண்டுமென்று சொல்லி, தற்போது கல்நார் தகடு ஒரு வருடகாலமாக முழுமையாக உற்பத்தி ஆகிக் கொண்டிருக்கிறது என்பது மரியாதைக்குரிய அண்ணனுக்குத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்பது பழமொழி. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் நாளொரு மேனியும்

2014 ஜூலை 14] [திரு. பி. தங்கமணி]

பொழுதொரு வண்ணமுமாக மக்கள் நலத் திட்டங்கள் வெளிவந்து கொண்டிருக்கும் நிலையில், 'அம்மா உப்பு' திட்டமானது பொதுமக்களிடத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டம் தொடங்கப்பட்டு, ஒரு மாத காலத்திற்குள் 524 டன் உப்பு விற்பனையாகியுள்ளது என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) பொதுமக்களின் உடல் நலம் பேணி பாதுகாக்கப்பட வேண்டுமென்பதற்காக 3 வகையான உப்புகளை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிமுகப்படுத்தியுள்ளார்கள். குறிப்பாக, நமது எதிர்க்கட்சி கொறடா அவர்களுக்கும், மாண்புமிகு துணைவேந்தர் வெங்கடேசன் அவர்களுக்கும் அடிக்கடி கோபம் வரும், பிரஷர் இருக்கிறது என்று நினைக்கிறேன். அதனால் அதுபோன்று இருக்கிறவர்கள் எல்லாம் நல்ல ஆரோக்கியத்தோடு இருக்க வேண்டுமென்பதற்காக Low Sodium கலந்த உப்பை மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுக்கின்றார்கள். அதை வாங்கி உங்களுடைய உடல் நலத்தை நீங்கள் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். இதுபோன்ற திட்டங்களைக் கொண்டு வந்திருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு அனைவரும் நன்றியோடு இருக்கவேண்டும், நீங்கள் நன்றியோடு இல்லாவிட்டாலும் பரவாயில்லை, நீங்கள் உங்கள் உடல் நலத்தை பாதுகாத்துக்கொள்ளுங்கள் என்று கூறிக்கொள்கின்றேன்.

சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாசியோடு நாங்கள் 10 ரூபாய்க்குக் கொடுக்கின்றோம். வெளிச்சந்தையில் அது 14 ரூபாயிலிருந்து 21 ரூபாய் வரை விற்கப்படுகின்றது. அதேபோல, (Double Fortified Salt) இருவித செறிவூட்டப்பட்ட உப்பு 14 ரூபாய். வெளிச்சந்தையில் 21 ரூபாய். குறைந்த அளவு Low Sodium உப்பு நாம் விற்கின்ற விலை 21 ரூபாய். வெளிச்சந்தையில் ரூபாய் 25-லிருந்து ரூபாய் 27 வரை விற்கின்றது. இந்த 3 வகையான உப்பினை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிமுகப்படுத்தியதற்குப் பிறகு மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் அவர்கள் சென்னை வந்தார்கள். உப்பளம் இருக்கின்ற நிலங்கள் எல்லாம் எங்கெங்கே இருக்கின்றன, அவற்றை ஆய்வு செய்ய வேண்டுமென்று சொல்லி எங்களுடைய அதிகாரிகளை எல்லாம் அழைத்திருந்தார்கள். அதிகாரிகளைப் பார்த்தவுடன், "வாங்க, வாங்க உங்கள் உப்புதான் டெல்லியில் famous ஆக இருக்கிறது" (மேசையைத் தட்டும் ஒலி) என்று மாண்புமிகு வர்த்தகத் துறை அமைச்சர் அனைத்து

[திரு. பி. தங்கமணி] [2014 ஜூலை 14

அதிகாரிகளுக்கு முன்பும் சொல்லியிருக்கிறார் என்று சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய திட்டம் எந்த அளவுக்கு இந்தியா முழுவதும் சென்றடைந்திருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்கு இதைவிட வேறென்ன உதாரணம் வேண்டும்?

பிற்பகல் 2-50

ராஜஸ்தானிலிருந்து எங்களுக்கு ஆலர் வேண்டுமென்று கேட்டார்கள். குஜராத்திலிருந்து கேட்டார்கள். குஜராத்திலிருந்து வந்தவரை நாங்கள் அழைத்துப் பேசியபோது அவர் சொன்ன கருத்து, "ராஜஸ்தான் முலவர் என்னை அழைத்தார். ஏதோ அம்மா உப்பு என்று சொல்கிறார்கள். அங்கே மானியத்திலே கொடுக்கிறார்களா என்று தெரியவில்லை. நீங்கள் சென்று பார்த்துவிட்டு வந்து, அதனுடைய நிலைமையை எங்களுக்குச் சொல்லுங்கள்" என்று சொல்லியிருக்கிறாரென்று சொன்னால், இந்தியா முழுவதும் அம்மாவுடைய திட்டங்கள் எந்த அளவிற்கு சென்றுகொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்தகால மைனாரிட்டி தி.மு.க. அரசு நமக்கென்று ஒதுக்கியது 5,000 ஏக்கர். ஏற்கெனவே நாங்கள் உப்பு தயார் செய்து கொண்டிருந்தது 3,000 ஏக்கர். இப்போது புதிதாக 2,220 ஏக்கர் காலியாக இருக்கின்றது. அதையும் நாம் சேர்த்து அந்தப் பணியை மேற்கொள்கின்றோம். கடந்தகாலத்திலே 13.21 கோடி ரூபாயை அதற்குச் செலவு செய்யவேண்டும் என்று ஓர் ஆணை வெளியிட்டிருந்தார்கள். ஆனால் அவர்கள் செய்யவில்லை. 4 ஆண்டு காலத்திற்கு பின்பு, மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியோடு 8 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, அந்தப் பணி முடிக்கப்பட்டு, இந்த ஆண்டு உப்பு உற்பத்தியை ஆரம்பிக்க இருக்கின்றோம். நான்கு ஆண்டுகளுக்கு முன்பு அவர்களால் போடப்பட்ட தொகை, 13.21 கோடி ரூபாய். ஆனால் 4 ஆண்டுகளுக்குப் பின் அதன் உற்பத்தியைத் துவங்குகிற அளவிற்கு நாங்கள் செய்திருக்கிறோம் என்று சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய திருவாசகத் திறமையும், ஒளிவு மறைவற்ற நன்மையையும் (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

கடந்த சட்டமன்றத் தொடரில் உப்பு உற்பத்தி செய்யும் மில்லின் வாங்கவேண்டும் என்று அறிவித்ததற்கிணங்க, 5.65 கோடி ரூபாய் இப்போது நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது டெண்டர் விடும்

நிலையில் இப்போது இருக்கின்றது. இன்னொன்று, அம்மா உப்பு, மற்ற பல இட்டங்களையெல்லாம் வெளிநாட்டிலிருந்து அவர்களாகவே பார்த்தார்கள். அது எங்களுக்குத் தெரியாது. அவர்களாகவே முன்வந்து Universal Iodization Programme - என்று சொல்லக்கூடிய UNICEF, Micro Nutrient Initiative, Canada, GAIN என்ற மூன்று நிறுவனங்களின் பொறுப்பாளர்களும் வந்து பார்த்துவிட்டு, சிறப்பாகச் செய்திருக்கள் என்று சொன்னார்கள். நாங்கள் ஒன்றுமே வேண்டாம் என்று சொல்லியும், அவர்கள் ரூ.1,15,00,000/- கொடுத்து, இன்னும் நீங்கள் உற்பத்தியை அதிகமாக்குங்கள் என்று சென்னார்கள். இன்னும் என்னென்ன மெஷின்கள் வேண்டுமோ அவையெல்லாம் வாங்கிக் கொள்ளுங்கள் என்று அவர்களாகவே முன்வந்து கொடுத்தார்கள். இப்போது அதற்கு ஆணையிட்டிருக்கிறோம் என்று சொன்னால், இதைவிட ஒரு சிறப்பான ஆட்சியை அம்மாவைத் தவிர வேறு யார் கொடுப்பார்கள் என்பதை யோசித்துப்பார்க்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு உப்பு நிறுவனம் ஆண்டொன்றுக்கு 30,000 டன் அயோடின் கலந்த உப்பை உற்பத்தி செய்கின்றது. கெயில் என்ற சர்வதேச தொண்டு நிறுவனம் வழங்குகின்ற நிதியுதவியின்மூலம் இதன் உற்பத்தி 60,000 டன்களாக உயரும் என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

Guidance Bureau - தமிழ்நாடு தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம்—வருகின்ற தொழிலதிபர்களை அழைத்து single window system அதற்கு அனுமதியைக் கொடுப்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள்தான் இதை இந்தியாவிலேயே முதன்முதலாக 1992 ஆம் ஆண்டு கொண்டு வந்து தொழிலதிபர்களுக்கெல்லாம் ஒரு எளிமையான வழியைக் கண்டறிந்து, நீங்கள் ஒவ்வொரு துறையாகச் செல்லவேண்டாம், இந்த இடத்திற்குச் சென்றால் உங்களுக்கு அனைத்து அனுமதியும் கிடைக்கும் என்று ஏற்பாடு செய்து அதன் வாயிலாகத்தான் இன்று சென்னையைச் சுற்றியிருக்கின்ற அனைத்து பெரிய தொழிற்சாலைகளும் வருவதற்கு அச்சாரமிடப்பட்டது. இதற்கு முழு முதற் காரணம் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. பி. தங்கமணி] [2014 ஜூலை 14

தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தைப் பொறுத்தவரையில், தொடர்ந்து இலாபத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றது. இந்த ஆண்டும் ரூ.13 கோடி அளவிலே இலாபத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்றது என்பதை இந்த அவைக்குத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

வெடி மருந்து நிறுவனம் - பொது உடமைக் கட்சியைச் சேர்ந்தவர்களெல்லாம் முதலிலே இந்த வெடி மருந்து நிறுவனத்தில் இவ்வளவு பேர் இருக்கின்றார்கள், அந்தத் தொழிற்சாலையை மூடுகின்ற நிலைமை உருவாகிவிட்டது, எப்படியாவது அதைச் சரிசெய்ய வேண்டுமென்று எங்களிடம் கேட்டார்கள். நாங்கள் மாண்புமிகு அம்மா அவர்களிடம் சொன்னோம். அது 2003-2004 ஆம் ஆண்டிலிருந்து நஷ்டத்தில் இயங்கிக்கொண்டிருந்தது. அதற்குக் காரணம் நைட்ரோ கிளிசரின் என்ற ஒரு வெடி மருந்துப்பொருளைத் தயாரித்துக்கொண்டிருந்தவரையில் இலாபம் வந்துகொண்டிருந்தது. அதில்தான் வியாபாரம் அதிகமாக இருந்தது. திரு. சந்திரபாபு நாயுடு முதல்வராக இருந்தபோது திருப்பதியில் ஒரு blast நடந்த பிறகு அதைத் தடை செய்துவிட்டார்கள். தடை செய்யப்பட்ட பிறகு, அங்கே உற்பத்தி குறைந்து, தொடர்ந்து நஷ்டத்தில் இயங்கிவரும் நிலை ஏற்பட்டது. தொழிலாளர்களுக்குக்கூட 2, 3 மாதங்கள் சம்பளம் கொடுக்க முடியாத நிலைமை உருவாகிவிட்டது. மாண்புமிகு அம்மா அவர்கள் உடனடியாக அதற்கு நடவடிக்கை எடுத்து, கடந்த ஆண்டு ரூ.18 கோடி அளவாக இருந்த நஷ்டத்தை, இந்த ஆண்டு ரூ.10 கோடியாகக் குறைத்து, ரூ.8 கோடி என்ற அளவில் நஷ்டம் இருக்கின்றது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அடுத்த ஆண்டு இலாபத்தைக் கொண்டுவரும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைச் சொல்லி, அதை மூடவேண்டும் என்று சொன்னவர்களெல்லாம் இன்று வியந்து பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

கனிம நிறுவனம்—மரியாதைக்குரிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர் திரு. தங்கவேல் அவர்கள் பேசியபோது, இயற்கை வளங்கள் சுரண்டப்படுகின்றன என்று சொன்னார்கள். இயற்கை வளம் எங்கேயும் சுரண்டப்படவில்லை. சட்டத்திற்குட்பட்டுதான் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இப்போது சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதுகாறும் இல்லாத அளவிற்கு 188 கோடி ரூபாய் TAMIN-ல் வரவு-செலவு அதிகமாகி,

2014 ஜூலை 14] [திரு. பி. தங்கமணி]

இட்டத்தட்ட 20 கோடி ரூபாய் அளவிற்கு முதன்முறையாக TAMIN இலாபத்தை ஈட்டி இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) முதன்முதலாக இந்த அளவிற்கு இலாபத்தை ஈட்டியிருக்கின்றது. கடந்த காலத்தைவிட 21 கோடி ரூபாய் அதிகம். அதாவது வீழுக்காடு கணக்கிலே பார்த்தால், 595 வீழுக்காடு இப்போது அதிகமாக இலாபம் வந்திருக்கிறதென்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-55

மதுரையைப் பொறுத்தவரையில், அந்தப் பகுதியிலே இருக்கின்ற granite கடந்தகாலத்தில் எப்படி சூறையாடப்பட்டது என்பதற்கு ஒரே ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகின்றேன். 2005-2006-ல் மதுரையில் மட்டும் Revenue Seniorage fees 18 கோடி ரூபாய் வந்தது. 2007-2008-லே இருந்து அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே 8 கோடி ரூபாயாகக் குறைத்து 18 கோடி ரூபாயாக இருந்தது. 3, 4 ஆண்டு காலங்கள் தொடர்ந்து 8 கோடி ரூபாய் என்ற அளவிலேயேதான் நின்றது. மீண்டும் மாண்புமிகு அம்மா அவர்கள் 2011 -ம் ஆண்டு ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு அதை 19½ கோடி ரூபாயாக உயர்த்தி, அந்தப் பகுதியிலே இருக்கின்ற கிராணைட்கள் முழுவதும் அரசு கணக்கிலே சேர்த்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் தங்கவேல் அவர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இயற்கை வளங்கள் எல்லாம் திருட்டுபோய்க் கொண்டிருக்கின்றன என்று அவர்தான் சொன்னார். அதுபோன்ற சூழ்நிலை மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் எப்போதும் நடக்காது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். உரையை முடிப்பதற்கு முன்பாக அறிவிப்புகளைப் படித்துவிட்டு முடிவுரைக்கு வருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியோடு அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்.

அறிவிப்புகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) தூத்துக்குடி தொழில் வளாகம் மற்றும்

[திரு. பி. தங்கமணி] [2014 ஜூலை 14

பெருத்துறை தொழில் வளர்ச்சி மையம் ஆகியவற்றில் 25 ஏக்கர் நிலப்பரப்பில் தலா ரூபாய் 2 கோடி செலவில் சுத்திகரிப்பு, சேமித்தல் மற்றும் அகற்றுதல் வசதிகளை உருவாக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்காக காற்றின் தரத்தை அறிய தொடர் கண்காணிப்பு நிலையம், கரும்பு சக்கை துண்துகள்களைக் கட்டுப்படுத்த Telescopic சூழாய்களை அமைத்தல் மற்றும் ஈரம் நீக்கம் செய்யப்பட்ட காகிதக் கூழ் மிரிவில் உபயோகப்படுத்திய காகிதத்தில் இருக்கும் பிளாஸ்டிக்கைப் பிரித்து எடுத்தல் போன்ற திட்டங்களை சுமார் 3.20 கோடி ரூபாய் செலவில் நடைமுறைப்படுத்தப்படும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி., தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், குளோரின் டை ஆக்சைடு மிரிவில் மின் பகுப்பிகளை சீரமைத்தல், காகித உற்பத்திப் மிரிவில் சில மென்பொருள்களை புதுப்பித்தல், மின் உற்பத்திப் மிரிவில் மின்னாக்கிகள், மின் கடத்திகளை ஒருங்கிணைத்து மின் அதிர்வு மற்றும் மின் அழுத்தங்களைக் கண்காணித்தல், ஐந்தாவது மின்னாக்கியைப் புனரமைத்தல், ஒரு புதிய ரசியில் இன்ஜினை ஆலைக்குள் இயக்க வாங்குதல் போன்ற பல்வேறு உற்பத்தி அபிவிருத்தித் திட்டங்களை ரூபாய் 10 கோடி செலவில் நடைமுறைப்படுத்தும்.

நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டத் தொழில்முனைவோர்களுக்கு உதவும்பொருட்டு தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் கள அலுவலகம் (Field Office) ஒன்றை நாகப்பட்டினத்தில் நிறுக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி., தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் அரியலூர் சிமெண்ட் ஆலையில் ரூபாய் 50 இலட்சம் செலவில் 50 மெலோ வாட் உற்பத்தித் திறன் கொண்ட சூரிய மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்படும்.

2014 ஜூலை 14] [திரு. பி. தங்கமணி]

அரியலூர் சிமெண்ட் ஆலையின் சிமெண்ட் அரைவைத் திறனை அதிகரிக்க ஆலையில் சிமெண்ட் அரைவை இயந்திரத்தின் பல் சக்கர சுற்றுப்பட்டை மற்றும் அதனை இயக்கும் பல் சக்கரம் ஆகியவற்றை ரூபாய் 90 இலட்சம் செலவில் புதுப்பிக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அரியலூர் சிமெண்ட் ஆலையின் சுற்றுப்புறங்களில் மாசு அளவைக் கட்டுப்படுத்த, புகைபோக்கி கண்காணிப்புக் கருவிகள் (Stack Monitors) மற்றும் சுற்றுப்புற காற்றின் தன்மையை அளவிடும் நிலையம் ஆகியவற்றை சுமார் 1 கோடி ரூபாய் செலவில் அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி இராமநாதபுரம் மாவட்டம், மாரியூர் வாலிநோக்கம் உப்பு கூட்டுத் திட்ட வளாகத்தில் ரூபாய் 25 இலட்சம் செலவில் 50 டன் திறனுடைய மின்னணு எடை மேடை நிறுவப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி இராமநாதபுரம் மாவட்டம், மாரியூர் வாலிநோக்கம் உப்பு கூட்டுத் திட்ட வளாகத்தில் அமைந்துள்ள உப்பளப் பகுதியில் ரூபாய் 40 இலட்சம் செலவில் சுமார் 9 கிலோ மீட்டர் நீளத்திற்கு முள்வேலி அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு உப்பு நிறுவனத்தில் பணிபுரியும் 1,350 தொழிலாளர்களுக்கு குறைந்தளவு எடை உள்ள முழங்கால் வரை நீளமுள்ள காலணிகளை (light weight gum boots) ரூபாய் 5 இலட்சம் செலவில் வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3-00

எண்ணூரில் உள்ள தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்குச் சொந்தமான இந்திய தர மணல் தொழிற்சாலையை ரூ.1.95 கோடி

[திரு. பி. தங்கமணி] [2014 ஜூலை 14

செலவில் நவீனப்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், சென்னாத்தூரில் தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்குச் சொந்தமான வெர்மிகுலைட் சுரங்க வளாகத்தில் ஒரு புதிய வெர்மிகுலைட் விரிவாக்க தொழிற்சாலையை தனியார் தொழில்நுட்பத்துடன் ரூ.180 கோடி திட்ட மதிப்பீட்டில் தொடங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தீரில் உள்ள மாசு விவரங்களை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் காற்று கவனிப்பு அலகுடன் (Care Air Centre) இணைக்கும் திட்டத்தை 10 கூட்டுறவு மற்றும் 2 பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் ரூ.188 கோடி செலவில் செயல்படுத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அறிஞர் அண்ணா பொதுத் துறை சர்க்கரை ஆலை மற்றும் தருமபுரி, கள்ளக்குறிச்சி-II மற்றும் சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் கழல் சல்லடை நிலையத்தின் செயல்பாட்டை மேம்படுத்தி முதல் நிலை மற்றும் இறுதி நிலை கழிவுப்பாகு மேலேற்று தொட்டிகளில் தானியங்கி மட்டமானி (Level Indicator) கருவிகளை ரூ.12 இலட்சம் செலவில் நிறுவ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சேலத்தில் உள்ள தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 25 கே.வி.ஏ. சூரிய சக்தி மின்சாரத்தை உற்பத்தி செய்யும் அலகு ஒன்றை நிறுவ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையின்படி, தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம், தனது சுரங்கப் பகுதியின் 6 இடங்களிலும், நிலைச்

சூளைப் பிரிவு மற்றும் சுழற் சூளைப் பிரிவு ஆகியவற்றில் கண்காணிப்பு கேமராக்களை (CCTV) ரூ.9.20 இலட்சம் செலவில் பொருத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில், தமிழகம் முழுவதும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மக்களிடம் தமிழகத்தை எல்லா வகையிலும் வஞ்சித்துக்கொண்டிருக்கின்ற காங்கிரஸ் கட்சிக்கும், அதற்குத் துணை போன தி.மு.க.-விற்கும் தக்க பாடம் புகட்டுங்கள். ஒரு தொகுதியில்கூட அவர்கள் வெற்றி பெறக்கூடாது என்று இரும்பு இரும்பச் சொன்னார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் மேற்கொண்ட பிரச்சாரத்திற்கு நாட்டு மக்கள் "மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா-விற்கே எங்கள் வாக்கு" என்று (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சிகளை தோற்கடித்து இதுகாறும் இல்லாத அளவிற்குப் பெரும் வெற்றியை தேடித் தந்தார்கள்.

மூன்று ஆண்டுகாலத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மத்திய அரசின் உதவி இல்லாமல் செய்திருக்கின்ற சாதனைகள், கடந்த கால தி.மு.க. அரசு விட்டுச்சென்ற கடனோடு, ஏழை மக்கள் எந்த வகையிலும் பாதிக்காமல் பாதுகாக்கும் ஆட்சியாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி இருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சாதனைகளுக்காக மக்கள், அம்மா அவர்களுக்குத் தந்த அங்கீகாரம் இந்த மாபெரும் வெற்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா உணவகத்தைப் பற்றி ஆந்திராவில் இருந்து தமிழகத்திற்கு வந்த ஒரு தொழிலதிபர் சொன்னார். அவரது பெயரைச் சொன்னால் அவரது தொழிலுக்கு இடையூறாக இருக்கும் என்ற காரணத்தினால் அவரது பெயரைச் சொல்லவேண்டாம் என்று சொல்லிவிட்டார். நடந்த உண்மையை அவர் சொல்லிவிட்டு சென்றிருக்கின்றார். அவர் சொன்னது என்னவென்றால், எல்லோரும் அம்மா உணவகம், அம்மா உணவகம் என்கிறார்களே, எப்படித்தான் இருக்கிறது என்று நான் பார்த்து வருகிறேன் என்று சொல்லி, அம்மா உணவகத்தில் உணவு அருந்திவிட்டு லைதராபாத் சென்றுவிட்டார். அங்கு அனைத்துத் தொழிலதிபர்கள் கூட்டத்தில் அவர் சொன்ன வார்த்தை, எல்லோரும் அம்மா உணவகம் என்று

சொன்னார்கள். நான் நம்பவில்லை. நானே சென்று அம்மா உணவகத்தில் சாப்பிட்டு வந்ததற்குப் பிறகுதான் தெரிந்தது. இனிமேல் தமிழகத்தில் அம்மா அவர்களைத் தவிர வேறு யாரும் ஆட்சிக்கு வரமுடியாது என்று கூறினார். (மேசையைத் தட்டும் ஒலி) அடுத்த மாதிலத்தினரே அம்மா ஆட்சிதான் இனிமேல் என்று சொல்லுகின்றபோது, தமிழக மக்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை 234 சட்டமன்ற தொகுதிகளிலும் வெற்றிபெறச் செய்வார்கள் என்பது நிச்சயம். (மேசையைத் தட்டும் ஒலி)

மக்களுக்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்திருக்கின்ற சாதனைகளுக்காக, தமிழகத்தில் எந்தப் பகுதிக்குச் சென்றாலும், அம்மா என்ற சொல்லைத் தவிர மாற்றுச் சொல் இடையாது. (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த தேர்தல் பிரச்சாரத்தின்போது, கடுமையான வெயிலிலும், தன் உடலை வருத்தி, பிரச்சாரம் செய்து கழகத்தின் சாதாரண தொண்டனையும் மாண்புமிகு அம்மா அவர்கள் வெற்றிபெறச் செய்தார்கள். அதேபோல் தமிழக மக்களுக்கு கிடைக்காத நலத் திட்டமே இல்லை என்று சொல்கின்ற அளவிற்கு நம் அம்மா அவர்கள் நல்லாட்சியைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

அதற்கு எல்லோரும் கைமாறாக நன்றி என்று சொன்னால் அது நன்றியாகாது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்த நன்றியை திருப்பிச் செலுத்த முடியாமல், ஒன்றரைக்கோடி கழக தொண்டர்களுக்கும், ஏழை எளிய தமிழக மக்களுக்கும், மூலைமுடுக்கு என்று எங்கே திரும்பினாலும், அம்மா, அம்மா, அம்மா என்ற சொல்லைத் தவிர வேறு எதுவும் தெரியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

கழகத்தினர் வேண்டுமானாலும் நன்றியாக அம்மாவிற்காக உயிரைக்கூட தியாகம் செய்வார்கள். மக்களுக்காக தன் வாழ்க்கையை அர்ப்பணித்த நம் அம்மா அவர்களுக்கு கழகத்தினர் எல்லோரும் செய்கின்ற ஒரே நன்றி தினந்தோறும் ஆண்டவரிடத்தில் அம்மா அவர்களுக்கு நீண்ட ஆயுளையும், உடல் நலத்தையும் கொடுக்க வேண்டுமென்று வேண்டுவதுதான், அதுதான் அவர்களுக்கு செய்கின்ற நன்றி என்று சொல்லி இந்த அளவிலே எனது உரையை முடித்துக்கொள்கிறேன். எனது பதிலுரையை ஏற்று, உங்களால் கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுத்

2014 ஜூலை 14] [திரு. பி. தங்கமணி]

நீர்மானங்களில் வைத்திருக்கின்ற கோரிக்கைகளையெல்லாம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு தொடர்ந்து பரிசீலித்து, அதற்குரிய நடவடிக்கையை எடுக்கும் என்று சொல்லி, நீங்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டு, எனது உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்பொழுது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 27-தொழில் துறை வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,683,32,13,000/-, மூலதனக் கணக்கில் ரூ.30,05,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.500,00,07,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (15-7-2014) செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3-06 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

44. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்பகிர்மான செயல்திறச் செந்தரங்கள் ஒழுங்குமுறை விதிகளுக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 14-8-2013 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./ செ.செ.ஒ(SPR)/9/1-10-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

45. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய மின்வழங்கல் விதித்தொகுப்பிற்கு திருத்தம் செய்தது குறித்து 12-9-2013 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ/ மி.வி.(SC)/7-32-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

46. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், தமிழ்நாடு மின்வழங்கல் விதித்தொகுப்பிற்கு திருத்தம் செய்தது குறித்து 23-9-2013 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./மி.வ.வி./7-33-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

47. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்-மாநில ஆலோசனைக் குழு ஒழுங்குமுறை விதிகளுக்கு திருத்தம் செய்தது குறித்து 4-10-2013 ஆம் நாளிட்ட என் தமி.ஒ.ஆ/மா.ஆ.கு.ஒ/2-37-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

48. 2012-2013 ஆம் ஆண்டிற்கான மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் (சென்னை) நாற்பத்து ஒன்றாவது ஆண்டறிக்கை.

2014 ஜூலை 14]

[1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

49. 2012-2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (விழுப்புரம்) முப்பத்து எட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

50. 2012-2013 ஆம் ஆண்டிற்கான பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழுவின் இருபத்து ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

51. 2012-2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் முப்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

52. 2012-2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் முப்பத்து எட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

(ஆ). அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

26. மானியக் கோரிக்கை எண் 44-குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2014-2015. (தமிழ், ஆங்கிலம்)

27. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய செயலாக்கத் திட்டம், 2014-2015. (தமிழ், ஆங்கிலம்)

[2014 ஜூலை 14

28. மானியக் கோரிக்கை எண் 32-தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2014-2015. (தமிழ், ஆங்கிலம்)

29. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய வரவு செலவுத் திட்ட செயலாக்கம், 2014-2015. (தமிழ், ஆங்கிலம்)

30. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை மற்றும் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2014-2015. (தமிழ்)

*****

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு

(69-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

கோரிக்கை எண் 27–தொழில் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு 2014–2015

முன்னுரை

தமிழ்நாடு காலங்காலமாக தொழில்மயமான மாநிலங்களின் வரிசையில் முன்னோடி மாநிலங்களில் ஒன்றாக திகழ்ந்து வருகிறது. பலதரப்பட்ட பொருட்கள் உற்பத்தியில் தமிழ்நாடு நலக்கென ஒரு சிறப்பான இடத்தை பெற்றுள்ளது. அத்தகைய உற்பத்தி பொருட்களில் இடம்பெறுபவை, துணிகள் மற்றும் ஆடைகள், தோல் உற்பத்தி பொருட்கள், மோட்டார் வாகனங்கள் மற்றும் அவற்றின் பாகங்கள், இலகுரக மற்றும் கனரக பொறியியல் உற்பத்திப் பொருட்கள், மின்னணுவியல் வன்பொருட்கள், ரசாயனப் பொருட்கள், சிமெண்ட், சர்க்கரை முதலியன குறிப்பிடத்தக்கவையாகும். இவை தவிர, தகவல் தொழில்நுட்பத் துறை சார்ந்த மென்பொருள் உருவாக்கம் மற்றும் அதனைச் சார்ந்த பணிகள் ஆகியவையும் இதில் அடங்கும்.

இம்மாநிலத்தில் தொழில் வணிகம் செழித்து வளர்வதற்குத் தேவையான உகந்த சூழல் நிலவுவதாலும், நாட்டின் வளர்ச்சி மற்றும் மக்கள் நலம் பேணுகிற சமூகப் பொருளாதார சிந்தித்தங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாலும், முதலீட்டாளர்கள் அனைவரும் விரும்பி வந்து தொழில் முதலீடு செய்கின்ற பாதுகாப்பான சிறந்த மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய தொலைநோக்குத் திறன் கொண்ட ஆற்றல்மிக்க சிரிய தலைமையின்கீழ், இம்மாநிலம் தொழில் துறையில் ஏற்றமிகு வளர்ச்சியும், பெருமையும், சிறப்பும் கொண்டு விளங்கி வருகிறது.

1991 ஜூலை முதல் கடைபிடிக்கப்பட்ட பொருளாதார தாராளமயமாக்கல், உரிம முறை கைவிடல் ஆகியவற்றால் இந்திய மாநிலங்கள் அனைத்தும் முதலீடுகளை ஈர்ப்பதில் மிகுந்த முனைப்புடன் தமக்குள் போட்டியிடத் தொடங்கின. நமது

[2014 ஜூலை 14

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆற்றல் மிகுந்த சீரிய தலைமையின்கீழ், நமது மாநிலம் உற்பத்திக்காக மிகப்பெரும் அளவில் முதலீடுகளை ஈர்ப்பதில் தொடக்கத்திலேயே முயற்சிகளை மேற்கொண்ட மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்ந்தது.

இந்தியத் திருநாட்டில் தொழில்மயமான மாநிலங்களில் நமது மாநிலம் முதலிடத்தைப் பெறுவதற்கு ஏற்ற வகையில், தொழில் வளர்ச்சிக்கு உகந்த ஆதரவான சூழலை உருவாக்கும்பொருட்டும், அத்துடன் தொழில் வளர்ச்சிக்கு விரைந்த வேகத்தை அளிக்கும்பொருட்டும், நமது மாநில அரசு 1992 ஆம் ஆண்டிலும், 2003 ஆம் ஆண்டிலும், நடைமுறை சாத்தியமான மற்றும் தொலைநோக்குடைய தொழில் கொள்கையை உருவாக்கியது. இம்மாநிலம் உருவாக்கிய தொழில் கொள்கையில் எண்ணற்ற பல புதுமைகள் இடம் பெற்றன. இவற்றின் விளைவாக, தமிழ்நாட்டில் மோட்டார் வாகன உற்பத்திப் புரட்சியும், மின்னணுவியல் உற்பத்திப் புரட்சியும் நிகழ்ந்தன. இதன் காரணமாக, ஃபோர்டு, ஹூண்டாய், நோக்கியா, ஃபாக்ஸ்கான், ஃப்ளெக்ஸ்ட்ரானிக்ஸ் ஆகிய மோட்டார் வாகன மற்றும் மின்னணுவியல் உற்பத்தி நிறுவனங்கள் இங்கு தொழிற்சாலைகள் தொடங்குவதற்கு சர்க்கப்பட்டன. இவற்றின் வெற்றியால் சென்னை, இந்தியாவிலேயே மோட்டார் வாகனங்கள் மற்றும் மின்னணுவியல் சாதன வன்பொருட்களின் உற்பத்திக்கான தலைமையகமாக விளங்குகிறது. இது மாநில அரசு 1992 மற்றும் 2003 ஆகிய ஆண்டுகளில் உருவாக்கிய தொழிற் கொள்கைகளின் இறைவுக்குப் போதுமான சான்றாக விளங்குகிறது.

இன்று தமிழ்நாடு பொருளாதார வளர்ச்சியில், தமிழகத்தைவிட பரப்பளவு மற்றும் மக்கள் தொகை மிக அதிகமாகக் கொண்ட மகாராஷ்டிரா மாநிலத்திற்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தை வகிக்கிறது. மத்திய அரசின் திட்ட ஆணைக் குழு 03-06-2014-ல் வெளியிட்ட அடிப்படைத் தகவல் புத்தகத்தில் இடம்பெற்ற தகவலின்படி, 2012-2013 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலத்தின் மொத்த உற்பத்தி வருவாய் மதிப்பு (GSDP) at constant prices-2004-ன்படி ரூ.451,313 கோடியாகும். மேலும் இந்திய மாநிலங்களிலேயே இது இரண்டாவது இடத்தை வகிக்கிறது. 2009-2010 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் மொத்த மாநில உற்பத்தி வருவாய் மதிப்பு (GSDP) ரூ.356,682 கோடியுடன் மூன்றாம் இடத்தில் இருந்தது.

2014 ஜூலை 14]

உலகப் பொருளாதாரம் இன்னமும் கடுமையான பின்னடைவில் உள்ளது. 2014 ஆம் ஆண்டு ஜூனில் வெளியிடப்பட்ட உலகப் பொருளாதார வளங்கள் (World Global Economic Prospects) பற்றிய கணிப்பீட்டின்படி, 2013 ஆம் ஆண்டில் உலகப் பொருளாதாரத்தின் மொத்த வருவாய் மதிப்பு (GDP) மிகச் சாதாரணமான 2.40 சதவீத வளர்ச்சியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதாவது அது 2.40 சதவீத வளர்ச்சியைப் பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் உற்பத்தித் துறை மிகப்பெரும் அளவில் ஏற்றமடி முன்னேற்றமடையாதாக அமைந்துள்ளது. ஏனெனில், துணிகள் மற்றும் ஆடைகள், தோல் உற்பத்திப் பொருட்கள், மோட்டார் வாகனங்கள் மற்றும் அவற்றின் பாகங்கள் மற்றும் ஏனைய பொறியியல் உற்பத்திப் பொருட்கள் அனைத்தும் ஏற்றமதிச் சந்தைக்களையே பெருமளவில் சார்ந்துள்ளன. உலகளவில் பொருளாதார மந்த நிலை மற்றும் பின்னடைவு இருந்தும், தமிழ்நாடு 2013-2014 ஆம் ஆண்டில் உயர் வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. மத்திய நிட்ட ஆணைக்குழுவின் தற்காலிக மதிப்பீடுகளின்படி, 2013-2014 ஆம் ஆண்டில் தமிழ்நாடு 6.13 சதவீத வளர்ச்சியைப் பெற்றுள்ளது. இது, அனைத்திந்திய சராசரி வளர்ச்சி வீதமான 4.74 சதவீதத்தைக் காட்டிலும் உயர்வானதாகும்.

தற்போது, இந்தியாவிலுள்ள மாநிலங்களிலேயே தமிழ்நாடு தொழில்மயமாக்கலுக்குச் சாதகமான மற்றும் முதலீட்டாளர்களை ர்க்கும் மாநிலமாகத் திகழ்கிறது. தமிழ்நாட்டில் தொழில் வணிகம் செழித்து வளர்வதற்குத் தேவையான உகந்த சூழல் நிலவுவதாலும், நாட்டின் வளர்ச்சி மற்றும் மக்கள் நலம் பேணுகிற சமூகப் பொருளாதார சிந்தனைகள் செயல்படுத்தப்பட்டுள்ளதாலும், முதலீட்டாளர்கள் அனைவரும் விரும்பி வந்து தொழில் முதலீடு செய்கிற பாதுகாப்பான இடமாக (Safe Haven) இம்மாநிலம் தலைநிமிர்ந்து விளங்குகிறது. மாநிலங்களின் வளர்ச்சி அளவைகளின்படி. (Parameters) நமது மாநிலம் முதல் மூன்று மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. இந்திய அரசின் மத்திய புள்ளியல் நிறுவனம் (CSO) மிக அண்மையில் 2011-2012 ஆம் ஆண்டு தொழில் வளர்ச்சி மதிப்பீட்டு ஆய்வு அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதில், தமிழ்நாடு பின்வருமாறு வரிசைப்படுத்தப்பட்டுள்ளது:

> தொழிற்சாலைகளின் எண்ணிக்கை அடிப்படையில் தமிழ்நாடு இந்திய மாநிலங்களில் முதலிடம் பெறுகிறது.

[2014 ஜூலை 14

- தொழிற்சாலைகளில் வேலை நியமனம் பெற்றுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை அடிப்படையில், மாநிலம் முதலிடம் பெறுகிறது.
- தொழில் நிறுவனங்களின் உற்பத்திப் பொருட்களுடைய மொத்த வருவாய் மதிப்பின் அடிப்படையில், மாநிலம் மூன்றாம் இடத்தில் உள்ளது.
- தொழில் துறையில் நிகர மதிப்புக் கூட்டலின்படி, மாநிலம் மூன்றாம் இடத்தில் உள்ளது.

இந்திய அரசின் வணிகம் மற்றும் தொழில் அமைச்சகத்தைச் சேர்ந்த தொழில் கொள்கை - உருவாக்கத் துறையால் (DIPP) வெளியிடப்பட்ட அந்நிய நேரடி முதலீட்டு புள்ளி விவரங்களின்படி, (FDI Statistics) ஏப்ரல், 2000 முதல் மார்ச், 2014 வரையிலான கால அளவில், மாநிலம் ஈர்த்த அந்நிய முதலீட்டு அளவின்படி, இந்திய மாநிலங்களில் தமிழ்நாடு மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது. இக்காலக் கட்டத்தில், தமிழ்நாடு ரூ.65,406 கோடி. (US $ 13,197 மில்லியன்) அளவிற்கு அந்நிய முதலீட்டை ஈர்த்துள்ளது. தமிழ்நாடு இதன் அடிப்படையில் மகாராஷ்டிரம், புதுடெல்லி ஆகிய மாநிலங்களுக்கு அடுத்துள்ளது. ஏப்ரல் 2013 முதல் மார்ச் 2014 வரையிலான காலக் கட்டத்தில், தமிழ்நாடு ரூ.12,595.40 கோடி. (US $ 2,116.24 மில்லியன்) அளவிற்கு அந்நிய முதலீட்டை ஈர்த்து இந்திய மாநிலங்களில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது. அந்நிய நேரடி முதலீடு குறித்த இவ்விவரங்கள் யாவும் இந்திய ரிசர்வ் வங்கியின் மண்டல அலுவலகங்களால் தொகுக்கப்பட்டதாகும். எனினும், புதுடெல்லியில் உள்ள இந்திய ரிசர்வ் வங்கியின் மண்டல அலுவலகம் உத்தரபிரதேச மாநிலத்தின் சில பகுதிகள் மற்றும் தலைநகரா மாநிலம் ஆகியவற்றையும் உள்ளடக்கியது. எனவே, புதுடெல்லி தொடர்பான அந்நிய முதலீட்டுப் புள்ளி விவரக் கணக்கில், நொய்டா, குர்கான் முதலியவற்றால் ஈர்க்கப்பட்ட அந்நிய நேரடி முதலீடும் அடங்கும். இவற்றை நீக்கினால் தமிழ்நாடு, நம் மாநிலத்தைப் போல இரண்டு மடங்கு பெரிய மாநிலமான மகாராஷ்டிராவிற்கு அடுத்துள்ளது.

இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையம் (CMIE) வெளியிட்டுள்ள தகவல்களின்படி, மார்ச் 2014 இறுதியில் 'தமிழ்நாட்டில் முதலீடு செய்வதற்கு உறுதி செய்யப்பட்ட மொத்த முதலீடுகள் ரூ.1,61,522.22 கோடியாகும்; அதே சமயம், அதற்கு

2014 தூலை 14]

முன்னர் மார்ச் 2011-ல் இத்தொகை ரூ.7,38,915.83 கோடியாக இருந்தது. கடந்த மூன்றாண்டு கால அளவில், மார்ச் 2014 வரை இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையம் அளித்த தகவலின்படி, தமிழ்நாடு கூடுதலாக ரூ.2,22,603.39 கோடி அளவிற்கு முதலீட்டை ஈர்த்துள்ளது.

இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையம் தவிர, இந்திய அரசின் தொழில் கொள்கை — உருவாக்கத் துறை வெளியிட்ட "தொழில் நிதி உதவிக்கான செயலகம் (SIA) புள்ளி விவரங்கள்" என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ள தகவலின்படி, முதலீடு செய்வதற்கு முதலீட்டாளர்கள் மிகவும் விரும்பித் தேர்ந்தெடுக்கும் மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. தொழில் கொள்கை - உருவாக்கத்துறை (DIPP) வழங்கிய புள்ளி விவரங்களின்படி, 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் இறுதியில் தொழில் முனைவோர் ஒப்பந்தம் (IEM), இசைவுக் கடிதம் (LOI) மற்றும் தொழில் உரிமம் (IL) போன்ற கருத்துருக்கள் தொடர்பான புள்ளி விவரங்களின்படி, தமிழ்நாட்டிற்கு உறுதி செய்யப்பட்ட மொத்த முதலீடுகள் ரூ.4,48,334 கோடியாகும். அதே சமயம், ஏப்ரல் 2011 இறுதியில், தமிழ்நாட்டிற்கு உறுதி செய்யப்பட்ட மொத்த முதலீடுகளின் அளவு ரூ.3,33,010 கோடியாகும். மே 2011 முதல் ஏப்ரல் 2014 வரையிலான காலத்தில் தமிழ்நாடு ஈர்த்துள்ள கூடுதல் முதலீடு ரூ.1,15,324 கோடியாகும்.

இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையமும் (CMIE), இந்திய அரசின் தொழிற்கொள்கை — உருவாக்கத் துறையும் (DIPP) வெளியிட்டுள்ள இப்புள்ளி விவரங்கள் இம்மாநிலத்தில் நிலவும் சாதகமான முதலீட்டுச் சூழல் குறித்த சிறப்பான சான்றாக அமைகின்றன.

இம்மாநில அரசு, கடந்த மூன்றாண்டுகளில் 33 புரிந்துணர்வு ஒப்பந்தங்களை கையெழுத்திட்டுள்ளது. இவற்றின் மொத்த முதலீட்டு அளவு ரூ.31,706 கோடியாகும். இது தவிர, தொழில் துறையின்கீழ் உள்ள வழிகாட்டு மையம் (Guidance Bureau), ஒற்றைச் சாளர முறையின் வாயிலாக 35 திட்டங்கள்மூலம் கூடுதலாக ரூ.14,896.72 கோடி முதலீட்டை ஈர்த்துள்ளது. மொத்தத்தில் கடந்த மூன்றாண்டுகளில், 68 திட்டங்களின் வாயிலாக ஈர்க்கப்பட்ட மொத்த முதலீடு ரூ.46,602.72 கோடியாகும்.

[2014 ஜூலை 14

2012 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், "தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023"-ஐ வெளியிட்டுள்ளார்கள். அதில், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின், தமிழ்நாட்டின் எதிர்காலம் குறித்த சிறப்பான கனவுத் திட்டத்தில், "தமிழ்நாடு மிகுந்த வளர்ச்சியும், வளமையும் பெற்ற மாநிலமாகத் திகழும்; இல்லாமை, வறுமை என்பவை இல்லாமல் போகும்; அனைத்து அடிப்படை வசதிகளும் நிறைந்த மாநிலமாக இம்மாநிலம் உருவாகும்; இம்மாநில மக்கள் மிக நவீனமான, முன்னேறிய சமுதாயமாக விளங்கி அமைதியுடனும், நல்லிணக்கத்துடனும் வாழ்வார்கள்; மேலும், சுற்றுச் சூழலுடன் இணக்கமாகவும், உலகில் ஏனைய மக்களோடு நட்பாகவும், வாழுகின்ற வாய்ப்பைப் பெறுவார்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

"தமிழ்நாடு தொலை நோக்குத் திட்டம் 2023"ல் மாநில அரசு, ஆண்டொன்றிற்கு 11 சதவீதம் அல்லது அதற்குமேல், மாநில மொத்த உற்பத்தி வருவாய் வளர்ச்சியைப் (GSDP) பெற வேண்டும் என்ற பேராவலுடன் வளர்ச்சி இலக்கு குறிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு, தற்போதைய விலை மதிப்பீடுகளின் அடிப்படையில், 6 மடங்கு தனி நபர் வருவாய் உயர்வைப் பெற வேண்டும். அதாவது, 2010-2011-ல், ரூ.73,278 (US $ 1528) என்று இருப்பது, 2023-ல் ரூ.4,50,000 (US $ 10,000) ஆக உயர்ந்து, உயர், நடுத்தர வருவாய் பிரிவினரைக் கொண்டுள்ள நாட்டு மக்களுடைய தனி நபர் வருவாய்க்கு இணையாக இருக்க வேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. "தமிழ்நாடு தொலை நோக்குத் திட்டம் 2023" மிகக் குறைந்த வருவாய்ப் பிரிவினருக்குக் கணிசமான அளவு வருவாய் வாய்ப்புகள் பெறச் செய்வதன்மூலம், தமிழ்நாடு வறுமையற்ற மாநிலமாக உருவாவதற்கு உறுதியளிப்பதுடன், உள்ளடக்கிய வளர்ச்சிக்கு (Inclusive Growth) மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது.

உற்பத்தித் துறையில், முதலீடுகளுக்கான உயர்ந்த பங்களிப்பை ஈர்க்கின்ற வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 21-02-2014ல் கீழ்க்காணும் கொள்கைகளை வெளியிட்டுள்ளார்கள்:

1. தமிழ்நாடு தொழில் கொள்கை, 2014
2. தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் மற்றும் மோட்டார் வாகன பாகங்கள் கொள்கை, 2014

மற்றும்

3. தமிழ்நாடு உயிரி தொழில்நுட்பக் கொள்கை, 2014

இத்தக் கொள்கைகள் யாவும் மிகுந்த உயர்தரமான தொழில் வளர்ச்சிக்கு வழி வகுத்து, தமிழ்நாட்டை உற்பத்தித் துறையில் மிக உயர்ந்த இடத்திற்கு கொண்டு சேர்த்து, உலகின் மிக உயர்ந்த தொழில்மயமான மண்டலங்களின் குழுவில், தமிழ்நாடு சிறப்பான இடத்தை பெறச் செய்யும்.

தமிழகத்தின் கவர்ந்திழுக்கும் வளர்ச்சி சூழலை மேம்படுத்தவும், இந்தியாவில் முதலீடு செய்ய மிகச் சிறந்த முதலீட்டுத் தளமாக விளங்கும் இடத்தைத் தக்க வைக்கவும், தமிழக அரசு "உலக முதலீட்டாளர்கள் சந்திப்பு" 2014-2015 ஆம் நிதியாண்டில் சென்னையில் நடத்தத் திட்டமிட்டுள்ளது. மாநிலத்தின் தொலைநோக்குத் திட்டமான தொழில்மயமாக்குதல், வேலைவாய்ப்பை அதிகரித்தல், மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல், சீரான பகுதி வளர்ச்சி மற்றும் சுற்றுச்சூழலுடன் இணைந்த நிலைத்த நீண்ட கால வளர்ச்சிமூலம் உள்ளடக்கிய வளர்ச்சியை அடைவதற்கான ஒருமுகப்படுத்தப்பட்ட முயற்சியாக இத்தச் சந்திப்பு நிகழும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2014 ஜூலை 14

1. தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) மாநிலத்தின் தொழில் வளர்ச்சியை மேம்படுத்திட தொழில் வளாகங்கள் மற்றும் பூங்காக்களை உருவாக்குவதோடு தொழில் நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கிடும் நோக்கில் 1971 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. கடந்த 2000 ஆம் ஆண்டு வரை, இந்நிறுவனம், தொழில் நிறுவனங்களுக்கு பருவகாலக் கடன் வாயிலாக நிதியுதவி வழங்குதல் மற்றும் தொழில் நிறுவனங்கள் உடனடியாகத் தொழில் தொடங்க ஏதுவாக அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் தொழில் வளாகங்களை உருவாக்கிப் பராமரித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும் நிறுவனமாக செயல்பட்டு வந்தது. தொடக்கத்தில் பிற்படுத்தப்பட்ட பகுதி என்று நடைமுறையில் அறியப்பட்ட பகுதிகளான இராணிப்பேட்டை மற்றும் ஓசூரில் தொடங்கப்பட்ட தொழில் வளாகங்கள் அளித்த வெற்றியினால் ஊக்கமுற்று மாநிலத்தின் வெவ்வேறு பகுதிகளில் கூடுதலாக தொழில் வளாகங்கள் / பூங்காக்களை உருவாக்கியுள்ளது. எனினும், 2001 ஆம் ஆண்டிலிருந்து இந்நிறுவனம் தொழில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணியில் அதிகக் கவனம் செலுத்தும் நோக்கில், தொழில் வளாகங்களை உருவாக்கும் பணியை மட்டும் செய்து வருகிறது. தமிழக அரசின் சீரிய வழிகாட்டுதலின் பேரில் சிப்காட் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட அக்கறையான பணியின் விளைவாக, திருவாளர்கள் ரெனால்ட் & நிசான், டேம்லர், ஹூண்டாய், செய்ன்ட் கோபைன், டெல், அசோக் லேய்ன்ட், நோக்கியா, யமஹா போன்ற பல முதன்மைத் தொழில் நிறுவனங்கள் தங்கள் தொழிற்கூடங்களை தமிழ்நாட்டில் அமைத்துள்ளன.

மேலும், சிப்காட் நிறுவனம், அதிக முதலீடு மற்றும் பெருமளவு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தும் பெருந்தொழில், உயர் பெருந்தொழில் மற்றும் மிக உயர்ந்த பெருந்தொழில் நிறுவனங்களுக்கு பல்வேறு ஊக்க நிதியுதவிகள் வழங்க அமைக்கப்பட்ட அமைப்பு முறையிலான தொகுப்புச் சலுகை வழங்கும் (Structured Package of Assistance) திட்டத்திற்கு தமிழ்நாடு அரசின் முகவாண்மை அமைப்பாக (Nodal Agency) செயல்பட்டு வருகிறது.

2014 ஜூலை 14]

1.1 நிறுவன செல்பாடு

1.1.1 தொழில் வளாகங்கள் / பூங்காக்களை உருவாக்குதல்

இக்காட் நிறுவனம், இதுவரை, மாநிலத்தின் 12 மாவட்டங்களில் கையகப்படுத்தப்பட்ட சுமார் 29,500 ஏக்கர் நிலப்பரப்பில் 20 தொழில் வளாகங்களை (6 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் உட்பட) உருவாக்கியுள்ளது. அதில், ஒதுக்கீட்டிற்குரிய நிலப்பரப்பான 24,055 ஏக்கரில் (சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் உட்பட), இதுவரையில் 2,235 தொழில் நிறுவனங்களுக்கு, 19,471 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் சுமார் ரூ.103,000 கோடி முதலீடும், சுமார் 597 இலட்சம் நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(i) சிப்காட் தொழிற்பூங்கா வல்லம்–வடகால்

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம் வல்லம்–வடகால் கிராமத்தில் சுமார் 1,146.31 ஏக்கர் நிலப்பரப்பில் இப்புதிய தொழிற்பூங்கா சமீபத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. இதில், ஒதுக்கீட்டிற்குரிய 882.94 ஏக்கர் நிலப்பரப்பில், இதுவரை 44 தொழில் நிறுவனங்களுக்கு 298.33 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் சுமார் ரூ.3,857 கோடி முதலீடும் சுமார் 14,532 நபர்களுக்கு வேலைவாய்ப்பும் உருவாகும். ரூ.3,550 கோடி முதலீடு மற்றும் 12,000 நபர்களுக்கான வேலைவாய்ப்பு அளிக்கும் நிறுவனமான ஜிஸ், இத்திட்ட பகுதியை பிரைவேட் லிமிடெட், மற்றும் அதன் விற்பனை நிறுவனங்களும் இவற்றில் அடங்கும்.

(ii) புதிதாக உருவாக்கப்படும் தொழில் வளாகங்கள் / பூங்காக்கள்

தற்போது 8 புதிய தொழில் வளாகங்கள் / பூங்காக்களை கீழ்க்குறிப்பிட்டுள்ள ஏக்கர் நிலப்பரப்பில் உருவாக்குவதற்காக நில எடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

i. ஒரகடம் தொழில் வளர்ச்சி மையம் விரிவாக்கம்-II (வைப்பூர் - மாத்தூர்) (516.30 ஏக்கர்)

ii. செய்யாறு தொழில் வளாக விரிவாக்கம் (2300.57 ஏக்கர்)

iii. மதுரை தொழிற்பூங்கா (1478.71 ஏக்கர்)

iv. தூத்துக்குடி. தொழில் வளாகம் நிலை-II *(1179.86 ஏக்கர்)*

v. திண்டிவனம் தொழில் வளாகம் *(720.27 ஏக்கர்)*

vi. மணப்பாறை தொழிற்பூங்கா *(1077.05 ஏக்கர்)*

vii. நெமிலி தொழிற்பூங்கா *(639.94 ஏக்கர்)*

viii. பணப்பாக்கம் தொழிற்பூங்கா *(1112.41 ஏக்கர்)*

(iii) நிலவங்கி

தொழில் முனைவோர்களுக்குத் தேவைப்படும் நிலத்தினை உடனடியாக வழங்கும்பொருட்டு சிப்காட் நிறுவனம் நிலவங்கி ஒன்றினை உருவாக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த நிலவங்கி விவசாய நிலங்களை சுவனமாகத் தவிர்த்து, தரிசு மற்றும் சாகுபடிக்கு உதவாத நிலங்களைக் கொண்டு உருவாக்கப்படுகிறது. இதற்காக வேலூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, காஞ்சிபுரம், திருவள்ளூர், தூத்துக்குடி மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் சுமார் 12,000 ஏக்கர் நிலம் கையகப்படுத்த அரசின் நிர்வாக அனுமதி கோரும் முன்மொழிவுகள் பல்வேறு நிலைகளில் பரிசீலனையில் உள்ளன.

(iv) தென்மாவட்டங்களில் தொழில் மயம்

தொழில் வளர்ச்சியினை தென்மாவட்டங்களில் ஊக்குவிக்கும்பொருட்டு, சிப்காட் நிறுவனம் இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை, திண்டுக்கல், தேனி, விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 9 தென்மாவட்டங்களில் 20,650 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய தொழிற்பூங்காக்களை உருவாக்குவதற்காக நடவடிக்கை எடுத்து வருகிறது. இதனால் ரூ.25,000 கோடி முதலீடும் 50,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பும் உருவாகும். இதற்காக இராமநாதபுரம், சிவகங்கை, திண்டுக்கல், தேனி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் சுமார் 11,000 ஏக்கர் நிலம் தெரிவு செய்யப்பட்டு அரசின் நிர்வாக அனுமதி கோரும் முன்மொழிவுகள் நடவடிக்கையில் உள்ளன.

மேற்குறிப்பிட்ட 9 தென் மாவட்டங்களில் தற்போது இயக்கத்தில் உள்ள மற்றும் புதிதாக அமைய உள்ள சிப்காட் தொழிற்பூங்காக்களில் தொழிற்சாலைகளை அமைக்க முன்வரும் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் வகையில் கீழ்க்காணும் சிறப்பு சலுகைகள் வழங்கி அக்டோபர் 2013-ல் ஆணையிடப்பட்டுள்ளன:

2014 ஜூலை 14]

1. சிப்காட் நிறுவனத்தால் 50 சதவிகித மானிய விலையில் நிலம் ஒதுக்கீடு செய்யப்படும். இம்மானியம் சிப்காட் நிறுவனத்திற்கு அரசால் நேரடியாகத் திரும்ப அளிக்கப்படும்.

2. நிலம் பத்திரபதிவுக்கான முத்திரைத்தாள் கட்டணத்தில் 100 சதவிகித விலக்கு அளிக்கப்படும்.

3. மூலதன மானியம் 1.5 மடங்கிலிருந்து 2 மடங்காக அதிகரிக்கப்படும்.

4. தொழிற்சாலைகளுக்குத் தேவையான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் உருவாக்கப்படும்.

5. மதிப்புக் கூட்டிய வரி (VAT) அடிப்படையிலான சலுகைகள் பெற தற்போது நடைமுறையில் உள்ள குறைத்தபட்ச முதலீட்டுத் தொகையான 50 கோடி ரூபாய் என்பது 10 கோடி ரூபாயாக குறைக்கப்படும்.

மேற்காணும் சிறப்பு சலுகைகளின்கீழ், சிப்காட் நிறுவனம் இதுவரையில், நிலக்கோட்டை, புதுக்கோட்டை மற்றும் கங்கைகொண்டானில் உள்ள தொழில் வளாகங்கள் / தொழில் வளர்ச்சி மையங்களில் 5195 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்துள்ளது.

(v) தேசிய தானியங்கி சோதனை, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி கட்டமைப்பு திட்டம் (NATRIP)

சிப்காட் நிறுவனம், மத்திய அரசின் கனரக தொழிற்சாலைகள் அமைச்சகத்தின்கீழ் இயங்கும் தானியங்கி வாகனங்கள் சோதனை, ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு கட்டமைப்புத் திட்டத்திற்காக தேஷனல் ஆட்டோமோட்டிவ் டெஸ்டிங் மற்றும் ரிசர்ச் & டெவலப்மெண்ட் இன்ப்ராஸ்ட்ரக்சர் ப்ராஜக்ட் (NATRIP) ஓரகடம் தொழில் வளர்ச்சி மையத்தில் 304 ஏக்கர் நிலம் ஒதுக்கியுள்ளது. சுமார் ரூ.700 கோடி முதலீட்டில் செயல்படுத்தப்பட்டுவரும் இத்திட்டம் சுமார் 200 நபர்களுக்கு நேர்முக மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு வசதிகளை உருவாக்கும். இத்திட்டத்தின் கட்டுமானப் பணிகள் முடிக்கப் பெற்று 2016 ஆம் ஆண்டு செயல்பட உள்ளது.

[2014 ஜூலை 14

(vi) புதிய தயாரிப்பு மண்டலங்கள் (New Manufacturing Zones)

உயர்தர சமூக மற்றும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைக் கொண்ட புதிய தயாரிப்பு மண்டலங்கள் (New Manufacturing Zone) ஏற்படுத்துவதற்காக, முதற்கட்டமாக அரசாணை எண் 198, தொழில் துறை, நாள் 21-11-2012-ன்படி தூத்துக்குடி மாவட்டம் வினாத்திகுளம் வட்டத்தில் 6780 ஏக்கர், வேலூர் மாவட்டம் வாலாஜா வட்டத்தில் 2,150 ஏக்கர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டம், ஒரூர் வட்டத்தில் 2,300 ஏக்கர் நிலப்பரப்பில் நிறுவப்பட உள்ளன. இவற்றிற்கான நிலம் கண்டறியப்பட்டு, அவற்றைக் கையகப்படுத்திட முதற்கட்டப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. மேற்கூறப்பட்ட திட்டங்கள் உற்பத்திப் பிரிவின் வளர்ச்சியை 25% இலக்காகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள தேசிய முதலீட்டு மற்றும் உற்பத்தி மண்டலங்களை ஒத்ததாக உருவாக்கப்படும்.

1.2 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள்

அன்னிய நேரடி முதலீட்டை ஈர்ப்பதற்காகவும், ஏற்றுமதியை அதிகரிப்பதோடு பெருமளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், சிப்காட் நிறுவனம் அதன் தொழில் வளாகங்கள் / பூங்காக்களில் கீழ்க்கண்ட 'குறிப்பிட்ட வகை தொழில் சார்ந்த' ஆறு சிறப்புப் பொருளாதார மண்டலங்களை உருவாக்கியுள்ளது:

- திருப்பெரும்புதூரில் உயர் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம் (570.32 ஏக்கர்)
- ஓரகடத்தில் உயர் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம் (347.66 ஏக்கர்)
- பெருந்துறையில் பொறியியல் துறை சிறப்புப் பொருளாதார மண்டலம் (263.19 ஏக்கர்)
- கங்கைகொண்டானில் போக்குவரத்து பொறியியல் துறை சிறப்புப் பொருளாதார மண்டலம் (255.00 ஏக்கர்)
- இராணிப்பேட்டையில் பொறியியல் துறை சிறப்புப் பொருளாதார மண்டலம் (260.00 ஏக்கர்)
- பர்கூரில் இராணுவத் தொழில்கள் சார்ந்த சிறப்புப் பொருளாதார மண்டலம் (879.96 ஏக்கர்)

2014 ஜூலை 14]

திருவாளர்கள் டெல் இந்தியா பிரைவேட் லிட்., பாக்ஸ்கான், மோட்டாரோலா, சான்மினா, நோக்கியா, சிமென்ஸ், ஏடிசி டயர்ஸ், விப்ரோ போன்ற பல பெருந்தொழில் நிறுவனங்கள் பெரும் முதலீட்டில் தங்களது தொழிற்கூடங்களை சிப்காட் சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் துவக்கியுள்ளன. இதுவரை, 47 நிறுவனங்களுக்கு 1,081 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் சுமார் 63,000 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

1.2.1 சிறப்புப் பொருளாதார மண்டலம் ஏற்படுத்தியமைக்காக வழங்கப்பட்ட விருதுகள்

சிப்காட் நிறுவனம், திருபெரும்புதூர் மற்றும் ஓரகடம் தொழில் பூங்கா / வளர்ச்சி மையத்தில் உயர் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்காக சிறந்த மேம்பாட்டாளர் (Best Developer Award) விருதினை 2011-2012-ல் வர்த்தக மற்றும் தொழில் அமைச்சகத்திடம் பெற்றுள்ளது.

1.3 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

தமிழ்நாடு அரசு, தொழில்களை ஊக்குவிப்பதற்கும் வேலைவாய்ப்பினை அதிகரிப்பதற்கும், பல்வேறு பெருந்தொழில் நிறுவனங்களோடு புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது. இவற்றில், 30 தொழில் நிறுவனங்கள் சிப்காட் தொழில் வளாகங்களிலேயே அமைக்கப்பட்டு, 20 தொழில் நிறுவனங்கள் தங்களது உற்பத்தியை ஏற்கெனவே துவங்கிவிட்டன.

1.4 கட்டுமானப் பணிகள்

சிப்காட் நிறுவனம், கூடுதல் முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில் அதன் தொழில் வளாகங்களில் உலகத்தரத்திற்கேற்ப உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குகிறது. முதற்கட்டமாக, ஒருங்கிணைந்த வசதிகள் செய்து தருவதற்கு ஏதுவாக தோவாய்க் கண்டிகை மற்றும் பிள்ளைப்பாக்கம் சிப்காட் தொழில் பூங்காக்களில் முறையே ரூ.5.41 கோடி மற்றும் ரூ.24.47 கோடிக்கு கட்டுமானப்பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது. பர்கூரில் சிறுவணட் தொழில்கள் சார்ந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்திலும் உட்கட்டமைப்புகள் உருவாக்குவதற்காக ரூ. 38.80 கோடியில் ஒருங்கிணைந்த பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

[2014 ஜூலை 14

1.5 சிறப்பு வளர்ச்சி செயல்பாடுகள்

மாநிலத்தை தொழில்மயமாக்கும் நோக்கில் தொழில் வளாகங்கள் / பூங்காக்களை உருவாக்குவது மட்டுமின்றி, சிறப்பு உட்கட்டமைப்புத் திட்டங்கள் / வசதிகளை உருவாக்கும் பணியிலும் சிப்காட் நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

1.5.1 ஆயத்த ஆடைப் பூங்கா, இருங்காட்டுக்கோட்டை

சிப்காட் இருங்காட்டுக்கோட்டை தொழிற்பூங்காவில் 123.83 ஏக்கர் நிலப்பரப்பில் ஆயத்த ஆடைப் பூங்கா ஏற்படுத்தப்பட்டு, அதில் ஒதுக்கீடுக்கான மொத்த நிலமும் 36 நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளைத்தவிர, பணிபுரியும் பெண்களுக்கான தங்குமிடம் (Dormitory), குழந்தைகள் காப்பகம், மருத்துவக்கூடம் (dispensary), வடிவமைப்பு மற்றும் பயிற்சி மையம், சிற்றுண்டிச்சாலை போன்ற சிறப்பு உட்கட்டமைப்பு வசதிகளும் இங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவை தவிர, ஒதுக்கீட்டாளரின் விண்ணப்பத்திற்கிணங்க சிப்காட் நிறுவனம் இதர தொழில் துறை நிறுவனங்களுக்கு (மாசற்ற தொழிற்சாலைகளுக்கு) ஒதுக்கீடு செய்ய மத்திய அரசின் அனுமதியை எதிர்நோக்கியுள்ளது.

1.5.2 இருங்காட்டுக்கோட்டை காலணிப் பொருட்கள் தயாரிக்கும் பூங்கா

சிப்காட் நிறுவனம், இருங்காட்டுக்கோட்டை தொழிற்பூங்காவில் 52.63 ஏக்கர் நிலப்பரப்பில் காலணிப் பொருட்கள் தயாரிக்கும் பூங்காவினை ஏற்படுத்தியுள்ளது. இதுவரை, 13 நிறுவனங்களுக்கு நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் சுமார் 750 நபர்கள் வேலைவாய்ப்பினைப் பெறுவர்.

1.5.3 சிறப்புத் தொழில் பெருவழிச் சாலை

சிப்காட் நிறுவனம், சேலம்-கோவை தேசிய நெடுஞ்சாலைகளை ஒட்டி சிறப்புத் தொழில் பெருவழிச் சாலைகளை (Industrial Corridor of Excellence) உருவாக்குவதற்காக ஆலோசனை நிறுவனம் (Consultant) மூலம் ஆராய்வு அறிக்கை தயாரித்துள்ளது.

(i) சென்னை–திருபெரும்புதூர்–இராணிப்பேட்டை–ஓசூர்

(ii) மதுரை–தூத்துக்குடி மற்றும் கோயம்புத்தூர்–சேலம்

2014 ஜூலை 14]

சென்னை-ஒரூர் தொழில் தடத்தை பொறுத்தவரையில், தற்போது மைய அரசு மற்றும் JICA ஜப்பானிய கூட்டு நிறுவனம் ஆகியவற்றின் நிதி உதவியோடு சென்னை-பெங்களூரு தொழில் தடம் அமைப்பதற்கான ஆய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தினால் தமிழகத்தின் 7 மாவட்டங்கள் பயன்பெறும்.

அடுத்ததாக, தொழில் துறையில் பின்தங்கிய தென்மாவட்டங்களில் பொருளாதார வளர்ச்சியினை மேம்படுத்தவும், நிலைத்த தொழில் வளர்ச்சியினை ஏற்படுத்தவும், மதுரை-தூத்துக்குடி தொழில் வழித்தடத்தை சிறப்புத் தொழில் பெருவழித் சாலையாக உருவாக்க உள்ளது. இவ்வழித்தடம் 7 மாவட்டங்களில் 31 ஒன்றியங்களை உள்ளடக்கியது. முனை சார்ந்த வளர்ச்சிப் பகுதி மற்றும் ஆட்டோமொபைல், வேளாண் மற்றும் உணவு பதப்படுத்தல், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்புடையது போன்ற 13 முக்கிய தொழில் பிரிவுகள் இத்திட்டத்தில் உருவாக்கப்படும். இத்திட்டத்தில் ரூபாய் 40,305 கோடி செலவில் உட்கட்டமைப்பு வசதிகளுடன் 9 ஆண்டுகளில் ரூபாய் 1,90,000 கோடி தொழில் முதலீட்டை ஈர்க்கும் என்ற நோக்கிலும் இதனால் 18 இலட்சம் நபர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாகும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் தமிழ்நாடு தொலைநோக்கு ஆவணம் 2023 (Tamil Nadu Vision Document 2023) என்ற ஆவணத்தில் குறிப்பிடத்தக்க திட்டம் என அடையாளம் காணப்பட்டு விரைவாக நிறைவேற்ற தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் (Tamil Nadu Infrastructure Development Board) நடவடிக்கை எடுத்து வருகிறது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக சிறப்புச் செயலாக்க முகமை (Special Purpose Vehicle-SPV) ஒன்று சிப்காட் நிறுவனத்தினால் அமைக்கப்படும்.

1.5.4 திறன் மேம்பாட்டு மையங்கள்

சிப்காட் நிறுவனத்தின்மூலம் ஆண்டிற்கு சுமார் 1,200 இளைஞர்களின் திறனை மேம்படுத்துவதற்காக, காஞ்சிபுரம் மாவட்டம், ஒரகடம் தொழில் வளர்ச்சி மையத்தில் ஒரு திறன் மேம்பாட்டு மையம் கட்டி முடிக்கப்பட்டு, 11-6-2014 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேலும், திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டான் தொழில் வளர்ச்சி மையம் மற்றும்

[2014 ஜூலை 14

திருவள்ளூர் மாவட்டம், தேர்வாய்க் கண்டிகை தொழில்பூங்காவில் தலா ஒரு நிறன் மேம்பாட்டு மையம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இம்மையங்களில் பயிற்சிபெறும் இளைஞர்கள் அவர்களுடைய நிறமைக்குத் தக்கவாறு சிப்காட் தொழில் வளாகங்கள் / பூங்காக்களில் உள்ள தொழில் நிறுவனங்களில் வேலைக்குப் பரிந்துரைக்கப்படுவர்.

1.5.5 தங்குமிட வசதி

சிப்காட் நிறுவனம், நிருப்பெரும்புதூர் பகுதிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு அவர்கள் சக்திக்கேற்ற வகையில் குடியிருப்பினை ஏற்படுத்தும் நோக்கில் அவர்கள் தங்குவதற்காக அனைத்து வசதிகளுடன்கூடிய 400 ஆண்கள் மற்றும் 600 பெண்களுக்கான தனித்தனி தங்குமிடங்கள் (Dormitories) இரண்டினை நிருப்பெரும்புதூரில் கட்டி முடித்துள்ளது. இக்குடியிருப்பினை 9-12-2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். சிப்காட் நிறுவனம், இக்குடியிருப்பினை நடத்த தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்திற்கு ஒப்படைக்க உள்ளது.

1.5.6 திருப்பெரும்புதூர் பகுதி மேம்பாட்டுக்கான ஒருங்கிணைந்த திட்டம்

நிருப்பெரும்புதூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் பொது மக்கள் மற்றும் தொழிலாளர்களுக்காக அடிப்படை மற்றும் சமூகக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதோடு, நவீன குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்த ஒருங்கிணைந்த திட்ட (Comprehensive Plan) ஆராய்வு அறிக்கை கலந்தறிதற்குரியர் (Consultant) மூலம் சிப்காட் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

1.5.7 இருங்காட்டுக்கோட்டை மற்றும் வல்லம் – வடகால் தொழில் பூங்காக்களில் சரக்கு வாகன முனையம் (Truck Terminal)

வாகன நெரிசலைக் குறைப்பதற்காக, சிப்காட் நிறுவனம், இருங்காட்டுக்கோட்டை தொழில்பூங்காவில் ரூ.13.45 கோடி முதலீட்டில் "அமைத்து-சொந்தமாக்கி-இயக்கி-பின்னர் மாறுதல் செய்யும் (BOOT)" அடிப்படை மற்றும் அரசு-தனியார்-பங்களிப்பு (ppp) முறையில் ஒரு சரக்கு வாகன முனையத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது. இதே முறையில், வல்லம் - வடகால் திட்டத்தில் ரூ.10 கோடி அரசாங்க மானியத்தில் மற்றொரு சரக்கு

2014 ஜூலை 14]

வாகன முனையம் ஏற்படுத்த நில எடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1.5.8 புதிய தொழில் பூங்காக்களுக்கான தண்ணீர் வசதி

தற்போது, சிப்காட் நிறுவனம், இருங்காட்டுக்கோட்டை, இருப்பெரும்புதூர் மற்றும் ஒரகடம் தொழில்பூங்காக்கள் செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து நாளொன்றுக்கு 50 இலட்சம் காலன் (5 MGD) தண்ணீர் பெற்று வருகின்றன. மேற்படி தொழில் பூங்காக்கள் விரிவாக்கம் செய்யப்பட்டதாலும், வல்லம்-வடகால் மற்றும் வல்லம்-மாத்தூர் ஆகிய புதிய தொழிற்பேட்டைகள் ஏற்படுத்தப்பட்டதன் விளைவாகவும், சிப்காட் நிறுவனத்தின் தண்ணீர் தேவை 5 MGD லிருந்து 10 MGD ஆக உயர்ந்துள்ளது. தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்ய சிப்காட் நிறுவனம் 10 MGD (45 MLD) கொள்திறன் கொண்ட மூன்றாம் கட்ட சுத்திகரிப்பு மற்றும் எதிர்மறை சவ்வூடு பரவல் முறையில் சுத்திகரிக்கப்பட்ட நீர் பெறும் திட்டத்தை (TTRO plant) சென்னை குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்துடன் இணைந்து கோயம்பேட்டில் செயல்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

1.6 சுற்றுச் சூழல் பாதுகாப்பு

தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் அபாயகரமான கழிவுகளை தருத்த முறையில் மாற்றி வெளியேற்ற அக்கழிவுகளைச் சுத்திகரித்து, சேமித்து அகற்றும் மிகப்பெரிய திட்டம் கும்மிடிப்பூண்டி ஏற்றுமதி மேம்பாட்டு தொழிற்பூங்காவில் 26.91 ஏக்கர் நிலப்பரப்பில் தொழிற்சாலைக் கழிவுகள் மேலாண்மை சங்கத்தினால் தமிழ்நாடு கழிவுகள் மேலாண்மை நிறுவனம்மூலம் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது.

1.7 கூட்டாண்மை சமூகப் பொறுப்பு நடவடிக்கைகள்

சிப்காட் நிறுவனம், அதன் தொழில் வளாகங்களுக்காக நிலங்களைக் கையகப்படுத்தும்போது, அப்பகுதிகளில் உள்ள உள்ளூர் மக்களின் பயன்பாட்டிற்காக, இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு வீடுகள் கட்டித் தருதல், கழிப்பறை வசதிகள் ஏற்படுத்துதல், புதிய பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல் / பழைய பள்ளிக் கட்டடங்களைப் புதுப்பித்தல், சுகாதார மையம், குடிநீர் வசதி செய்து தருதல் போன்ற பல சமூக மேம்பாட்டுத் திட்டங்களை சிப்காட் தொழில் வளாகங்களின் அருகில் உள்ள 20 கிராமங்களில் ஏற்படுத்த ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

[2014 ஜூலை 14

1.8 தொழில் உட்கட்டமைப்பு நிதி

சிப்காட் தொழிற்பூங்காக்களின் உட்கட்டமைப்பு மேம்பாட்டு பணிக்காக ரூபாய் 100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதி தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளிருந்து தொழிற் பூங்காக்களுக்கு அணுகு சாலை கட்டுமான பணிகளுக்கும், சிறிய பாலங்கள் கட்டுமான பணிகளுக்கும், இணைப்புச் சாலைகள் விரிவாக்கத்திற்கும், மாசு கட்டுப்பாட்டுக்கான பொது உட்கட்டமைப்பு வசதிகள் தவிர புதிய குடிநீர் வசதி உருவாக்க மற்றும் நீர் ஆதாரங்களை கண்டறிதலுக்கும் பயன்படுத்தப்படும்.

1.9 நிதிச் செயல்பாடு

சிப்காட் நிறுவனம் தொடர்ந்து கடந்த ஏழு ஆண்டுகளாக இலாபம் ஈட்டி வருவதோடு கடந்த ஆறு ஆண்டுகளாக 25 சதவீத ஆதாயப் பங்குத் தொகையை அரசுக்கு அளித்து வருகிறது. சிப்காட் நிறுவனம் 2012-2013 ஆம் ஆண்டில் உயர்ந்தபட்ச இலாபமாக ரூ.258.31 கோடி நிகர இலாபம் (வரிக்கு முன்) ஈட்டியுள்ளது. மேலும் 2013-2014ஆம் ஆண்டில் உத்தேசமாக ரூ.227.68 கோடி நிகர இலாபம் (வரிக்கு முன்) ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ரூபாய் கோடியில்)

	2009–10	2010–11	2011–12	2012–13	2013–14
மொத்த வருவாய்	302.09	908.73	649.83	711.17	564.25
நிகர இலாபம் (வரிக்கு முன்)	92.69	121.95	197.60	258.31	227.68
நிகர இலாபம் (வரிக்கு பின்)	62.32	82.34	140.20	182.32	153.81
அறிவிக்கப்–பட்ட ஆதாயப் பங்கு (சதவீதத்தில்)	25	25	25	25	30
ஆதாயப் பங்கு	14.48	14.48	14.48	14.48	17.40

2014 ஜூலை 14]

1.10 முகவாண்மைச் செயல்பாடு

சிப்காட் நிறுவனம், பெருந்தொழில் நிறுவனங்களுக்கு அரசின் தொகுப்பு மானிய நிதியுதவி வழங்கும் திட்டத்திற்கு தமிழ்நாடு அரசின் முகவாண்மை அலுவலராக (Nodal Agency) இருந்து செயல்படுத்தி வருகிறது. அரசு ஆணைகளின் அடிப்படையில், பல்வேறு மானிய நிதி உதவிகள் முறையே, மதிப்புக் கூட்டு வரியின் மீது மென்கடன், முதலீடு மேம்பாட்டு மானியம் மதிப்புக் கூட்டு வரி திரும்பப் பெறுதல், முதலீட்டு மானியம், குறிப்பிடத்தக்க உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு மானியம், மின்சாரவரி திரும்பப் பெறுதல், பயிற்சி மானியம் ஆகியவை வழங்கப்பட்டு வருகிறது. இதுவரையில் அரசு இத்திட்டத்தின்கீழ் ரூபாய் 2,898.80 கோடி சிப்காட் நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது. அவற்றுள் சிப்காட் நிறுவனம் இதுவரையில் 55 நிறுவனங்களுக்கு ரூ.2,690.20 கோடியை மானிய நிதியுதவியாக வழங்கியுள்ளது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2014 ஜூலை 14

2. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ), தனியார் தொழில் முனைவோருடன் கூட்டு சேர்ந்து பெரிய மற்றும் நடுத்தர தொழிற்சாலைகளை நிறுவி மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை ஏற்படுத்தவும் தொழில் முதலீடுகளை ஈர்க்கவும் தமிழ்நாடு அரசால், 1965 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட ஓர் அரசு நிறுவனமாகும். இந்நிறுவனம் தமிழ்நாடு, சமச்சீரான, விரைவான மற்றும் தொடர்ச்சியான தொழில் வளர்ச்சியை எய்துவதற்காக பெரும் முதலீடுகள் மற்றும் மிகப்பெரிய அளவில் வேலைவாய்ப்பை நல்கும் பெருந்தொழில் மற்றும் உட்கட்டமைப்புத் திட்டப் பணிகளை தமிழ்நாட்டில் நிறுவுவதற்கு வழிவகை செய்கிறது.

கைக்கடிகாரங்கள், மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள், இரும்பு மற்றும் எஃகு பொருட்கள், ஜவுளி, இரசாயன உரங்கள், இரசாயனப் பொருட்கள், மருந்துப் பொருட்கள், பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள், தோல் பொருட்கள் ஆகியவற்றினை உற்பத்தி செய்யும் கூட்டுத் துறை நிறுவனங்களை டிட்கோ நிறுவனம் நிறுவியுள்ளது. மேலும், தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள், உயிரி தொழில்நுட்பப் பூங்காக்கள், சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், சாலை மேம்பாட்டுத் திட்டங்கள், வேளாண் ஏற்றுமதி மண்டலம் மற்றும் சிறப்பு முதலீட்டு மண்டலங்கள் அமைத்தல் உள்ளிட்ட திட்டங்களில் டிட்கோ முதலீடு செய்து வருகிறது.

டைட்டன் இண்டஸ்ட்ரீஸ், மஹிந்திரா வேர்ல்டு சிட்டி, அசெண்டாஸ் ஐடி பார்க், டைடல் பார்க், டைசல் பயோ பார்க், ஐடி. எக்ஸ்பிரஸ்வே, சென்னை வர்த்தக மையம், தமிழ்நாடு பெட்ரோ புராடக்ட்ஸ், கோயம்புத்தூர் டைடல் பார்க் மற்றும் எல் அண்ட் டி கப்பல் கட்டும் நிறுவனம் போன்றவை டிட்கோவின் சில முக்கிய கூட்டு நிறுவனங்களாகும்.

இந்நிறுவனத்தின் முதலீட்டு மதிப்புத் தொகையான ரூ.450.21 கோடி பெரும்பாலும் கூட்டுத் துறை நிறுவனங்களில் பங்கு முதலீடுகளாகவும் மற்றும் நடப்புத் திட்டங்களில் முதலீடுகளாகவும் உள்ளது.

தற்போது, தரமணியில் டைசல் உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா-2 மற்றும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பச் சேவைக்கான சிறப்புப் பொருளாதார மண்டலம்,

2014 ஜூலை 14]

திருவள்ளூர் மாவட்டத்தில் நிரவ நிலை எரிவாயு முனையம், கடலூரில் பெட்ரோலிய சுத்திகரிப்புத் திட்டம், நாங்குனேரி, பெரம்பலூர் மற்றும் திருப்பணிரி மாவட்டங்களில் பல்பொருள் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், தூத்துக்குடியில் உணவுப்பொருள் பதப்படுத்தும் சிறப்புப் பொருளாதார மண்டலம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தில் சூரிய சக்தி மின் பூங்கா நிறுவும் திட்டம் ஆகிய திட்டங்களை டிட்கோ செயல்படுத்தி வருகிறது.

மேலும், சென்னைக்கு அருகில் வாலாஜாபேட்டை பூங்கா திட்டம், திருவள்ளூர் மாவட்டத்தில் பாலிமர்ஸ் பொருட்கள் உற்பத்தி வளாகத் திட்டம், கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த நெசவு மற்றும் தொழில் நுட்ப வளாகத் திட்டம், கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் பெட்ரோலியம், இரசாயனப் பொருட்கள் மற்றும் பெட்ரோலிய இரசாயனப் பொருட்களின் முதலீட்டுப் பகுதிக்கான திட்டம், சென்னைக்கு அருகில் கதிர்வீச்சுமூலம் ஒருங்கிணைந்த உணவு பதப்படுத்தும் மையத் திட்டம், நாகப்பட்டினத்தில் ஓர் அழகுகல் துறைமுகம், மற்றும் எரிவாயுமூலம் மின் உற்பத்தி செய்யும் திட்டம் அதனைச் சார்ந்த மிதக்கும் நிரவ நிலை எரிவாயு முனையம் அமைக்கும் திட்டம், தூத்துக்குடியில் கப்பல் கட்டும் தளம் அமைக்கும் திட்டம் மற்றும் சென்னையில் ஒருங்கிணைந்த நிதிச் சேவை மையத் திட்டம் போன்ற திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான முயற்சிகளை டிட்கோ நிறுவனம் எடுத்து வருகிறது.

2.1 டைசல் உயிரியல் பூங்கா - II

டிட்கோ மற்றும் டைடல் பார்க் நிறுவனங்களினால் நிறுவப்பட்ட டைசல் உயிரியல் பூங்கா நிறுவனம் உயிரி தொழில்நுட்பம், மருந்துப் பொருட்கள், உயிரி தகவல் தொழில்நுட்பம், நானோ தொழில்நுட்பம் மற்றும் வளர்ச்சி / ஆராய்ச்சி பணிகளுக்காக 6.30 இலட்சம் சதுர அடி பரப்பளவில் (16 தளங்கள்) ஆய்வக இடவசதியுடன் ரூ.150 கோடி செலவில் டைசல் உயிரி தொழில்நுட்பப் பூங்காவினை (டைசல்-II) கட்டியுள்ளது. இதன் கட்டுமானப் பணிகளும் பிற சேவைப் பணிகளும் நிறைவடையும் தருவாயில் உள்ளன. உயிரி தொழில்நுட்ப உபகரண மையம் (BTCIF) பணி ரூ19.30 கோடி செலவில் நிறைவடைந்துள்ளது. இந்த வசதி வாடிக்கையாளர்களுக்கு ஒதுக்கீடு செய்ய ஏதுவாக

[2014 ஜூலை 14

பகுதி (Phase) வாரியாக முடிக்கப்பட்டது. இதன் ஆய்வக இடங்கள் நடப்பாண்டில் வாடிக்கையாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

2.2 டிரில் இன்ஃபோ பார்க் லிமிடெட்

டிட்கோ, தரமணியில் 25.27 ஏக்கர் நிலத்தில் ஒருங்கிணைந்த பன்னாட்டு மாநாட்டு மையத்துடன் கூடிய தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியலைக் கையாளும் பணிகளுக்கான சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்கும் திட்டத்தை, டாட்டா ரியாலிட்டி மற்றும் இன்ஃபிராஸ்ட்ரக்சர் நிறுவனத்துடன் இணைந்து கூட்டுத் துறையில் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்திற்கான செலவு ஏறக்குறைய சுமார் ரூபாய் 4,000 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. 3.4 மில்லியன் சதுர அடி. பரப்பளவுள்ள நான்கு கட்டட அடுக்குகள் கட்டி முடிக்கப்பட்டு, அதில் 3.3 மில்லியன் சதுர அடி. பரப்பளவு இடம் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. இந்தத் தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் ஹெச்பி, இன்போசிஸ், ஐ.டி.எஸ், மைண்ட் ட்ரீ, சைன்டிபிக் பப்ளிஷிங், லைடெல், சிஸ்கோ, கீபிடெலிட்டி, ஜூபிடிக்ஸ் போன்ற முன்னணி தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் அலுவலகப் பயன்பாட்டிற்காக இடத்தை எடுத்துள்ளார்கள். மீதமுள்ள இடம் சந்தைப்படுத்தப்பட்டு வருகிறது. டிரில் இன்ஃபோ பார்க் லிமிடெட் மற்றுமொரு 1.2 மில்லியன் சதுர அடி. இடத்தை விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளது. இத்திட்டம் சுமார் 18,000 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பினை உருவாக்கித் தந்துள்ளது.

ஒருங்கிணைந்த மாநாட்டு மையம் மற்றும் பணி சூழ் குடியிருப்புகள் (Serviced Apartments) கட்டுவதற்கான வேலை தொடங்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் 75 சதவீத கட்டுமான பணிகள் முடிவுற்றுள்ளன. இத்திட்டம் முழுமையாக 2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திற்குள் முடிவு பெறும்.

2.3 திரவ நிலை எரிவாயு (LNG) இறக்குமதி முனையம்

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும், இந்தியன் ஆயில் நிறுவனமும் இணைந்து திருவள்ளூர் மாவட்டம், காட்டுப்பள்ளி இராமம், எண்ணூர் துறைமுகம் அருகில், சுமார் ரூ.4,716 கோடி முதலீட்டில், திரவ நிலை எரிவாயு இறக்குமதி முனையம் ஒன்றினை அமைத்துள்ளது. இந்த முனையம் ஆண்டொன்றுக்கு

2014 ஜூலை (4)

50 இலட்சம் டன் நிரவ நிலை எரிவாயுவை இறக்குமதி செய்து, அதன்மூலம் நாளொன்றுக்கு சுமார் 180 இலட்சம் கன மீட்டர் எரிவாயுவை மாதிலத்தில் உள்ள மின் உற்பத்தி ஆலை, உரத் தொழில் மற்றும் இதர தொழிற்சாலைகள், வீட்டுத் தேவைகள் மற்றும் போக்குவரத்து துறைகளுக்கு விநியோகம் செய்யும்.

இத்திட்டத்தின் செயல்பாட்டைத் துரிதப்படுத்துவதற்காக, கடந்த 22-03-2012 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் ஓர் ஒப்பந்தத்தை டிட்கோவும் இந்தியன் ஆயில் நிறுவனமும் செய்துள்ளது.

இத்திட்டத்திற்கான முதல் நிலை தொழில்நுட்பப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. மத்திய அரசின் சுற்று சூழல் மற்றும் வனத் துறை, ஜனவரி, 2014-ல் இத்திட்டத்திற்கு அனுமதி அளித்துள்ளது. இத்திட்டத்தின் கட்டுமானப் பணிகள் ஜூலை, 2014-ல் ஆரம்பிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டில் முடிவடையும்.

2.4 நாகார்ஜுனா எண்ணெய் நிறுவனத்தின் பெட்ரோலிய சுத்திகரிப்பு ஆலைத் திட்டம்

டிட்கோவும் நாகார்ஜுனா ஸ்பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட் நிறுவனமும் இணைந்து உருவாக்கிய கூட்டுத் துறை நிறுவனமான நாகார்ஜுனா எண்ணெய் நிறுவனத்தினால் பெட்ரோலிய சுத்திகரிப்பு ஆலைத் திட்டம் கடலூர் மாவட்டம், திருச்சோபுரத்தில் அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மொத்த உற்பத்தித் திறன் ஆண்டொன்றுக்கு 120 இலட்சம் டன் என்ற அளவில் தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கான மொத்த முதலீடு சுமார் ரூ.25,000 கோடி என மதிப்பிடப்பட்டு, மார்ச் 2014 வரை சுமார் ரூ.7,400 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, ஆண்டொன்றுக்கு 60 இலட்சம் டன் உற்பத்தித் திறனுள்ள பிரிவு கட்டி முடிக்கப்பட்டு, 2015 ஆம் ஆண்டில் செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2.5 கிருஷ்ணகிரி சிறப்புப் பொருளாதார மண்டலம் (Krishnagiri SEZ)

டிட்கோ மற்றும் திருவாளர்கள் ஜிஎம்ஆர். இன்ஃப்ராஸ்ட்ரக்சர் நிறுவனமும் இணைந்து கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சுமார் 2,800 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் ரூ.2,300 கோடி முதலீட்டில் ஒரு பல்பொருள் சிறப்புப் பொருளாதார மண்டல திட்டத்தை

[2014 ஜூலை 14

ஜிளம்.ஆர் கிருஷ்ணகிரி எஸ்இஇசட் (SEZ) லிமிடெட் என்ற கூட்டுத் துறை நிறுவனம்மூலம் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தைச் செயல்படுத்த கூட்டுத் துறை நிறுவனத்தின் பெயரில் சுமார் 1,300 ஏக்கர் பட்டா நிலங்களைக் கையகப்படுத்தி உள்ளது. இத்திட்டத்திற்கு உத்தேசித்துள்ள இடத்தை ஒருங்கிணைப்பதற்காக சுமார் 600 ஏக்கர் அரசாங்க நிலங்களை டிட்கோமூலம் மாற்றம் செய்து தருமாறு கூட்டுத் துறை நிறுவனம் கேட்டுக் கொண்டுள்ளது. இந்த அரசு நிலங்களை டிட்கோவின் பெயரில் மாற்றி பின்னர் குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மத்திய அரசின் 12-08-2013 தேதியிட்ட அறிவிக்கையில், பல்பொருள் சிறப்புப் பொருளாதார மண்டல திட்டத்திற்கு தேவையான குறைந்தபட்ச நிலப்பரப்பை 1,000 ஹெக்டேரிலிருந்து 500 ஹெக்டேராகக் (1,250 ஏக்கர்) குறைத்து அறிவித்துள்ளது, இதனடிப்படையில், கூட்டுத்துறை நிறுவனம் சுமார் 1,553 ஏக்கரில் (1,153 ஏக்கர் பட்டா நிலங்கள் மற்றும் சுமார் 400 ஏக்கர் அரசுப் புறம்போக்கு நிலங்கள்) இந்த சிறப்புப் பொருளாதார மண்டல திட்டத்தைச் செயல்படுத்த உத்தேசித்துள்ளது. இந்த சிறப்புப் பொருளாதார மண்டல பகுதியில் வான்வெளி தொழில்நுட்பம் (பாதுகாப்புப் படை), மோட்டார் வாகன தொழில்நுட்பம் மற்றும் நுண்ணிய தொழில்நுட்பம் சார்ந்த தொழில்களை முன்னிலைப்படுத்த உத்தேசித்துள்ளது. மேலும், கையகப்படுத்தப்பட்டுள்ள மீதமுள்ள இடத்தில் சுமார் 527 ஏக்கரில் மின்னணுவியல் உற்பத்தி வளாகம் ஒன்றை தனித் திட்டமாகச் செயல்படுத்த உத்தேசித்துள்ளது.

2.6 பெரம்பலூர் சிறப்புப் பொருளாதார மண்டலம் (Perambalur SEZ)

அரசின் வழிகாட்டுதலின்படி, டிட்கோ நிறுவனம் பின்தங்கிய மாவட்டங்களில் தொழில், பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் பெரம்பலூர் மாவட்டத்தில் சுமார் 3,000 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு பல்பொருள் சிறப்புப் பொருளாதார மண்டலத் திட்டத்தை ஐதராபாத்தை சேர்ந்த ஜிவிகே குழும நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்தி வருகின்றது.

இத்திட்டத்திற்காக திட்ட நிறுவனம் சுமார் 2,900 ஏக்கர் தனியார் பட்டா நிலங்களை நேரடியாகக் கொள்முதல்

2014 ஜூலை 14]

செய்துள்ளது. திட்டத்திற்கான நிலப்பரப்பில் துண்டு துண்டாக சுமார் 45 ஏக்கர் நீர்நிலை அல்லாத அரசு புறம்போக்கு மற்றும் 22.42 ஏக்கர் இந்து சமய அறநிலையத் துறை நிலங்கள் அடங்கியுள்ளன. சிறப்புப் பொருளாதார மண்டலத் திட்டத்தின் பிறதேவைகளுக்கேற்ப தொடர் நிலங்கள் பெறுவதற்காக, திட்ட நிறுவனம் ஏற்கெனவே இத்திலத்திற்கான குத்தகைத் தொகையினைச் செலுத்திவிட்டது. மேலே குறிப்பிட்டுள்ள நிலங்களை நில உரிமை மாற்றம் செய்வதற்கு அல்லது குத்தகைக்கு வழங்கிட டிட்கோ நிறுவனத்திற்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. திட்ட நிறுவனத்திற்கு குத்தகை வழங்குவதற்கான நடவடிக்கைகளை டிட்கோ நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

திட்ட நிறுவனம் இத்திட்டத்திற்கான நில அளவைப் பணிகள், மண் ஆய்வு, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வு போன்ற ஆய்வுகளை ஏற்கெனவே முடித்துவிட்டது. நிருவாளர்கள் மகேந்திரா கன்சல்டிங் இன்ஜினியர்ஸ் என்ற ஆலோசனை நிறுவனம் இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை மற்றும் சந்தை நிலவரத்தை ஆய்வு செய்து முடித்துள்ளது.

சுமார் ரூ.120 கோடியை திட்டப் பணி வைப்பு நிதியாகப் பெற்று, கொள்ளிடம் ஆற்றிலிருந்து 40 எம்.எல்.டி. நீரை இத்திட்டத்திற்கு வழங்குவதற்கான திட்ட அறிக்கையை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தயாரித்துள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து நீர் வழங்குவதற்கான ஒப்புதல் பெறப்பட்டபின் சிறப்புப் பொருளாதார மண்டலம் அல்லது தொழித்பூங்கா அமைப்பதற்கான திட்ட நடவடிக்கைகளைத் திட்ட நிறுவனம் மேற்கொள்ளும்.

2.7 வாலூர்தி தொழில் பூங்கா

தமிழகத்தில் வாலூர்தி தொழில் வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் நோக்கில், வாலூர்தி வடிவமைப்பு, பொறியியல், உற்பத்தி, சேவை மற்றும் பராமரிப்பு அனைத்தும் கொண்ட ஓர் ஒருங்கிணைந்த வாலூர்தி தொழில் பூங்கா திட்டம் அமைப்பதற்கான முயற்சியை டிட்கோ நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. இத்திட்டத்திற்கான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக, சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தை ஒட்டிய பகுதியில், 50 ஏக்கர் பரப்பளவில்,

[2014 ஜூலை 14

விமானங்கள் பழுதுபார்க்கும் பணிமனை ஒன்றை அமைக்கத் திட்டமிடப்பட்டு நிலம் கண்டறியப்பட்டுள்ளது. மேலும், வாலூர்திகளுக்கான உதிரிப் பாகங்களை உற்பத்தி செய்யும்பொருட்டு திருப்பெரும்புதூர் அருகில் சுமார் 300 ஏக்கர் பரப்பளவில் ஒரு பிரத்யேக தொழில்பூங்கா அமைக்க உத்தேசிக்கப்பட்டு, இதற்காக சிப்காட் நிறுவனம் ஸ்ரீபெரும்புதூரில் நிலங்களைக் கையகப்படுத்தியுள்ளது. டிட்கோ நிறுவனம் சிப்காட் நிறுவனத்திடம் நிலங்களை டிட்கோ நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்யும்படி கேட்டுக்கொண்டுள்ளது. நில ஒதுக்கீடு செய்தபின் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

2.8 பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தி வளாகம்

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டத்தில் உள்ள வாயலூர் கிராமத்தில் சுமார் ரூ.243 கோடி முதலீட்டில் பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தி வளாகம் ஒன்றினை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது.

இவ்வளாகம், பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிக்கும் சுமார் 70 தொழில் பிரிவுகள் அமைக்க ஏதுவான, சிறப்பு உட்கட்டமைப்பு வசதிகள் உடையதாக இருக்கும். இவ்வளாகம் முழுமையாகச் செயல்படும்போது, சுமார் ரூ.2,100 கோடி முதலீட்டை ஈர்க்கும் என்றும், 25,000 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இரசாயனம் மற்றும் பெட்ரோலிய இரசாயனத் துறையினால் அறிவிக்கப்பட்ட கொள்கையின்படி, இத்திட்டத்திற்கு திட்ட முதலீட்டுச் செலவில் 50 சதவீதம் வரை அல்லது ரூ.40 கோடிக்கு மிகாமல் மத்திய அரசிடமிருந்து மானியமாகப் பெறலாம். மத்திய அரசின் இரசாயனம் மற்றும் பெட்ரோலிய இரசாயனத் துறை இத்திட்டத்தை தமிழகத்தில் நிறுவுவதற்கு தனது கொள்கை அளவிலான ஒப்புதலை 13-04-2012 அன்று அளித்துள்ளது. இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு 17-01-2013ல் அனுப்பப்பட்டுள்ளது.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு டிட்கோ மற்றும் சிப்காட் நிறுவனம் இணைந்து ஒரு சிறப்பு நோக்கு நிறுவனத்தை (SPV) அமைப்பதற்கான ஒப்புதலை அரசு அளித்துள்ளது.

2014 ஜூலை 14]

2.9 சூரிய சக்தி மின் பூங்காக்கள் அமைக்கும் திட்டம்

டிட்கோ நிறுவனம், சுமார் 1,000 மெகா வாட் சூரிய மின் சக்தி உற்பத்தித் திட்டங்களை நிறுவுவதற்கு ஏதுவாக, சூரிய சக்தி மின் பூங்காக்களை அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின் உதவியுடன் பல்வேறு இடங்களில் செயல்படுத்த உத்தேசித்துள்ளது. 1,000 மெகா வாட் சூரிய மின் திட்டம் நிறுவத் தேவைப்படும் மொத்த முதலீடு சுமார் ரூ.9,000 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக, இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டத்தில் சுமார் 500 ஏக்கர் தரிசு நிலப்பரப்பில், சுமார் 100 மெகா வாட் சூரிய சக்தி மின்சாரம் தயாரிக்க ஏதுவாக, சூரிய சக்தி மின் பூங்கா அமைக்கும் திட்டத்தை திருவாளர்கள் ராசி இன்ஃ எர்த் எனர்ஜி பிரைவேட் நிறுவனத்துடன் இணைந்து டிட்கோ அமைத்து வருகிறது. இத்திட்டத்தைச் செயல்படுத்தத் தேவைப்படும் முதலீடு சுமார் ரூ.920 கோடியாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் 13-12-2012 அன்று இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக திருவாளர்கள் ராசி இன்ஃ எர்த் எனர்ஜி பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 21-7-2013 அன்று பூமி பூஜை நடைபெற்றது. மேலும், முதற்கட்டமாக 200 ஏக்கர் நிலப்பரப்பில் நில மேம்பாட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் 2014 ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உத்தேசிக்கப்பட்டுள்ள இந்த சூரிய சக்தி பூங்காவானது, மேம்படுத்தப்பட்ட நிலங்கள், உள்சாலைகள், நீர் வழங்கல் வசதி, வடிகால் வசதி, உற்பத்தியாகும் மின்சாரத்தைக் கொண்டு செல்லும் வசதி (Power Evacuation Facility) போன்ற தேவையான பொது வசதிகளை சூரிய சக்தி மின் உற்பத்தியாளர்களுக்கு வழங்கக்கூடியதாக இருக்கும்.

[2014 ஜூலை 14

2.10 பெட்ரோலியம், இரசாயன பொருட்கள் மற்றும் பெட்ரோலிய இரசாயனப் பொருட்களின் முதலீட்டுப் பகுதிக்கான திட்டம் (PCPIR)

டிட்கோ நிறுவனம் பெட்ரோலியம், இரசாயன பொருட்கள் மற்றும் பெட்ரோலிய இரசாயனப் பொருட்களின் உள்நாட்டு தேவை மற்றும் ஏற்றுமதிக்கான உற்பத்தி பிரிவுகளை அமைப்பதற்கான வசதிகளைக் கொண்ட முதலீட்டுப் பகுதியை கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் 250 சதுர கி.மீ. பரப்பளவில் நிறுவ உள்ளது. மத்திய அரசின் பொருளாதார அமைச்சரவைக் குழு கடந்த 3-7-2012-ல் இத்திட்டத்தின் கருத்துருவிற்கு (PCPIR) தனது ஒப்புதலை அளித்துள்ளது.

இத்திட்டத்திற்காக அமைக்கப்படவிருக்கும் சாலை, இரயில் போக்குவரத்து மற்றும் இதர கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான மொத்த முதலீடு ரூபாய் 13,354 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. வரும் 10 ஆண்டு காலகட்டத்தில், இத்திட்டத்தின்மூலம் ரூ.92,160 கோடி அளவில் முதலீடு ஈர்க்கப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

டிட்கோ மத்திய அரசின் இன்ஜினியர்ஸ் இந்தியா நிறுவனத்துடன் இத்திட்டத்தைச் செயல்படுத்த 22-03-2012-ல் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் முன்னிலையில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. மேலும் 20-02-2014ல் தமிழக அரசும் மத்திய அரசின் கெமிக்கல்ஸ் மற்றும் பெட்ரோகெமிக்கல்ஸ் துறையும் இத்திட்டத்தைச் செயற்படுத்த தேவையான முயற்சிகளை மேற்கொள்வதற்காக ஒப்பந்தம் செய்துள்ளனர்.

2.11 உணவுப் பொருள் பதப்படுத்தும் துறையைச் சார்ந்த சிறப்புப் பொருளாதார மண்டலம்

தூத்துக்குடி மாவட்டத்தில் உணவுப் பொருள் பதப்படுத்தும் துறையைச் சார்ந்த சிறப்புப் பொருளாதார மண்டலம் ஒன்றை சிபிசிஎல் இன்பிராஸ்ட்ரக்சர் நிறுவனம் டிட்கோவுடன் சிபிசிஎல் பியர்ல் சிட்டி புளீட் போர்ட் லிமிடெட் என்ற கூட்டுத் துறை நிறுவனம்மூலம் ரூ.132 கோடி முதலீடு உற்பத்தி சார்ந்த பகுதிக்காகவும், ரூ.418 கோடி உற்பத்தி சாரா பகுதிக்காகவும், மொத்தம் சுமார் ரூ.550 கோடி முதலீட்டில் செயல்படுத்த திட்டமிட்டுள்ளது. கூட்டுத் துறை நிறுவனம் இத்திட்டத்திற்காக

2014 ஜூலை 14]

சுமார் 425 ஏக்கர் நிலத்தினை தூத்துக்குடி மாவட்டத்தில் கையகப்படுத்தியுள்ளது. இதில் சுமார் 294 ஏக்கர் நிலத்தினை மத்திய அரசு முறையான அறிவிக்கை செய்துள்ளது.

முக்கியத்துவம் வாய்ந்த சாலையை உருவாக்குதல், நிருவாக கட்டட கட்டுமானப் பணிகள், சுங்கத் துறை அலுவலகம் மற்றும் தீர்த்தேக்கம் அமைத்தல் போன்ற அடிப்படைக் கட்டமைப்புப் பணிகள் இச்சிறப்புப் பொருளாதார மண்டலப் பகுதியில் நடைபெற்று வருகிறது. கூட்டுத் துறை நிறுவனம் சிறப்புப் பொருளாதார மண்டல அலகுகளை (Unit) சந்தை / விற்பனைப்படுத்துவதற்குத் தேவையான முயற்சிகளை எடுத்து வருகிறது. பல நிறுவனங்கள் இங்கு தங்களது பிரிவினைத் தொடங்க ஆர்வம் காட்டி வருகின்றன. இத்திட்டத்திற்காக, நிரந்தரமாக 10 எம்.எல்.டி. நன்னீர் அளிப்பதற்கு ஒரு விரிவான திட்ட அறிக்கையை சமர்ப்பிக்குமாறு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

சிறப்புப் பொருளாதார மண்டலக் கொள்கையின் மாற்றத்தின் விளைவாக, மத்திய அரசு அறிவிக்கை பெற்ற 294 ஏக்கர் பகுதியில் மட்டும் ரூ.82 கோடி மூதலீட்டில் உற்பத்தி சார்ந்த பகுதியை கூட்டுத் துறை நிறுவனம் செயல்படுத்தவும் உற்பத்தி சாரா பகுதியை கைவிடவும் திட்டமிட்டுள்ளது. இந்நிறுவனம், 7 அலகுகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டதில் 4 அலகுகள் தனது உற்பத்தியைத் துவங்கி உள்ளன.

2.12 மிதக்கும் நிரவ நிலை எரிவாயு முனைய திட்டத்துடன் கூடிய ஆழ்கடல் துறைமுகம் மற்றும் எரிவாயுமூலம் மின் உற்பத்தி செய்யும் திட்டம்

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ), தூத்துக்குடியும் மாவட்டத்தில் ஓர் ஆழ்கடல் துறைமுகம், நிரவ நிலை எரிவாயு, இறக்குமதி செய்வதற்கு ஒரு மிதக்கும் நிரவ நிலை எரிவாயு முனையம் (Floating Storage regasification Unit for Import of LNG) மற்றும் 500 மெகா வாட் திறனுள்ள எரிவாயுவை பயன்படுத்தும் மின் உற்பத்தி ஆலை உள்ளடக்கிய ஒரு திட்டத்தை கூட்டுத் துறையில் உருவாக்கத் திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்திற்காக ஆழ்கடல் துறைமுகத்திற்கும், எரிவாயுவை பயன்படுத்தும் மின் உற்பத்தி ஆலைக்கும் மற்றும் வருங்கால

[2014 ஜூலை 14

மேம்பாட்டுத் திட்டங்களுக்கும் தேவைப்படும் நிலங்கள் நாகப்பட்டினத்தின் தெற்குப் பகுதியில் கண்டறியப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கான மொத்த முதலீடு ரூபாய் 8,500 கோடி எனக் கணக்கிடப்பட்டுள்ளது. சுமார் ரூ.1,500 கோடி முதலீட்டில் உருவாக்கப்படவிருக்கும் இந்த ஆழ்கடல் துறைமுகம் (Captive Deep Water Port) திட்டத்தின் ஒரு முக்கிய அங்கமாகவும், ரூ.2,000 கோடி முதலீட்டில் அமையவிருக்கும் எரிவாயுவைப் பயன்படுத்தும் மின் உற்பத்தி ஆலையின் துறைமுகமாகவும் விளங்கும். இத்துறைமுகத்தின் உள்ளேயே மிதக்கும் நிரவ நிலை எரிவாயு முனையமும், நிரவ எரிவாயுவை வாயுவாக மாற்றும் உபகரணங்களும் அமைக்கப்படும்.

இத்திட்டத்தை கூட்டுத் துறைமுகம் இணைத்து செயல்படுத்துவதற்கு அரசு ஆணை (நிலை) எண் 175, தொழில் துறை, நாள் 3-10-2013 மூலம் அரசு டிட்கோவிற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

2.13 சென்னை – பெங்களூரு தொழில் வளாக வழி திட்டம் (Chennai - Bengaluru Industrial Corridor Project)

சென்னை-பெங்களூரு தொழில் வளாகவழி திட்டம், தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023 ஆவணத்தில் கண்டறியப்பட்டுள்ள தொழில் வளாக வழி திட்டங்களில் ஒன்றாகும். இத்தொழில் வளாக வழி திட்டம் தமிழகத்தில் கிருஷ்ணகிரி, தருமபுரி, திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், சென்னை ஆகிய 7 மாவட்டங்கள் வழியே செல்லும் தேசிய நெடுஞ்சாலை-46-ன் இருபக்கமும் 75 கிலோ மீட்டர் நீள நிலப்பரப்பைக் கொண்டது. மேலும், இத்திட்டம் "தங்க நான்கு வழிச் சாலை திட்டத்தின்" முக்கிய அங்கமாகவும், உற்பத்திப் பிரிவு தொழில்களுக்கு ஊக்கமளிக்கும் வகையிலும் உருவாக்கப்படும்.

இத்தொழில் வளாகத் தட வழியில் பல ஒருங்கிணைந்த சிறப்பு முதலீட்டுப் பகுதிகள் உருவாக்கப்படும். இத்தகைய சிறப்பு முதலீட்டு பகுதிகள் உலகத் தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகளுடனும், சாலை மற்றும் இரயில் வழியாக சென்னை, எண்ணூர், காட்டுப்பள்ளி துறைமுகங்களுக்கு சரக்குகள் கொண்டு வருவதற்கான பிரத்யேக வழித்தடங்களுடனும், மின்சாரம், பொது உட்கட்டமைப்பு வசதிகளுடனும் கூடிய தொழில் நகரியங்களாக உருவாக்கப்படும்.

2014 ஜூலை 14]

இத்திட்டத்திற்காக ஒரு முன்னோக்குத் திட்ட விரிவுரையை ஜப்பான் இன்டர்நேஷனல் கோ—ஆபரேஷன் முகமை (JICA) என்ற நிறுவனம் தயாரித்து வருகிறது. இம்முகமை, தனது முதல் அறிக்கையை மத்திய அரசின் தொழில் துறையிடம் கடந்த டிசம்பர் மாதம் 2013-ல் சமர்ப்பித்தது. பின்னர், தனது மற்றுமொரு அறிக்கையில் இத்தொழில் வளாக தடத்தில் உருவாக்கபடவிருக்கும் தொழில் மையங்களுக்கான இடங்களை கண்டறிந்து அதனைப் பற்றிய விரிவுரையை கடந்த ஜனவரி 2014-ல் மத்திய அரசிடம் சமர்ப்பித்துள்ளது. இதில் திருவள்ளூர் மாவட்டத்தின் பொன்னேரி தாலுகாவும், திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள ஒரூர் தாலுகாவும் அடங்கும். JICA நிறுவனம் இத்தொழில் வளாக வழித் தடத்தில் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தொழில் முதலீட்டுப் பகுதிகளை உருவாக்குவதற்கான முன்னோக்குத் திட்டங்கள் அடங்கிய தனது இரண்டாவது அறிக்கையை கடந்த மார்ச் 2014 இறுதியில் மத்திய அரசுக்கு சமர்ப்பித்துள்ளது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2014 ஜூலை 14

3. தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனம்

தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனம், கரும்புச் சக்கையை முக்கிய மூலப் பொருளாகக்கொண்டு, செய்தித் தாள், அச்சு மற்றும் எழுது காகிதம் தயாரிக்க தமிழக அரசால் 1979 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. கரூர் மாவட்டம், புகளூரில் இந்நிறுவனத்தின் காகித ஆலை அமைந்துள்ளது. இந்த ஆலையின் உற்பத்தி, ஆண்டொன்றுக்கு 90,000 டன் உற்பத்தித் திறனுடன், 1985 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. ஆலையின் ஆண்டு உற்பத்தித் திறன் நான்கு கட்டங்களில் 4,00,000 டன்னாக உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கேற்ப ஆலையின் காகிதக்கூழ் உற்பத்தித் திறனும், நாளொன்றுக்கு 250 டன்னிலிருந்து, படிப்படியாக 1,180 டன்னாக உயர்த்தப்பட்டுள்ளது.

3.1 குறிக்கோள்

"புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, உலகத்தரம் வாய்ந்த, சுற்றுச்சூழலுக்கு உகந்த, காகிதங்களைத் தயாரிப்பதில் முதன்மை நிறுவனமாகத் திகழுதல்."

இந்நிறுவனம், உலகிலேயே கரும்புச்சக்கையை முக்கிய மூலப்பொருளாக உபயோகப்படுத்துவதில் முதலிடத்தையும், இந்தியாவில் அச்சு மற்றும் எழுது காகித உற்பத்தியில் இரண்டாவது இடத்தையும் வகிக்கிறது. இந்நிறுவனத்தில் தமிழக அரசு 35.32 விழுக்காடு பங்கும், தமிழ்நாடு அரசு சார்ந்த நிறுவனங்கள் 4.06 விழுக்காடு பங்கும் வைத்துள்ளன. மீதமுள்ள பங்குகள் வெளிநாட்டு நிதி முதலீட்டாளர்கள், இந்திய நிதி நிறுவனங்கள், பரஸ்பர நிதிகள், கூட்டாண்மை அமைப்புகள், காப்பீட்டு நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் வசமும் உள்ளன.

இந்நிறுவனம், காகிதம் உபயோகிப்பாளர்களின் தேவைகளுக்கு ஏற்ப, பல்வேறு வகையான உயர் ரக காகிதங்களைத் தயாரித்து வருகிறது. இந்நிறுவனம் தனது உற்பத்திப் பொருளை இந்தியா முழுவதும் விற்பனை செய்து வருகிறது. இந்நிறுவனம் சுமார் 18 சதவீத உற்பத்திப் பொருளை உலகளவில் 40 நாடுகளுக்கு மேல் ஏற்றுமதி செய்து வருகிறது.

இந்நிறுவனம் 35.5 மெகா வாட் திறன் கொண்ட இரண்டு காற்றாலைப் பிரிவுகளை திருநெல்வேலி மாவட்டத்தில் நிறுவி உள்ளது.

2014 ஜூலை 14]

இந்நிறுவனம், தன் சய தேவைக்காக மின் உற்பத்தித் திறனை 8.12 மெகா வாட்டிலிருந்து 103.62 மெகா வாட்டாக உயர்த்தும் மின் உற்பத்திப் பிரிவினை ஆலையின் வளாகத்தில் 2013 ஆம் ஆண்டில் ரூ.167 கோடி முதலீட்டில் நிறுவியுள்ளது. இதன்மூலம், உபரி மின்சாரம் 7 மெகா வாட்டினை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஏற்றுமதி செய்கிறது.

இந்நிறுவனம், காகிதக்கூழ் உற்பத்தியை அதிகரிக்க, ரூ.164 கோடி முதலீட்டில், நாளொன்றுக்கு 300 டன் உற்பத்தித் திறன் கொண்ட, உபயோகப்படுத்திய காகிதங்களிலிருந்து, மை நீக்கம் செய்யப்பட்ட காகிதக்கூழ் தயாரிக்கும் பிரிவினை 2013 ஆம் ஆண்டில் நிறுவியுள்ளது.

இந்நிறுவனம், காகிதத் தயாரிப்பில் உருவாகும் திடக் கழிவுகளான கண்ணாம்புக் கழிவு மற்றும் எரிசாம்பலைப் பயன்படுத்தி நாளொன்றுக்கு 600 டன் உற்பத்தித் திறன் கொண்ட சிமெண்ட் தொழிற்சாலையை ஆலையின் வளாகத்திற்குள் நிறுவியுள்ளது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், நாளொன்றுக்கு 100 டன் உற்பத்தித் திறன் கொண்ட ஈரப்பதமுள்ள நுண்ணிய கால்சியம் கார்பனேட் (Wet Ground Calcium Carbonate) ஆலையை, M/s. OMYA, Switzerland ஐ‹ Build - Own - Operate (BOO) என்ற முறையில் (கட்டுதல், சொந்தமாக்குதல், செயலாக்குதல்) ஆலையின் வளாகத்திற்குள் நிறுவி உள்ளது.

இந்நிறுவனம், நாளொன்றுக்கு 300 டன் உற்பத்தித் திறன் கொண்ட வீழ்படிந்த கால்சியம் கார்பனேட் ஆலையை, M/s. OMYA, Switzerland ஐ‹ Build - Own - Operate என்ற முறையில் (கட்டுதல், சொந்தமாக்குதல், செயலாக்குதல்) ஆலையின் வளாகத்திற்குள்ளேயே நிறுவி வருகிறது. இத்திட்டத்திற்கான பணிகள் ஜூலை 2014-ல் நிறைவு பெறும்.

3.1.1 2013-2014ஆம் ஆண்டில் உற்பத்தி மற்றும் பயன்பாட்டளவு

2013-2014 ஆம் ஆண்டின் மொத்த உற்பத்தி 3,87,714 டன்னாகும். உற்பத்தி பயன்பாட்டளவு 97 விழுக்காடாகும்.

[2014 ஜூலை 14

3.1.2 2013-2014 ஆம் ஆண்டிற்கான விற்பனை மற்றும் இலாபம்

2013-2014 ஆம் ஆண்டின் விற்பனை ரூ.2,301.94 கோடி. மற்றும் வரிக்கு முன் இலாபம் ரூ.202.68 கோடி. ஆகும். இந்நிறுவனம் துவங்கிய ஆண்டிலிருந்து இதுவரை ஈட்டிய இலாபத்தில் இதுவே மிகவும் அதிகமாகும்.

3.1.3 ஈவுத் தொகை

தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனம் பல ஆண்டுகளாக நிறமையாகவும் இலாபகரமாகவும் இயங்கி, தனது பங்குதாரர்களுக்குத் தொடர்ந்து ஈவுத் தொகையை அளித்து வருகிறது. 2012-13 ஆம் ஆண்டில் நிறுவனம் 50 விழுக்காடு ஈவுத் தொகையை வழங்கியுள்ளது. இந்த அடிப்படையில், 2013-13 ஆம் ஆண்டில் தமிழக அரசுக்கு அளிக்கப்பட்ட ஈவுத் தொகை ரூ12.32 கோடியாகும். 2013-14 ஆம் ஆண்டிற்கான ஈவுத் தொகை விகிதத்தை 60 விழுக்காடாக இந்நிறுவனம் உயர்த்தியுள்ளது. இதன் காரணமாக தமிழக அரசுக்கு 2013-14 ஆம் ஆண்டிற்காக வழங்கப்படவுள்ள ஈவுத் தொகை ரூ.14.66 கோடியாக உயரும்.

3.1.4 ஏற்றுமதி

அச்சு மற்றும் எழுது காகிதம் ஏற்றுமதியில், இந்நிறுவனம் நாட்டில் முதன்மையாகத் திகழ்கிறது. 2013-14 ஆம் ஆண்டில், இந்நிறுவனம் 65,875 டன் அச்சு மற்றும் எழுது காகிதம் ஏற்றுமதி செய்துள்ளது.

3.1.5 வேலைவாய்ப்பு

தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனம் 2,078 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பினையும் ஏறத்தாழ 3,000 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பினையும் அளித்து வருகிறது.

3.2 2013-14 ஆம் ஆண்டிற்கான குறிப்பிடத்தக்க சிறப்பு முயற்சிகள்

(i) *இந்நிறுவனம் நாளொன்றுக்கு 600 டன் உற்பத்தித் திறன் கொண்ட சிமெண்ட் தொழிற்சாலையை ரூ.130 கோடி மூலதனத்தில் நிறுவியுள்ளது. இந்த சிமெண்ட் தொழிற்சாலை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 30-01-2013 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.*

2014 ஜூலை 14]

(ii) இந்நிறுவனம் காகிதக்கூழ் உற்பத்தியை அதிகரிக்க நாளொன்றுக்கு 300 டன் உற்பத்தித் திறன் கொண்ட உபயோகப்படுத்திய காகிதங்களிலிருந்து, மை நீக்கம் செய்யப்பட்ட காகிதக் கூழ் தயாரிக்கும் பிரிவினை ரூ.154 கோடி முலதனத்தில் நிறுவி உள்ளது. இந்த காகிதக் கூழ் தயாரிக்கும் பிரிவு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 30-12-2013 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

(iii) இந்நிறுவனம், ரூ.167 கோடி முலதனத்தில், நீராவி மற்றும் மின் சக்தி உற்பத்தி அமைப்புகளைச் சீரமைத்துப் புதுப்பிக்க, மூன்று பழைய குறைந்த திறன் கொண்ட கொதிலைகளை மாற்றிவிட்டு, ஒரு புதிய அதிகத் திறன் கொண்ட கொதிலையும், 18.5 மெகா வாட் குறைந்த திறன் கொண்ட இரண்டு மின்னாக்கிகளை மாற்றிவிட்டு, 41 மெகா வாட் அதிகத் திறன் கொண்ட ஒரு மின்னாக்கியையும் நிறுவி உள்ளது. இந்த மின் உற்பத்தி இயந்திரங்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 30-12-2013 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

(iv) தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனம் முதன்முறையாக 2004-05 ஆம் ஆண்டில் பன்னைக்காடுகள், சுய பன்னைத் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. இதுவரை, இத்திட்டத்தின்கீழ் 28 மாவட்டங்களிலுள்ள 18,709 விவசாயிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். இந்நிறுவனம், மார்ச் 2014 வரை 1,00,185 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயப் பன்னை மற்றும் சுய பன்னைத் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது.

(v) தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனம், நொய்யல் ஆற்றுப் பாசனப் பகுதியில் மாசுபட்ட நிலங்களை Bio-Remediation தொழில்நுட்பத்தின் உதவியால் கூழ் மரக்கன்றுகளை நடுவுசெய்து வனத் தோட்டத் திட்டத்தின் மூலம் நிலச் சீர்திருத்தம் செய்துள்ளது. இதன்படி 2011-12 ஆம் ஆண்டில் 1,000 ஏக்கர் நிலப்பரப்பிலும், 2012-13 ஆம் ஆண்டில் 600 ஏக்கர் நிலப்பரப்பிலும், 2013-14 ஆம் ஆண்டில் 590 ஏக்கர் நிலப்பரப்பிலும் கூழ் மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டது.

(vi) தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனம், நாளொன்றுக்கு 100 டன் உற்பத்தித் திறன் கொண்ட ஈரப்பதம் உள்ள நுண்ணிய கால்சியம் கார்பனேட் (Wet Ground Calcium Carbonate) ஆலையை Build - Own - Operate (BOO) என்ற முறையில் (கட்டுதல், சொந்தமாக்குதல், செயலாக்குதல்) ஆலையின் வளாகத்திற்குள் நிறுவி உள்ளது.

3.3. 2014-15 & 2015-16 ஆம் ஆண்டிற்கான முக்கிய செயல்பாட்டுத் திட்டங்கள்

(i) தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனம், நாளொன்றுக்கு 200 டன் உற்பத்தித் திறன் கொண்ட வீழ்படிந்த கால்சியம் கார்பனேட் (Precipitated Calcium Carbonate) ஆலையை Build - Own - Operate என்ற முறையில் (கட்டுதல், சொந்தமாக்குதல், செயலாக்குதல்) ஆலையின் வளாகத்திற்குள்ளேயே நிறுவி வருகிறது. இத்திட்டம் ஜூலை 2014 முதல் செயல்பாட்டுக்கு வரும்.

(ii) தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனம், ஆண்டொன்றுக்கு இரண்டு இலட்சம் திறன் கொண்ட, இருபுறமும் மேற்பூச்சு செய்யப்பட்ட அடுக்குக் காகித அட்டை தயாரிக்கும் ஆலையினை, திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதி, மணப்பாறை தாலுகா, மொண்டிப்பட்டி வருவாய் கிராமத்தில் நிறுவும் திட்டத்தை 07-05-2013 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி 110-ன்கீழ் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் அறிவித்தார்கள். இத்திட்டப் பணியினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 03-06-2013 அன்று அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்கள். இதைத் தொடர்ந்து, இந்த ஆலை மொண்டிப்பட்டி வருவாய்க் கிராமம் மற்றும் அதைச் சுற்றியுள்ள வறட்சியான பகுதியில், 874 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ.1,500 கோடி முதலீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம், 2015 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நிறைவு செய்யப்படும். இந்த ஆலை வறட்சி மிகுந்த பகுதியில் அமைக்கப்படுவதால், இப்பகுதியின் பொருளாதாரம் மேம்படும். இந்த ஆலையின்மூலம், 2,000 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு கிடைக்கும்.

2014 ஜூலை 14]

இந்த அடுக்கு காகித அட்டை தயாரிக்கும் ஆலை, இந்தியாவிலேயே அதிக உற்பத்தித் திறன் கொண்டதாகவும், மிகவும் நவீனமானதாகவும் இருக்கும். இத்திட்டம் நிறைவு பெறும்போது, இந்நிறுவனத்தின் மொத்த உற்பத்தி ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் டன்னிலிருந்து, 50 சதவிகிதம் உயர்ந்து, 6 இலட்சம் டன்னாக இருக்கும். இதனால், இத்திய அளவில், இந்நிறுவனத்தின் மொத்த உற்பத்தி நான்காம் இடத்திலிருந்து முன்றாம் இடத்திற்கு உயரும்.

3.4 கூட்டான்மை சமூகப் பொறுப்பு (Corporate Social Responsibility)

நிறுவனத்தின் முந்தைய ஆண்டு வருமானத்தில், வரி செலுத்திய பிறகு வரக்கூடிய நிகர இலாபத்தில் சுமார் 3 சதவீத இலாபத் தொகையினை ஒவ்வொர் ஆண்டும் கல்வி, சுகாதாரம், கட்டுமானம், பொருளாதார மேம்பாடு, சுற்றுச்சூழல், குடிநீர் வசதி, சுகாச்சாரம் மற்றும் மரபுசார் மேம்பாடு போன்ற சமுதாயப் பணிகளுக்குச் செலவிட வேண்டும் என்பதை தமிழ்நாடு செய்திக் தான் காகித நிறுவனம் கொள்கையாகக் கொண்டுள்ளது. இந்நிறுவனம், 2013-14 ஆம் ஆண்டில் ரூ.3.27 கோடியினை சமூக நலப் பணிகளுக்காகச் செலவிட்டுள்ளது.

3.5 விருதுகள்

(1) கொல்கத்தாவில் உள்ள இந்திய விலை மதிப்பிட்டு கணக்காயர்கள் கழகம், (Institute of Cost Accountants of India) தமிழ்நாடு செய்திக்தான் காகித நிறுவனத்திற்கு, "சிறந்த உற்பத்திச் செலவு மேலாண்மைக்கான தேசிய விருதினை" (National Award for Excellence in Cost Management 2013, First Award) வழங்க உள்ளது.

(2) மும்பையிலுள்ள Dun & Bradstreet வியாபார தகவல் நிறுவனம், காகித உற்பத்தித் துறையில், "இந்தியாவின் முதன்மையான ஆலையாக" (Top Indian company under the sector Paper) தமிழ்நாடு செய்திக்தான் காகித நிறுவனத்தை தொடர்ந்து மூன்றாவது முறையாக தேர்ந்தெடுத்து "Dun & Bradstreet Corporate Award 2014-ஐ வழங்கியுள்ளது.

(3) இந்திய தொழில் கூட்டமைப்பின் (Confederation of Indian Industry) 2013 ஆம் ஆண்டிற்கான "சிறந்த சுற்றுப்புறச்சூழல் உத்திகளை செயல்படுத்தியமைக்கான விருதை" தமிழ்நாடு செய்திக்தான் காகித நிறுவனம் பெற்றுள்ளது.

[2014 ஜூலை 14

4. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், மாநிலத்தின் தொழில் வளத்தை விரைந்து மேம்படுத்த, 1949 ஆம் ஆண்டில் இந்திய கம்பெனிகள் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்ட, இந்தியாவின் முன்னோடி மாநில நிதி நிறுவனமாகும். இக்கழகம், தொழிற்சாலைகளுக்கும் மற்றும் சேவை நிறுவனங்களுக்கும் நிதியுதவி வழங்கி வருகிறது. முக்கியமாக குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கும் முதல் தலைமுறை தொழில் முனைவோர்களுக்கும் கடன் வழங்குவதில் இக்கழகம் முன் நிற்கிறது. இந்நிறுவனம் 31-3-2014 வரை 1,15,806 நிறுவனங்களுக்கு ரூ.11,621.71 கோடி கடன் உதவி வழங்கியுள்ளது. இக்கழகம் அளித்து வரும் மொத்த நிதி உதவிகளில் சுமார் 90 விழுக்காடு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது. 31-3-2014 தேதியின்படி, இந்நிறுவனம் வழங்கியுள்ள கடன் நிலுவைத் தொகை ரூ.1,585.39 கோடியாகும்.

தமிழக அரசின் மேலான வழிகாட்டுதலினாலும், ஆதரவினாலும் மற்றும் இக்கழகப் பணியாளர்களின் ஈடுபாட்டாலும், இக்கழகம் 2003-04 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து கடந்த 11 வருடங்களாக சிறப்பான முறையில் நிகர இலாபம் ஈட்டி வருகிறது. மேலும், 2013-14 ஆம் ஆண்டில் (31-3-2014 வரை) ரூ.31 கோடி அளவிற்கு நிகர இலாபம் ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2013-2014 ஆம் நிதியாண்டில், நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் பங்குகளில், இக்கழகம் முதலீடு செய்ய, தமிழக அரசு ரூ.37.50 கோடி நிதியுதவி வழங்கியுள்ளது. அரசால் வழங்கப்பட்ட இந்தத் தொகை இக்கழகத்தின் பங்கு மூலதனமாக மாற்ற அரசு ஆணையிட்டுள்ளது.

4.1 பங்கு மூலதனம்

31-3-2014 அன்றுள்ளவாறு தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் பங்கு மூலதனம் ரூ.283.50 கோடியாகும். அதன் விவரம் பின்வருமாறு:

2014 ஜூலை 14]

(ரூ.கோடியில்)

பங்குதாரர் (Share holder)	பங்கு மூலதனம் (Share Capital)	
	(ரூ.கோடியில்)	விழுக்காடு
தமிழ்நாடு அரசு	266.02	93.84
இந்திய சிறு தொழில் வளர்ச்சி வங்கி	17.00	6.00
புதுச்சேரி மாநில அரசு	0.15	0.05
காப்பீட்டுக் கழகம் மற்றும் கூட்டுறவு வங்கிகளை சேர்ந்த வங்கிகள்	0.33	0.11
மொத்தம்	283.50	100.00

4.2 திட்டங்கள்

புதிய தொழிற்சாலை தொடங்க, ஏற்கெனவே இயங்கும் தொழிற்சாலைகளை விரிவாக்க பொது காலக் கடன், புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS), காற்றாலைக் கடன், குறு மற்றும் சிறு தொழில் கடன் உதவித் திட்டம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் / தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் / தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் சார்த நிறுவனம் - பட்டியல் நிதியுதவித் திட்டம், உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் குறிப்பிட்ட சேவை நிறுவனங்களுக்கான நடைமுறை மூலதனத் திட்டம் ஆகிய திட்டங்களுக்கு, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தால் நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. சில சிறப்புத் திட்டங்கள் பின்வருமாறு:

4.2.1 பொதுவான காலக் கடன் (General Term Loan)

இக்கழகம், புதிய உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில், தொழிற்சாலைகளை நிறுவுவதற்கும், தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் தொழிற்சாலைகளை விரிவாக்குவதற்கும், நவீனமாக்குவதற்கும் உற்பத்தியை பன்முனைப்படுத்துவதற்கும், இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்குகிறது.

பொது / தனி நிறுவனங்களுக்கு காலக் கடன் ரூ30 கோடி வரையிலும் மற்றும் உரிமையாளர் / கூட்டு நிறுவனங்களுக்கு காலக் கடன் ரூ15 கோடி வரையிலும் வழங்கப்படும். தொழில் முனைவோரின் பங்களிப்பு மொத்தத் தொழில் மதிப்பீட்டில் 33.33 சதவீதமாகும். கடனைத் திருப்பிச் செலுத்தும் காலம், திட்டங்களின் அடிப்படையில் 7 ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படலாம். முதல் 6 மாதங்களிலிருந்து 2 ஆண்டுகள் வரை அசல் தொகையினை தவிர்த்து வட்டியை மட்டும் செலுத்தும் சலுகை வழங்கப்படுகிறது.

4.2.2 புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (New Entrepreneur cum Enterprise Development Scheme - NEEDS)

படித்த இளைஞர்கள், முதல் தலைமுறை தொழில் முனைவோராக உருவெடுக்க உதவுவதை குறிக்கோளாகக் கொண்ட மாநில அரசின் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் (NEEDS) திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இக்கழகம் பெரும்பங்கு வகிக்கிறது. இத்திட்டத்தின்கீழ், மாநில அரசு, தொழில் முனைவோருக்கு திட்ட மதிப்பீட்டின் உச்சவரம்பு ரூ.1 கோடிக்கு மிகாத தொழில்களுக்கு திட்ட மதிப்பீட்டில் 25 சதவீதம் அதிகபட்சமாக ரூ25 இலட்சம் மூலதன மானியமாக வழங்கும். மேலும், இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் கடனுக்கு வட்டியில் 3 சதவீதம் தள்ளுபடியும் தொழில் முனைவோருக்கு வழங்கப்படும்.

4.2.3 தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் (Entrepreneurs Development Scheme)

இந்நிறுவனம், சமுதாயத்தில் பின்தங்கிய சூழ்நிலையிலிருந்து வரும் தனைப் பிணையம் அளிக்க இயலாத புதிய தொழில் முனைவோரை உருவாக்கும் விதமாக "Entrepreneurs Development Scheme" (EDS) என்ற திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. திட்ட மதிப்பீட்டில் 10 விழுக்காட்டினை முனைவோரின் மூலதனமாகக் கொண்டு ரூ.5 இலட்சம் வரை பிணையமில்லாமல், ஒன்று அல்லது இரண்டு நபர்களின் உத்தரவாதத்துடன், நிறுவனம் நிர்ணயித்துள்ள வரம்புக்குட்பட்டு கடன் வழங்கப்படும்.

4.2.4 போக்குவரத்து வாகனக் கடன் (Transport Operators Scheme)

பொது உபயோகத்திற்கான சரக்குப் போக்குவரத்து வாகனங்கள் மற்றும் வழித் தட உரிமம் உள்ள பயணிகள் போக்குவரத்துகள் ஆகியவை

2014 ஜூலை 14]

வங்க கடனுதவி வழங்கப்படும். தொழில் முனைவோரின் பங்களிப்பு 15-லிருந்து 30 சதவீதமாகும்.

4.2.5 இயந்திர நிதியுதவித் திட்டம் (Equipment Finance Scheme)

நடைமுறையில் நன்றாகச் செயல்படும் நிறுவனங்களுக்கு, இயந்திரம் வாங்குவதற்கு இத்திட்டத்தின்கீழ் கடனுதவி அளிக்கப்படும். திட்ட முதலீட்டில் 15 விழுக்காட்டினை தொழில் முனைவோர் தங்கள் பங்காக அளிக்க வேண்டும். இது தொழில் முனைவோருக்குப் பயனுள்ளதாக இருக்கும்.

4.2.6 மின்னாக்கிகள் வாங்குவதற்கான கடன் திட்டம் (Generator Loan Scheme)

குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு (MSME) இத்திட்டத்தின்கீழ் மின்னாக்கிகள் வாங்குவதற்கு கடன் வழங்கப்படுகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினைத் தொடர்ந்து 7-12-2012 முதல் இத்திட்டத்தின்கீழ் 25 சதவீதமாக இருந்த தொழில் முனைவோரின் பங்களிப்பு, 10 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. மின்னாக்கிக் கடன்களை தொழில் முனைவோர் மேலும் எளிதாகப் பெறுவதற்கேற்ப பிணைச் சொத்து விதிகளையும் இந்நிறுவனம் தளர்த்தியுள்ளது.

4.2.7. காற்றாலைத் திட்டம் (Wind Power Project)

தொழில் முனைவோர்கள் காற்றாலைகளை நிறுவி மின்சாரம் உற்பத்தி செய்து, அதனை தமது தொழிற்சாலைகளுக்குப் பயன்படுத்திக்கொள்வதோடு அல்லாமல் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திடம் விற்பனைச் செய்யவும், இத்திட்டத்தின்கீழ் நிலம், துணைக் கருவிகள், மின் கருவிகள் வாங்குவதற்கும் மற்றும் காற்றாலைகள் நிறுவுவதற்கும் கடன் வழங்கப்படும்.

4.2.8 நவீன அரிசி ஆலைகள் மற்றும் உற்பத்தி நிறுவனங்களுக்கான நடைமுறை மூலதனத் திட்டம் (Working Capital Term Loan for Manufacturing units / Rice Mill units)

முன்னர் உள்ள நவீன அரிசி ஆலைகள் மற்றும் உற்பத்தி நிறுவனங்களின் நடைமுறை மூலதனத் தேவைகளை இத்திட்டம் நடைமுறைக் காலக் கடன்மூலம் பூர்த்தி செய்யும். இத்திட்டம்

தொழில் முனைவோரிடம் சிறந்த வரவேற்பினை பெற்றுள்ளது. இத்திட்டத்தின்கீழ் அதிகபட்சமாக ரூ.150 கோடி வரை கடனுதவி அளிக்க இயலும். பொதுவாக இந்த நடைமுறை காலக் கடனை 36 மாதத் தவணைகளில் திருப்பிச் செலுத்த வேண்டும்.

4.2.9 பட்டியல் நிதியுதவித் திட்டம் (Bill Financing Scheme)

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் / தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனம் ஆகியவற்றின் சிறு, குறு மற்றும் நடுத்தர ஒப்பந்ததாரர்களுக்கு பட்டியல் நிதியுதவியினை வழங்கும்பொருட்டு தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் அந்நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) செய்துள்ளது. தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின் பகுதி/முழு நேர வேலைக்கான சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவன ஒப்பந்ததாரர்களுக்கு இத்திட்டத்தின்மூலம் பிணையச் சொத்து ஏதுமின்றி எளிதான விதிமுறைகளின்கீழ் இந்தப் பட்டியல் நிதியுதவி திட்டத்தில் விரைவில் கடன் பெறலாம்.

4.3 மானியம்

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், மாநில அரசு மற்றும் மத்திய அரசு வழங்கும் மேற்காணும் மானியங்களுக்கான முகவராகச் செயல்பட்டு வருகிறது.

4.3.1 தமிழக அரசின் மானியம்

(i) பின்தங்கிய பகுதிகள் மற்றும் குறிப்பிட்ட துறைகளுக்கான மூலதன மானியம்

இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள்மீது 25 சதவீதம், அதாவது அதிகபட்சமாக ரூ30 இலட்சம் வரை மானியமாக வழங்கப்படும். இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களின் மதிப்பு 25 சதவீதம் கூடுதலாகவும் மற்றும் சராசரி விற்பனை அளவு கடந்த மூன்றாண்டுகளாக 25 சதவீதம் கூடுதலாக இருக்கும்பட்சத்தில் தொழிலை மேற்கொண்டு விரிவுபடுத்தவும், இந்த மானியம் வழங்கப்படுகிறது. 2013-2014 ஆம் ஆண்டில், இக்கழகம் மாநில மூலதன மானியமாக (State Capital subsidy) ரூ.16.92 கோடி பட்டுவாடா செய்துள்ளது.

2014 ஜூலை 14]

(ii) புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்ட மானியம்

இத்தத் திட்டத்தின்மூலம் 2013-14 ஆம் ஆண்டில் (31-3-2014 வரை), இக்கழகம் மூலதன மானியமாக (Capital subsidy) ரூ.314.58 இலட்சம் மானியம் பட்டுவாடா செய்துள்ளது.

(iii) மின்னாக்கி மானியம்

320 KVA வரை திறன் கொண்ட மின்னாக்கிகளுக்கு இயந்திர விலையில் 25 சதவீதம் மானியமாக, அதாவது அதிகபட்சமாக நிறுவனம் ஒன்றுக்கு ரூ.5 இலட்சம் வழங்கப்படும். 2013-2014 ஆம் ஆண்டில், இக்கழகம் மின்னாக்கி மானியமாக ரூ.120 இலட்சம் பட்டுவாடா செய்துள்ளது.

(iv) 2013–2014 ஆம் ஆண்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு 3 சதவீதம் வட்டித் தள்ளுபடி வழங்குதல் திட்டம்:

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தில் 3-9-2012-விருந்து கடன் பெறும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு 3 சதவீதம் வட்டி தள்ளுபடி வழங்கும் அரசு திட்டத்தின்மூலம், 3-9-2012-லிருந்து 31-3-2014 வரை ரூ.978.35 கோடி கடன் அனுமதிக்கப்பட்டு, 2,199 நிறுவனங்கள் பயனடைந்துள்ளன. இத்தத் திட்டத்தின்மூலம் TIIC வழங்கும் கடனுக்கான வட்டி, 14.25% 15.25%-லிருந்து 11.25% - 12.25% ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

4.3.2 மத்திய அரசின் மானியம்

(i) கடன் சார்ந்த மூலதன மானியம் (Credit Linked Capital Subsidy)

- ஒரு நிறுவனத்திற்கு இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள்மீது 15 சதவீதம் மானியம், அதாவது அதிகபட்சமாக ரூ.15 இலட்சம் வழங்கப்படும்.

(ii) ஜவுளி மேம்பாட்டு நிதி மானியம்

அ) வட்டி மானியம்

- தன்னிறைவு நூற்பாலைகளுக்கு 2 சதவீத மானியம்
- நெசவு பதனிடுதல் உள்ளிட்ட பிற நெசவுப் பிரிவுகளுக்கு 5 சதவீத வட்டி மானியம் மற்றும் 10 சதவீத மூலதன மானியம்.

[2014 ஜூலை 14

- நாடா இல்லா புதிய நெசவுத் தறி (New shuttleless loom weaving units) பிரிவுகளுக்கு 6 சதவீத வட்டி மானியம் மற்றும் 10 சதவீத மூலதன மானியம்.

- இது அனைத்து குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மற்றும் பெருந்தொழில் நிறுவனங்களுக்கும் வழங்கப்படுகிறது.

ஆ) மூலதன மானியம்

ரூ.5 கோடிக்குள் முதலீடு செய்யும் குறு மற்றும் சிறு தயாரிப்பு நிறுவனங்களிடம் இருக்கும் இயந்திரங்களின் அடிப்படையில் உச்சவரம்பு ரூ.1.50 கோடிக்கு மிகாமல் 15 அல்லது 30 சதவீதம் வரை மானியம்.

(iii) உணவு பதனிடும் தொழிலுக்கான மானியம்

தகுதியுடைய முதலீட்டுக்கு ஒரு நிறுவனத்திற்கு ரூ.50 இலட்சத்திற்கு மிகாமல் 25 சதவீதம் வரை மானியம்.

2013-2014 ஆம் ஆண்டில் (31-3-2014 வரை), மத்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறையிடம் இருந்து கடன் சார்ந்த மூலதன மானியத் திட்டத்தின் (Credit Linked Capital Subsidy Scheme) கீழ் ரூ.10.56 கோடியும் மற்றும் ஜவுளி மேம்பாட்டு நிதி மானியத்தின்கீழ் ரூ.145 கோடியும் (31-3-2014 வரை) பெற்று பயனாளிகளுக்கு வழங்கியுள்ளது.

4.4 காப்பீடு

கடந்த மூன்று ஆண்டுகளாக இக்கழகம் காப்பீட்டு முகவராகச் செயல்பட்டுத் தொடங்கியது. காப்பீடு வர்த்தகம்மூலம் 2013-2014 ஆம் நிதியாண்டில் ரூ.10.85 இலட்சம் வருமானம் ஈட்டியுள்ளது.

4.5 தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் – தொழில் முனைவோர் அதிகம் விரும்பும் நிதிக் கழகம்

வர்த்தக வங்கிகளிடமிருந்து கடும் போட்டி இருப்பினும் முதல் தலைமுறை தொழில் முனைவோருக்கும், கிராமப்புறங்களில் வசிக்கும் தொழில் முனைவோர்க்கும் மற்றும் சமூக ஆதரவு குறைந்த தொழில் முனைவோர்க்கும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகமே கடனுதவி அளிப்பதில் முதன்மை நிறுவனமாக இயங்கி வருகிறது. இதற்கு இக்கழகத்தின் ஒளிவுமறைவற்ற நடைமுறை / செயல்பாடு, விரைந்து கடன் வழங்குதல், கடன்

2014 ஜூலை 14]

இருப்பிச் செலுத்துவதற்கு நீண்ட காலத் தவணை மற்றும் தொழில் முனைவோர் கடன் மற்றும் மானியத்தை ஓர் இடத்திலேயே பெறுவதற்கு ஏதுவாக இயங்குவது போன்றவையே காரணங்களாகும்.

4.5.1 சாதனைகள்

இக்கழகத்தின் முக்கியச் செயல்பாடுகளான கடன் அனுமதித்தல், வழங்குதல் மற்றும் வசூலித்தல் ஆகிய துறைகளில் மே 2011 முதல் 31-3-2014 வரையிலான காலத்தில் சாதனைகள் குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

(ரூபாய் கோடியில்)

செயல்பாடுகள்	11-5-2011 – 31-03-2014 வரை
கடன் அனுமதித்தது (பட்டியல் நிதியும் சேர்த்து)	2,973.22
கடன் வழங்கியது	2,480.36
கடன் வசூலித்தது	2,742.11

4.5.2 2013-14 ஆம் நிதியாண்டின் செயல்பாடு

(ரூ. கோடியில்)

விவரம்	இலக்கு 2013-2014	எய்தப்பட்ட சாதனை 2013-2014 31-3-2014 வரை	எய்தப்பட்ட சாதனை 2012-2013
கடன் அனுமதி தொகை	1,155	1,236.87	972.53
கடன் வழங்கும் தொகை	1,001	1,021.64	790.19
கடன் வசூல் தொகை	950	1,106.91	904.11.

[2014 ஜூலை 14

2013-14 ஆம் நிதியாண்டில், இக்கழகம் அளித்த நிதியுதவியில் 60 சதவீதம் பொறியியல் / மோட்டார் வண்டி பாகங்கள், ஜவுளி மற்றும் உணவுப் பதனிடும் துறைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

4.5.3 2014-2015 மற்றும் 2015-2016 ஆம் ஆண்டுகளுக்கான செயல் திட்டங்கள்

(ரூ. கோடியில்)

வருடம்	கடன் அனுமதி தொகை	வழங்கக்கூடிய தொகை	வசூல் செய்யக்கூடிய தொகை
2014–15	1,400	1,150	1,260
2015–16	1,600	1,300	1,375

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2014 ஜூலை 14]

5. தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம்

1976 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11 ஆம் நாள் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திற்கு (டிட்கோ) முழுமையாகச் சொந்தமான ஒரு துணை நிறுவனமாக தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் (டான்செம்) ஏற்படுத்தப்பட்டது. டிட்கோ நிறுவனம் அதனிடம் வைத்திருந்த மூலதனப் பங்குகளை அரசுக்கு மாற்றிவிட்டதால், 1994 ஆம் ஆண்டு முதல் இந்நிறுவனம், அரசு நிறுவனமாகச் செயல்பட்டு வருகிறது.

5.1. டான்செம் நிறுவனத்தின் ஆலைகள்

1. *ஆலங்குளம் சிமெண்ட் ஆலை, ஆலங்குளம், விருதுநகர் மாவட்டம்*
2. *அரியலூர் சிமெண்ட் ஆலை, அரியலூர் மாவட்டம்*
3. *தமிழ்நாடு கல்நார் ஆலை (தகடு), ஆலங்குளம், விருதுநகர் மாவட்டம்*
4. *தமிழ்நாடு கற்குழாய் ஆலை, விருத்தாசலம், கடலூர் மாவட்டம்*

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம், இந்த ஆலைகள்மூலம் சிமெண்ட் மற்றும் சிமெண்ட் சார்ந்த பொருட்களைத் தயாரித்து விற்பனை செய்து வருகிறது. இந்நிறுவனத்தின் ஆண்டு மொத்த விற்பனை அளவு (Annual Turn Over) ரூ.250 கோடி ஆகும். தமிழக அரசின் சார்பாக சுரங்கங்களிலிருந்து வெட்டி எடுக்கப்படும் சுண்ணாம்புக் கல்லைப் பயன்படுத்தி சிமெண்ட் உற்பத்தி செய்து, அரசுத் துறை நிறுவனங்களுக்கு, குறிப்பாக ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை தவிர தமிழ்நாடு மின்சார வாரியம், கல்வித் துறை, கூட்டுறவுத் துறை போன்ற துறைகளுக்கும் சலுகை விலையில் சிமெண்ட் வழங்கி வருகிறது. மாநிலத்தின் பின்தங்கிய பகுதிகளான விருதுநகர் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகளைத் தொடர்ச்சியாக வழங்கி வருகிறது.

இவையல்லாமல், தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறைக்கு ஒப்பந்தப்புள்ளிமூலம் தனியார் சிமெண்ட் உற்பத்தியாளர்களிடமிருந்து சிமெண்ட் கொள்முதல் செய்து கொடுப்பதிலும், பல்வேறு மாவட்ட ஊரக

[2014 ஜூலை 14

வளர்ச்சி முகமைகளின்கீழ் செயல்படுத்தப்படும் ஊரக வளர்ச்சித் திட்டங்களுக்குத் தேவையான சிமெண்டினைக் குறிப்பிட்ட காலத்திற்குள் விநியோகம் செய்வதற்குத் தேவையான ஒருங்கிணைப்புப் பணியிலும் முக்கியப் பங்காற்றி வருகிறது.

5.2 ஆலங்குளம் சிமெண்ட் ஆலை

இவ்வாலை டிட்கோ நிறுவனத்தால் 1969 ஆம் ஆண்டு 4 இலட்சம் டன் ஆண்டு உற்பத்தித் திறனுடன் ஈரப்பத தொழில்நுட்பத்தில் (Wet process) துவக்கப்பட்டது. டான்செம் 1976 ஆம் ஆண்டு துவக்கப்பட்டபோது, இந்த ஆலையை தன் வசம் எடுத்துக்கொண்டது. 2003 ஆம் ஆண்டிலிருந்து ஒரு இளிங்கர் சூளை இயக்காமல் நிறுத்தப்பட்டதால், ஆலையின் தற்போதைய உற்பத்தித் திறன் 2 இலட்சம் டன்கள் மட்டுமே. மேலும், தற்போது வழக்கில் இல்லாத மிகப் பழமையான ஈரப்பதத் தொழில்நுட்பம் காரணமாக உற்பத்திச் செலவு அதிகரிப்பதால் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக இவ்வாலை நட்டத்தை ஈட்டி வருகிறது. 1-6-2014 அன்றைய தேதியில் இவ்வாலையில் 215 பேர் பணியில் உள்ளனர்.

5.3 அரியலூர் சிமெண்ட் ஆலை

டான்செம் நிறுவனம் இரண்டாவது சிமெண்ட் ஆலையை அரியலூரில் 1979 ஆம் ஆண்டு உலர்பத தொழில்நுட்பத்தில் (Dry Process) ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் டன் உற்பத்தி திறனுடன் அமைத்தது. 1-6-2014 அன்றைய தேதியில் இவ்வாலையில் 276 பேர் பணியில் உள்ளனர்.

5.4 தமிழ்நாடு கல்நார் தகடு ஆலை, ஆலங்குளம்

டான்செம் ஆலங்குளத்தில் 1981 ஆம் ஆண்டு கல்நார் தகடு ஆலை ஒன்றை அமைத்தது. தற்போது அதனுடைய உற்பத்தித் திறன் 28,800 டன். இதனுடைய முக்கிய மூலப்பொருட்கள் கல்நார் இழை மற்றும் சிமெண்ட் ஆகும். 1-6-2014 அன்றைய தேதியில் இவ்வாலையில் 93 பேர் பணியில் உள்ளனர்.

5.5 தமிழ்நாடு கற்குழாய் ஆலை, விருத்தாசலம்

அரசின் வழிகாட்டுதலின்படி, 1989 ஆம் ஆண்டு டான்செம் நிறுவனம் டாசெல் நிறுவனத்திடமிருந்த கற்குழாய் ஆலையை தன்னுடன் இணைத்துக் கொண்டது. ஆலையின் ஆண்டு உற்பத்தித்

2014 ஜூலை 14]

இதன் 5,400 டன். 1-6-2014 அன்றைய தேதியில் இவ்வாலையில் 14 பேர் பணியில் உள்ளனர்.

5.5 தமிழ்நாடு சிமென்ட் நிறுவனத்தின் வணிக செயல்பாடுகள்

5.5.1 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு தமிழ்நாடு சிமென்ட் நிறுவனத்தின்மூலம் விநியோகிக்கப்படும் சிமென்ட் மற்றும் தனியார் உற்பத்தியாளர்கள்மூலம் கொள்முதல் செய்யப்படும் சிமென்ட்டின் விபரம்

தமிழக அரசால் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைமூலம் செயல்படுத்தப்படும் ஊரக வளர்ச்சித் திட்டங்களுக்கு சுமார் 13 இலட்சம் டன் சிமென்ட் தேவைப்படுகிறது. தமிழ்நாடு சிமென்ட் நிறுவனம், தமிழக அரசு நிர்ணயித்த விலையில் ஒவ்வோர் ஆண்டும் ஏறக்குறைய 4 இலட்சம் டன் சிமென்ட்டை விநியோகம் செய்து வருகிறது. மீதமுள்ள தேவையினைப் பூர்த்தி செய்யும்பொருட்டு, தமிழ்நாடு சிமென்ட் நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி மூலமாக குறைந்த விலையில் சிமென்ட் கொள்முதல் செய்து தருகிறது.

2011-12 முதல் 2013-14 வரை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு சிமென்ட் விநியோகம் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு:

(டன்களில்)

ஆண்டு	மொத்தம்
2011–12	5,22,848
2012–13	16,47,474
2013–14	11,87,821

5.5.2 குறைந்த விலையில் அரசுத் துறைகள் மற்றும் அரசுத் துறை ஒப்பந்ததாரர்களுக்கு நேரடியாக சிமென்ட் விற்பனை செய்யப்பட்ட விபரம்

தமிழ்நாடு சிமென்ட் நிறுவனம் ஆண்டுதோறும் அரசு நிர்ணயிக்கும் விலையில் அரசு துறைகளுக்கு சிமென்ட் விநியோகம் செய்வதோடு, ஒப்பந்ததாரர்கள் முழு பணி பொறுப்பு அடிப்படையில் (Turn Key) செயல்படுத்தும் திட்டங்களுக்கு பொதுப் பணித் துறையால் நிர்ணயிக்கப்படும் விலையில் சிமென்ட் விநியோகம் செய்து வருகிறது.

ஆண்டு	சிமெண்ட் (டன்னில்)
2011–12	62,128
2012–13	51,910
2013–14	25,601

5.6.3 திறந்தவெளிச் சந்தையில் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் மூலம் சிமெண்ட் விற்பனை பற்றிய விவரம்

மாநிலத்திலுள்ள பொது மக்களுக்கு பயன்படும் வகையில், தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் அதனுடைய அரியலூர் மற்றும் ஆலங்குளம் ஆலைகளில் உற்பத்தி செய்யப்படும் சிமெண்ட்டினை திறந்தவெளிச் சந்தையில் முகவர்கள்மூலம் குறைந்த விலையில் விற்பனை செய்து வருகிறது. இதன்மூலம் சிமெண்ட் விலையைக் கட்டுப்படுத்த இயலும்.

ஆண்டு	சிமெண்ட் (டன்னில்)
2011–12	22,381
2012–13	1,12,464
2013–14	1,80,499

பொது மக்களுக்கு குறைந்த விலையில் சிமெண்ட் திறந்தவெளிச் சந்தையில் கிடைக்கும்பொருட்டு, விற்பனையை அதிகரிக்கும் திட்டம் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

5.7 சாதனைகள்

5.7.1 ஆலங்குளம் மற்றும் அரியலூர் ஆலைகளுக்கான நலத் திட்டங்கள்

ஆலங்குளம் மற்றும் அரியலூர் ஆலைகளில் பணியாற்றும் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் பயன்பாட்டிற்காக அரியலூர் ஆலைக்கு ரூ.7 இலட்சம் விலையில் ஒரு ஆம்புலன்ஸ் வேனும், ஆலங்குளம் ஆலைக்கு ரூ.7.50 இலட்சம் விலையில் ஒரு ஆம்புலன்ஸ் வேனும் ஆக மொத்தம் ரூ.14.50 இலட்சம் செலவில் இரண்டு ஆம்புலன்ஸ் வேன்களும், அரியலூர் மற்றும் ஆலங்குளம் ஆலைகளுக்காக ரூ.10.70 இலட்சம் செலவில் இரண்டு தீப்புகளும்

2014 ஜூலை 14]

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 30-1-2013 அன்று வழங்கப்பட்டன.

5.7.2 ரொக்கத் தொகை (போனஸ்) வழங்கல்

தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தில் தொழிலாளர் நலன் கருதி அரசு வழிமுறைகளின்படி, 20 சதவீதம் ரொக்கத் தொகையாக 2011-12 ஆம் நிதியாண்டில் ரூ.63.33 இலட்சம் 754 தொழிலாளர்களுக்கும் மற்றும் 2012-2013 ஆம் நிதியாண்டில் ரூ.54.45 இலட்சம் 695 தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

5.8 2014–15 மற்றும் 2015–16 ஆண்டுகளுக்கான செயல் திட்டங்கள்

5.8.1 மின்சாரம் / எரிபொருள் சிக்கனம்

சுமார் ரூ.2 கோடி செலவில் அரியலூர் சிமெண்ட் ஆலையில் அதிக மின் செலவில் முலப்பொருட்களைக் கொண்டு செல்லும் Pneumatic Conveying System என்பதற்கு மாற்றாக, குறைந்த மின் செலவில் பொருட்களை உயரே கொண்டு செல்ல இரண்டு Belt Bucket Elevator இயந்திரங்களை நிர்மாணிக்க பணி நிமித்த ஆணை (Work order) வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

5.8.2 சுற்றுச்சூழல் மேலாண்மை

(i) அரியலூர் சிமெண்ட் ஆலையில் இரண்டு இளங்கர் சூளைகளின் (Kiln ESPs) புகை சுத்திகரிப்பான்களை ரூ.16 கோடி செலவில் RABH (Reverse Air Bag House) ஆக மாற்றியமைக்க ஆணையிடப்பட்டுள்ளது.

(ii) சிமெண்ட் மூட்டைகளின் சரியான எடையினை உறுதி செய்வதற்காக டான்செம் நிறுவனம் தனது நிதி ஆதாரங்களைக் கொண்டு ஒப்பந்த முறையில் ஆலங்குளம் சிமெண்ட் ஆலையில் சுழலும் மின்னணுவியல் மூட்டை நிரப்பு இயந்திரத்தை நிறுவி வருகிறது. மேற்படி இயந்திரங்கள் விரைவில் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

[2014 ஜூலை 14

6. தமிழ்நாடு உப்பு நிறுவனம்

தமிழ்நாடு மாநிலம், உப்பு உற்பத்தியில் குஜராத்திற்கு அடுத்த இரண்டாவது மிகப் பெரிய மாநிலமாகத் திகழ்கிறது. இந்தியாவில் ஆண்டொன்றுக்கு சுமார் 245 இலட்சம் டன் உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தியாவின் மொத்த உப்பு உற்பத்தியில் சுமார் 11 சதவீதம், அதாவது 26 இலட்சம் டன் உப்பு தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழ்நாடு உப்பு நிறுவனம் ஒன்று மட்டுமே இந்திய அளவில் மாநில அரசுக்குச் சொந்தமான உப்பு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள அரசு நிறுவனமாகும்.

தமிழ்நாடு உப்பு நிறுவனம் இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டம், வாலிநோக்கம் இராமத்தில் பின்தங்கிய பகுதிகளை மேம்படுத்தி அப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் வேலைவாய்ப்புத் தேடி அண்டை மாவட்டங்களுக்குச் செல்வதைத் தடுக்கும் நோக்கில், 1974 ஆம் ஆண்டு தமிழக அரசால் நிறுவப்பட்டது. மேலும், 5,520 ஏக்கர் நிலத்தினை நீண்ட கால குத்தகை அடிப்படையில் அரசு இந்நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது. இந்நிறுவனம் வாலிநோக்கத்தைச் சுற்றி அமைத்துள்ள சுமார் 15 இராமங்களைச் சேர்ந்த 1350 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்கியுள்ளது.

6.1 நிறுவனத்தின் குறிக்கோள்

மிகவும் பின்தங்கிய இராமநாதபுர மாவட்ட பகுதியினை மேம்படுத்திட உத்வேகம் அளித்தல், நலிந்த பிரிவினருக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கி வழங்குவதன் வாயிலாக அவர்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்துதல், கடல் வளத்தினை முழுமையாகப் பயன்படுத்தி உப்பு மற்றும் உப்பை அடிப்படையாகக் கொண்டுள்ள கடல் சார்ந்த வேதிப் பொருட்களை உற்பத்தி செய்திடல், பள்ளி செல்லும் மாணவர்கள், மகளிர் மற்றும் பொது மக்களிடையே பரவலாகக் காணப்படுகின்ற நுண்ணூட்டச்சத்து அதாவது இரும்பு மற்றும் அயோடின் சத்து குறைபாடுகளைக் களையும் பொருட்டு, அயோடின் கலந்த மற்றும் இருவிதச் செறிவூட்டப்பட்ட உப்பு ஆகியவற்றை வழங்குதல்.

2014 ஜூலை 14]

6.2 நிறுவனத்தின் செயல்பாடுகள்

6.2.1 ''அம்மா'' உப்பு வெளிச்சந்தையில் அறிமுகம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபடி, பொது மக்கள் மலிவு விலையில் வாங்கி பயன்பெறும்பொருட்டு தமிழ்நாடு உப்பு நிறுவனம் உற்பத்தி செய்கின்ற மூன்று வகை உப்புகளான "அம்மா" அயோடின் கலந்த தூள் உப்பு, "அம்மா" இருவிதச் செறிவூட்டப்பட்ட உப்பு மற்றும் "அம்மா" குறைத்தளவு சோடியம் உள்ள உப்பு ஆகியவற்றை, 11-6-2014 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மூன்று வகையான "அம்மா" உப்பினை வெளிச்சந்தை விற்பனையை அரசுமுலம் அறிமுகம் செய்து வைத்துள்ளார்கள். "அம்மா" உப்பு வெளிச்சந்தையில் முறையே கிலோ ஒன்றிற்கு ரூ10/-, ரூ14/- மற்றும் ரூ21/-க்கு விற்பனை செய்யப்படுகின்றது. இதுபோன்ற உப்பு வகைகள் வெளிச்சந்தையில் பிற தனியார் நிறுவனங்களால் அதிக விலைக்கு விற்கப்படுகின்ற நிலையில் "அம்மா" உப்பு மிகக் குறைவான விலையில் விற்பனை செய்யப்படுகிறது.

6.2.2 தொழிற்சாலைகளுக்கு உகந்த உப்பு தயாரித்தல்

தமிழ்நாடு உப்பு நிறுவனம் ஆண்டிற்கு சுமார் 175 இலட்சம் டன் தரமுடைய தொழிற்சாலைக்கு உகந்த உப்பினை உற்பத்தி செய்கிறது. இந்நிறுவனம் உற்பத்தி செய்கின்ற உப்பு தமிழ்நாடு மற்றும் அண்டை மாநிலங்களில் அமைந்துள்ள இரசாயனத் தொழிற்சாலைகளால் தரமுடையதாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும், தொழிற்சாலைக்குகந்த உப்பிற்கு மிகப் பெரிய அளவில் சந்தை வாய்ப்புகள் உள்ளன.

தூத்துக்குடி மாவட்டத்தில் அமைந்துள்ள தூத்துக்குடி ஆல்கலி கெமிக்கல்ஸ், தாரங்கதாரா கெமிக்கல் வொர்க்ஸ், அழுமுகதேரி, ஆந்திர மாநிலத்தில் அமைந்துள்ள ஸ்ரீ ராயல சீமா ஆல்கலிஸ் அண்டு அலைடு கெமிக்கல்ஸ் கர்னூல், கேரள மாநிலத்தில் அமைந்துள்ள நிருவாங்கூர் கொச்சின் கெமிக்கல்ஸ், கொச்சின், சென்னைக்கு அருகே உள்ள தமிழ்நாடு பெட்ரோபுராடக்ட்ஸ், மணலி, கெம்பிளாஸ்ட் சன்மார் லிமிடெட், மேட்டூர் மற்றும் கெம்ஃபேப் ஆல்கலி லிமிடெட், பாண்டிச்சேரி ஆகிய தொழிற்சாலைகள் தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் உப்பினை பயன்படுத்துகிறது.

[2014 ஜூலை 14.

6.2.3 செறிவூட்டப்பட்ட உப்பு (Fortified Salt)

தமிழ்நாடு உப்பு நிறுவனம் ஆரம்ப நாட்களில் தொழிற்சாலைக்கு உகந்த உப்பினை உற்பத்தி செய்தது. நாளடைவில் அதன் உற்பத்தி நடவடிக்கைகளை விரிவுபடுத்தி அயோடின் கலந்த உப்பு, இருவித செறிவூட்டப்பட்ட உப்பு (தூள் மற்றும் கல் உப்பு வடிவில்) ஆகியவற்றை உற்பத்தி செய்துவருகிறது. மேலும், இந்நிறுவனம் இரும்புச் சத்து கலந்த உப்பினை உற்பத்தி செய்வதற்கான இயந்திரத்தினை 1987-ல் நிறுவி, இரும்புச் சத்து கலந்த உப்பு உற்பத்தியில் ஒரு முன்னோடி நிறுவனமாகத் திகழ்கிறது. தற்போது, தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா மற்றும் கர்நாடக மாநிலங்களுக்கு பொது மக்கள் மற்றும் பள்ளி செல்லும் மாணவர்கள் பயன்பெறும் பொருட்டு பொது விநியோகத் திட்டம் மற்றும் மதிய உணவுத் திட்டத்திற்கு செறிவூட்டப்பட்ட உப்பினை வழங்கி வருகிறது.

இவ்வாறான செறிவூட்டப்பட்ட உப்பு வகைகள் பிற மாநிலங்களும் பயன்பெறும் வகையில் குறிப்பாக, வடகிழக்கு மாநிலங்களுக்கு வழங்கிட சாத்தியக்கூறுகள் இந்த ஆண்டு அதிகமாக உள்ளது.

6.2.4 இரும்புச் சத்து கலந்த உப்பு (Iron Fortified Salt)

தமிழக அரசு சுகாதாரத் துறை அமல்படுத்தி வருகின்ற நலத் திட்டமான இரும்புச் சத்து குறைபாட்டினை நிவர்த்தி செய்வதில் கடந்த 22 ஆண்டுகளாக தமிழ்நாடு உப்பு நிறுவனம் தமிழக அரசின் சுகாதாரத் துறையுடன் இணைந்து செயலாற்றி வருகிறது.

தமிழ்நாடு உப்பு நிறுவனம், ஐதராபாத்திலுள்ள தேசிய ஊட்டச் சத்து மையம் (NIN) உருவாக்கிய அளவீட்டின்படி, இருவிதச் செறிவூட்டப்பட்ட உப்பினை 1991 ஆம் ஆண்டு முதல் உற்பத்தி செய்து தமிழக அரசின் மதிய உணவுத் திட்டத்திற்கு வழங்கி வருகின்றது. ஆரம்ப காலத்தில் இரத்த சோகை நோயினால் அதிகளவில் பாதிக்கப்பட்டிருந்த மாவட்டங்களான தருமபுரி, திருவண்ணாமலை, திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், அரியலூர், நீலகிரி மற்றும் சேலம் மாவட்டங்களுக்கு மட்டுமே இரும்புச் சத்து கலந்த உப்பினை வழங்கி வந்தது. பின்னர், இத்திட்டம் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் வெற்றிகரமாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

2014 ஜூலை 14]

6.2.5 அயோடின் கலந்த உப்பு (Iodised Salt)

தமிழ்நாடு உப்பு நிறுவனம் அயோடின் கலந்த உப்பினை அத்தியாவசியமான உணவுப் பொருளாக பொது விநியோகத் திட்டத்தில் வழங்குவதற்கான அரசின் உத்தரவினைப் பெற்று வறுமைக்கோட்டிற்குகீழ் வாழும் மக்களிடையே அயோடின் கலந்த உப்பின் நுகர்வு சதவிகிதத்தில் மிகப் பெரிய மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது. கடந்த 1998 ஆம் ஆண்டு முதல் மாநிலத்தின் எல்லா பகுதிகளிலும், குறிப்பாக மலைப் பிரதேசங்கள் உள்பட அயோடின் கலந்த உப்பினை வழங்கி வருகிறது.

இந்த அயோடின் குறைபாடுகளால் கீழ்க்கண்ட நோய்கள் வருகின்றன. இந்த உப்பினைப் பயன்படுத்தும்போது பின்வரும் நோய்கள் கட்டுபடுத்தப்படுகின்றன:

(i) முன்கழுத்து கழலை நோய்

(ii) மனச்சிதைவு

(iii) கற்பதில் குறைபாடு

(iv) சமனற்ற முனைச் செயல்பாடு

(v) உடல் வளர்ச்சி குன்றுதல்,

(vi) கருச்சிதைவு

(vii) குழந்தை இறப்பு (அ) குழந்தை இறந்து பிறத்தல்

(viii) செவிடு மற்றும் வாய் பேச முடியாமை

(ix) தைராய்டு சுரப்பியின் செயல்திறன் குறைதல்

கடந்த 1997-1998-ல் பொது விநியோகத் திட்டத்தில் அயோடின் கலந்த உப்பு விற்பனையை அறிமுகப்படுத்திய போது, தமிழ்நாடு உப்பு நிறுவனத்தால் ஆண்டொன்றுக்கு சுமார் 3,000 டன் மட்டுமே விநியோகம் செய்திட முடிந்தது.

ஐக்கிய நாடுகள் சபையின் உலகக் குழந்தைகள் அவசர நிதியம் (யுனிசெப்) இந்திய உப்பு துறை, மாவட்ட நிருவாகங்கள் மற்றும் தமிழக அரசின் சுகாதாரத் துறை ஆகியவற்றின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட மிகப் பெரிய அளவிலான விழிப்புணர்வு நடவடிக்கைகளின் பலனாக தமிழகத்தில் அயோடின் கலந்த

உப்பின் விற்பனை படிப்படியாக உயர்ந்து, தற்சமயம் பன்மடங்கு அதிகரித்து, தற்போது ஆண்டொன்றுக்கு 30,000 டன் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு உப்பு நிறுவனம், மாநிலத்திலுள்ள எல்லா குடும்ப அட்டைத்தாரர்களுக்கும் அயோடின் கலந்த உப்பினை விற்பனை செய்வதற்கான சாத்தியக்கூறுகளை விழிப்புணர்வு முகாம்மூலம் ஆராயும்.

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அயோடின் கலந்த கல் உப்பு மற்றும் அயோடின் கலந்த தூள் உப்பு ஆகியவை மிகக் குறைவான விலையில் முறையே கிலோ ஒன்று ரூபாய் 3.50 மற்றும் ரூபாய் 6-க்கும் விற்பனை செய்யப்படுகிறது. அண்டை மாநிலங்களில் பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக அயோடின் கலந்த உப்பு கிலோ ஒன்று ரூபாய் 5 முதல் 9 வரை விற்பனை செய்யப்படுகிறது. அயோடின் கலந்த உப்பு விலை வெளிச்சந்தையில் கிலோ ரூபாய் 15 வரை விற்கப்படுகின்றது.

6.2.6 இருவிதச் செறிவூட்டப்பட்ட உப்பு (கல் மற்றும் தூள் உப்பு வடிவில்)

தமிழ்நாடு உப்பு நிறுவனம் இருவிதச் செறிவூட்டப்பட்ட உப்பு உற்பத்தியில் முன்னோடியாகத் திகழ்கிறது. இந்நிறுவனம் இருவிதச் செறிவூட்டப்பட்ட உப்பினை உற்பத்தி செய்வதில் இருவிதமான முறைகளைப் பின்பற்றுகின்றது.

(i) ஐதராபாத்திலுள்ள தேசிய ஊட்டச்சத்து நிறுவனம் (NIN) வரையறுத்துள்ள அளவின்படி உற்பத்தி செய்யப்படுகின்ற இருவிதச் செறிவூட்டப்பட்ட உப்பில் உணவுக்கேற்ற ஃபெரஸ் சல்பேட் (Ferrous Sulphate) துண்ணூட்டக் காரணியாகப் பயன்படுத்தப்படுகிறது.

(ii) கனடா நாட்டில் இயங்கும் மைக்ரோ நியூட்ரியண்ட் இனிஷியேடிவ் (MI) வரையறுத்துள்ள அளவின்படி உற்பத்தி செய்யப்படுகின்ற இருவிதச் செறிவூட்டப்பட்ட உப்பில் என்கேப்சுலேட்டடு ஃபெரஸ் ஃப்யுமேரேட் (Encapsulated Ferrous Fumerate) துண்ணூட்டக் காரணியாகப் பயன்படுத்தப்படுகிறது.

இருவிதச் செறிவூட்டப்பட்ட உப்பு தமிழ்நாடு மற்றும் கர்நாடக மாநில மதிய உணவுத் திட்டத்திற்கு விநியோகம் செய்யப்பட்டு

2014 ஜூலை 14]

வருகிறது. ஆண்டொன்றுக்கு சுமார் 2,500 டன் வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு உப்பு நிறுவனம் 'உலகளாவிய அயோடின் உப்பு திட்டத்தில்' (Universal Iodisation Programme) தீவிரப் பங்கெடுத்து உள்ளது.

1991 முதல் 2014 வரை செறிவூட்டப்பட்ட உப்பு விநியோகம் செய்யப்பட்ட விவரம்:

வ. எண்	உப்பின் பெயர்கள்	அளவு (டன்களில்)
1.	அயோடின் கலந்த உப்பு (Iodised salt)	4,52,717
2.	இரும்பு ஊட்டச்சத்து உப்பு (Iron Fortified Salt)	20,604
3.	இருவிதச் செறிவூட்டப்பட்ட உப்பு (Double Fortified Salt)	22,101
4.	டை ஈதைல் கார்பாமைசின் சிட்ரேட் உப்பு (DEC)	11,303
	மொத்தம்	5,06,725

இதன்மூலம் பல இலட்சம் தாய்கள் பயன் பெற்றுள்ளனர்.

6.2.7 புரோமின் உற்பத்தி

உப்பு உற்பத்தி செய்யப்பட்ட பின்னர் இடைக்கும் பிட்டர்ன் எனப்படும் கழிவுநீரிலிருந்து புரோமின் எனப்படும் உப வேதிப்பொருள் தயாரிப்பதற்காக தமிழ்நாடு உப்பு நிறுவனம் சௌத் இந்தியா புரோமின் அன்டு அலைடு கெமிக்கல்ஸ் (SIBAC) என்ற தனியார் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை ஏற்படுத்தியுள்ளது. புரோமின் எனப்படும் வேதிப்பொருள் உப்பின் உப பொருளாகும். தமிழ்நாடு உப்பு நிறுவனம் இக்கழிவுநீரை முன்பு வீணாகக் கடலில் கலக்குமாறு திருப்பி விட்டது. தற்போதைய ஏற்பாட்டின்படி, இந்நிறுவனம் ஆண்டொன்றுக்கு சுமார் ரூபாய் 8 முதல் 10 இலட்சம் வரை வருவாய் ஈட்டி வருகிறது. இது வரையில் நிறுவனம் பிட்டர்ன் விற்பனையின்மூலம் ரூ.64.57 இலட்சம் வருவாய் ஈட்டியுள்ளது.

6.3 முக்கிய சாதனைகள்

(i) இந்தியாவிலேயே முதன்முறையாக 1991 ஆம் ஆண்டிலிருந்து இரும்புச் சத்து செறிவூட்டப்பட்ட உப்பு உற்பத்தியைத் துவங்கி வழங்கி வருகிறது.

(ii) 2001 ஆம் ஆண்டில் இருவிதச் செறிவூட்டப்பட்ட உப்பினை அறிமுகம் செய்துள்ளது.

(iii) அயோடின் கலந்த கல் உப்பு இந்தியாவிலேயே மிகக் குறைந்த விலையில் கிலோ ஒன்று ரூபாய் 8.50-க்கு பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக விநியோகம் செய்யப்படுகின்றது.

(iv) 2012 ஆம் ஆண்டு இந்நிறுவனம் முதன்முறையாக மிக உயர்ந்தபட்ச உற்பத்தியாக 1,78,675 டன் உப்பு உற்பத்தி செய்துள்ளது.

(v) உப்பு உற்பத்தியினை 1.75 இலட்சம் டன்னிலிருந்து 3 இலட்சம் டன்னுக்கு உயர்த்திட, கூடுதலாக 2,200 ஏக்கர் நிலப்பரப்பினை மேம்படுத்தி உற்பத்தியைத் துவக்கி உள்ளது.

6.4 ஐ.எஸ்.ஓ. தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

தமிழ்நாடு உப்பு நிறுவனம் தொழிற்சாலைக்கு உகந்த உப்பு மற்றும் செறிவூட்டப்பட்ட உப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் அதன் தரமான நிருவாக அமைப்பிற்காக ஐஎஸ்ஓ (I.S.O) 9001:2008 தரச் சான்றிதழ் பெற்றுள்ளது. தமிழ்நாடு உப்பு நிறுவனம் இந்திய தர நிர்ணய அளையம் நிர்ணயித்துள்ள ஐஎஸ். (I.S.) 7224:2006 என்ற தர நிர்ணய அளவின்படி அயோடின் கலந்த உப்பினை உற்பத்தி செய்து, பொது விநியோகத் திட்டத்திற்கு விநியோகம் செய்துவருகிறது. மேலும், இந்நிறுவனம் 2012 ஆம் ஆண்டு தரமான அயோடின் கலந்த உப்பு உற்பத்திக்காக Food Safety Standard Association of India (FSSAI) அமைப்பிடமிருந்து சான்றிதழ் பெற்றுள்ளது.

6.5 நிறுவனத்தின் விற்பனை நடவடிக்கைகள்

தமிழ்நாடு உப்பு நிறுவனம் தனது விற்பனை நடவடிக்கைகளை விரிவுபடுத்தி செறிவூட்டப்பட்ட உப்பினை தமிழ்நாட்டிற்கு

2014 ஜூலை 14]

வழங்குவதோடு மட்டுமல்லாமல், ஆந்திரா, கேரளா மற்றும் கர்நாடகம் ஆகிய மாநிலங்களின் விநியோக ஆணையை 2011-2012 ஆம் ஆண்டு மீண்டும் பெற்றுள்ளது.

6.6 ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகள்

தமிழ்நாடு உப்பு நிறுவனம் அதன் உற்பத்திப் பொருட்களின் தரத்தினை மேம்படுத்த மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து எல்லா வகையான உப்புகளும் கடுமையான தரக் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்பட்ட பின்னரே வெளியில் அனுப்பப்படுகிறது. இதற்காக தொழிற்கூடத்தில் உரிய வசதிகளைக் கொண்ட பரிசோதனைக் கூடம் ஒன்றினை நிறுவியுள்ளது.

6.6.1 புதிய பரிசோதனைக் கூடம்

தமிழ்நாடு உப்பு நிறுவனம் தனது உற்பத்திப் பொருட்களின் தரத்தினை மேம்படுத்தும் வகையில் சர்வதேச மேம்படுத்தப்பட்ட ஊட்டச்சத்து கண்காணிப்பு நிறுவனத்தின் (GAIN) உதவியுடன் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு நவீன பரிசோதனைக் கூடங்களை வாலிநோக்கத்திலும், சென்னை தலைமை அலுவலகத்திலும் நிறுவிட உள்ளது. தலைமை அலுவலகத்தில் நிறுவப்படும் பரிசோதனைக் கூடத்தில் அதன் உற்பத்திப் பொருட்களைப் பரிசோதிப்பதோடு மட்டுமல்லாது, செறிவூட்டப்பட்ட உப்பு உற்பத்திக்காக பெறப்படுகின்ற வேதிப் பொருட்களின் தரமும் பரிசோதிக்கப்படும். மேலும், தமிழ்நாடு உப்பு நிறுவனம் தரத்திற்கு மிக முக்கியத்துவம் கொடுக்கும் நோக்கில், அதன் பணியாளர்களுக்கு உரிய பயிற்சியினை அளிக்கிறது.

6.6.2 அயோடின் கலந்த கல் உப்பின் உற்பத்தியை அதிகரித்தல்

அயோடின் கலந்த கல் உப்பின் உற்பத்தியைப் பெருக்கும் விதமாக கெயின் (GAIN) என்ற தொண்டு நிறுவனத்தின் உதவியுடன் புதிய இயந்திரங்களை நிறுவ உள்ளது. கெயின் (GAIN) நிறுவனம் இலவசமாக ரூ.90 இலட்சம் மதிப்புள்ள இயந்திரங்களை வழங்கிட இசைவு தெரிவித்துள்ளது. இதன் மூலம் மாதம் 3,000 டன் அளவிற்கு அயோடின் கலந்த கல் உப்பு உற்பத்தி செய்திட இயலும்.

[2014 ஜூலை 14

6.7 தொழிலாளர் நல நடவடிக்கைகள்

தமிழ்நாடு உப்பு நிறுவனம் தொழிலாளர் நலத்தில் அக்கறை கொண்டு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், தேநீர் மற்றும் பிஸ்கட் ஆகியவற்றை தொழிலாளர்கள் பணிபுரியும் இடங்களில் வழங்குதல் மற்றும் பாதுகாப்பு சாதனங்களான கருப்பு மூக்குக் கண்ணாடி, பூட்ஸ் ஆகியவற்றை சூரிய வெப்பத்திலிருந்து காக்கும் பொருட்டு உப்பளப் பணியில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கு ஆண்டுதோறும் வழங்கி வருகிறது.

அதோடு மட்டுமல்லாது, சட்டப்படியாக வழங்கக்கூடிய அனைத்து சலுகைகளும் நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகிறது. மேலும், தமிழ்நாடு உப்பு நிறுவனம், தொழிலாளர்களின் உடல் நலனைப் பேணும் பொருட்டு குறிப்பிட்ட கால இடைவெளியில் மருத்துவ முகாம்களை நடத்தி வருகின்றது.

கடந்த 2012-13 ஆம் ஆண்டில் தொழிலாளர்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காக புதியதாக 5 குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் (RO System) ரூபாய் 3.5 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளது. இதன்மூலம் நல்ல சுகாதாரமான குடிநீர் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுவருகிறது.

6.8 சமூகப் பொறுப்பு–பங்களிப்பு

இந்நிறுவனம் வாலிநோக்கத்தைச் சுற்றி அமைந்துள்ள சுமார் 13 கிராமங்களைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கியுள்ளது. இந்நிறுவனம், நிறுவன சமூகப் பொறுப்பின் ஒரு பகுதியாக வாலிநோக்கத்தைச் சுற்றி அமைந்துள்ள கிராமங்களில் இயங்கும் பள்ளிகளுக்கு மேஜை, நாற்காலி போன்றவற்றை வழங்கியுள்ளது. மேலும், இராமநாதபுரத்தில் மாவட்ட நிருவாகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட புத்தகக் கண்காட்சிக்காக 2013-14 ஆம் ஆண்டு ரூபாய் 2 இலட்சத்தினை தமிழ்நாடு உப்பு நிறுவனம் வழங்கியுள்ளது.

2014 ஜூலை 14]

7. தமிழ்நாடு தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம்

தமிழ்நாட்டில் பெரிய அளவிலான புதிய முதலீட்டுத் திட்டங்களை ஈர்க்கும் நோக்குடன் தமிழ்நாடு அரசால் 1992 ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் தமிழ்நாடு தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் (சருக்கமாக தொழில் வழிகாட்டுதல் மையம்) அமைக்கப்பட்டது. மேலும், பெரிய அளவிலான தொழில் திட்டங்களுக்கு அனுமதியைப் பெற்றுத் தருகின்ற ஒற்றைச் சாளர அலுவ மையமாகச் செயல்படுதல் மற்றும் மாநில அளவிலான ஏற்றுமதி அபிவிருத்தி குழுவிற்கு (State Level Export Promotion Committee) வரும் செயற்குறிப்புகளை ஆய்வு செய்து சமர்ப்பித்தல் பணிகளை வழிகாட்டுதல் மையம் செயல்படுத்தி வருகிறது.

கடந்த மூன்று ஆண்டுகளில் தொழில் வழிகாட்டுதல் மையம் மொத்தம் 68 பெருந்திட்டங்களை ஈர்ப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டு, அதன்மூலம் 33 தொழில் நிறுவனங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் கையெழுத்திடப்பட்டன. இவற்றின் மொத்த முதலீடு ரூ.31,706 கோடியாகும். இவை தவிர, தொழில் வழிகாட்டுதல் மையத்தின் ஒற்றைச் சாளர முறையின்கீழ் 35 நிறுவனங்கள் ரூ.14,896.72 கோடி முதலீடு செய்வதற்கு முன்வந்துள்ளன. 2013-2014 ஆம் ஆண்டில் மட்டும் (மார்ச் 2014 வரை) தொழில் வழிகாட்டுதல் மையம் ரூ.10,514.85 கோடி அளவிலான 25 பெரிய தொழில் திட்டங்களை வெற்றிகரமாக ஈர்த்துள்ளது.

7.1. 2013-14 ஆம் ஆண்டில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்ட திட்டங்கள்

7.1.1. கீழ்க்கண்ட திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் 21 பிப்ரவரி 2014 அன்று கையெழுத்திடப்பட்டது.

வ. எண்	நிறுவனத்தின் பெயர் மற்றும் தயாரிப்பு	அமைவிடம்	முதலீடு (ரூபாய் கோடியில்)	வேலை வாய்ப்பு (நேரடி மற்றும் மறைமுகம்)
1.	K.P.R. மில் நிறுவனம் (நூற்பாலை)	திண்டுக்கல்	600	1,000
2.	அபிராமி அம்மன் மில்ஸ் (நூற்பாலை)	திண்டுக்கல்	261	450
3.	TAPP செமிகண்டக்டர் இந்தியா பிரைவேட் நிறுவனம் (செமிகண்டக்டர் ஆய்வு மற்றும் மின்னணு வன்பொருள்)	சிப்காட், திருப்பெரும்புதூர் உயர் தொழில்நுட்ப சிறப்பு பொருளாதார மண்டலம்	500	500
4.	யூனிடி அப்ளையன்சஸ் நிறுவனம் (மின்னணு வீட்டு உபயோகப் பொருட்கள்)	மானாமதுரை சிப்காட் வளாகம்	1,000	1,000

5.	BSH வீட்டுப்பொருள் உற்பத்தி (வீட்டு உபயோகப் பொருட்கள்)	சிப்காட் வளாகம், பிள்ளைப்பாக்கம்	350	400
6.	ஹிடாச்சி ஆட்டோமோடிவ் சிஸ்டம்ஸ் (ஆட்டோ உதிரி பாகங்கள்)	அசென்டாஸ் தொழில் பூங்கா	350	400
7.	ஸர்தமான் லைஃப் சயின்ஸஸ் நிறுவனம் (மருந்துகள்)	சிப்காட் வளாகம், கடலூர்	300	300
8.	KYB மோட்டார் சைக்கிள் சஸ்பென்ஷன் இந்தியா (வாகன உதிரி பாகங்கள்)	சிப்காட் வளாகம், வல்லம் வடகால்	221	579
9.	HLL பயோடெக் (ஒருங்கிணைந்த தடுப்பு மருந்துகள்)	செங்கல்பட்டு	594	500
10.	Thai சம்மிட் ஆட்டோ பார்ட்ஸ் இந்தியா (வாகன உதிரி பாகங்கள்)	சிப்காட் வளாகம், வல்லம் வடகால்	121	794
11.	யமஹா மோட்டார் எலக்ட்ரானிக் இந்தியா (வாகன உதிரி பாகங்கள்)	சிப்காட் வளாகம், வல்லம் வடகால்	123	600

12.	Kyowa Castec இந்தியா நிறுவனம் (வாகன உதிரி பாகங்கள்)	சிப்காட் வளாகம், வல்லம் வடகால்	120	250
13.	சகுரா ஆட்டோ பார்ட்ஸ் நிறுவனம் (வாகன உதிரி பாகங்கள்)	சிப்காட் வளாகம், வல்லம் வடகால்	107	689
14.	Johoku Manufacturing Ltd., (வாகன உதிரி பாகங்கள்)	சிப்காட் வளாகம், வல்லம் வடகால்	102	470
15.	கொயமா பிரசிஷென் ஓர்க்ஸ் இந்தியா நிறுவனம் (வாகன உதிரி பாகங்கள்)	சிப்காட் வளாகம், வல்லம் வடகால்	100	100
16.	BASF கெடாலிஸ்ட் இந்தியா நிறுவனம் (வாகன மாசுத் தடுப்பு சாதனங்கள்)	மகிந்திரா வேர்ல்ட் சிட்டி		300
	மொத்தம்		5,081	8,332

7.1.2 2013–2014 ஆம் ஆண்டில் மழைய புரிந்துணர்வு ஒப்பந்தத் திட்டங்களின் கூடுதல் முதலீடு மற்றும் வேலைவாய்ப்பு

வ.எண்	நிறுவனத்தின் பெயர் மற்றும் தயாரிப்பு	அமைவிடம்	முதலீடு (ரூபாய் கோடியில்)	வேலை வாய்ப்பு (நேரடி மற்றும் மறைமுகம்
17.	ரெனால்ட் நிஸ்ஸான் ஆட்டோமாடிவ் இந்தியா நிறுவனம் (கார்கள்)	சிப்காட் வளாகம், ஓரகடம்	4,500	4,432
18.	டேம்லர் இந்தியா நிறுவனம் (வணிக வாகனங்கள்)	சிப்காட் வளாகம், ஓரகடம்	296.3	3,000
	மொத்தம்		4,796.3	7,432

7.1.3 2013-2014ஆம் ஆண்டில் வழிகாட்டுதல் மையத்தால் ஒற்றைச் சாளர முறையின்கீழ் கையாளப்பட்ட, புரிந்துணர்வு ஒப்பந்தம் அல்லாத (Non MoU) திட்டங்கள்

வ.எண்	நிறுவனத்தின் பெயர் மற்றும் தயாரிப்பு	அமைவிடம்	முதலீடு (ரூபாய் கோடியில்)	வேலைவாய்ப்பு (நேரடி மற்றும் மறைமுகம்)
19.	அபெக்ஸ் லேபராட்டரி நிறுவனம் (மருந்து பொருட்கள்)	சிப்காட் பார்மா வளாகம், திருப்போரூர்	45.00	50
20.	சிக்ஜில்சால் இந்தியா (தொழில் மற்றும் மருத்துவ வாயு)	சிப்காட் வளாகம், இராணிப்பேட்டை	74.36	35
21.	Bosch நிறுவனம் (ஆட்டோ உதிரி பாகங்கள்)	சிப்காட் வளாகம், சுங்கைகொண்டான்	76.41	168

22.	டைட்டன் நிறுவனம் (Watch Case தயாரிப்பு)	கள்ளப்பாளையம், கோயம்புத்தூர்	60.2	650
23.	Wrightbus இந்தியா நிறுவனம் (பேருந்து கட்டுமானம்)	சிப்காட் வளாகம், ஓரகடம்	43.97	1,998
24.	கொமாட்க இந்தியா (விரிவாக்கம்) (கட்டுமான பணிக்கான இயந்திரங்கள்)	சிப்காட் வளாகம், ஓரகடம்	242.49	827
25.	ஹைலெக்ஸ் இந்தியா (PKB, MT, Body Cable, Brake)	சிப்காட் வளாகம், பிள்ளைப்பாக்கம்	95.12	783
	மொத்தம்		637.55	4,511

7.1.4 வழிகாட்டுதல் மையத்தால் 2013-14 ஆம் ஆண்டில் ஈர்க்கப்பட்ட மற்றும் கையாண்ட மொத்த முதலீடு

வ.எண்	விளக்கம்	திட்டங்கள் (எண்ணிக்கையில்)	முதலீடு (ரூ. கோடியில்)	வேலை வாய்ப்பு
1.	அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடப்பட்ட திட்டங்கள்	16	5,081	16,282
2.	வழிகாட்டுதல் மையத்தால் ஒற்றைச் சாளர முறையின்கீழ் கையாளப்பட்ட, புரிந்துணர்வு ஒப்பந்தம் இல்லாத திட்டங்கள்	9	5,433.85	11,943
	மொத்தம்	25	10,514.85	28,225

2014 ஜூலை 14]

7.2 அனெடு (Assistance to States for Infrastructure Development for Exports and Allied Activities - ASIDE)

மாநில அளவிலான ஏற்றுமதி மேம்பாட்டுக் குழுவின் (State Level Export Promotion Committee) உறுப்பினர் செயலரான வழிகாட்டுதல் மையத்தின் செயல் துணைத் தலைவர், பெறப்பட்ட கருத்துருக்களை பொருள் நிரல் மற்றும் பகுப்பாய்வு குறிப்புகளின் அடிப்படையில் 21-11-2013-ல் நடைபெற்ற SLEPC-ன் 14-வது கூட்டத்தில் சமர்ப்பித்தார். மாநில அளவிலான ஏற்றுமதி மேம்பாட்டுக் குழு இரண்டு திட்டங்களுக்கு சுமார் ரூ.22 கோடி அளவிலான நிதி உதவியினை வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. மேலும், இத்திட்டங்களை ஏற்கெனவே மத்திய அரசிடம் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்களில் இணைக்க ஒப்புதல் அளித்துள்ளது.

7.3 இணை பணிக் குழுக் கூட்டங்கள்

தமிழ்நாட்டில் ஜப்பானிய முதலீட்டாளர்களுக்கு உதவும் பொருட்டு தலைமைச் செயலரைத் தலைவராகக் கொண்ட இணை பணிக் குழு ஒன்றை அமைக்குமாறு சென்னையில் உள்ள ஜப்பானிய தூதர் வேண்டுகோள் விடுத்தார். இதன் அடிப்படையில் அரசு இணை பணிக் குழு ஒன்றை அமைத்து ஆணை வெளியிட்டது (அரசு ஆணை எண் 15, தொழில் துறை (MIB.2) தேதி 9-1-2012). இதுவரை இந்த இணை பணிக் குழுவின் கூட்டம் மூன்று முறை நடைபெற்றுள்ளது.

7.4 எண்ணூர் துறைமுகம்–கண்காணிப்புக் குழுக் கூட்டம்

2013-14 ஆம் ஆண்டில் தொழில் துறை, தோஷிபா நிறுவன இடத்திலிருந்து எண்ணூர் துறைமுகம் வரையிலான சாலை இணைப்புக்கான கண்காணிப்புக் குழுவின் கூட்டங்களை பலமுறை நடத்தியுள்ளது. இத்தக் குழுவின் கடைசிக் கூட்டம் 26-6-2014 அன்று நடைபெற்றது.

[2014 ஜூலை 14

8. தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம்

சேலம் மாவட்டத்தில் "சாக்குக் கட்டி மலை" என்று அழைக்கப்படும் ஏற்காடு சேர்வராயன் மலையடிவாரப் பகுதியில், சேலம் வனக் கோட்டம், சேர்வராயன் தெற்கு வனச் சரகம், குரும்பப்பட்டி காப்புக் காட்டில் டோலமேக் நிறுவனத்தால் தற்போது இயக்கப்பட்டுவரும் "அரசு மேக்னசைட்" சுரங்கமானது 96.34 ஹெக்டர் (238 ஏக்கர்) பரப்பளவில் அமையப் பெற்றுள்ளது. இந்த மேக்னசைட் சுரங்கம் முன்னதாக சேலம் மேக்னசைட் பிரைவேட் லிமிடெட் என்ற தனியார் நிறுவனத்திடமிருந்த சுரங்க குத்தகை உரிமம் 28-11-1978-ல் இரத்துச் செய்யப்பட்டு, 17-01-1979 அன்று முதல் "தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம்" அந்தச் சுரங்கத்தைக் கையகப்படுத்தி "அரசு மேக்னசைட் சுரங்கம்" என்ற பெயரில் இயங்கி வருகிறது.

தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட் (TANMAG) 06-02-1979 ஆம் நாளன்று துவங்கப்பட்ட பொதுத் துறை நிறுவனமாகும். இந்நிறுவனம் உலகத் தரச் சான்றிதழ் ஐஎஸ்ஓ 9001-2008 (தர மேலாண்மை அமைப்பு) மற்றும் உலகத் தரச் சான்றிதழ் ஐஎஸ்ஓ 14001-2004 (சுற்றுச் சூழல் மேலாண்மை அமைப்பு) ஆகியவற்றைப் பெற்றுள்ளது.

மேக்னசைட் (மெக்னீசியம் கார்பனேட்—MgCo3) என்ற கனிமம் இந்தியாவில் மிகக் குறைந்த இடங்களிலேயே கிடைக்கும் ஒரு மதிப்பு வாய்ந்த கனிமமாகும். நாட்டின் மொத்த மேக்னசைட் படிமத்தில் சுமார் 70 சதவீதம் தமிழ்நாட்டில், குறிப்பாக சேலம் மாவட்டத்தில் கிடைக்கப் பெற்றுள்ளது.

இக்கனிமத்தைப் பாதுகாத்து, தோண்டியெடுக்கும் அவசியத்தைக் கருத்தில் கொண்டு தற்போது 96.34 ஹெக்டேர் (238 ஏக்கர்) பரப்பளவில் திறந்த வெளிச் சுரங்கப் பணியாக செயல்பட்டு வருகிறது.

8.1 சுரங்கப் பிரிவு

டோலமேக் நிறுவனத்தின் சுரங்கத்திலிருந்து ஒவ்வொரு ஆண்டும் 1,20,000 டன் அளவிற்கு மேக்னசைட் கனிமம் வெட்டியெடுக்கப்படுகிறது. இக்கனிமத்தை மூலப்பொருளாகக் கொண்டு, நிறுவனத்தின் சுழற் சூளைப் பிரிவில் (Rotary Kiln Division) முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் (Dead Burnt

2014 ஜூலை 14]

Magnesite - DBM) மற்றும் நிலைச் சூளைப் பிரிவில் (Shaft Kiln Division) மித எரியூட்டப்பட்ட மேக்னசைட் (Lightly Calcined Magnesite - LCM) ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன.

8.2 சுழற் சூளைப் பிரிவு (Rotary Kiln Division)

இப்பிரிவின் ஆண்டு உற்பத்தித் திறன் 30,000 டன்னாகும்.

முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் (DBM), சூடுதாங்கி கற்கள் (Refractory Bricks) தயாரிக்கவும், இரும்புத் தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் மோனோலித்திக்ஸ் (Monolithics) தயாரிக்கவும் பயன்படுகிறது.

8.3 நிலைச் சூளைப் பிரிவு (Shaft Kiln Division)

இப்பிரிவின் மொத்த உற்பத்தித் திறன் ஆண்டுக்கு 17,000 டன்னாகும்.

மித எரியூட்டப்பட்ட மேக்னசைட், சோதுமை அரைப்பதற்குத் தேவையான அரவை கற்கள், கேஸ்டபிள்ஸ் (Castables), மேக்னசைட் இரசாயனங்கள் மற்றும் கால்நடைகளுக்கான உணவுப் பொருள் தயாரிக்கவும், இரானைட் பாலிஷ் செய்வதற்கான கற்கள் செய்யவும், ரெயான் மற்றும் பேப்பர் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளிலும் பயன்படுத்தப்படுகிறது.

8.4 சாதனைகள்

டோலமேக் நிறுவனம் 2004-05 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து இலாபம் ஈட்டி வருகிறது. இந்நிறுவனம் 2012-13 ஆம் ஆண்டில் 37,693 மெ. டன் மேக்னசைட் பொருட்கள் விற்பனை செய்ததன் மூலம் ரூ.88.06 கோடி வருமானம் ஈட்டி, வரிக்கு முந்தைய இலாபமாக ரூ.13.04 கோடி இலாபம் ஈட்டியுள்ளது.

மேக்னசைட் உற்பத்தி செய்யும்போது அதன் கூடவே கிடைக்கப்பெறும் மற்றொரு கனிமம் டுனைட் (Dunite) ஆகும். டுனைட், மெக்னீசியம் சிலிகேட்டை வேதிப் பொருளாக தன்னகத்தே கொண்டுள்ளது. டோலமேக் நிறுவனம் 2012-13ஆம் வருடத்தில் 61,491 டன் டுனைட் கனிமத்தை விற்பனை செய்துள்ளது.

[2014 ஜூலை 14

இந்நிறுவனம் 2013-14 ஆம் ஆண்டில் 88,207 டன் மேக்னசைட் பொருட்களை ரூ.92.37 கோடிக்கு விற்பனை செய்து வரிக்கு முந்தைய இலாபமாக சுமார் ரூ.13.85 கோடி ஈட்டியுள்ளது.

8.5 2014-15 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டம்

2014-15 ஆம் ஆண்டுக்கான உற்பத்தி மற்றும் விற்பனை குறியீடுகள்

விவரங்கள்	அளவு டன்னில்		
	உற்பத்தி	விற்பனை	நிதி இலக்கு (ரூபாய் இலட்சத்தில்)
கச்சா மேக்னசைட்	1,20,000	1,20,000	—
முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட்	30,000	30,000	6,445.35
மித எரியூட்டப்பட்ட மேக்னசைட்	17,000	17,000	4,055.00

2014 ஜூலை 14]

8. தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம்

தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம் 1983 ஆம் வருடம் தமிழக அரசால் ஆரம்பிக்கப்பட்டு, வணிக ரீதியான வெடிமருந்துப் பொருட்களின் உற்பத்தியை 1986 ஆம் வருடம் துவக்கியது. இந்நிறுவனத்திற்குத் தேவையான நிதி, தமிழக அரசு, நிதி நிறுவனங்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து பங்குகளாகப் பெறப்பட்டு முதலீடு செய்யப்பட்டுள்ளது. தற்போதைய தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனத்தின் பங்கு மூலதனமாக ரூ.22.14 கோடி (82.14 சதவிகிதம்) தமிழக அரசும், ரூ.1.99 கோடி (7.42 சதவிகிதம்) இந்திய தொழில் வளர்ச்சி வங்கி மற்றும் இந்திய தொழில் நிதி நிறுவனமும், ரூ.2.66 கோடி (9.86 சதவிகிதம்) பொது மக்களும், ரூ.2.87 இலட்சம் (0.11 சதவிகிதம்) நிறுவன ஊழியர்களும் மற்றும் ரூ.12.90 இலட்சம் (0.47 சதவிகிதம்) அயல்வாழ் இந்தியர்களும் முதலீடு செய்துள்ளனர்.

இந்நிறுவனம் வேலூர் மாவட்டம், காட்பாடி, சித்தேரியான்பேட்டை கிராமத்தின் சிறிய குன்றின்மீது வனத் துறையின் 700 ஏக்கர் பரப்பளவில் பலவிதமான வெடிபொருட்கள் மற்றும் அதனைச் சார்ந்த துணைப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கேற்ற பல்வகைக் கட்டமைப்பு வசதிகளுடன் அமைந்துள்ளது. இந்நிறுவனம் துவக்கப்பட்டபோது நைட்ரோகிளிசரின் தொடர்பான வெடிமருந்துப் பொருட்களை உற்பத்தி செய்து நல்ல இலாபத்தை ஈட்டியது. மேலும், இந்நிறுவனம் தொடர்ந்து வெடியூக்கி, வெடி, திரி, கலவை வெடிமருந்து, எமல்ஷன் வெடிமருந்து மற்றும் எம்.எம்.ஏ.என். போன்ற உற்பத்திப் பிரிவுகளைத் துவக்கியது.

ஆண்டு வாரியாக துவக்கப்பட்ட பல்வேறு உற்பத்திப் பிரிவுகளின் விவரங்கள் பின்வருமாறு:

உற்பத்தி பிரிவின் பெயர்	ஆண்டு	உற்பத்தி திறன் / ஆண்டு
வெடியூக்கி	1988	45 மில்லியன் எண்ணிக்கை
வெடித் திரி	1988	12 மில்லியன் மீட்டர்கள்
கலவை வெடிமருந்து	1992	10,000 டன்
எமல்ஷன்	2004	9,000 டன்
மோனோ மித்தைல் அமின் நைட்ரேட் (எம்.எம்.ஏ.என்)	2007	6,000 டன்

[2014 ஜூலை 14

இந்நிறுவனம் 2002-2003 ஆம் வருடம் வரை இலாபத்தை ஈட்டியது. நைட்ரோகிளிசரின் வெடிமருந்துப் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை மீது இந்திய அரசு 2004 ஆம் வருடம் தடை விதித்தது. இத்தடைக்குப் பின் வெடிமருந்து உற்பத்தியில் இந்நிறுவனம் கடுமையான பின்னடைவைச் சந்தித்தது. வெடிமருந்து சந்தை நைட்ரோகிளிசரின் வெடிமருந்தைத் தவிர்த்து மற்ற வெடிமருந்து பொருட்களுக்குச் சாதகமாக அமைந்திருக்கவில்லை.

9.1 நோக்கம்

இந்நிறுவனம் சுரங்க, தாதுப் பொருட்கள் மற்றும் எண்ணெய் வளம் போன்றவற்றைக் கண்டறியவும் மற்றும் கிணறு தோண்டுதல், குகை அமைத்தல் போன்ற அடிப்படைக் கட்டமைப்புப் பணிகளுக்குத் தேவையான தரமான வெடிமருந்து மற்றும் அதனைச் சார்ந்த பொருட்களை உற்பத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

9.2 கொள்கை

1. வேலூர் மாவட்டத்தை தொழில் துறையில் முன்னேற்றமடையச் செய்வது.
2. தொழில் துறை மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய வேலூர் மாவட்டத்தைச் சார்ந்த மக்களுக்கு வேலைவாய்ப்பு அளித்தல்.

9.3 வெடிமருந்து உற்பத்தி

தற்போது தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனத்தில் கீழ்க்கண்ட வெடிமருந்துப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

வரிசை எண்	உற்பத்தி பொருள்	பயன்பாடுகள்
1.	எமல்ஷன் வெடிமருந்து	கிணறு தோண்டுதல், சுரங்கம் அமைத்தல் மற்றும் பாறை உடைத்தல் போன்றவற்றிற்குப் பயன்படுத்தப்படுகிறது.
2.	கலவை வெடிமருந்து	திறந்தவெளிச் சுரங்கங்களில் பயன்படுகிறது.
3.	வெடியூக்கி	வெடிமருந்தை வெடிக்க வைப்பதற்குத் தேவைப்படும் துணைப் பொருள்.
4	வெடித் திரி	வெடிமருந்தை வெடிக்க வைப்பதற்குத் தேவைப்படும் துணைப் பொருள்.
5.	மோனோ மித்தைல் அமின் நைட்ரேட் (எம்.எம்.ஏ.என்)	அயல் நாடுகளில் தயாரிக்கப்படும் வெடிமருந்துகளுக்கு அடிப்படை வேதிப்பொருளாகும்.

[2014 ஜூலை 14

இந்நிறுவனம் 2002-2003 ஆம் வருடம் வரை இலாபத்தை ஈட்டியது. நைட்ரோகிளிசரின் வெடிமருந்துப் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை மீது இந்திய அரசு 2004 ஆம் வருடம் தடை விதித்தது. இத்தடைக்குப் பின் வெடிமருந்து உற்பத்தியில் இந்நிறுவனம் கடுமையான பின்னடைவைச் சந்தித்தது. வெடிமருந்து சந்தை நைட்ரோகிளிசரின் வெடிமருந்தைத் தவிர்த்து மற்ற வெடிமருந்து பொருட்களுக்குச் சாதகமாக அமைந்திருக்கவில்லை.

9.1 நோக்கம்

இந்நிறுவனம் சுரங்க, தாதுப் பொருட்கள் மற்றும் எண்ணெய் வளம் போன்றவற்றைக் கண்டறியவும் மற்றும் கிணறு தோண்டுதல், குகை அமைத்தல் போன்ற அடிப்படைக் கட்டமைப்புப் பணிகளுக்குத் தேவையான தரமான வெடிமருந்து மற்றும் அதனைச் சார்ந்த பொருட்களை உற்பத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

9.2 கொள்கை

1. வேலூர் மாவட்டத்தை தொழில் துறையில் முன்னேற்றமடையச் செய்வது.
2. தொழில் துறை மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய வேலூர் மாவட்டத்தைச் சார்ந்த மக்களுக்கு வேலைவாய்ப்பு அளித்தல்.

9.3 வெடிமருந்து உற்பத்தி

தற்போது தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனத்தில் கீழ்க்கண்ட வெடிமருந்துப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

வரிசை எண்	உற்பத்தி பொருள்	பயன்பாடுகள்
1.	எமல்ஷன் வெடிமருந்து	கிணறு தோண்டுதல், சுரங்கம் அமைத்தல் மற்றும் பாறை உடைத்தல் போன்றவற்றிற்குப் பயன்படுத்தப்படுகிறது.
2.	கலவை வெடிமருந்து	திறந்தவெளிச் சுரங்கங்களில் பயன்படுகிறது.
3.	வெடியூக்கி	வெடிமருந்தை வெடிக்க வைப்பதற்குத் தேவைப்படும் துணைப் பொருள்.
4	வெடித் திரி	வெடிமருந்தை வெடிக்க வைப்பதற்குத் தேவைப்படும் துணைப் பொருள்.
5.	மோனோ மீத்தைல் அமீன் நைட்ரேட் (எம்.எம்.ஏ.என்)	அயல் நாடுகளில் தயாரிக்கப்படும் வெடிமருந்துகளுக்கு அடிப்படை வேதிப்பொருளாகும்.

தொழில்நுட்பம் அபிவிருத்தி செய்யப்பட்டு, அமல்படுத்தப்பட்டுள்ளது. இப்பிரிவில் கடந்த வருடத்தில் இதே காலத்தில் மேற்கொண்ட உற்பத்தி அளவான 2,723 டன் என்பதைக் காட்டிலும் இவ்வருடத்தில் இந்நாள் வரை 3,245 டன் எமல்ஷன் வெடிமருந்து உற்பத்தியை எய்தியுள்ளது.

9.4.3 கலவை வெடிமருந்து

இப்பிரிவில் 1. டெல்பிரைம்-83/125 மிமி 2. டெல்ஜெல்-83/125 மிமி மற்றும் டெல்பிரைம் சிப்டி போன்ற வெடிமருந்துகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இப்பிரிவில் மேற்கொள்ளப்படும் உற்பத்திக்குத் தேவைப்படும் மிக முக்கிய கச்சாப்பொருளான கார்கம் என்ற பொருளின் விலை கடுமையாக உயர்ந்ததையடுத்து, 2013 ஆம் வருடத்தில் இப்பிரிவின் உற்பத்தி மிகவும் பாதிக்கப்பட்டது. எனினும், கார்கம் பொருளுக்கு இணையாக மாற்று கச்சாப்பொருள் அடையாளம் காணப்பட்டு, உற்பத்தியின் அளவு படிப்படியாக உயர்த்தப்பட்டுள்ளது. இப்பிரிவில் கடந்த வருடத்தில் மேற்கொண்ட உற்பத்தி அளவான 587 டன் உற்பத்தியைக் காட்டிலும், இவ்வருடத்தில் இந்நாள் வரை 710 டன் உற்பத்தியை எய்தியுள்ளது.

9.4.4 வெடியுக்கி

இப்பிரிவு அதிகமான தொழிலாளர்களைக் கொண்டு செயல்படும் பிரிவாகும். நிறுவனத்தின் தொடர் முயற்சி மற்றும் தொழிலாளர்களை ஊக்கப்படுத்தியதின் காரணமாக இப்பிரிவின் உற்பத்தி நாளொன்றிற்கு 1,500 எண்ணிக்கை / ஒரு நபர் என்பதிலிருந்து 2,100 எண்ணிக்கை / ஒரு நபர் என்ற அளவிற்கு உயர்த்துள்ளது. கடந்த வருடத்தில் எட்டப்பட்ட உற்பத்தி அளவான 338.76 இலட்சம் எண்ணிக்கையைக் காட்டிலும் இவ்வருடத்தில் இந்நாள் வரை 257.32 இலட்சம் வெடியுக்கி உற்பத்தியை இப்பிரிவு எய்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

9.4.5 வெடித் திரி

இப்பிரிவில் வெடித் திரி உற்பத்தி மேற்கொள்ளப்பட்டுவருகிறது. இவ்வெடித்திரியானது நிலத்தடி சுரங்கங்களில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்சமயம் சந்தையில் வெடித் திரி விற்பனையின் தேக்கநிலை காரணமாக இப்பிரிவில் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

2014 ஜூலை 14]

இருப்பினும் சந்தையில் வெடித் திரியின் விற்பனைக்கு புத்துயிர் கொடுக்கவும், உற்பத்தி கொள்ளளவை அதிக அளவில் பயன்படுத்தவும் நிறுவனம் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது. கடந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட உற்பத்தி அளவான 9.78 இலட்ச மீட்டர்களைக் காட்டிலும் இவ்வாண்டில் இதுவரை 22.90 இலட்ச மீட்டர்கள் இப்பிரிவில் உற்பத்தி எய்தியுள்ளது.

9.5 நிதி நிலைமை

நிறுவனம் துவக்கப்பட்ட காலங்களில் ஏற்பட்ட பிரச்சினைகளின் காரணமாக 1986 ஆம் ஆண்டு முதல் 1993 ஆம் ஆண்டு வரை நிறுவனம் நஷ்டத்திலேயே இயங்கி வந்தது. எனவே, நிறுவனம் பி.ஐ.எப்.ஆர்-க்கு பரிந்துரைக்கப்பட்டது. 1992 ஆம் வருடம் பி.ஐ.எப்.ஆர். புனரமைப்புத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்ததைத் தொடர்ந்து நிறுவனம் தனது உற்பத்தி நடவடிக்கைகளை விருத்தியடையச் செய்ததன் காரணமாக 1993-1994 ஆம் ஆண்டு முதல் 2002-2003 ஆம் ஆண்டு வரை இலாபத்தில் இயங்கியது. 01-01-2004 அன்று இந்திய அரசு இலாபத்தை ஈட்டித் தந்த முக்கிய உற்பத்திப் பொருளான நைட்ரோகிளிசரின் வெடிமருந்துப் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை மீது திடீரென தடை விதித்ததன் காரணமாக 2003-2004 ஆம் ஆண்டு முதல் நிறுவனம் நஷ்டத்திற்குத் தள்ளப்பட்டது. இலாபத்தை ஈட்டித் தந்த நைட்ரோகிளிசரின் வெடிமருந்து உற்பத்திக்கு மாற்றாக எமல்ஷன் மற்றும் எம்.எம்.ஏ.என். உற்பத்தியை நிறுவனம் அறிமுகப்படுத்தியிருந்தபோதும், நிறுவனத்தின் நிதி நிலைமையில் எவ்வித முன்னேற்றமுமின்றி தொடர்ந்து இந்நாள் வரை நஷ்டத்திலேயே இயங்கி வருகிறது.

நிறுவனம் தொடர்ந்து சந்தையில் தனது உற்பத்திப் பொருட்களுக்கான தேவையை நிலைநிறுத்தவும், உற்பத்திச் செலவினங்களைக் குறைக்கவும் எடுத்து வந்த தொடர் முயற்சிகளின் விளைவாக தற்போது உரிய பயன்களை அடையத் தொடங்கியுள்ளது. நடப்பு நிதியாண்டில் எஸ்.சி.சி.எல். சிங்கரேணி கொலரீஸ் நிறுவனத்திடமிருந்து ரூ.23 கோடி அளவிற்கு உயர்ந்த விற்பனை உத்தரவை நிறுவனம் பெற்றுள்ளது. மேலும், உள்ளூர் சந்தையில் நிறுவனத்தின் உற்பத்திப் பொருட்களின் விற்பனை திருப்திகரமாக உள்ளது.

[2014 ஜூலை 14

உத்தேசிக்கப்பட்டுள்ளவாறு விற்கால் எரியூட்டப்படும் நீராவி கொதிகலன் விரைவில் செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன்மூலம் நிறுவனத்தின் உற்பத்திச் செலவும் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2014-15 ஆம் நிதியாண்டில் நிறுவனம் ரூ72 கோடி என்ற விற்பனை இலக்கை அடையும் என்றும், இலாப நட்டமில்லாத நிலை அடையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

9.6 வெடிமருந்துகளின் ஏற்றுமதி

தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம் வெடிமருந்துப் பொருட்களை 1998 ஆம் ஆண்டு முதல் கீழ்க்கண்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது

1. துருக்கி
2. அங்கோலா
3. பிலிப்பைன்ஸ்
4. சிங்கப்பூர்
5. எத்தியோப்பியா
6. ஆஸ்திரேலியா மற்றும்
7. பொலிவியா

தற்போது நிறுவனத்தின் ஏற்றுமதி சுமார் ரூ.9.72 கோடியாக உள்ளது. ஏற்றுமதியை மேலும் அதிகரிக்கச் செய்யும் பொருட்டு புதிதாக அயல்நாடுகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

9.7 தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனத்தின் செயலாக்கம்

(ரூ. கோடியில்)

ஆண்டு	2012–2013	2013–2014	2014–2015 (மதிப்பீடு)
மொத்த விற்பனையளவு (ரூபாய் கோடிகளில்)	34.10	42.68	72.00
நிகர இலாபம் / நட்டம் (ரூபாய் கோடிகளில்)	(–) 18.78	(–) 8.46	(+) 1.46

2013-14-ல் நிறுவனத்தின் நட்டம் ரூ8.46 கோடியாகக் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தொடர்ந்து எடுத்து வரும் முயற்சியின் காரணமாக 2014-15 ஆம் ஆண்டில் இலாப நட்டமில்லாத நிலை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2014 ஜூலை 14]

நிறுவனம் தற்போது செலுத்த வேண்டிய கடன் விவரங்கள்:

வரிசை எண்	விவரம்	கடன் தொகை
1.	இந்தியன் ஓவர்சீஸ் வங்கி – வண்டராந்தாங்கல், வேலூர் ரொக்கக் கடன்	ரூ.5.00 கோடி
2.	தமிழக அரசிடமிருந்து வட்டியில்லா கடன், விருப்ப ஓய்வு திட்ட கடன் மற்றும் வழிவகை கடனாகப் பெற்ற தொகை 31-03-2013 வரை உள்ள குவிவு வட்டியுடன்	ரூ.97.42 கோடி

9.8 விருப்ப ஓய்வு திட்டம்

உற்பத்திச் செலவைக் குறைக்கும் நோக்கில் தமிழக அரசு இத்திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இவ்விருப்ப ஓய்வு திட்டத்தின்கீழ், இதுவரை 48 அதிகாரிகள், 75 பணியாளர்கள் மற்றும் 300 தொழிலாளர்கள் தங்களுடைய விருப்ப மனுவை அளித்து, விருப்ப ஓய்வு திட்டத்தின்மூலம் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள். இந்நிறுவனம், விருப்ப ஓய்வு திட்டத்திற்கு தமிழக அரசிடமிருந்து ரூ.22.09 கோடி கடனாகப் பெற்றும், ரூ.2.28 கோடி நிறுவனத்தின் சொந்த நிதியிலிருந்தும் சேர்த்து மொத்தம் இதுவரை ரூ.24.37 கோடி செலவிட்டுள்ளது. தற்போது நிறுவனத்தில் 27 அதிகாரிகள், 72 பணியாளர்கள் மற்றும் 304 தொழிலாளர்கள் சேர்த்து மொத்தம் 403 நபர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மொத்த விற்பனையளவில் 40 சதவிகிதம் தற்போது சம்பளமாக வழங்கப்பட்டு வருகிறது. நிறுவனம் மொத்த விற்பனையளவை உயர்த்துவதற்குண்டான வழிவகைகளை ஆராய்ந்து வருவதுடன் சம்பளத் தொகையை 20-25 சதவிகிதத்திற்குக் கொண்டு வருவதற்கேதுவாக 2014-2015 ஆம் ஆண்டுக்குரிய விற்பனை இலக்கை ரூ.72 கோடியாகவும், மாத விற்பனை இலக்கை ரூ6 கோடியாகவும் நிர்ணயித்துள்ளது.

9.9 தொழிலாளர் நலன், தொழில் உறவு மற்றும் பாதுகாப்பு

தொழிலாளர்களின் பாதுகாப்பை முதன்மையாகக் கருதி பாதுகாப்பிற்கு அதிக முக்கியத்துவம் தரப்படுகின்றது. அனைத்து

[2014 ஜூலை 14

தொழிலாளர்களுக்கும் குறித்த காலங்களில் மருத்துவப் பரிசோதனை மற்றும் மன அழுத்தம் நீக்குதல் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. 2013-2014 ஆம் வருடத்தில் தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம் மாநில பாதுகாப்பு பரிசு திட்டம்-II & III-ன்படி தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கத்திலிருந்து இரண்டாம் பரிசைப் பெற்றுள்ளது.

9.10 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் துறை

தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனத்தில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் துறையின் செயல்பாடுகள் முக்கியப் பங்கு வகிக்கிறது. நடப்பு ஆண்டில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி துறை தன்னுடைய முயற்சியின் காரணமாக கீழ்க்கண்ட அபிவிருத்திகளை ஏற்படுத்தியுள்ளது.

1. எமல்ஷன் வெடிமருந்துப் பிரிவில் விலை அதிகமான அமோனியம் நைட்ரேட்டின் பயன்பாட்டிற்குப் பதிலாக 3 சதவிகிதம் பொதுவான உப்பை பயன்படுத்தியதன் காரணமாக ஒரு டன் வெடிமருந்து உற்பத்திக்கு ரூ800/- சேமிக்க முடிந்தது. இதனால் நிறுவனம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.24 இலட்சம் சேமிக்கின்றது.

2. எமல்ஷன் வெடிமருந்துப் பிரிவில் விலை அதிகமான மோலிஸ்லானின் பயன்பாட்டிற்குப் பதிலாக சோடியம் மோனோ ஓலியேட் (SMO) பயன்படுத்தியதன் காரணமாக ஒரு டன் எமல்சன் வெடிமருந்து உற்பத்திக்கு ஆகும் செலவில் ரூ1,300/- சேமிக்க முடிந்தது. இதனால் நிறுவனம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.39 இலட்சங்களைச் சேமிக்கின்றது.

3. 175 மில்லி மீட்டர் தாமிரக் கம்பிக்குப் பதிலாக 15 மில்லி மீட்டர் தாமிரக் கம்பியைப் பயன்படுத்தியதால், வருடத்திற்கு ரூ.10 இலட்சங்கள் சேமிப்பு கிடைத்துள்ளது.

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் துறை எதிர்வரும் வருடங்களில் மேலும் பல முயற்சிகளை மேற்கொண்டு செலவுகளைக் குறைத்து, கணிசமான அளவிற்கு சேமிப்பை அடைய வழிவகை செய்யும் என தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம் நம்புகிறது.

2014 ஜூலை 14]

9.11 ஏற்றுமதி

2012-13 மற்றும் 2013-14 ஆம் வருடங்களில் நிறுவனம் ஏற்றுமதி மூலம் முறையே ரூ.8.89 மற்றும் ரூ.9.72 கோடி விற்பனை அடைந்துள்ளது. தற்போது நிலவி வரும் சந்தைக் தேவைகளைக் கருத்திற்கொண்டு நிறுவனம் அதிகபடியான வெடிமருந்துகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு உரிய சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து வருகிறது. தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம் ஏற்றுமதி சந்தையை உள்ளடக்கி மண்டல வாரியாக ஏற்றுமதி முகவர்களை நியமிக்க முடிவு செய்துள்ளது. 2014-15 ஆம் ஆண்டிற்கான ஏற்றுமதிக்கான விற்பனை இலக்காக ரூ.15 கோடி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

[2014 ஜூலை 14

10. தமிழ்நாடு கனிம நிறுவனம்

கனிமங்கள், வளம் நிறைந்த அளப்பரிய செல்வங்களாகும். கனிம வளங்களை அறிவியல் முறையில் கண்டறிந்து, அவற்றை தொழில் நுட்ப முறையில் வெட்டி எடுத்து இலாபகரமாக விற்பனை செய்யும் பணியினை "தமிழ்நாடு கனிம நிறுவனம்" (டாமின்) ஏற்றுள்ளது. அதிக அளவில் கிடைக்கக்கூடிய கருப்பு, வெள்ளை, பாரடைலோ, பல வண்ண கற்படிவுகள் (கிரானைட்) மற்றும் பெருவகைக் கனிமங்களான கிரானைட், குவார்ட்ஸ், பெல்ட்ஸ்பார், கண்ணாம்புக்கல், சிலிகா மணல் மற்றும் வெர்மிகுலைட் ஆகிய கனிமங்களை சிரிய முறையில் வெட்டியெடுத்து அவற்றை மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களாக மாற்றி, நியாயமான விற்பனை முறையில் விற்பனை செய்வது இந்நிறுவனத்தின் பணியாகும்.

10.1 நோக்கம்

கனிம வளப் பிரிவில் முதன்மையான இடத்தை அடைதல் மற்றும் இயற்கையான கனிம வளங்களை அறிவியல் முறையில் கையாளுதல்.

10.2 குறிக்கோள்

- தொடர்ந்து புதிய கனிம வளப் பகுதிகளை கண்டறிதல்.
- சுரங்கச் செயல்பாடுகளில் நவீன உத்திகளைக் கையாளுவதன் மூலம் பாதுகாப்பான வகையில் தரமான கனிம உற்பத்தி மற்றும் விற்பனை செய்தல்.
- மதிப்புக் கூட்டப்பட்ட கிரானைட் மற்றும் கனிமங்கள் ஏற்றுமதிமூலம் மாநிலத்திற்கும் மற்றும் நாட்டிற்கும் கணிசமான அன்னியச் செலாவணி ஈட்டுதல்.
- குவாரிகள் மற்றும் சுரங்கங்கள் மேம்படுத்துவதன் மூலம் மாநிலத்தின் பின்தங்கிய மற்றும் கிராமப்புற பகுதி மக்கள் பயனடையக்கூடிய வகையில் வேலைவாய்ப்பினையும் மற்றும் மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் உற்பத்தியில் தகுதி வாய்ந்த தொழில்நுட்பக் கல்வி பயின்றவர்களுக்கு தகுந்த வேலைவாய்ப்பினையும் ஏற்படுத்தித் தருதல்.

2014 ஜூலை 14]

- குவாரிகள் மற்றும் கரங்கங்களை முறையான வகையில் செயல்படுத்துவதன்மூலம் அதிக மதிப்புள்ள கிராணைட் மற்றும் கனிமங்களை உற்பத்தி செய்தல்

10.3 கரங்க குத்தகை விவரம்

தற்போது தமிழ்நாடு கனிம நிறுவனத்திடம் 2066.58.60 ஹெக்டேர் பரப்பளவு உடைய 146 கரங்க குத்தகைகள் உள்ளன.

கனிமங்கள்	கரங்க குத்தகை எண்ணிக்கை	பரப்பளவு (ஹெக்டேரில்)
கருப்பு கிரானைட்	74	920.52.90
பலவண்ண கிரானைட்	54	821.11.50
பெருங்கனிமங்கள்	18	324.94.20
மொத்தம்	146	2066.58.60

10.4. 2013-14 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கைகள்

1. நீண்ட காலத்திற்கு பிறகு 2013-14 ஆம் நிதியாண்டில் மிக அதிக அளவில் சுமார் ரூ.45.43 கோடி மதிப்பிலான கருப்பு கிரானைட் கற்கள் மற்றும் கிரானைட் பலகைகள், ஓடுகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

2. மிகப்பெரும் பாறைகளை துளையிடும் நவீன இயந்திரங்களைப் பயன்படுத்தி 2012-13 ஆம் ஆண்டில் மாதத்திற்கு 1,338 கன மீட்டர் என்ற அளவிலிருந்து கிரானைட் உற்பத்தி 1,978 கன மீட்டர் அளவிற்கு, 2013-2014 ஆம் ஆண்டில் உற்பத்தி உயர்த்தப்பட்டு, இதுவரை இல்லாத அளவிற்கு 23,733 கன மீட்டர் உற்பத்தி செய்து சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

3. சிவகங்கை கிரானைட் கரங்கத்தில் தற்போது இரண்டு பகுதிகளில் உற்பத்திப் பணி நடைபெற்று வருகிறது. இவற்றிலிருந்து கடந்த ஆண்டு 67,959 டன் உற்பத்தி செய்யப்பட்டது. இந்த ஆண்டு உற்பத்தியை அதிகமாக்கி 87,353 டன், அதாவது கூடுதலாக சுமார் 19,000 மெட்ரிக்

[2014 ஜூலை 14

டன் தாது தோண்டி எடுக்கப்பட்டு உற்பத்தி சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

4. சிலிகா மணலுக்கான உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு, முதலியார் குப்பம் கிராமத்தில் உள்ள சிலிகா மணல் கரங்கத்தில் புதிதாக ஒரு பகுதியில் கரங்க மேம்பாடு செய்து, கடந்த ஆண்டு உற்பத்தி செய்த 4,212 டன் அளவைத் தாண்டி இந்த ஆண்டு 7,500 டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

10.5 கரங்கத் தணிக்கைக் குழு

கரங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் கிரானைட் கற்படிவங்களின் உற்பத்தியை முறைப்படுத்தவும், செயல்பாடுகளை அறிவியல்பூர்வமாக ஆய்வு செய்திடவும், ஒரு கரங்க தணிக்கைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. அதில் டாமினின் புவியியலாளர்கள், கரங்கப் பொறியாளர்கள், கரங்க நில அளவையாளர் மற்றும் இந்திய புவியியல் துறையைச் சார்ந்த ஒய்வு பெற்ற இயக்குநர் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். இக்குழு குறிப்பிட்ட கால இடைவெளியில் ஒவ்வொரு கரங்கத்திலும் தணிக்கை மேற்கொள்கிறது.

10.6 கரங்க மேலாண்மை முறை மென்பொருள் (Quarry Management System Software)

குவாரி மற்றும் தொழிற்சாலைகளைச் சிறந்த முறையில் கண்காணிப்பதற்காக குவாரி மேனேஜ்மெண்ட் சிஸ்டம் என்ற தனித்துவமான ஒரு மென்பொருள் உருவாக்கப்பட்டது. அதன் மூலமாக இனந்தோறும் கரங்கம் / குவாரிகளில் பெரிய பாறையிலிருந்து கிரானைட் பாறைகள் வெட்டி எடுப்பது (Primary Cutting) முதல், முழுமையான உற்பத்தி செய்யப்பட்ட கிரானைட் கற்கள் வரையிலான விவரங்கள் இம்மென்பொருளில் அன்றன்றே பதிவு செய்யப்படுகிறது மற்றும் கற்களில் புகைப்படமும் பதிவு செய்யப்படுகின்றன.

மேலும், விவரப்பட்டியல், வெளியிட்டாணை, அனுப்புகை அறிவுரை, ஒப்படைப்பு செலுத்துச் சீட்டு ஆகியவை இம்மென்பொருள்மூலமே உருவாக்கப்படுகின்றன.

2014 ஜூலை 14]

வெட்டி எடுக்கப்பட்ட ஒவ்வொரு பாறையின் டிஜிடல் புகைப்படத்தையும் இம்மென்பொருள்மூலம் காணலாம். இம்மென்பொருள் டாமின் நிறுவனத்தின் திறன்பாடு முறையை உயர்த்த உதவும்.

மேலும், இயந்திரங்கள், ஊர்திகள், துகள்மோர்களின் பயன்பாடு மற்றும் மனித சக்திகளின் செயல்திறன் ஆகியவை தினந்தோறும் இதன்மூலம் கண்காணிக்கப்படுகிறது.

10.7 குவாரிகள் மற்றும் கரங்கங்கள் நிருவாகம்

டாமின் நிறுவனம் தற்போது மிக நவீன உத்திகளைக் கையாண்டு உற்பத்திப் பெருக்கத்தையும் மற்றும் காற்று, ஒலி மற்றும் நீர்நிலைகள் மாசுபடாமல் முறையாகவும் அறிவியல் பூர்வமாகவும், கரங்கப் பணிகளை தற்பொழுது செய்து வருகிறது. மேலும், கரங்கத்தைச் சுற்றி உள்ள பகுதிகளில் மரங்களை நட்டு சுற்றுச் சூழலைப் பாதுகாக்கவும், டாமின் நடவடிக்கை எடுத்து வருகிறது.

11. புவியியல் மற்றும் கரங்கத் துறை

கனிமங்கள் முக்கியமான பல தொழிற்சாலைகளுக்கு அடிப்படை ஆதாரமாக விளங்குவதுடன் மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் தொழில் வளர்ச்சிக்கும் கனிசமான பங்கு வகிக்கின்றது. கனிமங்கள் பொருளாதார வளர்ச்சியின் முதுகெலும்பாகக் கருதப்படுவதுடன், நாட்டின் செல்வ வளமாகவும் போற்றப்படுகின்றன. மாநிலத்தில் கிடைக்கப்பெறும் கனிம வளங்களும் அதன் விவேகமான பயன்பாடும் மாநிலத்தின் வளர்ச்சிப் பணிகளிலும் பொருளாதாரச் செழிப்பிலும் பிரதிபலிக்கின்றன. கனிம வள ஆதாரங்கள் மீளப் பெறமுடியாததாக விளங்குவதால் அக்கனிமங்களை சட்டரீதியாக பாதுகாக்க அறிவியல் பூர்வமாகவும் மற்றும் விவேகமாகவும் அகழ்ந்தெடுப்பதின்மூலம் கனிம நிருவாகத்தின் வாயிலாக உயர்ந்த கனிம வருவாயினை ஈட்ட முடியும். தமிழ்நாட்டில் தொழில் சார்ந்த கனிமங்களான பழுப்பு நிலக்கரி, சுண்ணாம்புக்கல், கார்னட் மணல், சிலிகா மணல், குவார்ட்ஸ், பெல்ஸ்பார், ஜிராபைட், எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு, மாக்னசைட், இரும்புத்தாது போன்றவையும், இவை தவிர பொதுவாக உபயோகப்படும் பிறவகை கனிமங்கள், கருப்பு மற்றும் பலவண்ண இரானைட் கற்களும் கிடைக்கின்றன.

[2014 ஓலை 14

11.1. குறிக்கோள்கள்

(i) நவீன கனிம ஆய்வு உத்திகளைக் கையாண்டு புதிய கனிம படிவங்களைக் கண்டறிய ஆய்வுகள் மேற்கொள்வதை துரிதப்படுத்துதல்.

(ii) கனிமம் சார்ந்த தொழிற்சாலைகளை நிறுவ முன்வரும் தொழில் முனைவோர்களுக்கு கனிம வளம் குறித்த தகவல்கள் மற்றும் விவரங்களை வழங்குதல்.

(iii) கனிமத் தொழில்களிடையே கனிமங்களை அதிக அளவு பயன்தரத்தக்க வகையில் பயன்படுத்துவதன்மூலம் ஆரோக்கியமான போட்டி மனப்பான்மையினை ஊக்குவித்தல்.

(iv) மாநிலத்தில் சிக்கனமாக கனிம ஆய்வு மேற்கொள்ளல் மற்றும் சுரங்கப் பணிகள் நடைபெறும்பொழுதும் அதற்குப் பின்னரும், சுற்றுப்புறச்சூழல் மற்றும் பல்வேறு உயிரினப் பாதுகாப்பு ஆகியவற்றை உறுதி செய்தல்.

(v) சுரங்கப் பணிகள் மற்றும் கனிமம் சார்ந்த தொழிற்சாலைகளுக்குத் தேவையான மனித வளத்தினை மேம்படுத்தி, ஊக்குவித்தல்.

(vi) சுரங்கப்பணிகளில் பணிபுரியும் மக்களுக்கு பாதுகாப்பும் நல்வாழ்வும் அளித்தல்.

(vii) சட்டவிரோதமாக சுரங்கப் பணிகளில் ஈடுபடுபவர்கள் மற்றும் சட்டத்திற்குப் புறம்பாக கனிமங்களை எடுத்துச் செல்பவர்கள் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

(viii) சிறந்த கனிம நிருவாகத்தின் மூலமாக கனிம வருவாயினை அதிகரித்தல்.

புவியியல் மற்றும் சுரங்கத் துறை பின்வரும் முக்கியப் பணிகளைச் செய்து வருகின்றது.

(i) கனிம ஆய்வு மற்றும் கனிமங்களின் மதிப்பீடு.

(ii) மலைப் பகுதிகளில் நிலச்சரிவு சம்பந்தப்பட்ட புவி தொழில் நுட்ப ஆய்வுகள்.

(iii) கனிம நிருவாகம்.

2014 ஜூலை 14]

11.2 கனிம ஆய்வு

இத்துறையின் கனிம ஆய்வுப் பிரிவு மாலிப்டினம், தங்கம் மற்றும் பிளாட்டினம் போன்ற கனிமங்களைக் கண்டறிவதற்கான ஆய்வுகளை சேலம் மாவட்டம், சேலம் மற்றும் ஓமலூர் வட்டங்களில் கண்ணாம்புக் கரடு மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளிலும், நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் வட்டம், ஈஸ்வரமூர்த்திபாளையம் கிராமம் ஆகியவற்றிலும் மேற்கொண்டது. மேலும், புதிய ஆய்வுப் பணிகள் இத்துறையின்மூலம் நடைபெற உள்ளது.

11.3 மலைப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் புவி தொழில்நுட்ப ஆய்வுகள்

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டத்தில் பழனி மலைப் பகுதிகள் மற்றும் நீலகிரி மாவட்டத்திலுள்ள மலைப் பகுதிகளில், புவி தொழில் நுட்ப ஆய்வுகள் மேற்கொண்டு நிலச்சரிவு ஏற்பட சாத்தியமுள்ள பகுதிகளைக் கண்டறிந்து, பகுதிகளின் பொருண்மை சார்ந்த வரைபடங்கள், புவியியல் நிறப்பு வரைபடங்கள் மற்றும் மண்டல வரைபடங்கள் தயாரித்துள்ளது. நீலகிரி மற்றும் கொடைக்கானல் மலைப் பகுதிகளில் நிலச்சரிவு ஏற்பட வாய்ப்புள்ள பகுதிகளைக் கண்காணிக்கவும் புவி தொழில்நுட்ப ஆய்வுகள் மேற்கொள்ளவும் அரசால் புவி தொழில் நுட்ப ஆய்வு மையங்கள் ஏற்படுத்தப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. இம்மையங்கள் மாவட்ட நிருவாகத்திற்கு நிலச்சரிவு அறிவுகளை தடுக்கும் மேலான பணிகளுக்குரிய தொழில்நுட்ப வழிகாட்டுதல்களை வழங்கி வருகின்றன. மேலும், நிலச் சரிவினால் பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ள பகுதிகளில் பொது மக்களின் உடைமைகள் மற்றும் உயிரைப் பாதுக்கும் வகையில் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் புனரமைப்பு சம்பந்தமாக தொழில் நுட்பக் கருத்துருக்களை அளித்து வருகின்றன.

புவி தொழில்நுட்ப மையங்களானது மலைப் பகுதிகளில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளத் தேர்ந்தெடுக்கும் பகுதிகளை நிலச்சரிவு பாதிப்புகளிலிருந்து பாதுகாக்கும் நோக்கத்துடன் புவி தொழில் நுட்ப ஆய்வுகள் மேற்கொண்டு, கட்டுமானப் பணிகளுக்குக்கான சாத்தியக்கூறு அறிக்கைகள் வழங்கி வருகின்றன. 2013-2014 ஆம் ஆண்டில் இப்புவி தொழில் நுட்ப மையங்கள் 200 கட்டடங்கள் மற்றும் வீட்டு மனைகளுக்கு சாத்தியக்கூறு அறிக்கைகள் அளித்துள்ளன.

[2014 ஜூலை 14

11.4 கனிம நிருவாகம்

சிறு கனிமம் மற்றும் பெருங்கனிமங்களுக்கான கனிமச் சலுகைகளை உரிய சட்டங்கள் மற்றும் விதிகளின்படி வழங்குவது கனிம நிருவாகத்தில் அடங்கும். சுற்றுப்புறச் சூழ்நிலைகளை பாதிக்காத வண்ணம் அறிவியல் பூர்வமான முறையில் கனிமங்களை அகழ்ந்தெடுத்தலை உறுதிசெய்தல், கனிமங்களைப் பாதுகாத்தல் மற்றும் கனிம மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளை முறைப்படுத்துதல், சட்டவிரோதமாக கனிமங்களை வெட்டியெடுத்தல் மற்றும் கடத்துதலைத் தடுத்தல், உரிமக் கட்டணம், ராயல்டி மற்றும் இதர தொகைகளை வசூலித்தல் மூலமாக மாநிலத்தின் கனிம வருவாயினை உயர்த்துதல் போன்ற கனிம நிருவாகப் பணிகளை இத்துறை செய்து வருகின்றது.

செம்மையான கனிம நிருவாகத்திற்காக இத்துறையில் ஒரு துணை இயக்குநர் அல்லது உதவி இயக்குநர் தலைமையில் 28 மாவட்ட அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. மாவட்ட அலுவலகங்கள் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரின் நேரடி நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழும், புவியியல் மற்றும் சுரங்கத் துறை அணையரின் ஒட்டு மொத்தக் கட்டுப்பாட்டிலும் இயங்கி வருகின்றன.

11.5 கனிம வருவாய்

இத்துறையினால் கனிம மேலாண்மையில் மேற்கொள்ளப்பட்ட செம்மையான மற்றும் முனைப்பான நடவடிக்கையின் பலனாய் மாநிலத்தின் கனிம வருவாய் தொடர்ந்து அதிகரித்து கொண்டே வந்துள்ளது. அரசுக்குக் கிடைக்கும் கனிம வருவாயில் நல்ல முன்னேற்றம் காண்பிக்கும் வகையில் புவியியல் மற்றும் சுரங்கத் துறை கடினமான முயற்சிகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது. 1983-1984 ஆம் ஆண்டில் ரூ.2.83 கோடியாக இருந்த கனிம வருவாய் 2012-2013 ஆம் ஆண்டில் மணல் வருவாய் நீங்கலாக ரூ.943.99 கோடியாக பல்மடங்கு உயர்ந்தது. இது மேலும் உயர்ந்து, 2013-2014-ல் ரூ.969.70 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. இது இத்துறை மேற்கொண்ட முயற்சிகளுக்கு நற்சான்றாக அமைந்துள்ளது.

2014 ஜூலை 14]

11.8 மின்ஆளுகை சுரங்கக் குத்தகைப் பதிவேடு

மின்ஆளுகை சுரங்கக் குத்தகைப் பதிவேடு என்பது சுரங்கக் குத்தகை உரிமப் பகுதிகளை, புவிதகவல் திட்டத்தின் அடிப்படையில் உரிய வரைபடங்களுடன் ஒத்திசைவு செய்து, செயற்கைகோள் திழற்படங்களின் உதவியுடன் ஒப்பீடு செய்வதாகும். இத்திட்டத்தினை முழுமையாகச் செயல்படுத்துவதன் வாயிலாக மாநிலத்தின் அனைத்து கனிமவளப் பகுதிகளிலும் உரிய அனுமதியின்றி கனிமங்கள் வெட்டியெடுப்பதைக் கண்டறிந்து தடுக்க இயலும்.

கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி, அரியலூர், திருவண்ணாமலை, மதுரை, திருச்சி, விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் உள்ள கனிமவளப் பகுதிகள் மற்றும் கனிம குத்தகை உரிமம் வழங்கப்பட்ட பகுதிகளை கணினி வாயிலாக பதிவுசெய்து மின் ஆளுகை சுரங்கப் பதிவேடு (Online Mining Tenement Registry) தயாரிக்க ரூ.1.05 கோடி அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

இத்திட்டத்தின்படி முதற்கட்டமாக கோயம்புத்தூர், சேலம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் செயல்படுத்த திருவாளர்கள் எல்காட் நிறுவனத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, மின்ஆளுகை சுரங்கப் பதிவேடு தயாரிக்கும் பணி முடியும் தருவாயில் உள்ளது. மேலும், அரியலூர், திருவண்ணாமலை, மதுரை, திருச்சி, விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் இப்பணி மேற்கொள்ளப்படும்.

[2014 ஜூலை 14

12. சர்க்கரைத் துறை

சர்க்கரைத் தொழில் தமிழ்நாட்டில் ஒரு முக்கியமான வேளாண் சார்ந்த தொழிலாக விளங்குகிறது. இப்பெருந்தொழில் கிராமங்களில் உள்ள விவசாயிகள் மற்றும் வேளாண்மையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு நேரடியாக உதவி வருகிறது. நாட்டின் சர்க்கரை உற்பத்தியில் முன்னணி மாநிலங்களில் நான்காவதாக தமிழ்நாடு உள்ளது. நாட்டின் மொத்த சர்க்கரை உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்கு சுமார் 7 முதல் 9 சதவீதமாகும்.

மாநிலத்தில் மொத்தம் உள்ள 46 சர்க்கரை ஆலைகளில் 43 சர்க்கரை ஆலைகள் தற்போது இயங்குகின்றன. இவற்றில் தனியார் துறையில் 25 ஆலைகளும் கூட்டுறவுத் துறையில் 15 ஆலைகளும் மற்றும் பொதுத் துறையில் 2 ஆலைகளும் இயங்கி வருகின்றன.

12.1 சாதனைகள்

தமது மாநிலத்தில் இயங்கிவரும் 43 சர்க்கரை ஆலைகள் நடப்பு அரவை பருவத்தில் (2013-2014) சுமார் 142.32 இலட்சம் டன் கரும்பினை அரவை செய்து 9.00 சதவீத சராசரி கட்டுமானத்துடன் 12.80 இலட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்யத் திட்டமிட்டுள்ளன. நடப்புப் பருவத்தில், தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு, பொதுத் துறை மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகள் 100.42 இலட்சம் டன் கரும்பு அரவை செய்து 9.10 சதவீத சராசரி கட்டுமானத்துடன் 9.03 இலட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்துள்ளன. 2012-13 ஆம் ஆண்டு அரவைப் பருவத்தில் கரும்பு அரவை செய்த விவரம் மற்றும் 2013-14 ஆம் ஆண்டு அரவைப் பருவத்தில் அரைக்கப்படவுள்ள கரும்பு அளவின் உத்தேச மதிப்பீடு ஆலை வாரியான விவரங்கள் இத்துறையின் செயல்பாட்டுக் குறிப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

2013-2014 ஆம் ஆண்டு அரவைப் பருவத்திற்கு, ஒரு டன் கரும்புக்கு ரூ.100 போக்குவரத்து கட்டணத்துடன் ரூ.2,650/- என மாநில அரசின் பரிந்துரை விலையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உற்பத்தித் திறனை அதிகரித்து, கரும்பு உற்பத்தியைப் பெருக்கவும் மற்றும் சர்க்கரை ஆலைகள் 100% அரவைத் திறனை அடையும் நோக்குடனும், புதிய தொழில்நுட்பங்களை அடிப்படையாகக் கொண்ட நீடித்த நவீன கரும்பு உற்பத்தித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. நிழல்வலைக் கூடத்தில் நாற்றுகள்

2014 ஜூலை 14]

உற்பத்தி செய்தல், பாசன நீர் மற்றும் இரசாயன உரங்களை அளவாகப் பயன்படுத்துதல், நுண்ணீர் வழி உரமிடுதல் ஆகிய தொழில்நுட்பங்களைக் கொண்ட நீடித்த நவீன கரும்பு சாகுபடி திட்டம் 2013-14 ஆம் ஆண்டில், 3,909 எக்டேரில், அரசு வேளாண்மைத் துறையின் மானிய உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2013-14 ஆம் ஆண்டு 400 நிழல்வலைக் கூடங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டு 31-3-2014 முடிய 362, நிழல்வலைக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், 1,217 எக்டேர் பரப்பளவில் மானியம் இல்லாமல் நீடித்த நவீன கரும்பு உற்பத்தித் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையம், அனைத்து கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளின் சர்க்கரையை விற்பனை செய்வதில் ஒருங்கிணைப்பு முகவராகச் செயல்பட்டு வருகிறது. 2012-13 ஆம் நிதியாண்டில், 4.58 இலட்சம் டன் சர்க்கரையை விற்பனை செய்துள்ளது. இதன் மதிப்பு மொத்தம் ரூ.1,460.73 கோடியாகும். 2013-14 நிதியாண்டில் 4.10 இலட்சம் டன் சர்க்கரை விற்பனை செய்யப்பட்டுள்ளது. அதன் மதிப்பு ரூ.1,342.59 கோடியாகும்.

உப உற்பத்திப் பொருளான கரும்புச் சக்கை, ஆலை செயல்பாட்டிற்குத் தேவையான நீராவி மற்றும் மின் உற்பத்திக்கு எரிபொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. ஆலையின் தேவைக்குமேல் உபரியாக உள்ள கரும்புச் சக்கை ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் பிற தொழிற்சாலைகளுக்கு விற்கப்படுகிறது. 2013-14 ஆம் நிதியாண்டில் மார்ச் மாதம் வரை 54,068 டன் கரும்புச் சக்கை விற்பனை செய்யப்பட்டுள்ளது. அதன் மதிப்பு ரூ.9.96 கோடியாகும்.

சர்க்கரை ஆலையின் மதிப்புமிக்க உப உற்பத்திப் பொருளான கழிவுப் பாகானது, எரிசாராயம், இரசாயனப் பொருள்கள் மற்றும் கால்நடை தீவன உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படுகிறது. இரு கூட்டுறவு எரிசாராய ஆலைகளின் தேவைக்குப் போக, மீதமுள்ள கழிவுப் பாகு, வடிப்பாலைகள், இரசாயன உற்பத்தியாளர்கள் மற்றும் இதர தேவைக்கு விற்பனை செய்யப்படுகிறது. 2013-14 ஆம் நிதியாண்டில் மார்ச் மாதம் வரை 2.06 இலட்சம் டன் கழிவுப் பாகு விற்பனை செய்யப்பட்டுள்ளது. அதன் மதிப்பு ரூ.81.32 கோடியாகும்.

கழிவு மண், சர்க்கரை ஆலைகளின் ஒரு உப உற்பத்திப் பொருளாகும். இது மண்புழு உரம் (வெர்மி கம்போஸ்ட் உரம்)

தயாரிக்கப் பயன்படுத்தப்படுகிறது. சில சர்க்கரை ஆலைகள், நுண் ஊட்டச்சத்து, நுண் உயிரினங்களைச் சேர்த்து மேம்படுத்தப்பட்ட கழிவு மண் தயாரிக்கவும் இக்கழிவு மண்ணைப் பயன்படுத்தி வருகின்றனர். கழிவுமண் அனைத்தையும் சம்பந்தப்பட்ட சர்க்கரை ஆலைகள் கரும்பு விவசாயிகளுக்கு விநியோகம் செய்கின்றன.

சேலம் மற்றும் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் எரிசாராய ஆலைகள், 2013-14 ஆம் நிதியாண்டில் 136.88 இலட்சம் லிட்டர் எத்தனால் மற்றும் எரிசாராயம் விற்பனை செய்துள்ளன. அதன் மதிப்பு ரூ.43.55 கோடி ஆகும்.

பெட்ரோலுடன் 5 சதவீதம் எத்தனாலை கலப்பதற்கான அனுமதி உள்ளது. தற்போது தமிழ்நாட்டில் 9.60 கோடி லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட 8 (6 தனியார் துறையிலும் மற்றும் 2 கூட்டுறவுத் துறையிலும்) எத்தனால் ஆலைகள் இயங்கி வருகின்றன. அவற்றில் ஆண்டுக்கு 1.80 கோடி லிட்டர் எத்தனால் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட எத்தனால் ஆலைகள் அமராவதி மற்றும் சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் இயங்கி வருகின்றன.

தமிழ்நாட்டில் தற்போது கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில், எம்.ஆர். இருஷ்ணமூர்த்தி மற்றும் செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் தலா 7.50 மெகா வாட் திறனிலும், சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 5 மெகா வாட் திறனிலும் இணை மின் உற்பத்தி நிலையங்கள் இயங்கி வருகின்றன. 2013-14 ஆம் நிதியாண்டில் உற்பத்தி செய்யப்பட்ட உபரி மின்சாரம் 54.36 இலட்சம் யூனிட்டுகள் மாநில மின் தொகுப்பிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, ரூ.1.80 கோடி வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

12.2 2014-15 மற்றும் 2015-16ஆம் ஆண்டு பொதுத் துறை மற்றும் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் செயல் திட்டங்கள்

வ. எண்	விவரங்கள்	2014–15	2015–16
1.	கரும்பு அரவை (இலட்சம் மெட்ரிக் டன்களில்)	37	40
2.	சர்க்கரை உற்பத்தி (இலட்சம் மெட்ரிக் டன்களில்)	3.42	3.72
3.	கட்டுமானம் (சதவீதம்)	9.25	9.30
4.	செயல் திறன் (சதவீதம்)	50	54

2014 ஜூலை 14]

12.3 இணை மின் உற்பத்தி நிலையம் மற்றும் ஆலைகளை நவீனப்படுத்தும் திட்டம்

183 மொளவாட்ட இறை கொண்ட இணை மின் உற்பத்தி நிலையங்கள், மொத்தம் ரூ.964.88 கோடி செலவில் 12 கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின்மூலம் நிறுவப்பட்டு வருகின்றன.

வ எண்	சர்க்கரை ஆலையின் பெயர்	மாவட்டம்	மொளவாட்ட அளவு	திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்)
1.	சோளம் கூட்டுறவு சர்க்கரை ஆலை	நாமக்கல்	15	79.18
2.	கபிலமலீய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை	தருமபுரி	15	78.83
3.	தருமபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலை	தருமபுரி	12	60.20
4.	வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை	வேலூர்	15	79.51
5.	செய்யார் கூட்டுறவு சர்க்கரை ஆலை	திருவண்ணாமலை	15	81.03
6.	கள்ளக்குறிச்சி–1 கூட்டுறவு சர்க்கரை ஆலை	விழுப்புரம்	15	84.12
7.	கள்ளக்குறிச்சி–2 கூட்டுறவு சர்க்கரை ஆலை	விழுப்புரம்	15	76.81
8.	செய்கல்புரம் கூட்டுறவு சர்க்கரை ஆலை	விழுப்புரம்	18	94.25

9.	எம்.ஆர்.கே. கூட்டுறவு சர்க்கரை ஆலை	கடலூர்	15	75.54
10.	தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலை	மதுரை	15	80.61
11.	பெரம்பலூர் சர்க்கரை ஆலை	பெரம்பலூர்	18	96.14
12.	அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை	தஞ்சாவூர்	15	78.66
		மொத்தம்	183	964.88

இத்திட்டத்தின்கீழ் பல்வேறு பணிகள் முடியும் தருவாயிலுள்ளன. பணிகள் முடிந்து மின் உற்பத்தி 2014-2015 ஆம் பருவத்தில் ஒவ்வொன்றாகத் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இணை மின் உற்பத்தி திட்டத்துடன், மேற்காணும் 12 சர்க்கரை ஆலைகளில் சர்க்கரை உற்பத்திக்குத் தேவையான மின்சக்தி மற்றும் நீராவிப் பயன்பாட்டினைக் குறைத்து, அதன்மூலம் மின் ஏற்றுமதி அளவினை அதிகரிக்க ரூ.276.27 கோடி செலவில் ஆலை இயந்திரங்களை நவீனப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2014 ஜூலை 14]

நவீனமயமாக்கப்படும் திட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு:

வ. எண்	சர்க்கரை ஆலையின் பெயர்	மாவட்டம்	திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்)
1.	சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை	நாமக்கல்	7.88
2.	சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை	தருமபுரி	11.15
3.	தருமபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலை	தருமபுரி	11.21
4.	வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை	வேலூர்	37.07
5.	செய்யார் கூட்டுறவு சர்க்கரை ஆலை	திருவண்ணாமலை	14.68
6.	கள்ளக்குறிச்சி-1 கூட்டுறவு சர்க்கரை ஆலை	விழுப்புரம்	9.02
7.	கள்ளக்குறிச்சி-2 கூட்டுறவு சர்க்கரை ஆலை	விழுப்புரம்	10.96
8.	செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை	விழுப்புரம்	40.95
9.	எம்.ஆர்.கே. கூட்டுறவு சர்க்கரை ஆலை	கடலூர்	13.63
10.	தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலை	மதுரை	39.94
11.	பெரம்பலூர் சர்க்கரை ஆலை	பெரம்பலூர்	42.72
12.	அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை	தஞ்சாவூர்	37.06
		மொத்தம்	276.27

[2014 ஜூலை 14

12.4. எரிசாராய ஆலையுடன் கூடிய எத்தனால் ஆலை

நாளொன்றுக்கு 45 கிலோ லிட்டர் திறன் கொண்ட எரிசாராய ஆலையுடன் கூடிய எத்தனால் ஆலையை செய்யார் மற்றும் எம்.ஜி.கே. கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் துவங்கிட அரசு ஆணையிட்டுள்ளது. அரசின் ஆணையின்படி செய்யார் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் பணிகளை துவக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. எம்.ஜி.கே. கூட்டுறவு சர்க்கரை ஆலை மாக கட்டுப்பாடு திறத்தனைகளை நிறைவேற்ற இயலாததால், இத்திட்டத்தினை வேறு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் அமைக்க விரிவான திட்ட நகல் தயாரிக்கப்பட்டு வருகிறது.